பாரத தேவி

நிர்வாக ஆசிரியர் வ. ரா. தனிப்பிரதி 2 அணு

மலர் 1 | ஞாயிறு 10-9-'39 | இதழ் 10

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
பொறுக்கத் தகாத வெறி	... ...	3
நவயுகக் கவி	... வ. ரா.	8
லோக சஞ்சாரம்	... ...	11
பாரதியார்	... பாரதிபக்தன்	13
மதனி இடுப்புக்கு	... சீதாபதி	17
லக்கின குணாதிசயங்கள்	... ...	21
அட பாவி!	வி. எஸ். சுந்தரராஜன்	25
கலைஞான வரலாறு	... ...	28
ரேடியம் ராணி	... வெ ம.	33
அகத்தியன் வைத்தியம்	... ...	37
ஐந்தில் ஒன்று	... வரதன்	39
சோக கீதம்	... ரேவதி	42
ருஷ்யாவின் வளர்ச்சி	... ...	45
மாட்டையே பதம் பார்க்கிறையே!	... படம்	48
கோதான பலன்	... சி. சு. செல்லப்பா	49
கொல்லுவதும் இயற்கையா!	... வ. ரா.	57
என் சுபாவம்	... கரிச்சான்	61
பெரிய இடத்து சிநேகம்	... ஐயம்	63
காதல்	... ...	65
அரளிப் பெண்	... "ரஞ்சனன்"	68
ஆலயப் பிரவேச உரிமை	புரொபஸர் ஏ. முத்தையா	72
நரிகாண் காதை	... ரா. ஆறுமுகம்	75
சங்கீத சிட்சை	சி. எஸ். நாராயணி	79
எது தியாகம்?	அ. கி. ஜெயராமன்	81
நட்சத்திர பலா பலன்கள்	... ...	87
திரை உலகம்	... ...	98
சுபாஷின் விகடம்	... பொன்னி	101
விமிஷக் கதைகள்	... ...	103

பாரதியும் அவர் மனைவியாரும்

பொறுக்கத் தகாத வெறி

சென்ற ஐரோப்பியப் போரில், ஜர்மனிக்கும் பிரிட்டனுக்கும் 1914-ம் ஆண்டு, ஆகஸ்ட்மீ 3உ சண்டை ஆரம்பமாயிற்று. இப்பொழுது, 1939-ம் ஆண்டு, செப்டம்பர்மீ 3உ துவங்கியிருக்கிறது. சரியாக, 25 வருஷம் ஒருமாதம் நடுவிலே.

இந்த யுத்தத்துக்குக் காரணம் என்ன என்று ஆராயப் புகுவது அசட்டுத்தனம். ஐரோப்பிய நாகரிகத்தின் ஒரு பகுதி, நிறத்திமிரிலும் ஆலைத் தொழில்களின்பேரிலும் அமைந்து கிடக்கின்றது. நிறத்திமிரினால், ஐரோப்பியர்கள் கறுப்பர்களை இலட்சியம் செய்வதில்லை. கறுப்பர்களுக்கு நாடும், மானமும் சொந்தமாக இருக்கின்றன என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை.

வெள்ளையர்கள் வாழாத நாடுகளுக்கு, அவர்கள் குடியேற்ற நாடுகள் என்று பெயர் கொடுத்து அழைப்பதிலிருந்தே, கறுப்பர்களையும் கறுப்பர்கள் வாழும் நாட்டையும் பற்றி, ஐரோப்பியர்கள் எவ்வளவு கேவலமாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது.

வெள்ளையர்களின் நாகரிக வாழ்வுக்காக, அடிமை வேலை செய்யப் பிறந்தவர்கள் கறுப்பர்கள் என்று ஐரோப்பியர்கள் எண்ணிக்கொண்டிருக்கும் வரையில், தற்போது மூண்டிருக்கும் ஐரோப்பியப் போரில், நியாயம் ஜர்மனியின் பக்கம் இருக்கிறதா அல்லது பிரிட்டனுடைய பக்கம் இருக்கிறதா என்று ஆராய எத்தனிப்பது வீண் வேலையாகும்.

ஆனல் உழக்கிலும் கிழக்கு மேற்கு பார்ப்பது ஒருவகை உலக சம்பிரதாயம். அந்த சம்பிரதாயத்தை முன்னிட்டு, போரின் காரணங்களை ஆராய்வோம்.

பிரிட்டனுடைய சாம்ராஜ்ய ஆசைக்கும் ஹிட்லரின் மண்ணுசைக்கும் வித்தியாசமே கிடையாது. உலகத்திலே, சொத்து உரிமை, பெரும்பாலும் அனுபவ பாத்தியத்தையும் அதை அமுலுக்குக் கொண்டுவரக்கூடிய பலாத்கார வல்லமையையும் தான் பொறுத்திருக்கின்றன.

சேம்பர்லேன்

பிரிட்டனுக்கு இந்தியாவிலே என்ன பாத்தியம் இருக்கிறது? அனுபவ பாத்தியம்தான். அந்த அனுபவ பாத்தியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு, அதற்குப் போதுமான, பலாத்கார வலு இருப்பதாக அது சொல்லிக் கொள்ளுகிறது.

டான்சிக் நகரத்தின் பேரில், ஜர்மனி, சிறிது காலத்துக்கு, தனது அனுபவ பாத்தியத்தை இழந்து நின்றது. அந்த பாத்தியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கான வலுவும் ஜெர்மனியிடம், சில ஆண்டுகள், இல்லாமலிருந்தது.

இந்த இரண்டு அனுபவ பாத்தியங்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். இந்த வித்தியாசம்தான், இந்த போருக்குக் காரணம். ஹிட்லர், டான்சிக் நகரம் ஜர்மனியைச் சேர்ந்தது என்று சொல்லும் கட்சியை, பிரிட்டன் முதல் பல தேசங்கள் ஒப்புக்கொண்டுவிட்டன.

ஹிட்லரின் ஆசையும் கட்சியும் நியாயமானல், பிரிட்டன் ஏன் ஜர்மனியோடு போருக்குப் போகவேண்டும்? தனது கட்சியை ஸ்தாபித்துக்கொள்ள, ஹிட்லர் வழக்கமாகக் கையாண்டு வந்த முறை தவறு என்று எல்லாரும் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளுவார்கள்.

ஹிட்லருக்கு மட்டும் தான் மண்வெறி பிடித்திருக்கிறது என்றும், ஏனைய வெள்ளையர்கள் சாதுக்கள் என்றும் யாராவது சொன்னால், அதை உலகம் நம்பாது. மண் ஆசை, எல்லா மனிதர்களுக்கும் இயல்பாயுள்ள ஆசை. ஆனால், அந்த ஆசையை, பூர்த்தி செய்ய முயலும் ஹிட்லர், துடுக்காக, நிதானமில்லாமல், காரியம் செய்கிறார்.

மற்ற வெள்ளையர்கள், நிதானமாக, பாசாங்குப் பேச்சு பேசிக்கொண்டு, தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்ளுகிறார்கள். இன்றைக்கு, ஹிட்லர்பேரில் பழி சுமத்தும் அத்தனை பேர்களும், ஒரு விஷயத்தை, தீர்க்கமாக யோசிக்க வேண்டும்.

ஹிட்லர்

ஹிட்லருக்கும் முஸ்ஸோலினிக்கும் திடீரென்று துடுக்கு ஏற்பட்டதா? இந்த இரண்டு சர்வாதிகாரிகளும் பதம் பார்த்துக் கொண்டே வந்து, தங்கள் துடுக்கினால்தான் காரியம் சாய்கிறது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இந்த நிலைமைக்கு யார் காரணம்? பிரிட்டனும் பிரான்சும்தான் என்று எல்லோரும் சொல்லுவார்கள்.

முளையிலேயே கிள்ளி எறியாமல் போனது யாருடைய குற்றம்? பிரிட்டனுடைய குற்றம், பிரான்சினுடைய குற்றம். வார்சேல்ஸ் உடன்படிக்கை ஏற்பட்டு பத்து வருஷங்களுக்குள், பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் பல சங்கதிகளில் அபிப்பிராய பேதம் வந்துவிட்டன. அதோடுகூட, பரஸ்பர சந்தேகமும் கூட வந்துவிட்டது.

பிரிட்டன் ஜர்மனியின் கையைத் தாக்கிவிடப் பார்த்தது. பிரான்ஸ் இத்தாலியின் கையைத் தாக்கிவிட்டது. ஹிட்லரும் முஸ்ஸோலினியும், பிரிட்டனும் பிரான்சும் இருக்கும் நிலைமையைத் தெரிந்துகொண்டு, அடிமேல் அடி அடிக்க ஆரம்பித்துவிட்

டார்கள். அப்பொழுது, பிரான்சிலும் பிரிட்டனிலும் போர் முஸ்திப்புகள் சரியாயில்லை. இரண்டு நாடுகளும் காலதாமதம் செய்து கொண்டே வந்தன.

பிரிட்டனும் பிரான்சும் "பயந்தாங் கொள்ளிகள்" என்று ஹிட்லர் முடிவு கட்டிக்கொண்டார். அட்டஹாஸம் செய்யத் துவக்கினர். முதலில் ஆஸ்திரியா, பின்னர் மெமெல், பிறகு ஸெக்கோஸ்லோவேக்கியா, இவைகளின் பேரில் ஹிட்லர் ஆக்கிரமிப்பு செய்து, வார்சேல்ஸ் உடன்படிக்கையை, துண்டு துண்டாகக் கிழித்தெறிந்துவிட்டார்.

ஹிட்லருக்கு துணிவும் துடுக்கும் உண்டாக்கியது பிரிட்டனும் பிரான்சும். ஆகவே, இனியும் சோம்பிக் கிடக்கலாகாது என்று டான்சிக் விஷயத்தில், இரண்டு நாடுகளும் போலந்துக்கு உதவி செய்யும் நோக்கத்துடன், வரிந்து கட்டிக்கொண்டு, ஜர்மனியோடு போருக்கு ஆரம்பித்திருக்கின்றன.

அப்பொழுதே, பிரிட்டனும் பிரான்சும் சிறிது ஒற்றுமையுடன் ராஜ தந்திரம் செய்திருந்தால், இப்பொழுது இந்த கோரமான யுத்தம் ஏற்பட்டிருக்காது. ஹிட்லர் அப்பொழுதே 'குப்பைத் தொட்டிப் பேர்வழி'யாக, மதிப்பில்லாமல் போயிருப்பார். அப்பொழுது தவறிப்போனதால், பிரிட்டனும் பிரான்சும் இப்பொழுது, நனைந்து சுமக்க நேர்ந்திருக்கிறது.

நாம் சம்பந்தப்பட்ட வரையிலும், நமக்கு ஹிட்லரின் லட்சியத்திலும் முறைகளிலும், கடுகளவுகூட நம்பிக்கை இல்லை; பிரியமும் இல்லை. ஜர்மனி ஸயன்ஸுக்காக எவ்வளவோ பாடுபட்டு உழைத்து வந்திருக்கின்றது. ஸயன்ஸில் சூரத்தனம் கொண்ட ஜர்மனி, உலகத்தின் நன்மைக்காக பாடுபடாமல், ஹிட்லர், கெய்லர் போன்ற வெறியர்களின் கையில் சிக்கிக்கொண்டு, அவஸ்தைப்படும் காட்சியைக்காண, நமக்கு மனமில்லை.

சென்ற யுத்தத்தில், பிரிட்டன் பெல்ஜியத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்ற, போருக்குச் சென்றது. இப்பொழுது போலந்துக்குக்கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காக,போரில்இறங்கியிருப்பதாக பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் சொல்லுகிறார்.

சுதந்திரம் என்பது வெள்ளையர்களுக்கும், அடிமைத்தனம் என்பது கறுப்பர்களுக்கும் என்று பங்கு வீதம் போட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. போலந்தின் சுதந்திரத்துக்காக, உடல் பொருள் ஆவியை, தத்தமாக வழங்க சங்கற்பம் செய்துகொண்டிருக்கும் பிரிட்டன், தனது உடல் பொருள் ஆவி, எதையும் கொடுக்காமல், கெடுத்துக்கொள்ளாமல், இந்தியாவுக்கு சுதந்திரம் அளித்துவிடலாம். அந்த சங்கதிதான் பூஜ்ஜியம்.

போலந்தின் சுதந்திரத்துக்காக பரிவு காட்டும் பிரிட்டன் இந்தியாவின் சுதந்திரத்தில் சிரத்தை கொள்ளக்கூடாதா? பிரிட்டன்பேரில், இந்தியர்களுக்கு எவ்வளவோ மன வருத்தம் இருந்தாலும், அவர்கள் ஹிட்லர் கையாளும் முறைகளை ஒருநாளும் ஆதரிக்கமாட்டார்கள். ஹிட்லருக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று நினைக்கும் இந்தியனும் இருக்கமாட்டான்.

பிரிட்டன், ஜனநாயக பாவனை செய்துகொண்டு வந்தாலும், போரில் பிரிட்டன்தான் வெற்றி பெறவேண்டும் என்று ஒவ்வொரு இந்தியனும் ஆசைப்படுவான்.

நவயுகக் கவி

(வ. ரா.)

பாரதியார் செப்டம்பர்மீ 11உ மறைந்தார். அவர் மறைந்த தினத்தை தமிழர்கள், வருஷா வருஷம், மிகுந்த ஆர்வத்துடன் கொண்டாடுகிறார்கள். தமிழர்கள், நியாயமாகவும் பெருமை கொண்டும் செய்ய வேண்டிய காரியங்களில் இதுஒன்று. ஆனால், தமிழ்ப் பாஷையின் மாண்பையும் பாரதியாரின் பெருமையையும், நன்றாகத் தமிழர்கள் தெரிந்து கொண்டார்களா என்பது சந்தேகம்.

ஒரு மகான், அவர் எந்தத் துறையில் வேலைசெய்தாலும், அவரது ஜீவிய காலத்திலேயே, அவருக்கு ஏற்ற பெருமையுடன் மக்களால் கொண்டாடப்படுவதில்லை. உலக மகா கவி என்று போற்றப்படும் ஷேக்ஸ்பியரை, அவருடைய காலத்தில் மதித்தார்களா? ‘மான் திருடி’ என்று அலட்சியமாக, அவரைப்பற்றிப் பேசிய மனிதப் பதர்கள்தான், அவரது காலத்தில் அதிகமாயிருந்தார்கள்.

இன்றைக்கோ, ஷேக்ஸ்பியர் என்றால், உலகம் பரம ஆனந்தத்தில் மூழ்கிக்கிடக்கின்றது. பெரியார்கள் எல்லாருமே, அவரவர் காலத்தில், மிகுதியும் எளனத்துக்கு உள்ளாவதைத்தான் உலகம் இதுவரையிலும் கண்டிருக்கிறது. (இந்த விதிக்கு விலக்கு காந்தி.) ஆகவே பாரதியாரின் பெருமையை தமிழர்கள் சரிவர உணரவில்லை என்று வருத்தப்பட்டுக் கொள்ளுவதில் பயனில்லை.

தீர்க்கதரிசிகளாயிருப்பவர்கள், தங்கள் தரிசனத்தைக் கொண்டு, எக்காலத்துக்கும் எந்த நிலைமைக்கும் பொதுவான, தேவையான, அழிவில்லாத உண்மைகளைக் கண்டு விடுகிறார்கள். ஆனால் அவைகளை, மனிதர்கள் நேரே உணர்ந்து கொள்ளுவதில்லை.

சாப்பாட்டு ராமனுக்குச் சோற்றிலே குறி. திருடனுக்குத் திருட்டிலே குறி. விடனுக்குப் பெண்ணின் பேரில் குறி. மோசக்காரனுக்கு, முட்டாள் பேரில் குறி. தடியனுக்கு சண்டையிலே குறி. இப்பேர்ப்பட்ட, கீழ்த்தரமான மக்கள் அதிகமாகப் பரவிக்கிடக்கும் காலத்தில், பெரியார்களின் திருவாக்கு, மதிப்புக்கு உரியதாக பாவிக்கப்படுவதில்லை. அவர்கள் என்னமோ, புரியாத வேதாந்தம் பேசுகிறார்கள் என்று தங்கள் அறிவீனத்தை மனிதர்கள், மறைத்துக் கொள்கிறார்கள்.

இதைப்போலவே, பாரதியாரைப் பற்றியும் மதிப்பு, சிலகாலம்

இருந்து வந்தது. பாரதியார் இலக்கணம் அறியாக்கவிஞன் என்று பண்டிதர்கள் ஆதாரமும் பொருளுமின்றிப் பேசினார்கள். பாரதியார் வெறும் தேசியக்கவி என்று பலர் பேசிக்கொண்டார்கள்.

பாரதியாரின் பாடல்களில் வேதாந்தத்தைத்தான் பார்க்க முடியும் என்று சிலர் முடிவு கட்டிவிட்டார்கள். பாரதியார் பெண் விடுதலை நண்பன் என்று சிலர் ஆத்திரப்பட்டார்கள்; மற்றும் பலர் ஆர்வத்துடன் பேசினார்கள். பாரதியார் வெறும் கஞ்சாப் புலவர் என்று வசினதையும் என் காதால் கேட்டிருக்கிறேன்.

மார்க்கெட்டில் ஒன்றும் வாங்கத் தெரியாமல், ஒரு கூடைக் கீரையை வாங்கின பாரதிதானே என்று சிலர், புரளி செய்ததையும் கேட்கும் துர்ப்பாக்கியமும் நான் பெற்றதுண்டு. ஆனால், யோசிக்காமல், ருசுவில்லாமல் எதையும் பேசமுடியும் என்பதற்கு இவைகள் அத்தாட்சிகள் ஆகின்றனவே அல்லாமல், பாரதியாரைப்பற்றிய விமர்சனம் அல்ல.

பாரதியாரைப்பற்றித் தெரிந்து கொள்ள ஆவல் படைத்தவர்களிடம் சில குணங்கள் இருக்க வேண்டும். அந்த குணங்கள் இல்லையானால், பாரதியாரை (ஏன் எந்த மகானையுமே!) சரிவரத் தெரிந்துகொள்ள முடியாது.

கவிதை இன்னதென்று உருப்படியாக, தெளிவான அபிப்பிராயம் இருக்கவேண்டும். கவிதைக்கும் மனிதனுக்கும் என்ன சம்பந்தம் என்பதைப் பற்றி அவன் சிந்தனை செய்திருக்கவேண்டும். கவிதைக்கும் பாஷைக்குமுள்ள தொடர்பைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு பாஷையின் தனிப்பண்பையும் அதன் பலவீனமான அம்சங்களையும் அவன் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். மனிதவர்க்கம், தெரிந்தோ தெரியாமலோ, எந்த லட்சியத்தைக் கருத்தில் கொண்டு, பாடுபட்டு வருகின்றது என்பதை சிறிதேனும் யோசித்துப் பார்த்திருக்க வேண்டும்.

பாரதியாருக்கு முன், தமிழ் கிடந்த கிடையையும் தமிழர்கள் இருந்த நிலைமையையும் ஊன்றிக் கவனித்து, அவன் ஒரு முடிவுக்கு வந்திருக்கவேண்டும். இந்தத் தன்மைகளோடு, அவனிடம் சத்திய புத்தியும் சிரத்தையும் இருக்கவேண்டும்.

இந்தத் தன்மைகள், யாரிடம் இருந்தாலும், அவர்கள் பாரதியாரை சரியாக மதிப்பிட முடியும் என்பது என் கருத்து. உலகம் பிறந்தது முதல், போரையே பெருமையாகப் பேசிப் பேசி மனிதவர்க்கம் தன்னைத்தானே, அசட்டுத்தனமாக, அழித்துக் கொண்டு வந்திருக்கிறது.

இந்த முட்டாள்தனத்தைப் போலவே, கவிதை முதலிய பல துறைகளில், பழைய பஞ்சாங்கங்களான பல அபிப்பிராயங்கள் விடாப்பிடியாக மக்களின் மூளைகளைக் கவ்விக்கொண்டு, கிடக்கின்றன. போர் அநாகரிகம் என்று தெரிந்தும், அதை உலகம் இன்னும் விட்டபாடில்லையே! அதைப் போலவே, அரசாங்கம், பொரு

ளாதாரம், கவிதை, கலை, சங்கீதம் முதலிய துறைகளில், துருப் பிடித்த கருத்துகள் சில, இன்றும் வளையவந்து கொண்டிருக்கின்றன.

கவிதைக்கு சில சொற்கள் தான் எடுப்பாக இருக்குமாம்! கவிதைக்கு, சில விஷயங்கள் தான் பொருத்தமாம்! கவிதையில் எதுகை மோனை இருக்கவேண்டுமாம்! கவிதை, சில விஷயங்களைப்பற்றிப் பேசவே படாதாம்! கவிதை, "தேமாங்காய், கூவிளங்காய்" போன்ற பண்டைக் கூடுகளில் போட்டு அடைத்தால்தான் அழகாக இருக்குமாம்! நாகரீகமா இருக்குமாம்! வெள்ளைத் தமிழ் கவிதைக்குக் கூடாதாம்!

இந்த மாதிரி, என்ன வெல்லலாமோ, இன்றைக்கும் பேசிக்கொள்ளுகிறார்கள். கவிதை என்பது கடவுளைப்போல. கடவுளைக் கல்லாகவும் வர்ணிக்கலாம்; கருணை வெள்ளமாகவும் வர்ணிக்கலாம்; கடவுளை ரூபியாகவும் சொல்லலாம்; ரூபமில்லாதவன் என்றும் சொல்லலாம்; இயற்கையில் காணும் காட்சிகள் அனைத்தும் கடவுள். காட்சிகளுக்குள் புகுந்து விளையாடும் சக்தியும் கடவுள். மாற்றிமாற்றி ரூபத்தை அழகாகவும் அவலட்சணமாயும் செய்யும் சக்தியும் கடவுள். அதைப்போலவே, கவிதைக்கு எல்லை கோலி, வேலி அடைப்பது பாபமாகும்; அது அறிவுடைமையாகாது.

பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதிய "பகவத் கீதை" நிரந்தரமான நூல் என்று ஏன் சொல்லுகிறார்கள்? எந்த மேதாவி, இயற்கையின் மர்மத்தைக்கண்டு, அதை அழகு பொலிய வர்ணிப்பது மல்லாமல், மனிதனுடைய செயல் இயல்புக்குச் சாதகமாக, அறிவையும் உற்சாகத்தையும் உண்டாக்குகின்றானோ, அவன் ஒருநாளும் இறப்பதில்லை. அவன் எழுதும் நூல் சாகா வரம் பெற்றது. அவன் செய்யும் காரியம் சாகாத வரம் வாங்கியது.

இந்த ரீதியில் பிரகாசிப்பவர் பாரதியார். பாரதியாரின் புகழ் நாளுக்குநாள் விரியும்; யுகத்துக்கு யுகம் மலரும்; சந்தர்ப்பத்துக்குச் சந்தர்ப்பத்தில் விள்ளும். பாரதியாரை, முழுதும் அறிந்து விட்டதாக எண்ணி, யாரும் ஏமாந்து போகவேண்டாம்.



லோக சஞ்சாரம்

தீர்ப்பு எப்படியோ ?

மகாத்மா காந்தி வைஸிராயைப் பேட்டி கண்டுவிட்டு, வர்தாவுக்குத் திரும்பி வந்துவிட்டார். தமக்கும் ராஜப்பிரதிநிதிக்கும் இடையே நடந்த சம்பாஷணையைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். "என்னால் என்ன ஆகும்? தாங்கள் சொன்னதை, காங்கிரஸ் காரியக்கமிட்டியிடம் போய் தெரிவிக்கிறேன். அவர்கள், என்ன முடிவு செய்கிறார்களோ, அது தான் முடிவு" என்று காந்தி, வைசிராயிடம் சொன்னாராம்.

சுபாஷ் பாபு, ஆத்திரத்தினாலும், அவசர புத்தியினாலும் காந்தியைப்பற்றி என்ன சொன்னால்தான் என்ன? காந்தி, இந்தியாவின் மனச்சாட்சி என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகம் இருக்காது. காந்தி, பொறுப்பைக் கழித்துக் கொண்டதைப் போல, எவ்வளவு பேசினாலும், நெருக்கடிக் காலத்தில், அவரது யோசனைக்காகத்தான் இந்தியா காத்துக் கொண்டிருக்கும். அதிலும், யாருக்கும் எள்ளளவும் சந்தேகம் வராது.

“லண்டன் மாநகரம் அழியவாவது என்று நினைக்கும் பொழுது என் மனம் உடைந்து போயிற்று” என்று காந்தி சொன்னது, பூரண மனிதனுடைய பூரண அன்பு கலந்த பேச்சு என்று கொள்ள வேண்டும். அதே மாதிரி ஜர்மனி அழிந்து போவதிலும் காந்திக்கு விருப்பமில்லை.

தலைவர்களுக்குக் கட்டுப்பட்டு நடவுங்கள் என்று சொல்லுவது போக, தலைவர்களுக்கு புத்தி வரும்படியாக, ஆங்காங்கே ஆர்ப்பாட்டம் செய்யுங்கள் என்று சுபாஷ் பாபு சொல்லுவதைப் பார்த்தால், ஐரோப்பியப் போரைத் தவிர, நமது நாட்டில் வேறு வகையான நெருக்கடியும் ஏற்படலாமோ, என்னவோ? என்றாலும், காந்தி உள்ளவரையிலும், இந்தியாவிலே, ஒற்றுமைக் குறைவு உண்டாகாது என்பது நிச்சயம்.

பிரிட்டனுடைய கஷ்டம் இந்தியாவின் அதிருஷ்டம் என்று சிறுபிள்ளைத்தனமாக சொல்லுவதில் பயன் இல்லை. எவ்வகையாலும் பிரிட்டனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லுவதிலும் அர்த்தமில்லை. காந்தி சொல்லப்போவது தான் கட்டளை.

அரக்கச் செயல்

பிரயாணிகளின் கப்பல்கள் இரண்டை, ஜர்மன் நீர் மூழ்கிக் கப்பல் உடைத்தெறிந்து விட்டதாகச் செய்தி கூறுகின்றது. இது மனிதச் செயல் அல்ல. மனித இதயமும் இலட்சியமும் இல்லாத அரக்கர்கள் செய்யக் கூடிய வேலை என்று நாம் கூசாமல் சொல்லுவோம்.

ஒரு நாடு இன்னொரு நாடுடன் போருக்குச் சென்றால், நியதிகள், மரியாதை எல்லைகள் கிடையாதா? சாதாரண ஜனங்கள் வாழும் குடியிருப்புகளை அழிப்பது, விஷக் காற்றை பலூன் மூலமாக நாட்டில் வீசிப்பரப்புவது, ஆயுதம் தாங்காதவர்களின் பேரில் வெடிகுண்டு எறிவது, ஆஸ்பத்திரிகளைத் தகர்த்து எறிவது, குடிநீரில் விஷத்தைப் புகுத்துவது போன்றவை அரக்கர்களின் செயல்களாகும்.

இந்த முறையில் போரை நடத்த கட்டளை யிட்டிருக்கும் ஹிட்லரிடம் உலகத்துக்கு அனுதாபமும் அன்பும் மரியாதையும் ஏற்படுமோ? எதிரி நாட்டில் உள்ளவர்கள் யாவரும் எதிரிகள் என்று பாராட்டும் மனப்பான்மை மிகவும் கேவலமான மனப்பான்மையாகும்.

சென்ற போரில், லூஸிடானியா என்ற அமெரிக்கப் பிரயாணிக்கப்பல், ஜெர்மனியின் வெறிக்கு பலியாயிற்று. அமெரிக்கா, ஜர்மனியோடு போர்புரிய உடனே ஆயத்தமாயிற்று. அதைப் போலவே, இந்த யுத்தத்திலும் நடக்கப் போகிறதா?

போரோ கொடியது! அதுவும் நியதியும் வரையறையும் இல்லாமல் போரை நடத்துவது மிகவும் கேவலமான கொடுமையாகும். வெறி பிடித்தவர்களை, நல்வழிப்படுத்த முயலுவது மிகவும் கடினமான வேலை. ஹிட்லர் தத்துவத்தை ஒழிப்பதுதான் தர்மமாகும்.



பாரதியார்

பாரதி பக்தன்

அரையில் உடுத்திக்கொண்டிருக்கும் ஆடை அவிழ்ந்தோ அலைந்து அதன் நிலை குலைந்தோ போகும் தருணத்தில் கைகள் தாமாகவே வந்து உதவி புரிகின்றன; ஆடையை நிலைநிறுத்திச் சீர்பெறச் செய்கின்றன. இது தான் உண்மையான நட்புக்கு உத்தமமான உபமானம் ஆகும். இக் கருத்தைத்தான் தெய்வீகப் புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனார்.

"உடுக்கை இழந்தவன்
கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்ற சிறு குறட்பாவில் செம்மையாய்ப் பதித்து வைத்திருக்கின்றார். இதே குறளுக்கு இனிய இலக்காய் அமைந்துள்ளவர் பாரதியார் என்பது எம்போன்றாரின் துணிவு. பாரதியார் என்பது காலங்கடந்த மகாகவி சுப்பிரமண்ய பாரதியாரையே குறிக்கின்றது.

தக்க சமயத்தில் தமிழருக்கு உயிர்ப்பால் ஊட்டிய தாய் பாரதியார். தமிழனது பேடித்தனத்தைக் கண்டு மனம் புழுங்கி அவனுக்குத் தளராத நெஞ்சும் குறையாத குணமும் கொடுத்தருளவேண்டும் என்று கூப்பித் தொழுத தந்தையே பாரதியார். உண்மை, உள்வலி, ஊக்கம் உள்ளவர்கள் தான் உலகில் தலைகாட்ட முடியும் என்றும் ஏனையோர் தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ் சிறுகதைகள் பேசி வாடித்திரியும் நடை பிணக்கூட்டம் என்றோதிய உத்தம குருவே பாரதியார். தமிழில் இல்லையென்ற கொடுமையை அழித்து அதன் இனிமையை வளர்த்துக் காத்த மன்னர் மன்னன் பாரதியார்.

பாரதியாரின் கவிதை திராக்ஷை ரஸத்தை நிகர்த்தது. பல்லைப் பரீக்ஷை செய்யும் பண்டிதருக்கும் சொல்லில் சுருளில்லாமல் பேசும் பாரதியாருக்கும் இன்பத்தைக் கொடுக்கக் கூடியது. வாழ்வைச் சதம் என எண்ணும் பாப்பாவுக்கு வளர்ச்சியையும், சாவைச் சடுதியில் எதிர்பார்க்கும் தாத்தாவன் ஏமாற்றம் மிகுந்த வாழ்க்கையின் இறுதிக்குள் உறுதியையும், கொடுக்கக் கூடியது. ஆணுக்கு அந்தரங்கமாயும் பெண்ணுக்குப் பகிரங்கமாயும் அவரவர் கடமை பொறுப்புகளை ஐயந்திரிபு அற அறிவிக்கக் கூடியதும் நம் பாரதியார் கவிதையே.

பாரதியார் கவிதை மயக்கத்தைத் தீர்க்கும் மருந்து; வாழ்வை

உயர்த்தும் விருந்து. மானிலம் காக்கும் மழை; மண்ணவர் போற்றும் கரும்பு, பாரதியார் கவிதை கவலையை ஒழித்திடும் கானம்; கனிவையும் களியையும் கலந்து கொடுக்கும் கீதம். உண்மை என்ற வற்றாத வளத்தைக் கொழிக்கும் ஊற்று; ஊக்கம், விடுதலை என்ற நறுமணத்தையும் பேருணர்வையும் பெருக்கிக் கொணரும் காற்று. பாரதியார் கவிதை பல கலைகளோடு கூடிய சந்திரன்; ஒழுக்கம் என்ற ஒரே வெண்மைக் கிரணம் கொண்டிருக்கும் சூரியன்.

பாரதியார் கண்ணனைப் பாடியிருக்கிறார்; காதலை வளர்த்திருக்கின்றார். சக்தியைப் புகழ்ந்து கூறியுள்ளார்; சாவைத் தூவென் றிகழ்ந்துள்ளார். மண்ணைப் போற்றி யிருக்கிறார்; மாயையைத் தூற்றி யிருக்கின்றார். காந்திக்கு முடி சூட்டியுள்ளார்; மனச்சாந்திக்கு அடிகோலி யிருக்கிறார்.

சொல்லின் மேன்மையை விளக்கி யிருக்கிறார்; சோர்வின் கீழ்மையையும் சுலபமாய்க் காட்டி யிருக்கிறார். கற்பின் தூய்மையை எடுத்தோதியுள்ளார். காவியத்தின் வாய்மையையும் வகுத்து எழுதி யுள்ளார். சுதந்திரத்தின் பெருமையை வானளாவப் பாடி யிருக்கிறார். அடிமைத் தனத்தின் சிறுமையை அதிபாதாளத்திலே அழுத்தி விட்டார். பக்தியைப் பாடி யிருக்கிறார்; முக்தியைக் காட்டி யிருக்கிறார்.

பாரதியாரின் தேசிய கீதங்கள் பாரத சமுதாயத்தின் விடுதலைக்கு வழி காட்டி, தெவிட்டாத தேச பக்தியைத் தெளிவாக ஊட்டி இந்தியனை மார்தட்டிக் கொள்ளச் செய்யும் ஆற்றல் படைத்தவை. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஒப்புயர்வற்ற பாடல்கள். பாரதியாரின் உயிர் நிலை ஸ்தானம் பெற்றவை.

தோத்திரப் பாடல்கள் நம்முள்ளே ஒடுங்கி யிருக்கும் பக்தியைத் தட்டி யெழுப்பி, பரவசம் தந்து நம்மை உயர்வு படுத்தும் பாடல்கள். பக்தி யென்பது இந்தியாவுக்குப் புதிய சரக்கில்லாத போதிலும், அதை வெகு அழகாகக் கையாண்டு படிப்போர் மனதைப் பறிமுதல் செய்து ஆட்டி வைக்கும் அருமை வாய்க்கப் பெற்றவை. சித்தத் தெளிவையும் மனச் சமாதியையும் மிகத் தெளிவாகப் புகட்டும் வேதாந்தப் பாடல்களும், தோத்திரப் பாடல்களும் மனிதனுக்கு இரு கண்கள் போன்றவை.

கட்டுக்கடங்காத காதல் ரஸமும் கவிதை யுள்ளமும் பெற்றுப் பொலிவுற்று விளங்குவது கண்ணன் பாட்டு. புதிய ஆத்திச்சூடி என்ற பெயரிலேயே புதுமையும், ஆச்சரியமும் கலந்துள்ளன என்பது வெளிப்படை. மனிதனுடைய முதுகெலும்பை நிமிர்த்தி மனோதைரியத்தையும் அதிகப்படுத்த வல்ல அநேக நவீன மனோபாவங்களை மனதில் அழுத்தமாய்ப் பதியச் செய்யும் ஆற்றல் படைத்தது புதிய ஆத்திச் சூடி.

குழந்தைகள் கொள்ள வேண்டிய குணங்களை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் 'குட்டிக்கதை' பாப்பா பாட்டு. வேதாந்தத்தைக் குழந்தைகளுக்குக் குதூகலத்து

டன் போதிப்பது பாப்பா பாட்டு. அதில் முதியோரும் பொறுக்கிக் கொள்ள வேண்டிய மணிகளும் இருக்கின்றன.

உலகத்தில் உள்ள பலருக்கும் பொதுவாயுள்ள பல உண்மைகளை நடு நிலையில் நின்று பிரகடனம் செய்வது முரசு. ஒற்றுமையின் வலிமை, அன்பின் அவசியம், சமத்துவத்தின் நிகரற்ற தன்மை இவைகளைப் போன்ற உத்தம தர்மங்களை உரைப்பது முரசு.

பாரதி அறுபத்தாறு ஒரு 'அவியல்' போல, பல பொருள்களும் அனேக ரஸங்களும் ஒருங்கே கூடி உறவாடும் நூல் பாரதி அறுபத்தாறு. மனிதனுக்கு இருக்க வேண்டிய கொள்கைகளை தன் மனக் கண்ணாடி மூலம் சித்திரித்துச் சீர்திருத்தி பாரதி வலுப்படுத்தி யிருப்பது பாரதி அறுபத்தாறு.

'காட்சி' கண்கொள்ளாக் காட்சி தான். கவிஞன் நேரிலும், கற்பனையிலும் கண்ட காட்சியை, தன் வாய் மொழி மூலம் பதிய வைக்கும் காட்சியே அவரது ஒப்புயர்வற்ற திறமைக்குப் போதுமான சாட்சி. இயற்கைச் சிருஷ்டி ரத்தினங்களை எளிதிலே நமக்கு எடுத்துரைக்கும் நூல் காட்சியே யாகும்.

'குயில்' தனித்ததொரு பொக்கிஷம். கற்பனை எல்லைக் கோட்டை முட்டிப் பார்ப்பது குயில். கவிதா வர்ணனைக் கடலையும் தன்பால் அடக்கிக் கொண்டுள்ளது 'குயில்.' பாரதியின் சூக்ஷ்மமான நோக்கு, அனுபவக் களஞ்சியம், மேன்மையான மனோபாவங்கள், பொருத்தமான உவமைகள், பொருள் உணர்வு சுவைகள் எல்லாம் சிறந்தோங்கும் நுட்பமான நூல் 'குயில்.'

வாழ்க்கைச் சம்பவங்களை வெற்றிபெறப் படம் பிடித்திருப்பது பாஞ்சாலி சபதம். பாத்திரங்கள், கதைப்போக்கு, நடிப்பு இவைகளைச் சிருஷ்டி செய்வதில் உண்மை, அலங்காரம் இரண்டையும் கலந்து மகா கியாதி பெற்றிருக்கும் நாடகாசிரியரான ஷேக்ஸ்பியரையும் பின்னடையச் செய்துவிடுமோ என்று பிரமிக்கத் தக்கதாய் நின்று விளங்குவது பாஞ்சாலி சபதம். சத்தியத்தின் உயர்வு, அதர்மத்தின் தாழ்வு, சிறியோரின் தீச் செயல், பொறுமையின் மாண்பு, பொறுமையின் கேவலம், நியாயத்துக்கு வழக்காடுதல், உயர்ந்த நீதிகள், கடவுளின் கருணை இவைகள் எல்லாவற்றையும் பாரதியார் வர்ணித்து எழுதும் கட்டங்கள் படிப்போரைப் பரவசப்படுத்தியே தீரும் என்பதற்கோர் ஐயமும் இல்லை.

ஆக, பாரதியார் கற்பனைக் கடல்; கவிதைக் களஞ்சியம், இயற்கை யழகைத் தீட்டும் திறமை மிகுந்த சிற்பி. சிறந்த தீர்க்கதரிசி; உயர்ந்த கவிஞன்.

சென்னை பாரகன் டாக்கீஸில்

செப்டம்பர்மீ 9-ந்தேதி குதூகலமான ஆரம்பம்

— விவரங்களுக்கு: —

. தியாகராஜ் பிலிம்ஸ், லிமிடெட்.

போன்: 102.] திருச்சினுப்பள்ளி. [டெல்: தியாகராஜ்.

மதனி இடுப்புக்கு

சீதாபதி

'சகோதரர்கள் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும், ஊருக்கே ஒரு உவமானமாக' என்று ஊரே மெச்சிக்கொள்ளும் படியான குடும்பம் சுந்தரமய்யருடையது. சுந்தரமய்யர் காலமாகி பத்து வருஷங்களுக்குமேல் ஆகிறது. ஆயினும் அவருடைய மனைவியின், இத்தனை வருஷ பழுத்த அனுபவத்தின், உதவியைக் கொண்டு மூன்று சகோதரர்கள் அடங்கிய அந்த பெரிதனக் குடும்பம் கட்டுத் தளராமல் இருந்து வருகிறது.

இது கொஞ்சம் ஆச்சரியம் தானே!

தகப்பனார், தான் சம்பாதித்ததை சேர்த்து, ஒரு கணக்குப் பார்ப்பதற்குள், 'என் பங்கை கொடுத்து விடுங்கள்; குடும்பம் எப்படியாவது போகட்டும்' என்ற மனப்பான்மை வார்த்தைகள் பெருகி வரும் நாட்கள் அதிகமாகிறது.

'அண்ணாவுக்கு குழந்தை குட்டிகள் அதிகம், செலவாளி. அவனோடு பிணைத்துக்கொண்டு குடும்பம் போனால் உருப்படியாக என்ன மிஞ்சப்போகிறது? சீக்கிரம் பாகம் பிரித்துக் கொள்வது தான் புத்திசாலித்தனம்' என்ற நினைப்பு அதிகமாகி வருகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் சுந்தரமய்யர் குடும்பத்தின் ஐக்ய பாவம் கொஞ்சம் பெருமைப் பட்டுக்கொள்ளக் கூடியதுதான். ஆனால் வெளிக்கு இப்படி தெரியும் அந்த குடும்பத்தின் உள் அந்தரங்கத்தையும் கொஞ்சம் அலசிப் பார்த்தால், அதிலும் பல வித முறண்பாடுகளை காணலாம். உதாரணமாக சுந்தரமய்யரின் இரண்டாவது பிள்ளை விசுவநாதனை எடுத்துக் கொள்வோம்.

அன்று, ஒரு கடிதம் வந்திருந்தது. அவன் மாமனார் எழுதி இருந்தார். 'சௌ. ஜானகியையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டு வரவும். பார்த்து நாளாகிவிட்டதால் பார்க்க வேண்டும் என்று எல்லோருக்கும் ஆசையாக இருக்கிறது' என்று அழைப்பு வந்திருந்தது. அதை வீட்டில் எல்லோருக்கும் தெரியப் படுத்தினதிலிருந்து பேச்சு ஆரம்பமானது. விஸ்வநாதன் மனதில் பல புது நினைவுகள் குறுக்கிட்டு ஓடலாயின.

அந்த கடிதத்திற்கு அவன் தாயார் பதில் கொடுத்தாள். 'ஆமாம் அவர்களுக்கு என்ன வேலை. பெண் எப்போதும் தங்கள் கூடவே இருந்தால்தான் திருப்தி' என்று.

அந்தக் கேள்வி எழுவதற்கு முன், விசுவநாதனுக்கு ஒருவித சாதகமான எண்ணமும் தோன்ற

வில்லை. 'என்னவோ அவர்களிட மிருந்து முறைப்படி ஒரு அழைப்பு. இஷ்டம், சௌகர்யம் இருந்தால் போகிறது; இல்லை யானல் பேசாமல் இருந்து விடு கிறது. இதைப்பற்றி எதற்கு கிண்டி யோசனை செய்துகொண் டிருக்க வேண்டும்' என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தான்.

ஆனல் அம்மாவின் அந்தக் கேள்வி அவனைக் கொஞ்சம் யோசிக்கச் செய்தது. முதலில் அவனுக்கு தோன்றியது: 'யாருக்குத்தான் பெண், தான் பெற்றது, தன்கூட இருக்க வேண்டுமென்று தோன்றுது? மனித சுபாவமே அதுதானே. பிரியமான சாமான் மீது ஆசை அதிகம் காட்டுவதில் என்ன தப்பு இருக்கிறது? என்னவோ, 'பார்த்து நாளாகிறது, ஒருமுறை வந்து விட்டு போகட்டும் என்று விரும்புகிறார்கள்' என்று சொல் லிக் கொண்டான்.

அப்போது தான் அவன் தாயார் இன்னும் சேர்த்தாள். "இப்போதுதானே போன தை மாதம் அவள் தங்கை கல்யாணத் துக்குப் போய் ஒரு மாதம் இருந்துவிட்டு வந்தாள். அதுக் குள்ளே கண் பூத்துப் போச்சோ?"

போன தை மாதம் என்றதும் விசுவநாதனுக்கு சட்டென்று ஞாபகம் வந்தது. 'ஓஹோ, இப் போது நடப்பது தை மாதம் தானே. ஒரு வருஷமா ஆகிவிட் டது? அப்படியானல் அதிக நாட்கள்தான் ஆகிவிட்டது. ஒரு வருஷத்தையா இவ்வளவு சமீபத் தில் போனதாக சொல்வது?

ஹூம்!' என்று முனகிக்கொண் டான் விஸ்வநாதன்.

கடிதத்தை மடித்து வைத்து விட்டு உட்கார்ந்திருந்தான் விசு வம். 'ஏண்டா விஸ்வம்! நமது சுசீலாவைப் போய் ஒரு நடை கூட்டிக்கொண்டு வாயேன்' என் ருள் தாய்.

'சுசீலாவைக் கூட்டிக் கொண்டு வா" என்றதும் விசுவ நாதன் மனது முன் சம்பவத்தை யும் இந்த பேச்சையும் உடனே ஒத்திட்டுப் பார்க்க ஆரம்பித்தது. "இதென்ன இது, சுசீலா இங்கு இரண்டு மாதம் இருந்துவிட்டு ஊருக்குப் போய் நாலைந்து மாதங் கள்தான் ஆகிறது. அதற் குள்ளே போய் கூட்டிக் கொண்டு வருவதா? ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. ஒரு வருஷம்கழித்து ஜானகியை அழைத்து வரும்படி வந்த கடிதத்தின்மீது அலக்ஷியம், உதாசீனம்! சுசீலாவை அழைத்து வருவதில் இவ்வளவு அக்கரை! ஆமாம், சுசீலா புருஷன் வீட்டுக் காரர்களும் இதே மாதிரிதான் நினைப்பார்கள், பேசிக்கொள்வார் கள் என்ற நினைப்பு இல்லாமல் போய்விட்டதே இவர்களுக்கு."

அப்போதுதான் அவன் அண் ணன் மனைவி ஆறுமாத மாகியும் பிறந்த வீட்டிலிருந்து திரும்பா மல் இருந்தது அவனை உறுத் திற்று. 'ஆமாம்' ஆறுமாதமாக வரா திருப்பவளைப்பற்றி கொஞ்ச மாவது மூச்சுவிடுவதில்லை அம்மா. அண்ணவோ கம்மென்று இருக் கிறன். 'வருகிறபோது வரட் டுமே. இங்கே வந்து என்னத்தை சாதிக்கப் போகிறள். இங்கே வந்து சீக்கோடே அவஸ்தை படு கிறதற்கு மருந்து சாப்பிட்டு

உடம்பை தேற்றிக் கொண்டு வரட்டுமே,' என்கிறான். ஆனால் இவ்வளவிலும், சாப்பிட இலையில்



உட்கார்ந்தால் படுத்துகிற பாடுக்கும், தடபுடலுக்கும் குறைச்சல் இல்லை.

'ஏன் காபி இன்னும் தயாராகவில்லை?'' "இதென்ன இட்டிலியா, களிமண் கட்டியா?'' இந்த ரீதியில் அதிகார தடபுடல்! 'ஆமாம், இட்டிலி களிமண் கட்டி! அவன் மனைவி பாருங்கல்லாக இட்டிலி பண்ணிப் போட்ட போதெல்லாம் வாயில்லை, அந்த கையில் இருந்த தங்கம் இவர்கள் கையில் இழைத்து இருக்கவில்லை போலிருக்கு. விரட்டமாட்டானோ? தனியே இரண்டு பேரையும் குடித்தனம் போடச் சொல்லி இருந்தால் தெரியும்?''

இந்த மாதிரி யோசித்துக் கொண்டிருந்த போதுதான் ஒரு பெரிய பாத்திரம் நிறைய தான் ஒருவளாகவே கல் உரலில் மாவை அறைத்துக் கொண்டு அயர்ந்து போய் நிலைக்கு நிலை நின்று, அவற்றைத் தொட்டுக்கொண்டு ஜானகி வந்துகொண்டிருந்தாள். தள்ளாடிக்கொண்டே. எந்த நிமிஷத்திலும் அவள் கீழே விழுந்து விடுவாளோ என்று தோன்றும்படியாக இருந்தது.

ஒருதரம் அவளைப் பார்த்ததும் அவனுக்குத் தோன்றியது! 'அப்பா! என்ன வீடு. ஒரு வண்டி கூட்டத்துக்கு ஒருத்தி உழைத்து உழைத்து பாடுபட வேண்டியிருக்கிறது. என்ன, ஒருத்தி உடம்பு

இரும்பாலே அடிச்சா போட்டிருக்கு? சி! என்ன வேண்டி கிடக்கு. பேசாமல் பாகத்தைப் போட்டுக்கொண்டு அவனவன் தன்தன் பாட்டைப்பார்ப்பது எவ்வளவோ தேவலை. அதை விட்டு விட்டு ஊருக்கு ஒப்பனுமாம். பெரிய வீட்டுக் குடும்பம் சிதையாமே காப்பாத்தனுமாம் அந்தஸ்தாம், உள்ளுக்குள்ளே நடக்கிற விஷயம் யாருக்காவது தெரிஞ்சால்தானே. ஹூம்!'

அப்போதுதான் வாசலில் தட்டான் குரல் கேட்டது.

'என்ன சமாசாரம்?'

'இல்லீங்க இந்த நகையை நிறுக்கனும். பெரிய சாமியை தேடறேனுங்க?

'எந்த நகையடா?'

'ஒட்டியாணமுங்க'

'அதான் மன்னிக்கு பண்ணி இருக்கிறது', என்று சேர்த்தாள் ஜானகி சமயலறைப்பக்கம் போய்க்கொண்டே.

விஸ்வநாதன் உடனே ஏதோ வாய் விட்டுச் சொல்லப் போனவன் அடக்கிக்கொண்டான். அவன் நினைப்பு அப்போது சுழன்றது. 'ஆமாம், வேண்டியதுதான், இடுப்பு குனிந்து, அல்லது இடுப்பிலே தூக்கி, செய்து வந்திருக்கிற வேலைக்கு ஒட்டியாண சன்மானம் வேண்டியதுதான்! ஏன், அது கூட இல்லை—ஒட்டியாணம் போட்டுக்கொண்டு விட்டால் இனிமேல் குனியக்கூட முடியாதோ என்னமோ? போகட்டும் போகட்டும். கேள்வி கேட்பார் கிடையாது! எத்தனை நாளைக்கு இப்படி நடக்கிறதோ...' என்று நினைத்துக்கொண்டு 'சரி சரி கொண்டு வந்து நிறு' என்றான்.

Coffee

Ours for Quality

Raw, Roast or Ground

Available in several

grades to suit all

GANESH & CO.

MADRAS.

Retail Branch:

285, CHINA BAZAR ROAD.

லக்கின குணதிசயங்கள்

1. மேடம் (முன் தொடர்ச்சி)

மேடத்தில் புதன் இருப்பின் மெலிந்த சரீரமுள்ளவன். எதிலும் நம்பிக்கை யில்லாதவன். வலுவற்ற நரம்புகளையுள்ளவன், குள்ளன், ஆதி மத்திய அந்தங்களில் சுகமற்றவன். பாக்கியமற்றவன், கள்ளத்தனமுள்ளவன், சூது முதலியவைகளில் பிரியப்பட்டு அதனுல் தரித்திரத் தன்மையை அடைவான், குடும்ப கிலேசமுள்ளவன், எப்பொழுதும் சத்துருக்கள் உள்ளவன், ருணச் சங்கடமுள்ளவன், பிறரால் தூஷிக்கப்படுபவன், தக்க நூல்களை ஆராய்ச்சி செய்திருந்தாலும் அவைகளைத் தப்பான வழிகளில் உபயோகப்படுத்துபவன், கணக்குக் காரியங்களில் நிபுணனுயினும் அதைக் கொண்டு தப்புகளைச் செய்து பின் வருந்துபவன்.

வியாபாரத் தொழில்களில் ஈடுபட்டு, பொருளை யிழந்து, வழக்கு முதலிய வம்புகளால் வருத்தப்படுபவன், களத்திர புத்திர வெறுப்புள்ளவன், கொடிய வாயு சம்பந்தமான பிணியால் சிலகாலம் வருந்துபவன், அந்நிய விவாகம் செய்து கொள்ளுபவன், மயக்கம் தரத்தக்க வஸ்துக்கள், நீசர் சம்பந்தப்பட்ட எந்திரசாலைகள், தைலத் தொழில் சம்பந்தமான வகைகளில், எழுத்து வகையில், தொழில் புரிபவன், அல்லது வியாபாரம் செய்பவன்.

சூரியன், சனி, அங்காரகன் நீங்கலாக மற்றெந்த கிரகம் சேர்ந்தாலும், பார்த்தாலும், முன் கூறிய பலன்கள் சிறிது குறையும்.

மேஷத்தில் புதன் இருக்க, பெண் பிறக்குமாயின் மிக்க கற்புள்ளவளாயும், அதிக சுகம் முதலியவைகளை வெறுப்பவளாயும், வித்தை, புத்தி மேன்மை உள்ளவளாயுமிருப்பாள்.

மேலும், மேடத்தில் குரு இருப்பின், முன்னோர் பாக்கியமடைபவனும், இடையில் அப்பாக்கியங்கள் அழிந்தோ அல்லது வழக்கு முதலிய வம்புகளாலோ வருத்தப்படுபவன், தான் புத்தி சாதுர்யத்

துடன் செய்த காரியங்களைப் பிறர் கண்டு மதிக்காததினால், மனச் சஞ்சலம் அடைவான். அல்லது அநேக நூல்களை அனுபவத்துடன் ஆராய்ந்து, நூதன அநேக காரியங்களைச் செய்ய வல்லமையிருந்தும் செய்து கீர்த்தியைப் பெறுவதற்குச் சமய சந்தர்ப்பம் கிட்டாமல் தவிப்பவன், இல்லத்திலும் தக்க, சௌக்கியமில்லாமல் தவிப்பவன், ராஜப்பிரபுக்கள் நேசமிருப்பினும், அவர்களின் உதவியில்லாதவன். தான் செய்யுந் தொழிலில் பெரும் பாக்கியம் கிடைக்கினும், கடன் வர விரயம் செய்வான். இடையில் அரச பகையும் கொள்ளுவான், தைரியமற்றவனு மாவான்.

ஆனால் மேற்கூறிய மேடத்தில், பல கிரகங்கள் சேர்ந்தாலும் பார்த்தாலும் முன் கூறிய பலன்கள் சிறிது குறையலாம்.

மேடத்தில் பெண் பிறந்த லக்கினத்தில் குரு இருப்பானாயின், தன் கணவனுடன் சகல சம்பத்துக்களையும் பெற்று மாங்கல்ய பலத்துடன், கட்டிடம், வாகனம் முதலியவை அனந்தங்கொண்டு எக் கவலையுமில்லாமல் வாழ்ந்து வருவாள்.

பின்னும் மேட லக்கினத்தில் சுக்கிரனிருக்க அழகன், மை தீட்டியது போன்ற அழகிய நேத்திரமுள்ளவன், வார்த்தையால் பலரையும் வசியம் செய்பவன், சர்வ சுகபோக பாக்கியமுள்ளவன், ரச சம்பந்தமான தொழில்களில் மிகுந்த லாபம் அடைபவன், இரண்டு மூன்று களத்திர முள்ளவன், விசித்திர வாகன சுகமுள்ளவன், மயக்கந் தரத்தக்க வஸ்துக்களைப் புசிக்கப் பிரியப்படுபவன். அழகு பொருந்திய நடையுடையவன், நீண்ட கை கால்களை யுடையவன், ஜலப் பிரயாணம் செய்பவன்.

அந்நிய பாஷைகளில் தேர்ந்தவன், சூது முதலிய தொழில்களில் தக்க லாபமும் அடைபவன், எப்பொழுதும் தக்க ஒத்தாசை ஒன்று உள்ளவன், அந்நியரிடத்திலேயே அதிகப் பிரியமுள்ளவன், உல்லாசச் சாலைகளுக்குத் தலைவனுமாவான்.

முன் கூறிய மேடத்தில் பெண் பிறந்து லக்கினத்தில் சுக்கிரன் இருப்பானாயின், புருஷனை வெறுத்துப் பல சுகங்களையும் அடைபவள், சூரியன், குரு, செவ்வாய் முதலிய கிரகங்கள் சேர்ந்திருக்கின், இன்னும் பல குறைகளையும் சொல்லலாம். மற்ற கிரகங்கள் சேர்ந்தாலும் பார்த்தாலும், கணவனுடன் சில நற்பலன்களை அடைய இடமுண்டு.

மேலும் மேட லக்கினத்தில் சனி யிருக்கின், நீலம்போன்ற சரீர காந்தி யுள்ளவன், கால் கைகளில் முடம் அல்லது வடுவுள்ளவன், நிலையுள்ள தொழிலில்லாதவன், பாபத் தொழில்களை செய்பவன், பல உயிர்களையும் இம்சிப்பவன், கொடிய நீசர்கள் நேசமுள்ளவன், நீசர் போசனத்தில் பிரியமுள்ளவன், மயக்கந் தரத்தக்க வஸ்துக்களைக் குடித்து ஆனந்தப் படுபவன், கடினமான சிந்தையுள்ளவன், தருமம் செய்யப் பிரியமில்லாதவன், எப்பொழுதும் சூழ்ச்சி

களைச் செய்து, தனக்கேட நினைப்பவன். யாரும் அறிந்து கொள்ளாத படி சில நாள் மறைந்திருப்பவன், பயங்கரமான முகத்தையுள்ளவன், சாந்தமில்லாதவன், இனத்துரோகம் செய்பவன், தனக்குத் தகுந்த படி களத்திர முள்ளவனுமாவான்.

மேடத்தில் சனியுடன் குரு, சுக்கிரன், சூரியன் சேர்ந்திருக்கினும் பார்க்கினும் முன் கூறிய கெட்டபலன்களுடன் இன்னும் அநேக கொடூர பலன்களையும் சந்தேகமில்லாமல் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆனல் சனியுடன் சூரியன், குரு, சுக்கிரன் செவ்வாய் நீங்கலாக மற்ற கிரகங்கள் சேர்ந்தாலும் பார்த்தாலும், முன் கூறிய கெட்ட பலன்கள் அநேகமாய்க் குறைந்து விடும்.

முன் கூறிய மேடத்தில் சனியிருக்கப் பெண் பிறக்கின் எக் கெடுதியான பலன்களும் பாதிக்காது. இடை வயதில் மாத்திரம் தரித்திரப் பிணி வந்து நீங்கும்.

மேலும் மேட லக்கினத்தில் இராகு இருக்கின் திடமுள்ள சரீர முள்ளவன், விஷமத்தனமுள்ளவன், இடை வயதில் பிரபலமான யோக போகங்களை அடைபவன், தனக்குக் கெடுதி செய்தவர்களைத் தண்டித்தே தீரவேண்டு மென்கிற பிடிவாதமுள்ளவன், வழக்குத் தொடர்பவன், பட்சபாதமுள்ளவன், விஷ ஜந்துக்களால் பீடிக்கப்படு பவன், அற்பாயுள் உள்ளவன், நேசமற்றவன், பெரிய தலையுள்ளவன், நீசர், மிலேச்சர் வகையான தொழிலைச் செய்து பொருள் சம்பாதிப் பவன், தன்னடக்கமில்லாதவன், பிரகாசம் பொருந்திய சிறிய நேத் திரமுள்ளவன்.

அற்ப நித்திரையுள்ளவன், சகோதரரால் ஆதி மத்தியந்தங்களில் அதிக சோகமடைபவன் அல்லது பகை கொள்ளுபவன், அரக்கர் குணமுள்ளவன், மனையாளுக்கினியன், பூமி கட்டிடம், யந்திரசாலை, ரசாயனம் முதலிய தொழில்களால் தக்க லாபமோ அல்லது பெரு மையோ அடைபவன், மதபேதமில்லாதவன், தெய்வத்தை நம்பாத வனுமாவான், ஏக களத்திர விரதமற்றவன், இடை வயதில் அதிக சுகமனுபவிப்பவன்.

மேற்கூறிய மேட ராசியில் இராகு இருந்து சூரியன் சேர்ந் திருப்பானயின், மதிமயக்கம், தரித்திரம், அங்கஹீனம், செவிடு, குளர் வாய், மலஜல ஸ்தானங்களில் மாருத பிணிகள் முதலிய குற்றங்களு முண்டாகும். குரு, சுக்கிரன், புதன் முதலிய கிரகங்களின் சம்பந் தமோ பார்வையோ இருக்குமாயின் முற்கூறிய கெட்ட பலன்கள் சிறிது குறையும்.

மேடத்தில் இராகு இருக்கப் பெண்கள் பிறக்கின் அதிக கெடுதி கள் ஒன்றும் செய்வதில்லை. அகண்ட சரீரத்துடன் வார்த்தையாடு வதில் சலியாதவர்கள். முன் கூறிய சுபகிரகங்கள் சேர்ந்து பார்த்தா லும் இக்குறையும் நீங்கலாம்.

பின்னும் மேஷ ராசியில் கேது இருக்கின் மெலிந்த தேகமுள்ளவன், முகலட்சணமற்றவன், சிவந்த ரோமமுள்ளவன், எப்போதும் கோள் சொல்லப் பிரியப்படுபவன், கணித சாஸ்திரங்களில் வல்லவன், படபடப்புடன் பேசுபவன், மிகுந்த அறிவுள்ளவனாயினும் தன் சாமர்த்தியத்தைக் காண்பிப்பதற்கு கணிதம் முதலியவை எழுதுவதில் பிசகு செய்து மேலோர்களால் வருந்துபவன், பிறருக்கு ஒத்தாசை செய்து தன் தொழில்களை இழப்பவன், பெருமை பேசிக் கொள்ளாதவன், தனது தாழ்மையைப் பிறரிடத்தில் சொல்லித் திரிபவன்.

களத்திர சுகமற்றவன், குடும்ப கலகத்தால் எப்போதும் கவலையடைபவன், தனக்குத் தெரியாத காரியத்தையும் செய்து முடிப்போமென்னும் நம்பிக்கையுள்ளவன், நிலையான தொழில்களில் சேரினும் பகை கொண்டு பிரிபவன், நிலையில்லாத தொழில்களில் சேர்ந்து கவலைப் படுபவன், ஆதிமத்தியங்களில் தரித்திரத்தால் பாதிக்கப்பட்டு தான் ஒருவாறு நன்மையைப் பெறுபவன், ஆனால் சுபக் கிரகங்களின் சேர்க்கையோ பார்வையோ இருக்குமாயின் முன்கூறிய கெட்ட பலன்களெல்லாம் பாதிக்குமேல் குறையும்.

மேடத்தில் கேது இருக்கப் பெண்கள் பிறக்குமாயின், புத்தி சாதுர்யமுள்ளவளாயும் குடும்பத்தைக் கணக்காக நடத்தும் கண்ணியமுள்ளவளாயும் எப்பொழுதும் கணவனைப் பற்றிய கவலையுள்ளவளாயும், சிலகாலம் கணவனைப் பிரிந்து வெறுத்திருப்பவளாயும் காணப்படுவாள். முன் கூறியவாறு சுபக்கிரகங்களின் பார்வையாலும் அல்லது சேர்க்கையாலும் கெட்ட பலன்கள் சிறிது குறையும்.

இதுவரையிலும் மேட ராசியின் பொதுப்பலனும் மேற்படி ராசியில் கிரகங்கள் இருந்த பலனையும் பொதுவாய் சொல்லப்பட்டிருக்கிறது. இனி மேஷ ராசியின் ரசவாக்கிய பிந்துக்களின் பலாபலன்களையும் மேஷ ராசியிலுள்ள 32 ஸ்தான பிந்துக்களில் ஜெனிப்பவர்களின் சோதரம், தொழில், மணம் முதலியவைகளை மாறி மாறித் தெரிந்துகொள்ளும் முறைகளையும் 12 ராசிப்பலனைத் தம் மேல் மேட ராசிக்கு உரைத்தபடி பலன்களைச் சொல்லி முடித்த பிறகு, தொடர்ந்து வரும். இதுவரையில் சோதிட சாஸ்திரங்களில் ரசவாக்கிய பிந்தின் பலன்கள் வெளிவரவில்லை. அகத்திய நாடியிலிருந்து ரசவாக்கிய பலன்களைப் பின் எழுதி வருவோம்.

(தொடரும்)

அட பாவி!

(வி. எஸ். சுந்தரராஜன்)

நிர்மலமான ஆகாய வீதியில் சந்திரன் அன்றிரவு தன்னுடைய பிரயாணத்தைச் செய்ய முடியாமல் இருந்தான். ஏனென்றால், அன்றுதான் அமாவாசை. இருட்டுக்குப் பயந்துதானோ என்னமோ பிரயாணத்தை நிறுத்தியிருந்தான்.

ஆனால் அந்த இருட்டுக்குப் பயப்படாதவர்கள் இருவர், ஆகாய வீதிக்குக் கீழ் இருக்கும் பூமண்டல வீதியில், போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் போய்க் கொண்டிருந்த வீதியில் வீடுகளே இல்லை. ஏனென்றால், அது வீதியல்ல. போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லும் பாதை. ஜன நடமாட்டமும் கிடையாது. ஏனென்றால், எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள்—அவர்கள் இருவரைத்தவிர! முதலில் போய்க்கொண்டிருந்தவனைப் பின்னவன், முதல்வனுக்குத் தெரியாமல், துரத்தினான்!

இவர்களுக்கு, ஆகாயத்தில் அங்குமிங்கும் பளிச்! பளிச்! என்று மினுக்கிக் கொண்டிருந்த விண்மீன்கள் தான் உதவியாக இருந்தன என்று சொல்லலாம். ஆம், அவ்விருவரும் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தார்கள்.

* * *

துப்பறியும் துளசிங்கத்தை அறியாதவர்கள் கிடையாது. பல திருடர்களை படுதுணிச்சலாக கண்டு பிடித்துள்ளார். பல பட்டங்களையும் பெற்றார்.

விதி யாரை விட்டது! சில மாதங்களாக அவருக்குத் துப்பறிவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. கொலைகளே உலகத்தில் அற்றுப்போய் விட்டது போலிருந்தது. இதைப்போல் மற்ற போலீஸ் இலாகா உத்தியோகஸ்தர்கள் வேலையும் குறைவதைக் கண்டு மேல் அதிகாரிகள் எல்லோருடைய சம்பளத்தையும் குறைக்க எண்ணினார்கள். என்ன செய்வது! கடைசியில் துளசிங்கம் ஒரு யோசனைக்கு வந்தார்.

"இனிமேல் இரவு வேளைகளில் போஜனத்திற்கு அப்புறம் வெளியில் உலாவப் போவது. அப்பொழுது எப்படியாவது திருடன் அகப்படலாம். புகழும் வரும். சம்பளமும் உயரும்." என்ன துணிச்சல் பாருங்கள்!

அவருடைய மேற்கண்ட யோசனையின் பலனை அவ்வளவு சீக்கிரத்தில் அவர் அடைவார் என்று யாரும் நினைக்கவில்லை. அவரே நினைக்கவில்லை என்றால்; உண்மையென்று நம்ப முடியுமா?

அவருக்குத் திருடனைப் பிடிக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டது!

அன்று காலை வெளியான தினசரிகளில் திருடன் வீரனைப்பற்றி

யும் அவனைப் பிடிப்பவர்களுக்கு ரூபாய் ஐநூறு இனாம் என்றும் காணப்பட்டது. சுவரெல்லாம் இவ் விளம்பரம் காணப் பட்டது.

தனக்கு முன்னால் சென்றவன் "திருடன்வீரனே" என்று தீர்மானித்து விட்டார் துளசிங்கம். போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்ததும் அவருடைய மார்பு பட படவென்று அடித்துக் கொண்டது. "பாவி! போலீஸ் கஜானாவையே களவாட வந்திருக்கிறான்" என்று எண்ணிக் கொண்டார்.

அவன் போலீஸ் கமிஷனர் அறைக்குள் நுழைந்ததும் துளசிங்கத்திற்குச் சிரிப்பாய் வந்தது. அதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார்.

"இந்த அறையில் கஜானா இருக்கும் என்று எண்ணினேனே என்னமோ!' என்று' மனதிற்குள் சொல்லிக்கொண்டார்.

அவன் உள்ளே சென்றதும் சமயத்தைக் கைவிடாமல் அறையின் கதவைச் சங்கிலியிட்டுப் பூட்டிவிட்டார்!

அப்பொழுது அவருக்கு தன் கையில் ரூபாய் ஐநூறு இருப்பது போல் தோன்றிற்று. உச்சி குளிர்ந்து விட்டது. மறு நாள் காலை புகழ் தன் வீட்டைப் பார்த்து வரக் காத்திருக்கிறது என்று எண்ணியவராய் வீடு வந்து சேர்ந்தார். அன்றிரவு பல இன்பக் கனவுகளைக் கண்டார்.

* * *

"நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைப்பதைப் போல்" துளசிங்கம் நினைத்தற்கு மாறாக அன்று (மறுநாள்) காரியங்கள் நடந்தன.

விடியற்காலை படுக்கையில் கிடக்கும் போது ஒரு போலீஸ்காரன் வந்து சேர்ந்தான். துளசிங்கத்தினிடம் அவன் ஏதோ ரகஸ்யமாகக் கூறினான். உடனே இருவரும் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தனர்.

அங்கு கண்ட காட்சி இவரை திகைக்கச் செய்தது. போலீஸ் கமிஷனர் வருந்தும் முகத்துடன் நின்றுகொண்டிருந்தார். அவரைச் சுற்றிலும் சில போலீஸ் கான்ஸ்டபில்கள் நின்றுகொண்டிருந்தனர்.

கமிஷனர்தான் இரவு 11மணிக்கு உலாவச் சென்றதாகவும், திரும்பி தன்னுடைய அறையில் படுக்கப்போனதாகவும் அடுத்த க்ஷணம் வாசல் கதவு பூட்டப்பட்டதைப் பார்த்ததாவும் சொன்னார். கதவைப் பூட்டியவன் "வீரனே" என்று அவர் நிச்சயம் செய்து விட்டார்.

தப்பறியும் துளசிங்கம், "அடபாவி! இப்படியா செய்தான்" என்று கூறி தப்பித்துக் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

கலைஞான வரலாறு

(முன் கதைச் சுருக்கம்.)

[கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணனுக்கு சுவாமிநாதன் என்று ஒரு மகன், சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம்மறைமகன், பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினால், தாய் தந்தையர் செய்வித்த மண ஏற்பாடுகளை வெறுத்து, பெற்றோர் அறியாமல் முனிவர்க்கிடமான வனத்தையடைந்து, அங்கொரு முனிவரையடுத்து, ஞான உபதேசம் செய்து அருளும்படி அவரை வேண்டினன். முதலில் முனிவர் அவனைத் தடுத்து இல்லறத்தினின்றும் நற்கதி அடைவதற்கு மார்க்கமுண்டு என பல உரைத்தும், துறவறத்தையே அம்மறைமகன் வேண்ட, முனிவரும் ஞானம் உதயமாகும் சில உபதேசங்கள் செய்து தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். மகன் வரவைக் காணாத தாய் தந்தையர்கள், தவித்துத் துயரில் ஆழ்ந்தனர்.

எனினும் ஒருவாறு தேறி, தங்கள் இல்லத்தை விடுத்து, மகனைத் தேடி, வனவழி சென்றனர். வனவழியில் நெடுந்தூரத்தில், ஆசிரமம் ஒன்று அவர்களுக்குத் தென்படவே, அங்கு சென்றனர். அந்த ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த முனிபுங்கவர், வந்தடைந்த சதிபதிகளின் மனதைத் தேற்றுவதற்காக, முனிவர் பெருமானான அகஸ்திய மாமுனி உபதேசம் செய்த பார்வதிதேவியின் தவ வரலாற்றை அவர்களுக்குச் சொல்லுகின்றார்.

தவத்திலிருந்த மலைமன்னன் முன் உமாதேவி மூன்று வயது குழந்தையாக உற்பவிக்கின்றாள். அதைக் கண்டு மலைமன்னன் மகிழ்ச்சி கொண்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வீடு போய் செல்வமாய் வளர்க்கிறான். ஐந்தாம் வயதில் பார்வதி என்று பெயர் வைத்தான். பதிமூன்று வயதான பொழுது பார்வதி பரமேசுவரனைக் குறித்துத் தவம் செய்ய வேண்டுமென்று தந்தையை வேண்டினாள். தந்தையும் அதற்கிணங்கி அவளை மலைச்சாரலில் தவம் புரிந்த வசிஷ்ட முனிவரிடம் கூட்டிச் செல்லுகிறார். வசிஷ்டர் பார்வதிக்கு தவ முறையைச் சொல்ல அவள் அதன்படியே தவம் செய்கின்றாள். தவத்தின் நடுவே சிவபெருமான் ஒரு 'கிழவன்' வேடம் தரித்து வந்து பார்வதியை சோதனை செய்கிறார். வாமசிவனைத் தூற்றுகிறார். பார்வதி கோபங் கொண்டு கிழவனை வெளியே போகச் சொல்லுகிறாள். கிழவேடந்தரிதத சிவபெருமான் ரிஷபாரூடராக, பார்வதிக்கு, காட்சி அளித்து, தேவியை மணம் முடித்துக்கொள்ளுவதாக வாக்கு கொடுத்து, திருமணம் செய்துகொள்ளுகிறார்.]

சிவஞான தேசிகருக்கு, முனிவர், ஈசனுக்கும் பார்வதி தேவிக்கும் நடந்த விவாக வைபவங்களைச் சொல்லி முடிக்க, தேசிகரும் அவர் மனைவியும் புத்திர சோகத்தினின்றும் தெளிந்து தேவியையும் தேவனையும் மனத்துள் தியானித்து, "முனிபுங்கவ, பார்வதி தேவி தவ வெற்றியடைந்து தனது தந்தையாருடன் முனிவரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தனது அரண்மனைக்குச் செல்லும்பொழுது, ஜயவதி என்னும் பணிப்பெண்ணை முனிவரிடத்தில் விடுத்துச் சென்றதாய் சொன்னீர்கள் அல்லவா? ஜயவதி பின் என்ன ஆயினள்? என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். தயவு செய்து சொல்வீரென" வேண்டினர்.

அதற்கு முனிவர், "தேசிகரே, பார்வதி தேவியைப் பிரிந்த ஜயவதியானவள் பிரிவாற்றாமையால் மிகவும் வருந்தி, தேவியார் பூஜித்த பர்ணசாலையில் ஒருபால் சோகமுற்றிருந்தனள். அக்காலையில் வசிஷ்ட முனிவன் ஜயவதியிருக்கும் பர்ணசாலையை அடுத்து, "மாதே நீ ஏன் வருந்துகின்றனை? நீ செய்த புண்யவசத்தினால் மன்னனின் மகளுடன் சில நாள் இருக்க நேர்ந்தது. நீ அடைந்த இப் பெரும் பாக்கியம் ஒன்றே உன் ஜன்மசாபல்யத்திற்குப் போதுமானதல்லவா? வருந்தாதே. இன்னும் சில நாளில் தக்கபடி இல்லறத்தை நடத்துவதற்கான ஆடவனை அடைந்து, உன் மனம்போல், கற்பை யிழந்து கன்ம மூட்டையை சுமந்துகொள்ள பொருளாசையை விரும்பி பேய்போல் திரியும் கொடியோர்களைத் தண்டித்துக் குறையில்லாமல் வாழ்வாய். இதோ நமது சிஷ்யர்களிடும் உணவை அருந்தி இவ்விரவைக் கவலையற்று கழிப்பாயாக" என்றனர்.

முனிவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட ஜயவதி சோகத்தினின்றும் தெளிந்து முனிவரை வணங்கி, "சுவாமி, தங்களின் கிருபை. அப்படியே நடந்துகொள்ளுகிறேன்." என்றனள். முனிவரும் நல்லதென்றுரைத்து, தனது ஆசிரமத்தை அடைந்தார்.

ஜயவதியும் முனிவரின் கட்டளைப்படி சிஷ்யரால் கொடுக்கப்பட்ட உணவைப் புசித்து, ஓராசனத்தில் அமர்ந்து, முனிவர் உரைத்த சில முக்கிய வார்த்தைகளை நினைத்துச் சிந்தனையில் ஆழ்ந்தனள்.

அப்பொழுது சூரியனும் மேற்குக் கடலில் ஆழ்ந்தனன். பட்சிகள் யாவும் படபடப்புடன் தங்கள் பேடுகளுடன் கூடி களைப்படைந்தன. பகலெல்லாம் சூரிய கிரணங்களால் வாடி ஊசலாடிக்கொண்டிருந்த பலவிதமான புஷ்பச் செடிகள் எல்லாம் தலை நிமிர்ந்து, "ஜயவதி, நீ கவலைப்படாதே! அந்நாள் லீலையின் வீட்டில் நீ கண்டு, தகுதி யற்றவன் என்று நினைத்து ஓடிவந்த அக்குணபதியே உனக்கேற்ற கணவன். அவனையே நீ மணஞ் செய்து இல்லற தருமத்தை நிலைநாட்டி இழிவான தொழில்களைச் செய்து வரும் கொடியவர்களைத் தண்டித்து இவ்வுலகத்தில் பெரிய கீர்த்தியைப் பெறுவாய், அஞ்சாதே!" என்று சொல்வதுபோல் இருந்தது.

ஆகாயத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் மாறி மாறி ஒளி வீசுவதைப் பார்க்குமிடத்து, "ஜயவதி! உன்னுடைய விடாமுயற்சியும் வீரத்தன்மையையும் கண்டு ஆச்சரியப்படுகிறோம்" என்று அவை ஆனந்தப்படுவதுபோல் இருந்தது.

நெடுநேரமாய் ஏதோ காரியத்தைக் குறித்துச் சிந்தித்திருந்த ஜயவதி, பரிமள மிகுந்த வனச் சிங்காரத்தையும் நட்சத்திரப் பிரகாசத்தையும் கண்ட மகிழ்ச்சியினால், தான் முதலில் எதைக் குறித்துச் சிந்தித்தோம் என்பதையும் மறந்து, தனக்கும் தெரியாது பர்ண சாலையை விடுத்து, ஓர் மடுக்கரையை அடுத்தனள். அப்பொழுது பூர்ண சந்திரனும் தனது அரிய குளிர்ச்சி மிகுந்த கிரணங்களுடன் உதயமாயினன். அச்சந்திரப் பிரகாசத்தின் உதவியினால் ஓர் அழகிய பாறையை அடைந்து உட்கார்ந்து சந்திரனை நோக்கிச் சில சொல்லுகிறாள்.

"சந்திரனே! உஷ்ணம் பொருந்திய கிரணங்களாலே நேசித்துப் பிரிந்தவர்கள் உடலைச் சுட, வடவாமுகாக்கினியிடம் கற்றனையோ? அல்லது விஷத்தினிடம் கற்றனையோ? எவ்விடத்தில் கற்றாய், சொல் பார்க்கலாம். கொடுமையுள்ள சந்திரனே! என்னை வருந்தச் செய்யாதே. குளிர்ச்சி பொருந்திய பழமையான உனது கிரணங்களைக் கொண்டு காய்வாயாக! அப்படிக் காய்வாயானால், உன்னைப் பெற்ற வருண ராஜனின் குலமும் வாழும்.

"கணவனைப் பிரிந்த மாதரை வருத்துகின்ற சந்திரனே! நீ அரவின் கிரண தோஷத்தால் ஒளி மழுங்கி யிருந்ததை, நானும் கண்டிருக்கிறேன். எனக்கு இன்னும் விவாகம் ஆகவில்லை. என்னிடத்தில் உன்னுடைய சூரத்தனத்தைக் காட்டாதே. பக்குவமடைந்த மாதரைக் கவரும் பொருட்டு யமன் போல் உதித்த சந்திரனே! உன்னுடைய கலக்கம் கொடிய விடம் என்றல்லவா கரும்பாம்பு உன்னை விழுங்கியும் விடுகிறது? என் என்னைச் சுடுகிறாய்? தேவாமிர்தத்தோடு திருப்பாற் கடலில் நீ பிறந்ததை மறந்து விட்டாய் போலும்! சிவனது திருமுடியில் இருப்பதைக்கூடவா நீ மறந்து விட்டாய்? (ஜயவதி சந்திரனைத் துஷிப்பதைப் பார்த்தால், சீலையின் வீட்டில் அவள் அன்று கண்ட குணபதியைக் குறித்துத் தான் சிந்தித்திருக்கக் கூடுமோ?)

"சந்திரனே! ஐந்தரு, கௌஸ்தமணி, இருநிதி, அமுது, லட்சுமி இவற்றோடு நீயும் கடலில் பிறந்தாய். உலகெல்லாம் ஈந்து, ஆதரித்து, சக்தியற்ற காலத்தில் அழிக்கும் சிவனது திருமுடிமீது விளங்குகின்றாய். உனக்கேன் மன்மதனிடத்து உறவு? நீ மன்மதனிடத்து உறவுதான் வைத்துக்கொள்ளேன். என்னை என்ன செய்ய முடியும்? ஆ...நான் சொன்ன வார்த்தை பிசகு, சுடாதே. எனக்குள்ள வய

திற்கும் உனக்கும் ஏதேனும் நேசமுண்டோ? இருக்கலாம். இல்லையேல் குளிர்ச்சி பொருந்திய கிரணங்களையுடைய நீ என்னைச் சுடவேண்டிய காரணம் என்ன? சந்திரனே! அப்படி என் வயதிற்கும் உனக்கும் நேசமிருக்குமாயின் ஒன்று கேட்கிறேன், பதில் சொல்லுவாயோ? சொல் பார்ப்போம்.

"நான் முனிவரையும் பரமேசுவரியையும் முதன் முதல் கண்ட பொழுது, என்னை ஆதரித்து வந்த குடும்பத்தைப் பிரிந்து அக்கொடிய லீலையின் வீட்டை, கிழவியின் உதவியால் சேர்ந்த பொழுது அங்கொரு கொடியோனையும் கண்டேன். அக்கொடிய குமரன் தனதறிவை யிழந்து, பணச் செருக்கினால் கற்பிழக்க அப்பாதகியின் வலையில் சிக்கி ஏதோ கெட்டகாரியத்திற்கு அழைத்தனன். அப்பாதகசண்டாளனைப் பின்னும் மணம் புரிந்து இல்லற தருமத்தை நிலை நாட்டுவேன் என்றல்லவா முனிவரும் சொல்லியிருக்கிறார்?

"இது எந்த நியாயத்தைச் சேர்ந்ததாய் இருக்கலாம்? ஆம். மனமே! என்ன உளறுகிறாய்? கருணாகரரான கடவுளின் சிரசின் மீது இருக்கும் சந்திரனிடத்து பேசுகிறோம் என்ற ஞாபகம் இல்லையோ? ஏன் அன்று நான் கண்ட ஆடவனின் தோற்றம் கம்பீரமாகத்தானே தோன்றிற்று? பாவம் அச் சுந்திர புருஷன் மிகுந்த குணங்களைப் பெற்றவனாகவே இருக்கக் கூடாதோ? அவன் வயதையும் அழகையும் கண்டு பொறாமை கொண்ட மன்மதனின் தூண்டுதலினாலும், அந்த லீலையின் சாமர்த்தியம் பொருந்திய மாய வலையில் சிக்கி தனது கற்பை இழக்க நேர்ந்திருக்கக் கூடுமோ?"

"என்னையும் மயங்கச் செய்யும் அம்மன்மதன்தன் கொடிய காமாக்கினியைத் தரத்தக்க மலர்க்கணைகளால் தனது அறிவிழந்து அப்பாதகியின் வீட்டைச் சேர்ந்திருப்பானோ? ஆம்; வயதையும் அழகையும் கண்டு பொறாமைப்பட்டு மன்மதன் விடும் பாணத்தை யார் தான் விலக்கிக்கொள்ள முடியும்? அதற்கு நானே திருஷ்டாந்தமாக இருக்கிறேனே? ஆம், என்ன தப்பிதம் செய்தேன்.?

"அச்சுந்திரனைக் கண்டவுடன் கோபித்து அடாத சில வார்த்தைகளையும் சொல்லிவிட்டேன். நான் சொல்லிய அவ்வார்த்தைகளைக் கேட்டு அவ்வாடவன் மனம் என்னவாயிற்றோ? நான் சொல்லிய அக்கொடூர வார்த்தைகளைக் கேட்ட அவன் பின்னும் எவ்வாறு என்மேல் பிரியப்படுவான், அல்லது என்னைத் தேடி வருவான்? முனிவர் வார்த்தை பிசகாது வருவான். என்னையும் மணந்து கொள்ளுவான். ஆனால் அவன் என் எதிரில் வந்து நிற்பானாகில், நான் எவ்விதம் அவனிடம் பேசுவது? இருக்கட்டும்; இதில் இன்னொரு சந்தேகம் இருக்கின்றதே! அன்றிரவு லீலையின் வீட்டில் தன் கற்பை யிழக்கத் துணிந்து வந்திருந்த அவனுக்கு என்னையல்லவோ அன்றிரவு

மனைவியாயிருக்க லீலையின் கட்டளை? நான்தான் அவனைத் தூஷித்து வந்து விட்டேன். அக் காமப் பேய் கொண்ட அவன் பின்னும் லீலையால் வஞ்சிக்கப்பட்ட கன்னியர்களைச் சேர்ந்து ஒழுக்கம் கெட்டிருப்பானல்லவா? அன்னானை நான் மணந்து நீதி தவறாது இல்லறத்தை நடத்தி வருவேன் என்று முனிவர் எப்படிச் சொன்னார்? என்ன பைத்தியம்? அவன் ஒழுக்கம் தவறி இருக்கமாட்டான். அப்படி இருப்பானாயின் முனிவரும் பார்வதி தேவியிடம் சொல்லியிருப்பாரா? ஒருக்காலும் இராது.

"ஆமாம். இத்தனை தூரம் மனக்கோட்டை கட்டும் மனமே! அவன் கற்பழியாது இருந்திருக்கினும், நான் சொன்ன கடுமையான மொழிகளைக்கேட்டு எவ்விதம் மனம் புண் பட்டனனோ? உத்தம குணம் பொருந்தியவனாய் இருந்திருக்கின் அரிவை சுகம் என்னும் இப்பாழ்கடலைத் துறந்து பற்றற்ற இம்முனிவர் சஞ்சரிக்கும் அரிய வனங்களை அண்டியிருக்க வேண்டும். அப்படித் தவசிகள் வசிக்கும் வனத்தினைச் சேர்ந்து வதிஷ்ட முனிவரைப் போன்ற பெரியவர்களால் ஞானோபதேசம் பெற்றிருப்பானாயின் பின்னும் என்னை எவ்வாறு அடைவான்? மனமே உனக்கு ஏன் இந்த சிந்தனை? முனிவர்தான் அம்மனிடத்திலேயே சொல்லியிருக்கிறாரே, அன்று இவள் லீலை வீட்டில் கண்ட ஆடவனை மணந்து சுகமே வாழ்வாள் என்று?

"பின்னும் இன்று மாலையும் சில நாளில் தக்க கணவனை அடைவாய் என்றும் சொன்னாரல்லவா? பொதுவில் எல்லாம் வினைப்படி நடக்கும். மனமே பொறு" என்றனள்.

"தேசிகரே, மற்றவை நாளைச் சொல்லுகிறேன். வாருங்கள் நமது ஆச்ரமத்துக்குப் போவோம்" என்று முடித்தனர்.

(தொடரும்)

ரேடியம் ராணி

(வே. ம.)

மேரி கியூரீயினுடைய சரித்திரத் தொடர்பை எடுத்துக் கொள்வதற்கு முன்பே—அவளும் அவளுடைய புருஷனுமாகச் சேர்ந்து கண்டு பிடித்த ரகஸ்யங்களின் மஹிமையை நாம் சற்று உணர்ந்து கொண்டு விட்டால் நலமாக யிருக்கும்.

நமது நாட்டில் ரஸ-வாதம் என்ற பெயருடன் ஒரு அரைகுறை சாஸ்திரம் நடைபெற்று வந்திருக்கிறது. ரஸவாதிகளுடைய அந்தரங்க நம்பிக்கையும் ஆசையும் என்னவென்ருல்—தங்கத்தைத் தயார் செய்யலாம், செய்ய வேண்டும் என்பதுதான். மற்றவர்களுக்கு இந்த நம்பிக்கையைப் புகட்டும் பொருட்டு ரஸவாதிகள் பல கதைகள் சொல்வதுண்டு. அவைகளில் ஒரு கதை:—

ஒரு இரவில் ஒரு சாமியார் ஒரு வாசலுக்கு வந்து கதவைத் தட்டினர். வீட்டுக்காரர் கதவைத் திறந்தார். சாமியார் ஒரு இரும்புத் துண்டை வேண்டினர். ஒரு சிறிய துண்டாகப் பார்த்துக் கொடுக்கப்பட்டது. சாமியார் அந்த இரும்புத் துண்டை, தனது விபூதி பூசிய உடம்பின்மீது தடவி விட்டு, அதைத் திரும்பவும் வீட்டுக்காரரிடம் கொடுத்து விட்டு, வேகமாகப் போய்விட்டார். வீட்டுக்காரர் வீட்டிற்குள் போய்ப் பார்க்கவே—அந்த இரும்புத் துண்டு, ஒரு தங்கத் துண்டாக மாறி யிருந்தது; ஆச்சரிய முற்ருர்; ஆனந்த முற்ருர்; ஆயினும் 'சாமியாரிடம் கடப்பாறையாகக் கொடுக்க வில்லையே!'—என்று விசன முற்ருர்.

நமது நாடு குருட்டு நம்பிக்கை நிறைந்த நாடு; ஆதலால் இப்பேர்ப்பட்ட கதைகளும், கதை சொல்பவர்களும், நம்புகிறவர்களும், நடமாடுகிருர்கள்—என்று நினைத்துவிடக் கூடாது.

நமது ஸர். ஸி. வி. ராமனுடைய மஹிமையைக் கண்டு பிடித்து, அளந்து, உலகத்திற்கு தெரிவித்த டாக்டர் ரூதர்போர்டு என்ற பிரசித்திபெற்ற நிபுணர், 'நவீன ரஸவாதம்' என்று ஒரு புஸ்தகம் எழுதி யிருக்கிருர். அதில் அவர் எழுதுகிருர்:—

"புராதன ரஸவாதம், சுமார் 2000 வருஷங்களாக, மனிதனுடைய மனதை ஒரு மஹா மோகத்தில், மூழ்கவைத்து வந்திருக்கிறது.

ஒரு சாமானை மற்றொரு சாமானாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கை, கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்திலேயே உதயமாகிவிட்டது. அது முதல், 1700 வருஷங்கள் வரைக்கும் தளராமல், தங்கத்தையும் வெள்ளியையும் உண்டாக்குவதற்காக, 'ஞானியின் கல்லை' கண்டு பிடிப்பதற்காக, ஆராய்ச்சிகள் நடைபெற்று வந்தன.

'சகல சாமான்களும் ஒரே ஒரு ஆதிப்பொருளிலிருந்து பரிணமித்திருக்கின்றன. பிருதிவி, அப்பு, தேயு, வாயு — ஆதியில் ஒரே சாமான்தான். குளிர் அதிகம், சூடு அதிகம், ஈரமானது, ஈரமற்றது, என்ற வித்தியாசத்தினால் தான் இந்த நான்கு மாறுபாடுகள் ஏற்பட்டன. இந்த நான்கு குணங்களில் ஏதாவது ஒன்றையோ, ஏதாவது இரண்டையோ, ஏதாவது மூன்றையோ, அல்லது நான்கையுமோ — அளவுகளைக் குறைப்பதினாலும் கூட்டுவதினாலும், வேறு சாமான்கள் பரம்பரையாக உண்டாகிக் கொண்டேயிருக்கும். இந்த மாறுதல்களின் மார்க்கங்களைத்தான் கண்டு பிடிக்க வேண்டும். ரஸாயன சாஸ்திரப்படிக்கே சில மாறுதல்கள் தெளிவாக நடைபெறுகின்றன. இவைகள் எங்களுடைய ரஸவாதத்திற்கு அத்தாட்சியாகும்,' என்று இந்த அரைகுறை சாஸ்திரிகளான ரஸவாதிகள் தங்களுடைய கொள்கைகளை வர்ணித்து வந்தார்கள்.

"தங்கம் செய்யும் பரம ரகஸ்யத்தைத் தாங்கள் கண்டு பிடித்துவிட்டதாக ஒருவர் பின் ஒருவராகச் சொல்லி வந்தார்கள். இது தெளிவான பொய். அந்த ஆராய்ச்சிக்காரர்களுக்கு சாத்தியமாக விருந்த மிதமான கருவிகளாலும் உபாயங்களாலும், உலோக மாற்றம் என்பது சாத்தியமே இல்லை. விஷயம் அப்படியிருந்தும், இந்தப் புராதன ரஸவாதக் கதைகள் மனிதனுடைய மனதைவிட்டு விலகிவிடவில்லை. இன்றைக்கும் ஏமாந்தவர்களும் ஏமாற்றுபவர்களும் — தங்கம் கட்டி கட்டியாகச் செய்யப்படுகிறது, செய்ய முடியும் — என்று சொல்லிக்கொண்டு திரிகிறார்கள்.

"பௌதிக சாஸ்திர வசனங்களை, இந்த அரைகுறை சாஸ்திரிகள், தங்களுடைய அரட்டைகளில், பிரமாதமாகப் பிரவாஹமாக உபயோகிக்கிறார்கள். கேட்போரை மயங்கவைத்துப் பரவசமாக்கிவிடுகிறார்கள். நமது பெரிய பெரிய பாங்கர்களுடைய நித்திரைக்கே இந்த அரட்டையாளர்கள் பங்கத்தை விளைவித்து விடுகிறார்கள். இப்போது, சரியான சாஸ்திரப்படிக்கே, வெகு சொற்பத் தங்கம் தயார் செய்ய முடியும் — என்று ருசுவாகிவிட்டதென்பது வாஸ்தவம்தான். ஆனால் அதைத் தயார் செய்வதற்கு, இன்னும் விலையுயர்ந்த உலோகமாகிய கனராஜதத்தை (பிளாடினம்) உபயோகிக்கவேண்டியிருக்கிறது!" — என்று டாக்டர் ரூதர்போர்டு எழுதியிருக்கிறார்.

ஆனால், ஒரு உலோகத்தின் அணுக்கள் — சூக்ஷ்ம அணுக்கள் — மாறுபாடு அடையாது, என்ற கொள்கையை, நமது மேரி கியூரி

யினுடைய ஆராய்ச்சிகள் தகர்த்தெறிந்துவிட்டன. சூக்ஷம அணுக்களே அநித்யம் என்று நிர்ணயிக்கப்பட்டது. சில சாமான்கள் கதிர் வீசுகின்றன. இவைகள் அவைகளாகவே மாறி வருகின்றன. இவைகளில் ரேடியம் வெகு விசேஷமானது. ஆகையினால் அதற்குக் கதிர் என்ற பெயரே சூட்டப்பட்டது. இந்த ரேடியம் (கதிர்) ஒரு ஸெகண்டுக்கு (ஒரு மணி நேரத்திற்கு 3600 ஸெகண்டுகள்) 10,000 (பத்தாயிரம்) மைல் வேகத்திலும், புதிய சாமானைத் தன்னிடமிருந்து கழற்றி வீசி எறிகின்றது.

குகைகளில் இந்தக் கதிர் (ரேடியம்) நன்கு வேலை செய்கிறது. காற்று அலைமோதாத இடங்களில் கதிரியின் வீச்சுக்கள் சிதறாமல் குவிந்து நிற்கின்றன. நமது பெரிய கோயில்களில், கர்ப்ப கிருஹங்களில் கதிர் விசேஷம் நிரம்ப உண்டு. பல தீர்த்தங்கள், ஸ்நான கட்டங்கள் இருக்கின்றன. இவைகளுக்குப் பல அற்புத உபகார குணங்கள் சூட்டப் பெற்றிருக்கின்றன. மலடு முதலிய துர்க்குணங்களை நிவர்த்திக்கும் சக்திகள் இந்தத் தீர்த்தங்களுக்கு உண்டு என்பதாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. இவ்விதமான கீர்த்தியைப் பெற்ற தீர்த்தங்கள் ஐரோப்பாவிலும் உண்டு. சுவஸ்தம் செய்திடும் சக்திக்கு ரேடியமும் ரேடியத்தின் பரிணமங்களும்தான், காரணம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அதிலும் ஒரு விசேஷம். வடக்கு இத்தாலியில் பட்டாக்ளியா என்ற பிரதேசத்தில், சில வெப்பமான ஊத்துக்களில் ஒரு நேர்த்தியான சேறு கிடைக்கிறது. அந்தச் சேறு—ஆரோக்கியக் களஞ்சியமாக இருக்கிறது. அதற்குப் பாங்கோ (fango) என்று பெயர். அது பாங்கான சேறுதான். ரேடியத்தை மேரிகியூரியும் அவளுடைய கணவனும் கண்டுபிடித்துப் பிரதரிசனம் செய்த சமயத்தில் (1906-ல்) ஒருவர் ஒரு பௌதிக சாஸ்திரப் பத்திரிக்கையில் எழுதினார்:—

"வருங் காலத்தில், கியூரி தம்பதிகள் ரேடியத்தின் பிரபாவத்தைக் கண்டு பிடித்த தினத்தையே, மனிதனுடைய ராஜ்ய ஸ்தாபன தினமாக மனித வர்க்கம் கொண்டாடப் போகிறது. அதிலிருந்து ஒரு புதிய சகாப்தத்தை மனிதவர்க்கம் கணக்கிடப் போகிறது. இந்தக் கியூரிகள், நோண்டி, தோண்டிக் கண்டெடுத்த உண்மையிலிருந்து, அடுத்தாற் போலும் சாவகாசமாகவும், ஏற்படப் போகும் பலன்களுக்கு எல்லையே கட்ட முடியாது" என்று எழுதினர்.

இதன்மேல் டாக்டர் ரூதர் போர்டு எழுதினர்:—"ஆமாம். இந்த ஒரே பண்டத்தால் (ரேடியத்தால்) கியூரி தம்பதிகள் உலகக் கீர்த்திக்குத் தாண்டி விட்டார்கள். ஒவ்வொரு சிப்பாயின் ஜேபியிலும் தளபதியின் உடை காத்துக்கொண்டிருக்கிறது என்று நெப்போலியன் சொல்வதுண்டு. அதுபோல் பௌதிக ஆராய்ச்சியில் கண்யமாக

தளராமல் பாடுபட்டால், எவனுக்கும் அருள்போல பொருள் கிடைக்கலாம்; உலக வியாதி ஏற்படலாம். பொறுமையை இழக்கக் கூடாது; சத்தியத்திலிருந்து பிறழக் கூடாது. ஆமாம், கியூரீகளுடைய வேலை கிளப்பி விட்டிருக்கும் ஆராய்ச்சிகள், புதுசு புதுசாக ரகஸ்யங்களைக் கக்கிக் கொண்டே இருக்கும். இந்த ரேடியம் என்ற ரகஸ்ய ஊத்து வற்றவே வற்றாது" என்று எழுதுகிறார்.

சத்தியமான கல்வியை நாடுவோமாக! மனிதனோடு மனிதன் போராடுவதை நிறுத்துவோமாக! பிரகிருதி என்ற காம தேனுவை உண்மைப் பொருளுடன் கலந்து வருவோமாக!



"குழந்தை! இரண்டு பக்கமும் நகர்ந்து போகக் கூடிய ஜந்து ஒன்றைச் சொல்லு."

"டிராம் வண்டி!"

அகத்தியன் வைத்தியம்

மது மேக ரோகம். (Diabetes)

மதுமேக ரோகத்தைத் தடுத்துக்கொள்ளும் உபாயங்கள்.

முன் இதழில் சரீரப் பயிற்சியில்லாமையாலும், அளவுக்கு மீறிய சங்கமத்தாலும் மதுமேக ரோகம் தோன்றும் காரணங்களேயும் இவ்வியாதியைத் தடுத்துக் கொள்ளும் உபாயங்களும் எழுதப் பட்டிருந்ததல்லவா? தொடர்ச்சியாக மனக்கவலேயும், ஆழ்ந்த சிந்தனேயும் மூளேக்குக் கொதிப்புண்டாக்குவதால் மதுமேக ரோகம் எப்படித் தோன்றுகிறதென்பதையும் தடுத்துக் கொள்ளும் உபாயங்களும் அறியவும்.

ஒவ்வொருவரும் முக்கியமாக நமது சரீர லட்சணங்கள் எவ்விதமானதென்று சரீர தத்துவ விசாரணே செய்து தெரிந்து கொள்ள வேண்டும்.

சரீரத்தைப் பற்றிய விசாரணேயின் முதிர்ச்சியினுல் உதயமாகும் உண்மை விவேகமானது கொடிய வியாதிகளினின்று தப்பித்துக் கொள்வதற்குச் சிறந்த ஔஷதமாகவும் இருப்பதுடன் ஆரோக்கியம் என்னும் ஐசுவரியத்தை அனுபவிப்பதற்கும் ஆத்மஞானத்தைப் பெருவதற்கும் மூல காரணமாகவும் இருக்கின்றது.

மேலும் சரீரத்தில் எழுபத்திராயிரம் நாடி நரம்புகள் ஆலமரத்தில் விழுதுபோல் பாதம் முதல் சிரசு பரியந்தம் சன்னல் பின்னல்களாக பரவியிருக்கின்றன. இவைகளில் அநேக ஆயிரக் கணக்கான சூட்சும நாடி நரம்புகள் மூளேயில் பின்னிக்கொண்டிருக்கின்றன. இச்சரீரத்தில்பஞ்சபூதங்களில் ஒன்ருகிய அக்னி மூலாதாரத்தை வாசஸ்தானமாக்கிக் கொண்டு, சரீரம் முழ்வதிலும் பரவி நாம் அருந்தும் உணவாதிகளேத் தகித்துக் கொண்டும் வருகிறது.

சரீரத்தினுள், சுடாமல் சுட்டுக் கொண்டிருக்கும் அக்னியானது மூலாதாரத்தில் குண்டலி சக்தியென்னும் ஓங்கார வடிவு தாங்கிய சுழிக் கோட்டைக்குள் ஒளிந்திருப்பதினுல், மூலாக்கினியாகவும் உண்ணும் உணவாதிகளேத் தகித்தும் சரீரத்திற்கு அன்னரசத்தைப் போஷிப்பதினுல்

சடாராக்கினியாகவும், நாம் கடுங் கோபங் கொள்ளும்போது கோபாக்கினியாகவும், ஸ்திரீயின் தாபத்தினால் தவிக்கும்போது காமாக்கினியாகவும், மாறுபடுவதைப் போல், தவமியற்றும் தபோதனர்களின் பந்தமெனும் இருளைப் போக்கி மோட்சவாயிலைக் காட்டும் ஞானக்கினியாகவும் பிரகாசிக்கின்றது.

மகத்துவம் பொருந்திய சரீரத்தினுள்ளிருக்கும் மூலாக்கினியானது ஒப்வில்லாத ஆழ்ந்த சிந்தனையாலும் அதிகரித்த மனக் கவலையினாலும் ஒரே ஆசனத்தில் சதா உட்கார்ந்திருப்பதினாலும் மூலாக்கினி கனல் மீறி குய்யம், சங்மேந்திரியம்,நீர்ப்பை,நீர்தாரை இவைகளிலுள்ள வெகு சூட்சம நாடி நரம்புகளை நசிக்கச் செய்து கபாலத்தை முட்டி மூளையின் சன்ன நரம்புகளையும் கெடுத்து மூளையின் மதுரத்தை உருக்கி நீருடன் சேர்த்து நீர் தாரை வழியாக கீழ் நோக்கச் செய்கின்றது.

அதாவது இதன் விபரம் யாதெனில் மனம் எந்த இடத்தில் லயப்படுகின்றதோ, அந்த இடத்தில் பிராணவாயு லயப்படும். பிராணவாயு எந்த இடத்தில் லயப்படுமோ அந்த இடத்திலே மனமும் லயப்படும். மனம் பிராணவாயு இவ்விரண்டும் கூடி எந்த இடத்தில் லயப்படுகின்றதோ அதேயிடத்தில் மூலாக்கினியும் லயப்படும்.

இதன் உண்மையை, சரீர தத்துவத்தை யறிந்து யோக சாதனை செய்யும் மகாத்மாக்கள் மாத்திரம்தான் தெரிந்து கொள்ளக் கூடுமே தவிர மற்றவர்கள் இதன் உண்மையை அறிவது மிகவும் கடினமாகும்.

ஆகவே மனம், புத்தி, சித்தம், ஆகியவைகள் அதிகரித்த சிந்தனை மிகுந்த கவலையினாலும் மூளையைப் பற்றிக்கொண்டே நிற்பதால் மனம் ஆழ்ந்து சிந்திக்கும் இடமாகிய மூளையினுள் மூலாக்கினி கனல் வீசிக்கொண்டு பிரவேசித்து அவ்விடத்திலுள்ள மதுரத்தை உருக்கி வெளிப்படுத்தி விடுகின்றதாகையால், ஆழ்ந்த சிந்தனையும் அதிகரித்த மனக் கவலையும் மதுமேக ரோகம் தோன்றுவதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

இதற்கனுபவமான இன்னொரு திருஷ்டாந்தமும் உண்டு. அதாவது சரீர சேர்க்கை சமயத்தில் மூலாதாரத்திலிருந்து கிளம்பக் கூடிய அக்கினி எவ்விதமாக உடனே கபாலத்தை முட்டி மூளையின் சத்தாகிய சுக்கிலத்தை வெண்ணெய்போல் உருகி நீர்த்தாரையின் வழியாக கீழ்நோக்கச் செய்கின்றதோ, அதைப் போலவே அதிகரித்த சிந்தனையினால் கபாலத்தை முட்டி மூளையைத் தாக்கும் மூலாக்கினி மூளையின் மதுரச் சுவையையும் உருக்கி, சுக்கிலம் வெளிப்படும் நாடி நரம்புகளின் வழியாகவே இதையும் வெளிப் படுத்துகின்றது.

மிகுந்த சிந்தனை உடையவர்களுக்கும், படிப்பாளிகளுக்கும், எழுத்தாளர்களுக்கும்,மதுமேகம் இருந்தால், வேலையை சில நாள் நிறுத்த வேண்டும்.

(தொடரும்)

ஐந்தில் ஒன்று

வரதன்

தலைப்பைப் பார்த்தவுடன் ஐம்பெருங் காப்பியங்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி, அலசி எழுதப் போகிறேன், என்று பண்டிதர்கள் நினைக்கக் கூடும். ஆகாசம், தீ, கால், நீர், மண், என்று பாரதியார் கூறியுள்ள பஞ்ச பூதங்களில் ஒன்றைப்பற்றி விஸ்தாரமாக பேசப் போகிறேன் என்று விஞ்ஞானிகளுக்குத் தோன்றினல், 'இல்லை! இல்லை!! இல்லவே இல்லை!!!' என்று உண்மையை ஒரு தரத்துக்கு மூன்று தரமாக உரைத்திட உத்தேசம்.

என்னுடைய ஐந்து தெய்வங்களில் ஒன்றைப்பற்றி இன்று உங்களுடன் பேசலாம் என்ற எண்ணம். தாய், தந்தை, குரு, அரசன் தெய்வம் என்ற ஐங்குரவர்களில் முன்னிரண்டையும் பின்னிரண்டையும் இணைக்கும் தன்மை வாய்ந்த நடுத் தெய்வமாகிய 'குரு' வைப் பற்றிச் சில வார்த்தைகள் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என் கண்முன் தெய்வமாய் விளங்குபவர் எனக்கு கல்வி கற்பித்து ஞான பாதையில் இட்டுச் சென்ற முதல் ஆசிரியர் அவர்களே. அவருக்கு எனது காணிக்கையைக் கணிசமாய்த் தந்துதவ, சக்தி எனக்கு இல்லை என்பதை அவரும் அறிவார்.

என்னைப் போன்ற ஏழை வீட்டுக் குழந்தைகளுக்கு ஏற்படும் அஞ்ஞானம் என்ற ஆபத்தைப் போக்கி, எங்களுக்கு ஞானத்தைச் சகாயம் செய்யவேண்டும் என்ற கருத்தைக் கொண்டுதான், அவரது பெற்றோர்கள் அவருக்கு அந்தப் பெயரை அளித்திருக்க வேண்டும். இல்லையேல் அவருக்கு, எப்படி ஆபத்சகாயர் என்ற பெயர் பொருந்தும்?

இந்தப் பிராந்தியத்தில் 'சார்' என்ற பதம் ஆபத்சகாயரையே குறிக்கும் என்று, நான் எதிர்ப்புக் கிடமில்லாமல் கூறமுடியும். அவ்வளவு பிராபல்யம் வாய்ந்த உபாத்தியாயர் அவர். அவர் கைப்பட முதல் முதலில், மண்ணில் 'அ, ஆ' எழுதக் கொடுத்து வைக்காதவர் புண்ணியாத்மாக்கள் அல்ல என்றால் மிகையில்லை. அவரது கை விசேஷத்துக்கு அவ்வளவு மகிமையுண்டு என்று நம்பி வாழ்பவர் அநேகர். ஏமாற்றம் அடைந்தவர் ஒரு சிலர் கூட இருப்பதரிது.

நாற்காலி, மேஜை, பெஞ்சிகள் உள்ள வகுப்புக்குச் சார், சொல்லிக் கொடுத்து நான் அறிந்ததில்லை. அவர் வீட்டுத் திண்ணையில் தான் பள்ளிக்கூடம். திண்ணைக் கோடியில் சுவரில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருப்பார். பக்கத்தில் கரும்பலகை ஒன்றுண்டு. எதிர்த்தாற்போல் ஒரு பொடிமட்டை, துண்டுச் சாக்கட்டி, கொண்டைப் பிரம்பு, கையெழுத்துப் பிரதி நோட்டு ஒன்று, இவைகள் தாம் அவர் கையாண்டு வந்த உபகரணங்கள். கடிகாரமோ, கால அட்டவணையோ அவர் வைத்துக் கொண்டவரில்லை. ஆனால் வேலை மாத்திரம், கடுமையாய்த்தான் நடைபெறும். எல்லாப் பாடங்களையும் நடத்தியே தீருவார்.

ஆங்கிலம், கணக்கு, இலக்கணம் ஏதாவதொன்றைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார் என்றால், பள்ளிக்கூடத்தில் நெருப்புப் பொறி பறக்கும். தான் எண்ணிய அளவு பையன்கள் மனதில் பதிந்தால் தான் மன நிம்மதியடைவார். இதற்கு இடையில் அவரது மனைவியோ பிள்ளைகளின் பெற்றோர்களோ யாராவது வந்து குறுக்கிட்டால் கோபம் வந்துவிடும். தானும் சாப்பிட மாட்டார்; குழந்தைகளையும் பாடம் முடியும்வரை வீட்டுக்கனுப்ப மாட்டார். இந்தக்காலத்திய, "கடனுக்கு அழுதாக வேண்டுமே" என்பது அவர் அறியாத பாடம். பாடம் கற்றுக் கொடுப்பதில் அவ்வளவு ஆசையும் பிடிவாத குணமும் கொண்ட இன்னொருவரை நான் பார்க்கக் கூடுமோ என்ற சந்தேகம் நாளாக நாளாக உறுதிப்படுகிறது.

சரித்திரம் எங்கள் சார் சொல்லிக் கொடுக்கவேண்டும். ஏன்? உண்மையை ஒரு சிறிதும் ஒளிக்காமல், தேசத்தில் நடந்த காரியங்களை அப்படியே படம் பிடித்துச் சொல்லிக் கொடுப்பதில் அவருக்கு இணை அவரேயாகும். 1857-ல் நடந்த சிப்பாய்க் கலகத்தை அவர் ஒரு வாரத்தில் கட்டம் கட்டமாய் வர்ணித்துக்கொண்டு போவதைக் கேட்டு, ஆனந்திக்கக் கொடுத்து வைக்க வேண்டும். காரணம், நடந்த இடங்களை நேரில் போய்ப் பார்த்து விஷயத்தை உள்ளவாறே அறிந்து வந்தவர் ஆதலால், பிசகு சிறிதுமில்லாமல், தேசபக்தியைப் புகுத்திச் சரித்திர பாடத்தை நம் மனதில் பதியவைக்கும் விந்தையே விந்தை!

சார் கொஞ்சம் முன் கோபம் படைத்தவராகக் காணப்பட்டாலும் முயற்சிக்குச் சளைத்தவர் அல்ல. முயற்சி என்ற பலாச்சுளையைக் காக்கும் மேல் முள் தான் அவரது முன்கோபம். சாருக்குத் தன்னுடைய சிடர்களிடம் உள்ள அன்புக்கு அளவேயில்லை. அவர் வீட்டில் கல்யாணம் நடந்தாலும், வேறு விசேஷம் வந்தாலும் தன்னுடைய அருமை மாணுக்கர்களை அழைத்து உபசாரம் செய்யாத நாளே கிடையாது. குழந்தைகள் தாம் தெய்வம் என்று சொல்லக் கூடியவர்களில் ஒருவர் அவர்.

சாருடைய பள்ளிக்கூடத்தில் பெயருக்கு வகுப்புகள் ஐந்தே. ஆனால் அவ்வைந்து வகுப்புகளில் வாசித்துத் தேறின பையன்கள் மற்றப் பள்ளிக்கூடங்களில் எட்டாவது வகுப்பிலும், மூன்றாவது பாரத்திலும் சேர்ந்து படிக்கப் போதுமான பயிற்சி பொருந்தியவர்களாயிருப்பதை நாங்கள் கண்கூடாய்க் கண்டதுண்டு. காரணம் என்ன என்றால் எங்கள் சாருடைய போதனைத்திறனும் சளைப்பில்லா உழைப்புமேயாகும்.

சாருக்கும் மகாத்மா காந்திக்கும் ஒன்றிரண்டு விஷயங்களில் ஒற்றுமை உண்டு. இருவரும் ஒத்த வயதுடையவர்கள். சாருக்கு சத்தியத்தில் வலுத்த நம்பிக்கை இருக்கிறது. உயிரைக் கொடுத்தாவது சத்தியத்தைக் காக்க வேண்டும் என்ற சிறந்த கொள்கை கொண்ட உத்தமன். தீண்டாமை என்ற தீயைச் செயலளவில் அணைக்கவேண்டும் என்ற திடசித்தம் கொண்டவர். கூடுமான வரையில் பிறருக்கு உதவியே புரிதல் வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் தோய்ந்தவர்.

சுருங்கக் கூறுமிடத்து எங்கள் சார் உழைப்பின் குரு. நினைத்த காரியத்தைத் திறம்படச் செய்து முடிக்கவேண்டும் என்ற திடமான சங்கற்பம் கொண்டவர். எங்கள் சார் ஸத்தியத்தின் தாயார். மனச்சாட்சியின் மாசற்ற மன்னன். மருந்துக்குக் கூட பொய் சொல்லாத புனிதன். மனதில் தோன்றியதைத் துளிக்கூட ஒளிக்காமல், பின்னால் தொடரும் துன்பத்தையும் பொருட்படுத்தாமல் தன்னுடைய மேலதிகாரியிடம் துணிவுடன் சொல்லக் கூடியவர்.

எங்கள் சார் தன்னலமற்ற துறவி. ஸாத்வீகத்தின் தூதன். சட்ட வரம்பை ஒட்டி நடக்கும் தன்மை கொண்டவர். ஆனால் அழுத்தமான தைரியசாலி. தேசபக்தியில் தலைசிறந்த தீரர். ஆனால் குணத்தால், நடத்தையால் நம் உள்ளத்தைக் கொள்ளும் வெள்ளையரைப் பின்பற்றும் மனப்பான்மையும் பெற்றவர். பையன்களிடம் கடுமையாய் வேலை வாங்கும் 'வாத்தியார்'. அத்துடன் அவர்களை அபரிமிதமான அன்புடன் நடத்திவரும் அருங்குணம் அமையப் பெற்றவர். செட்டாய்ச் செலவு செய்பவர் எங்கள் சார். ஆனால் வெறுக்கத் தகுந்த லோபியல்ல. கர்மத்திலும் கடுகளவும் வழுவாதவர். கடவுளிடம் கட்டுக் கடங்காத பக்தியும் கொண்டவர்.



சோக கீதம்

என் ஆருயிர்த் தோழீ!

நேற்று இரவு சுமார் எட்டு மணி இருக்கலாம். ஏனோ, என் மனம் சஞ்சலமுற்று குழம்பிக்கொண்டு இருந்தது. தோட்டத்திற்குச் சென்று உலாவிவிட்டு மனச் சாந்தி பெற்று வரலாமென்று சென்றேன். என்னை யறியாமற் சென்று, அங்கு இருந்த தடாகத்தின் படியில் அமர்ந்தேன். சலனமற்றிருந்த நீருக்குள் தோன்றிய விண் மீன்கள் பளிச் பளிச்சென்று துடித்து மின்னிக்கொண் டிருந்தன. என் உள்ளத் துடிப்பின் பிம்பம் போல் தோன்றியது. பாடலாமென்று ஆரம்பித்தேன். இயற்கையான என் குரல் அபஸ்வரம்போன்றிருந்தது. வேடன் அம்பினால் தாக்குண்டு அலறி விழும் புறாவின் மரண வேதனைக் குரல் போல ஒலித்தது.

என் பிரிய தோழீ! பிறகு என்ன செய்தேன் என்று கூற முடியாது. குறுகுறு என்று வரும் தென்றலில் ஆடும் மாந்தளிரின் சிறு நடுக்கம்போல் ஆரம்பித்தது அந்த இசை. அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்தது. முதலில் சிறு ஊற்றாக ஆரம்பித்துவழியில் பல சிற்றாற்றுக்களினின்றும் நீரை சேகரித்துக் கொண்டு பெருகிவரும் கங்கா நதியைப் போல் அதன் கதி வரவர வேகமும் கனமும் அடைந்தது.

ஆஹா! இது என்ன! என் உள்ளம் ஏன் அப்படித் துடிக்கிறது? எனது நெஞ்சம், ஏன் அப்படித் துடிக்கிறது? எனது நெஞ்சம், ஏன் என் உடல் முழுவதுமே, உருகுவது போன்ற ஒரு உணர்ச்சி! ஐயோ! தாங்க முடியவில்லையே அந்த இனிமை!

ஒரு கணம் குமிழிகளை எழுப்பிச் சுழன்று சுழன்று ஓடுகிறது. மறு கணம் சாந்தமாகத் தனது ஆழத்தின் அளவை நிதானிக்க முடியாதபடி அசைந்து நடக்கிறது. மீட்டி விடப்பட்டு, மெதுவாக நெருடப்படும் வீணைத் தந்தியின் நடுக்கம் ஒரு வினாடி.

காதளவு இழுத்துத் தீண்டிவிடப் பெற்ற தனுசின் 'டிங்' என்னும் ஒலி மறு விநாடி.

இனிமை, இனிமை, இனிமை!

அளவுக்குட்பட்ட சக்தியுடன் படைக்கப்பட்ட மனித இந்திரியங்களைச் செயலற்று ஸ்தம்பிக்கச் செய்யும் இனிமை! சகிக்க முடியாத, ஆனால் வார்த்தைகளால் விவரிக்க இயலாத, சுருக்கென்று தைக்கும் வேதனை கலந்த இனிமை!

மனித உலகத்தின் சோகத்தைக் கற்பனை செய்து காண முயலலாம். ஆனால் இவ்வளவு பெரிய உலகத்தையும், சராசரங்களையும் படைத்த அந்த மகா சக்தியின் சோகத்தைக் கற்பனை செய்து கொள்வது சாத்தியமா? அப்பொழுது தென்றலில் தவழ்ந்து வந்த அந்த கீதத்தில் அத்தகைய மகத்தான சோகம் நிறைந்திருந்தது. அந்த அமானுஷ்ய சோக கீதத்தில் மனித உலகத்தின் புலன்களைத் தீய்த்துக் கருக்கிவிடும் தீவிர வேகம் கொண்ட இனிமை நிறைந்திருந்தது.

மெய் மறந்து விட்டேன். என் புலன்கள் செயலற்றன. சிந்தை ஒடுங்கியது. இவ்வளவிற்கும் மேல், தனியாக இயங்கிக்கொண்டிருந்த ஜீவாத்மா, அந்தத் தெய்வீக இசையில் இரண்டறக் கலந்தது.

தன்னிடமிருந்து சிதறி விழுந்த உயிர்ப் பொறிகளையெல்லாம் ஒன்றொன்றாக மறுபடியும் தன்னிடம் இழுத்துக்கொள்ளும் காந்தத்தை ஏவுவதுபோல் குழலை இசைத்துக்கொண்டு, இருந்தான் அந்த மாயாவி.

வேணுகானம் எப்பொழுது நின்றது என்று தெரியாது. கடுமையான மூர்ச்சையில் கிடந்து பிரக்ஞையடைபவன் போல் விழித்தேன்.

தோழி! நான் என்ன கண்டேனென்று நினைக்கிறாய்? முரளீதரன்! கருணைமயமான திருஷ்டியுடன் என்னை நோக்கிக்கொண்டிருந்த அந்த லோக ரக்ஷகனை கண்ணனின் இரு திருவிழிகள்

"கண்ணா! என்னை என்ன செய்தாய்? என்னை யாரோ வேகமாக ஆகர்ஷிப்பதுபோல இருந்தது. யார் எங்கே இழுக்கிறார்கள் என்பது ஒன்றுமே தோன்றவில்லை. ஒரே ஆனந்த வெள்ளத்தில் மிதந்து மிதந்து எங்கெங்கோ சென்றேன். திடீரென்று "நான் இல்லை" ஒரே ஆனந்த மயம்! இது என்ன மாயம் கண்ணா!

தன் குழலினும் இனிய கீதம் போன்ற குரலில் என் கண்ணன், "குழந்தாய்! நான் ஒரு மாயமும் செய்யவில்லை. உன் இதயத்தின் துக்கத்தையே சங்கீதமாக இசைத்தேன். ஒரு சமயம் உன் ஜீவன் நிறைந்திருந்தது. பிறகு உன் ஜீவன் இரண்டாக்கப்பட்டது. அந்த துக்கத்தைத்தான் குழலில் இசைத்தேன். குழந்தாய்! நீ தேடியலைவது கண்ணனாகிய நானே! நீ வருந்துவதால் என் இதயத்தைத் துக்கத்தால் நிரப்புகிறாய். நான் குழலை இசைக்கையில், என் ஜீவன் உன்னைக் கூவியழைக்கிறது. எந்த விநாடி நீ அதைக் கேட்கிறாயோ......"

திடீரென்று கண் விழித்தேன். என் ஆருயிர்க் கண்ணனைக் காண வில்லை. சுற்றுமுற்றும் பார்த்தேன். குளப்படியில் விழுந்து கிடந்தேன். தோழீ! நான் கண்டவை யாவும் கனவு! வெறும் கனவு! வாழ்க்கையின் மாயைகளில் ஒன்று. ஆனால், என் உள்ளம் நான் என்று மறியாத ஒரு உணர்ச்சியினால் நிரப்பப்பட்டு சாந்தி வழிகிறது.

இக்கனவை உன்னிடம் சொல்லாவிடில் என் இதயம் ஆனந்தத்தினால் வெடித்து விடும்போ இருந்தது.

“எண்ணி எண்ணிப் பார்த்தேன்—
அவன் தான்
யாரெனச் சிந்தை செய்தேன்
கண்ணன் திருவுருவம்—அங்ஙனே
கண்ணின் முன் நின்றதடீ!
எண்ணும் பொழுதி லெல்லாம்—
அவன் கை
இட்ட இடந்தனிலே
தண்ணென் றிருந்ததடீ—புதிதோர்
சாந்தி பிறந்த தடீ!”

உன் உயிர்த் துணைவி,
ரேவதி.



சுசீலா :—மாமா! நாம்ப போகப் போகிறது யாராத்துக்கு?
மாமா :—எங்கப்பாவுக்கு மருமாளுடைய பொண்ணு ஆத்துக்கு.
சுசீலா :—அடேயப்பா! அவ்வளவு தூரமா போகணும் அவாத்துக்கு
மாமா :—இல்லே, எங்க அத்தை பேத்தி ஆத்துக்கு.
சுசீலா :—பூ! இம்பிட்டு கிட்டத்தானா இருக்கு!

ருஷ்யாவின் வளர்ச்சி

ருஷ்யாவைப்பற்றி அறிய பலருக்கு அதிக ஆவல் இருக்கிறது. அதன் மறுமலர்ச்சி, வளர்ச்சி, முன்னேற்றம் இவைகளை உலகம் கண்ணைத் தீட்டிக்கொண்டு பார்த்து வந்திருக்கிறது. இன்றைய சமதர்ம ஆட்சி ஏற்படுவதற்கு முன்னால், ருஷ்யாவும் ஏறக்குறைய இந்தியாவின் நிலைமையில்தான் இருந்தது. அது கையாண்ட முறைகள், திருந்திய நிலை, இவைகள் உலகத்துக்கு நல்ல பாடமாகும்.

இன்று மக்களுடைய லக்ஷியங்களிலெல்லாம் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது ருஷ்யா கொண்டுள்ள சமதர்மந்தான். காந்தீயம் ஒன்றே நம் நாட்டை முன்னேறச் செய்வதற்கு தலை சிறந்த மார்க்கம் என உறுதியாக நம்பும் காந்திவாதிகளும் கூட, இதில் அக்கரை கொள்ளுகிறார்கள். ஏன் என்றால், கூடிய சீக்கிரம் இவை இரண்டும் (சமதர்மமும் காந்தீயமும்) ஒன்றாகக் கலந்துவிடும் என்பது அவர்களின் எண்ணம்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு, ருஷ்யா நடத்திய ஜனத்தொகைக் கணக்கு புள்ளி விவரங்கள் கொண்ட அறிக்கை வெளியாகி யிருக்கிறது. அது, மற்ற ஐரோப்பிய நாடுகளைவிட ருஷ்யா எவ்வளவு தூரம் முன்னேறி விட்டது என்பதை சொல்லுகிறது.

ஒரு நாட்டின் ஜனத்தொகையைப் பற்றிய புள்ளி விவரத்தால், அந்த நாட்டின் வளர்ச்சியை அறிந்துகொள்ள முடியும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுவார்கள்.

நாட்டின் ஜனத்தொகை குறைந்த பக்ஷம், 100-க்கு 1 வீதம் ஆவது அதிகரித்துக்கொண்டு போகவேண்டும். இதில் குறைந்தால், அந்த நாடு சீக்கிரத்தில் நாசமாய்விடும். ஜனத்தொகை அதிகமாக விருத்தியானாலும் தீமைதான். நாட்டு ஜனங்களுக்குப் போதிய உணவுப் பொருள் கிடைக்காமல் அவர்கள் பசி பஞ்சத்தால் துன்புறுவார்கள்.

1926-ம் வருஷம் ருஷ்யாவின் ஜனத்தொகை	23,439,271
1939	170,467,186

12 வருஷத்தில் 15·9 சதவீதம் அதிகரித்திருக்கிறது.

1926-ம் வருஷம் ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள், அமெரிக்கா, ஜப்பான் இவைகளின் மொத்த தொகை	545 கோடி
1939	602 ,,

இவைகளின் ஜனத்தொகை 10 சத விதந்தான் அதிகரித்திருக்கிறது. ருஷ்யாவின் ஜனத்தொகை இம் முதலாளித்துவ நாடுகளைக் காட்டிலும் $1\frac{1}{2}$ மடங்கு அபிவிருத்தியடைந்திருக்கிறது. இதே கால அளவில் ஐரோப்பாவின் ஜனத்தொகை மாத்திரம் 8·7 சத விதந்தான் உயர்ந்திருக்கிறது. ருஷ்யாவின் ஜனத்தொகை வருஷா வருஷம் 1·23 சதவிதம் அதிகமாகும்போது இங்கிலாந்தின் அபிவிருத்தி 0·36. சத விதந்தான்.

ஜெர்மனியில் 1910 வருஷம் 6 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகள் அந்த நாட்டு ஜனத்தொகையில் 100-க்கு 14·3 பேர்.

1915 வருஷம்	,,	11·5 ,,
1923 ,,	,,	9·0 ,,

இன்று நாஜி ஜெர்மனியில் இன்னும் குறைந்துகொண்டே போகிறது. ஆனால் குழந்தைகளின் சாவு விகிதமோ வருஷா வருஷம் அதிகமாகிக்கொண்டே போகிறது. பாஸிஸ்ட் நாடுகளில் ஜனத்தொகையை அதிகமாக்க ஒரு நூதன முறையைக் கையாளுகிறார்கள். பிறநாட்டின்மேல் படையெடுத்து அந்த மக்களை அடிமைகளாக்கி தங்களுடைய ஜனத்தொகையின் எண்ணிக்கையோடு சேர்த்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த வழி, நாட்டின் வளர்ச்சியை குறிக்காது என்று நாம் சொல்லத்தேவையில்லை.

மனிதன் மனிதனைச் சுரண்டுவதை ஒழித்ததும், பஞ்சம் இல்லாமல் செய்ததும் உழைப்பாளிக்கு வேண்டிய வாழ்க்கை சவுகரியங்களை தருவதுமான சமதர்ம ருஷ்யாவில் ஒரே நிதானமாக ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது.

சமதர்ம ருஷ்யாவில் செல்வ வளம் அபரிமிதமாக அதிகரித்து விட்டது. இச் செல்வப் பெருக்கை உண்டாக்குபவரும் அனுபவிப்பவரும் உழைப்பாளிகள்தான். முதலாளித்துவ நாடுகளைப்போல, ஒரு சிலர் மட்டும் அனுபவிப்பதில்லை.

1926-ல் நாட்டு வருவாய்		21,70 கோடி ரூபில்கள்
1938 ”	”	105,0 கோடி ரூபில்கள்

சுமார் 5 பங்கு அதிகம்.

ருஷ்ய ஜனங்கள், கற்பனைக்கும் எட்டாதபடி செல்வ நிலையை அதிகரித்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். 12 வருஷத்திற்குள் அந் நாட்டு ஜனத்தொகை 16 சத விதம் அதிகரித்திருக்கும்போது அதன் செல்வமோ 380 சத விதம் அதிகமாயிருக்கிறது.

சமதர்ம ருஷ்யாவில் யந்திரத் திட்டத்தால், கிராமத்தில் தரித்திரம் மறைந்தது; பட்டணங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தது.

1926-ம் வருஷத்தில் ருஷ்யாவில், 1,166,607 பேர்களும் அவர்கள் குடும்பங்களும் வேலையின்றித் தவித்தனர். ஐந்து வருஷத்

திட்டம் அமுலுக்கு வந்த பிறகு, இன்று ருஷ்யாவில் வேலையில்லாதவர்களே கிடையாது.

12 வருஷத்திற்குள் கிராமங்களில் மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது. 1926-ம் வருஷம் 1·7 சதவீதம் பூமிகள்தான் கூட்டு விவசாயத்தின் கீழ் பயரிடப்பட்டு வந்தன. ஆனால் 1938-ல் 93·5 சதவீதம் பூமிகள் கூட்டு விவசாயத்தின் கீழ் பயிரிடப் படுகிறது.

இன்று கிராமங்கள் தோறும் கூட்டுப்பண்ணைதான் வழக்கமாகச் செய்யப்பட்டு வருகிறது. கிராமப் பொருள் உற்பத்தியை அதிகரிப்பதில், ருஷ்யா அமோகமான வெற்றியடைந்திருக்கிறது. 1926-ல் 120,700,000 ஜனத்தொகை உள்ள கிராமங்கள், 14800 கோடி ரூபில்கள் விலை மதிப்புள்ள விவசாயப் பொருள்களை தயாரித்தன. ஆனால் 1938-ல் 114,500,000 ஜனத்தொகை உள்ள கிராமங்கள் 18500 கோடி ரூபில்கள் மதிப்புள்ள பண்டங்களைத் தயார் செய்திருக்கின்றன.

இந்த புள்ளி விவரங்களால், உங்களுக்குத் தலைவலி உண்டாகவில்லையே! சந்தோஷம்!

18691

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென்னிந்தியா வெங்கும் கிளை ஆபீசுகள்

அதிகார மூலதனம்	60,00,000—0—0
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800—0—0
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000—0—0
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280—0—0
ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	18,60,147—0—0

செக்ரடரி: N. கோபால அய்யர்

மந்திரிப் பதவி என்ற வாளால் புல் அறுத்து காங்கிரஸ் பசுவைப் போஷிக்கவேண்டியிருக்க, அதே வாளால் பசுவையே துன்புறுத்துவது கண்டு சகியாத காந்திஜி, சுபாஷ் பாபுவை இன்னும் 3 வருடங்களுக்கு எவ்வித பதவியும் வகிக்கக் கூடாது என்று அவ்வாளைப் பறிமுதல் செய்து விட்டார்.

கோதான பலன்

சி. சு. செல்லப்பா

காட்சி 1 18691

(இஞ்சினியர் ஹிமோத்கிரி அய்யருக்கு வயது நாற்பத்தைத் தாக்குமேல் ஆகிறது. புத்ர பாக்கியம் கிடையாது. ஈஸி சேரில் சாய்ந்துகொண்டு பத்திரிகை பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் மனைவி பர்வவர்த்தனி அம்மாள் அங்கே வருகிறாள். லஸ்கர் சோமு விசிறிக் கொண்டிருக்கிறான்.)

ப :—இந்தாங்கோ, உங்களைத்தானே! நான் சொல்றது காதிலே விழறதோ இல்லியோ?

ஹி :—ஹூம். என்ன சமாசாரம்?

ப :—என்ன சமாசாரமா! நல்ல சமாசாரம்தான். ஆமாம், நாம்ப இந்த ஊருக்கு வந்து எத்தனை மாசமாச்சு?

ஹி :—சரி, இப்போ அதுக்கென்ன? எப்போவோ வந்தோம்.

ப :—வந்து நாலு மாசம் நாலு நாளா பறந்து போயிடுத்து. தெரியுமா?

ஹி :—நல்லதாப் போச்சு. மீதி மாசத்தையும் அப்படியே ஓப் பேத்திடுவோம்.

ப :—போருமே உங்க கேலிப் பேச்சு. இப்போ நான் வம்பு பேசரதுக்காக வரல்லே. சித்தே பேப்பரை மூடிட்டு ரெண்டு வார்த்தை கேளுங்கோ. ஆமாம், ஆயிரம் தடவை இதுக்குள்ளே முட்டிண்டிருக்கேனே ஒருத்தி காடியா கத்தி. எதையாவது காதிலே போட்டுண்டால்தானே!

ஹி :—என்னத்துக்கு இவ்வளவு பீடிகை பெரிசா போடறே? நீ என்ன சொல்லி இன்னும் நடக்காமே இருக்கு?

ப :—ஒரு நல்ல ஜோஸ்யனைக் கூப்பிட்டு கேளுங்கோன்னுதான்.

ஹி :—ஜோஸ்யனு! எதுக்கு?

ப :—எதுக்கு, எல்லாம் கர்மாந்திர பீடைக்குத்தான். வேறே எதுக்கு இப்படி படிச்சு படிச்சு கத்தப்போறேன்?

ஹி :—என்னடீது, திடீர்னு மறுபடியும் ஆரம்பிச்சுட்டே? போன மாசம்தான் வாத்தியார் குப்புசாமி சாஸ்திரிகளைக் கூப்பிட்டு ஜோஸ்யம் எல்லாம் பார்த்து...

ப :—பார்த்தேள்; இல்லேங்கல்லே...

ஹி :—ஜாதகத்துலே பீடை இருக்குன்னு தினம் பத்து பிராம் ணுளுக்கு ஒவ்வொரு ரூபாய் தக்ஷிணை எல்லாம் கொடுத்து, ஹோமம் பண்ணி, இருநூறு ரூபாய் செலவழிச்சாச்சே! இன்னும் என்ன?

ப :—ஆமாம், அது ஒண்ணு செஞ்சா எல்லாம் ஆயிடுத்து. கர்மாந்திர பீடை எவ்வளவு இருக்கோ!

ஹி :—அதெல்லாம் மண்டையோடேதான் போகும்.

ப :—அத்தனைக்கும் பீடை பரிகாரம் செஞ்சுதானே ஆகணும். அதுக்குத்தான் நல்ல ஜோஸ்யனைக் கூப்பிட்டு....அடே, சோமு! தடியா, ஜடம் மாதிரி நிக்கிறியே, ஒரு எழவும் தெரியாது உனக்கு. ஊரிலே கெட்டிக்கார ஜோஸ்யரைப் பார்த்து கூட்டிண்டு வாயேண்டா.

சோ :—நம்ப சுப்பண்ணு வாத்தியாரு இருக்காருங்க. ஊரிலே அவருக்கு நல்ல பேரு.

ஹி :—சரி. இந்த மாதத்து சம்பளத்துக்குத் தலைவலி பிடிச்சுதா? போ போ.

ப :—ஆமா, நான் சொல்றதெல்லாம் உங்களுக்கு தலைவலியாகத் தான் இருக்கும். ஏன்? நானே தலைவலியாத்தானே இருக்கேன் உங்களுக்கு. நான் ஒருத்தி கண்ணை மூடிண்டு போயிட்டா உங்களுக்கு நல்லதா போயிடும். சம்பளம் சம்பளம்னு ஏன்தான் இப்படி அனத் தறேளோ. அவ்வளவையும் கட்டிண்டு போகப்போறேளோ இல்லியோ? நான் இரண்டு காசுக்கு செலவு சொன்னு உங்களுக்கு தலைவலிமட்டுமா வரும்.

ஹி :—இதோ பாரு! உன் இஷ்டப்படிதான் எத்தனை ஊரிலே நாக பிரதிஷ்டை எல்லாம் பண்ணி வச்சாச்சே. இன்னும் வேறே என்ன குறை?

ப :—ஹூம்! குறை யென்ன? பெரிய குறையா ஒண்ணு இருக்கே அது போராதா? எல்லாரையும் போலவே சவரணையா பிள்ளைகுட்டி பேரன் பேத்திகளுடனே இருக்கேனு நானு? (குரல் கம்முகிறது; கண்ணை கசக்குகிருள்.)

ஹி :—சரி. போரும். பழைய கதை யெல்லாம் ஆரம்பிச்சு டாதே. சோமு! நம்ப மானேஜர் சாமி கிட்ட சொல்லி, போய் சாஸ்திரி அய்யரை கூட்டிண்டு வரச் சொல்லு. சீக்கிரம்! நான் வெளியே போரதுக்குள்ளே.

சோ :—இதோ போறேங்க.

காட்சி 2

(அதே இடம். சாஸ்திரி வருகிருர்.)

ஹி :—வரணும், வரணும். அடியே, வாத்தியார்வாளுக்கு ஆசனப் பலகையை எடுத்துப் போடு.

ப :—வாருங்கோ வாத்தியாரே. பலகையிலே உட்காருங்கோ. (அவசரமாக பலகை கொண்டு வந்து போடுகிருள்.)

சா :—ஆமாம். நம்ப மானேஜர் சுந்தரமய்யர் வந்து சொன்னார் கூப்பிட்டுவிட்டேள்னு. அடேயப்பா, என்ன வெயில் போங்கோ, வெய்யிலான வெய்யிலா!

ப :—சோமு! விசிறியை எடுத்து விசிறேண்டா. நிக்கிறே!

சா :—பரவாயில்லேன்னு. ஊரணியிலே மடை அடைச்சு இருக்காப் போல இருக்கு. ஜலம் கூட ரொம்ப மெதுவாய்த்தான் போறது……

ஹி :—ஏன், உங்களுக்கு அங்கே நிலமாக்கும். ஜலம் பாயல்லே போலிருக்கு, நீங்க இழுக்கிறதைப் பார்த்தா.

சா :—(அசட்டு சிரிப்புடன்) அதுக்குத்தான் சொல்ல வந்தேன். நாலாம் நம்பர் மடை ரிப்பேர் செய்யராப் போலே இருக்கு. அதுக்கு அடைச்சிருக்குன்னு சோமுகூடச் சொன்னான்.

ஹி :—இன்னிக்கு முடிஞ்சுடும். நாளைக்கு ஜலம் விட்டுடுவோம். வந்த விஷயத்தைக் கவனிப்போமா. வந்து……

சா :—ஆஹா, நானே தயாராக பஞ்சாங்கத்தோடே வந்திருக்கேன். மானேஜர்வாளே கொஞ்சம் ஜாடையா சொன்னார்.

ஹி :—சொன்னாரா, அதான். இந்தாங்கோ, ஜாதகம் ரெண்டும். சாவதானமா பாருங்கோ.

சா :—ரொம்ப சந்தோஷம்!

ப :—வாத்தியாரே, சித்தே நன்னா ஜாதகத்தை பாருங்கோ.

ஹி :—அட, நன்னா பார்க்கிறதுன்னு வேறெ ஒண்ணு உண்டா? (இருவரும் சிரிக்கிறார்கள்)

சா :—ஆகா, அம்மா! பேஷா பார்த்துச் சொல்றேன்.

ப :—அதுக்கு சொல்லல்லே. ஆச்சு, ஆச்சுன்னு ஒவ்வொரு வாத்தியார்பார்த்து சொல்லிவிட்டு போயிடராளே. அந்தமாதிரி இல்லாமேன்னுதான் சொன்னேன். (சாஸ்திரிகளின் அசட்டு சிரிப்பு)

சா :—ஆகட்டும்மா.

ப :—என்ன பீடை இருக்கோ. இப்படி எல்லாம் ஆட்டி வைக்கிறது. ஹும்! (பெரு மூச்சு விடுகிறாள்)

சா :—(அசட்டு சிரிப்போடு) அதுக்கென்னம்மா. எல்லாம் நம்ப கையிலேயா இருக்கு? பகவத் சங்கல்பம்; எல்லாம் அவன் மனசு வச்சால்தானே. அவன் கையிலேதான் எல்லாம் ஒப்பிச்சுடணும்……

ஹி :—ஆசேபணை என்ன?

பா :—அப்படித்தான் ஒப்பிச்சுட்டு இருக்கோம்— அவன் தலையிலே பாரத்தை போட்டுட்டு.

சோ :—எசமான். ஹெட் கிளார்க் எசமான் வந்திருக்காரு.

ஹி :—சாஸ்திரிகளே! கொஞ்சம் பாருங்கோ. ஆபீஸ் ஜோலியா ரெண்டு வார்த்தை பேசிட்டு வரேன். அடியே, சீக்கிரம் காபி போட்டுக்கொண்டா.

சா:—அதெல்லாம் எதுக்குன்னு? வேண்டாம்......(இழுக்கிறார்)

ப :—அதென்ன அப்படி சொன்னேள் வாத்தியாரே. இதோ போட்டுண்டு வந்துட்டேன். நன்னு பாருங்கோ. (போகிறாள்)

ஹி :—என்ன சார் ! சமாசாரம்?

ஹெட்கிளார்க் :—பெரிய இன்சினியர் போன் பண்ணினார். கருங்குளத்து எஸ்டிமேட் ஏன் இன்னும் ஆபீஸுக்கு வரல்லேன்னு, அதை முதல்லே முடிச்சு, அனுப்பணுமாம்.

ஹி :—ஆமாம். ஓவர்சியர் என்ன சொன்னார்?

ஹெட் :—உங்களைக் கூட்டிண்டுபோய்க் காட்டணும்னார்.

ஹி :—சரி. ஆபீஸுக்கு வரேன். வாத்தியார் கிட்ட ஜோலி முடிச்சுண்டு. ஓவர்சியரை வரச்சொல்லி ஆள் அனுப்புங்கோ. (உள்ளே வருகிறார்) என்ன சாஸ்திரிகளே? பாத்தேளா?

சர்:—ஆஹா. பாத்தாச்சு.

ப :—இந்தாங்கோ. காபி சாப்பிட்டுட்டுப் பேசுங்கோ.

சா :—ஆகட்டும்னு. என்ன அவசரம் அந்த ரெண்டு ஜாதகத் துப்படியும் இப்போ ரொம்ப போராத காலம்தான். அஷ்டமத்துலே சனி இருக்கான். கேதுவந்து......

ப :—அதெல்லாம் எங்களுக்கு என்ன தெரியாது வாத்தியாரே. என்ன பீடா பரிகாரம் தக்கபடி பண்ணணுமோ அதைச் சொல்லுங்கோ. அதுதான் எங்களுக்கு ரொம்ப முக்கியம். போராத காலம்னுதான் நன்னு தெரிஞ்சிருக்கே.

ஹி :—சொல்லுங்கோ சாஸ்திரிகளே!

சா :—சர்வ சிரேஷ்டமா ஒண்ணே ஒன்னு செய்துட்டாப் போரும்.

ப :— அதைச் சொல்லுங்கோ—

சா :—நல்ல லக்ஷணமா, ஒரு கோவை பார்த்து தானம் பண்ணினு நல்ல சாந்தினு சாஸ்திரத்துலே பெரியவா சொல்லிருக்கா. அதுதான் ரொம்ப உசிதம்.

ப :—என்னது வாத்தியாரே?

ஹி :—இல்லே. நல்ல பசுவா பார்த்து தானம் பண்ணனும்னு சொல்றார்.

சா :—ஆமாம்மா. அதைப் பூர்த்தி செய்துட்டா பகவத் சங்கல் பத்திலே எல்லாம் ரொம்ப பேஷா கைகூடிவரும். ஆக்ஷேபணையே இல்லே.

ப :.—அடேயப்பா, இதுதானு பிரமாதம்? என்ன செலவாயிடப் போறது? எவ்வளவு செலவானுத்தான் என்ன? நாளைக்கே செய்துட்டா சரியாப் போறது. காபி, ஆறிப்போகிறதே. சாப்பிடுங்கோ.

ஹி :—வேறே ஒன்றும்...... (இழுக்கிறுர்)

சா :—ஹுஹும்! எல்லாம் இதுக்குள்ளே அடிபட்டுப்போற துன்னு. ஸர்வ சிரேஷ்டமானதுன்னு இது!

ஹி :—சரி செய்துட்டு போறது.

ப:—அதுக்கும் கையோடே நாளைப் பார்த்துடுங்களேன்.

ஹி :—பசு வாங்கிவிட்டு அப்புறம் பார்த்துக்கலாமே.

ப :—நன்னு இருக்கு நீங்க பேசறது, அதுக்கு ஒருதரமா? பசு வர எத்தனை நாளாகும்? நாலு இடத்திலெ சொல்லிவச்சா ரெண்டு நாளுலெ வந்துடறது.

சா :—சரி. பாருங்கோ அதையும். ஆமாம், யாருக்கு கொடுக்கலாம். நல்ல சத்குணமான ஆளா......(இழுக்கிறுர்)

சா :—அதுக்கென்ன ? விஜாரிச்சாப்போறது.

ப —ஏன், வாத்தியாருக்கே கொடுத்துட்டா...

சா :—(அசட்டு சிரிப்புடன்) இல்லெ, இல்லெ. அதெல்லாம் அவ்வளவு உசிதமாக பெரியவா சொல்லல்லெ. ஆசார்ய பீடத்திலே இருக்கேன் நான் இந்த ஆத்துலெ. கூடாது. வேறே...

ஹி :—அதுவும் நியாயம்தான். வேறே பாத்துட்டா போறது.

ப :—நாம்ப இந்த ஊருக்கு புதுசு, யாரை தெரியும்? வாத்தியார் தான் பார்த்து சொல்லணும். சொல்லுங்கோ வாத்தியாரே.

சா :—அதுக்கென்ன சொல்றேன். நல்ல யோக்யமான பையனு இங்கே ஒரு பையன் இருக்கான். நம்ப பையன்தான். நல்ல அத்யயனம்...

ப :—பேஷாப் போயிடுத்தே. சரி. அவருக்கே கொடுத்துடு வோம் நாள் என்னிக்கு?

சா :—இன்னிக்கு பத்தாவது நாள் ஞாயற்றுக்கிழமை காலமே ஆறு மணிலே இருந்து எழுக்குள்ளே.

ஹி :—சரி, பசுவை வாங்கிண்டு வந்து உங்களுக்கு தகவல் கொடுக்கிறேன். இந்தாங்கோ, தாம்பூலம் எடுத்துக்கோங்கோ.

சா :—ஆகட்டும், நான் வரேன். நான் வரட்டுமாம்மா.

ப :—வாருங்கோ.

சோ :—எசமான் கண்டிராக்டர் பிள்ளை வந்திருக்காரு.

ஹி :—யாரு? கண்ணுயிரம் பிள்ளையா ?

சா:—பிள்ளைவாளா? ரொம்ப நல்லதாப் போச்சு. அவர் கிட்ட சொன்னா நாளைக்கே பசுவைக் கொண்டுவந்து வாசல்லே கட்டிவிடுவாரே, அவருக்கு தெரியாதது இந்த பக்கத்திலே.

ப:—ஆமான்னா எனக்கும் மறந்து போச்சே. வேரே யாரைப் பிடிக்கணும் இதுக்கு?

ஹ:—பார்ப்போம்...பிள்ளைவாள் உங்களைப் பத்தித்தான் பேசிண்டு இருந்தோம்.

கண்ணாயிரம் பிள்ளை:—இப்பொத்தான் வரேன். சாஸ்திரிச் சாமி குரல் உள்ளே கேட்டுது. இந்தா படி இறங்கிப் போறுரு.

பா:—உங்களுக்கு ஆயுசு நூறு கண்டிராக்டரே!

க:—ஏது, என்ன விஷயங்க, நம்ப ஞாபகம் வந்துது?

ப:—இல்லே...

ஹி :—(இடை மறித்து) 'ஒண்ணுமில்லே குடும்பத்துலே பீடை ரொம்ப காலமா வாட்டிண்டு வரது. அதுக்கு ஏதாவது பரிகாரம் செய்யணும்னு சாஸ்திரி அய்யரை கூப்பிட்டு கேட்டுது.

க :—ஆமாங்க. ஏதாவது அப்படி செஞ்சுட்டாத்தான் வீட்டுக்கே சேமங்க. நான்கூட போன வருஷம் அப்படி...

ஹி :—அதான், அதான், நம்ப சாஸ்திரி அய்யர் சொன்னர். நல்ல பசு மாடா வாங்கி ஒண்ணு தானம் பண்ணிட்டா நல்ல துன்னு.

க :—அதுக்கு என்னுங்க. செஞ்சிட்டா போகுது. நமக்கு செல வழியுதுங்க எம்புட்டோ...

ஹி :—ஏன் பிள்ளைவாள்! நல்ல பசுமாடா ஒண்ணு எங்கே வாங்கலாம். நீங்கதான் இந்த ஊராச்சு. தெரியும். சொல்லுங்கோ.

ப :—அவா ஊருக்குத்தானே நாம்ப வந்திருக்கோம். அவர் தான் சம்பாதிச்சு கொடுக்கணும். நமக்கு என்ன தெரியும்?

க :—சுற்று வட்டத்துலே பார்க்கணுங்க.

ப :—என்ன பாக்கணுங்கரீர். நீங்கத்தான் பாத்து கொண்டு வந்து கட்டிடணும் இன்னும் நாலு நாளைக்குள்ளே. அதான் எங்களுக்கு தெரியும்.

க :—(அசட்டு சிரிப்புடன்) அதுக்கென்னுங்க. இன்னிக்கே சொல்லி நாளை மக்கா நாள் சந்தையிலே நான் வாங்கிட்டு வரச் சொல்றேன். அப்புறம் என்னுங்க?

ஹி :—சரி. இன்னைக்கு பத்தாம்நாள் தானம் பண்ணிடணும். நல்ல வேளை பார்த்து இருக்கு. அதுக்குள்ளே வாங்கிண்டு வந்துடுங்கோ நல்ல மாடா ஒண்ணரைப்படி பால் கறக்கறாப்லே, அதுக்கு குறையாமே.

க :—வாங்கிடலாமுங்க. என்ன, நூறு ரூபாய்க்கு மேலே பத்து இருபது ஆகப் போவுது. இம்பிட்டுத்தானுங்களே.

ஹி :—அது எவ்வளவு ஆனாலும் சரி. பசு வந்துடணும்.

பர் :—ஆமாம். உங்க பொறுப்புலே விட்டாச்சு.

க :—சரி, நான் வரேங்க.

ஹி :—வேறே விசேஷம் ஏதாவது உண்டா?

க :—சும்மாத்தான் கண்டிட்டு போலாம்னு வந்தேங்க. வரேன்.

ஹி :—பசு ஞாபகம் இருக்கட்டும்.

க :—இருக்குது...(தனியே) ஹூம்! வெறுமனே கண்டிட்டுப் போக வந்ததுக்கு நல்ல பலமா பொருந்திருச்சு, ஒரு முழு நோட்டுக்கு குறையாமே. நல்ல வேளையிலே புறப்பட்டேன். எத்தினியோபோலே இதுவும் போகுது.

காட்சி 3

(ஒரு வருஷம் கழித்து)

சோ :—எசமான் கண்டிராக்டர் பிள்ளை வந்திருக்காரு.

ஹி :—வாங்கோ பிள்ளைவாள்! என்ன விசேஷம்? வெற்றிலை பாக்குப் பழம் எல்லாம் ரொம்ப பலமா இருக்கே. அடே, கல்கண்டு சக்கரை வேறேயா. என்ன விசேஷம்?

க :—ஆமாங்க. ரொம்ப நாளா எனக்கு குழந்தே இல்லீங்க. இப்போ ஆம்பிள்ளைப் பிள்ளை பிறந்து இருக்குதுங்க. கண்டிட்டுப் போக வந்தேன் எசமானே.

ஹி :— ரொம்ப சந்தோஷம்! அடியே, கண்டிராக்டர் பிள்ளைக்கு பிள்ளைக் குழந்தைப் பிறந்திருக்காம்; கேட்டியா சமாசாரத்தை.

பா :—ரொம்ப சந்தோஷம். போகட்டும் போங்கோ பாவம்!

ஹி :—ஹும்! அந்த தட்டெல்லாம் யாருக்கு—யாரைப் பார்க்க?

க :—மானேஜர் ஐயாவை போய்ப் பார்க்கப் போறேங்க.

ஹி :—சரி. போய் பார்த்துட்டு வாங்கோ.

க :—வரேங்க.

காட்சி 4

க :—மானேஜர் சாமி! நமஸ்காரங்க.

மா :—என்ன, கல்கண்டு, தடபுடல்?

க :—புள்ளைக் குழந்தை நமக்கு இப்போதுதான் பிறந்திருக்குதுங்க. கண்டிட்டு போக வந்தேன்.

மா —(கல கலப்பாகச் சிரித்து) உமக்கா பிள்ளைக் குழந்தை பிறந்திருக்கு?

க :—ஏன் சிரிக்கிறீங்க?

மா :—சரிதான். இஞ்சினீர் எச்மான் கோதானம் பண்ணின புண்யம், பிள்ளவாளுக்குக் கைமேலே கிடச்சுட்டாப்போலெ இருக்கு. பேஷ்! பேஷ்! ஹெட் கிளார்க் சார்! பார்த்தேளா வேடிக்கையை?

ஹெட் :—(சிரித்து) அந்த முகூர்த்தத்துலெ புத்ர பாக்யம் பிள்ளைவாளுக்கா! ரொம்ப பொருத்தம்தான். என்ன பிள்ளைவாள்!

க :—(அசட்டுச் சிரிப்புடன்) என்னமோ போங்க!

மா :—ஆமாம். பசுவிலை என்ன ஆச்சு?

க :—நூத்தி இருபது ரூபாய் கையை பொருத்துச்சுங்க.

மா :—ஹா, அப்படிச்சொல்லாதேங்கோ. பலன் கைமேலே கிடச்சிருக்காக்கும்! (சிரிக்கிறார்கள்) ஆமாம், எஜமானைக்கண்டுட்டு வந்தீரா?

க :—ஆச்சுங்க. போயிட்டு வரேங்க.

(சென்ற ஆகஸ்டு மாதம் 14-ம் தேதி திருச்சிணுப்பள்ளி ரேடியோவில் நடிக்கப்பட்டது)

கொல்லுவதும் இயற்கையா?

(வ. ரா.)

பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி என்று பாரதியார் பாடியிருக்கிறார். பிறப்பதும் இறப்பதும் இயற்கை; அவைகள் இயற்கையின் கட்டளைகள். இறப்பது இயற்கை என்றால், கொல்லுவதும் இயற்கையாமா? தனது அர்த்தமில்லாத ஆசைகளின் தூண்டுதலால், ஹிட்லர் போருக்குப் புறப்பட்டிருக்கிறார் என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன் சொல்லுகிறார்.

ஹிட்லரின் ஆசைகள் அர்த்தமற்றவை என்பதை, கட்சி அளவுக்கு ஒப்புக்கொள்ளுவோம். போர் ஏற்படலாம் என்று யுத்த தளவாடங்களைச் சேகரிப்பது புத்திசாலித்தனமாகுமா? போரிலே என்ன அர்த்தம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

சாதாரண காலத்தில், சில துறைகளில், கால் துட்டு செலவழிக்காமல் கருமித்தனம் செய்யும் அரசாங்கங்கள் போர் தளவாடங்களில், கோடிக்கணக்கான பவுன்களை ஆயாசமில்லாமல் செலவழிக்கின்றன. ஆஸ்பத்திரிக்கு பணம் இல்லை என்று கையை விரிக்கும் அரசாங்கம், ஆயுத உற்பத்திக்காக, சுரங்கத்திலிருந்து தோண்டி எடுப்பதுபோல, சுளுவில் பணம் சம்பாதித்துக் கொள்ளுகிற வித்தை எனக்கு அர்த்தமாகவேயில்லை.

அச்சத்தினால் செலவழிக்கும் பணத்தை, அறிவைத் தேடுவதற்காக செலவழிக்கக்கூடாதா? மனிதன் என்ற வார்த்தையில், ரொம்பவும் பெருமையும் கம்பீரமும் இருப்பதாக, நான் எப்பொழுதும் கனவு கண்டு வருகிறேன். மனிதனுக்கு இயல்பாக ஏற்பட்டிருக்கும் பெருமை குலைந்து போகும்படியாக, அவன் காரியம் செய்ய எத்தனித்தால், என் உடம்பில் நடுக்கம் உண்டாகின்றது.

மனிதன் வீணாகவும், அறிவிலியாகவும் போகவேண்டுமா? யுத்தத்தினால், எந்த பிரச்னை, இதுவரையிலும் தீர்ந்திருக்கிறது? கை விரலை மடக்கி, யாரேனும் கணக்குப் போட்டுச் சொல்ல முடியுமா?

தெருவிலே, கடை வீதியிலே, கடற்கரையிலே, எங்கு பார்த்தாலும், போர் என்ற செய்தியைக் கேட்டு, ஒருவித பரபரப்பு உண்டாகின்றது. போலந்தில் போர் என்றால், ஆயிரம் டன் பிடிக்கும் தவாவில், ஹல்வா, அங்கே செய்கிறார்கள் என்று அர்த்தமா?

விஷக்காற்றும், ஆகாய விமானமும், நீர்மூழ்கிக் கப்பலும் தோன்றிய காலமுதல், காட்டு மிராண்

டித்தனமான போரில்கூட, பழைய நியதிகள் யாவும் தொலைந்து போய்விட்டன. யார் யாரையும் கொல்லலாம்! ஆயுதம் செய்பவர்களை, ஆயுதம் தாங்கியவர்களை மட்டும் கொல்லவேண்டும் என்ற வரையறையும் போய்விட்டது.

போர் ஏற்படுமுன், நோட்டீஸ் கொடுப்பதென்று, ஒரு வழக்கம் இருந்தது. இப்பொழுது, அதுவும் போய்விட்டது. இரண்டு கட்சிகளும் சமாதானப் பேச்சு பேசிக்கொண்டே, படைகளை எல்லைப்புறங்களில் அணிவகுக்க வேண்டியது. அது முடிந்தவுடனே, எச்சரிக்கை இல்லாமல், எதிரியின்மேல் பாயவேண்டியது. இதுதான், புதிய போர் லட்சணமாகும்.

பெண்கள், குழந்தைகள், போரில் ஈடுபடாதவர்கள் என்று யாரையும் ஒதுக்கி வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்ற கடமையை, தற்போதைய போர் முறை, ஏற்றுக் கொள்ளுவதில்லை. மனிதன் எவ்வளவு கேவலமாக, பின் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறான் என்பதற்கு வேறு அடையாளமும் அத்தாட்சியும் தேவையா?

மனித வர்க்கம் இதுவரையிலும் தியாகத்தாலும் இணையற்ற முயற்சியாலும் ஒத்துழைப்பாலும் கண்டு பிடித்த உயர்ந்த பொருள்களில் எதையேனும், போர் மதிக்கின்றதா? எல்லோரும் பிரார்த்தனை செய்யும் கோயிலை மதிக்கிறதா? இல்லை! "கோயிலை இடி! எதிரி அங்கே நுழைந்து கொள்வான்" என்கிறான் கருணையற்ற சேனைத் தலைவன்.

இது ஆஸ்பத்திரி கட்டிடம் என்று மதிப்பதில்லை. "ஆஸ்பத்திரியா? ஆஸ்பத்திரியை அழித்தால்தான், நன்றாக எதிரியை பயமுறுத்த முடியும்" என்று அழுத்தமாகப் பேசுகிறான் யுத்த நிபுணன்.

நீண்ட காலமாக ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் புத்தகசாலை என்று அரக்கப் போர்த்தலைவன் கவனிக்கிறானா? "புத்தகசாலையா? மனிதனுக்கு புத்தக மூலமாக, தலையிலே விஷமேறிப் போய்விட்டது. புத்தக சாலையைப் பொசுக்கு" என்று கூக்குரலிடுகிறான், கல்வி வாசனை இல்லாத கசடன்.

"காணக்காணத் தெவிட்டாத காட்சி என்று சித்திரத்தைக் காட்டினால், சித்திரம் மனிதனுடைய சுசுறுறுப்பை வீணாக்கும் ஒரு முட்டாள் வேலை" என்று முணுமுணுக்கிறான் முட்டாள் போர் வீரன்.

மனிதனுடைய உயர்ந்த தியாகத்தாலும் சிறந்த அறிவாலும் அளப்பறிய ஊக்கத்தாலும் தோன்றியிருக்கும் மாண்பு கொண்ட பொருள்களை எல்லாம், இந்த மாதிரியே, அவமதித்துப் பேசுகிறான், போரில் ஈடுபடும் மனித முட்டாள்.

போர்க்காலத்தில், கற்பு என்ற நினைப்பு உண்டா? எங்கும், எந்நேரமும்சுதந்திரக் காதலைப்பற்றித்தான் பேச்சு. மனிதனுடைய கீழ்த்தரமான அத்தனை குணங்களும் திரண்டு உருண்டு, அவனை பிசாசாக அடித்து விடுகிறது.

ஒரு இடத்தில், தாய் அழுது அழுது, மடிகின்றாள். மனைவி, குழந்தையைப் பார்த்துப் பார்த்து, கண்ணீர் விட்டு, கதறி, பசியால் வாடி, மாண்டு போகிறாள். சகோதரி, சகோதரனை நினைந்து நினைந்து, ஏக்கமடைந்து, போக்கிடம் புகலிடமின்றி சோர்ந்துபோய், விண் உலகைச் சேர்கிறாள். குழந்தைகள், விமான வெடிகுண்டுகளைக் கேட்டு, திகில் அடைந்து, மேஜைக்குக்கீழ், போய் பதுங்கிக் கொள்கின்றன.

அறிவாளிகள், கன்னத்தில் கை வைத்துக்கொண்டு, "என்ன உலகம்! அநியாயமாக, உலகம் தலைகீழாகப் போய்க்கொண்டிருக்கிறதே! பகுத்தறிவுள்ள மனிதனுடைய செயலா போர்? காட்டுமிராண்டிகளின் சிந்தனையற்ற செயலல்லாவா போர்? போரைக் கொண்டு, எதைச் சாதிக்கப் பார்க்கிறார்கள் இந்த முரடர்கள்? ஏசுவின் போதனை எங்கே போச்சு; புத்தனுடைய துறவு என்ன ஆச்சு? தாய்மார்களின் தியாகத்தின்பேரில், மிதித்து மிதித்துப் போகின்றார்களே இந்தப் பாவிகள்?" என்று பிரமை தட்டிப் போகிறார்கள்.

உயிரைக் கொடுத்து புதிய அறிவைத்தேடிய உத்தமர்கள் ஓலமிடுகின்றார்கள். 'நான் தேடிய அறிவை, இந்த உன்மத்தர்கள், வெறியர்கள் இப்படியா பாழ்படுத்தி, துர்வினியோகம் செய்ய செய்யவேண்டும்? இரவு பகலாய்ச் சிந்தனை செய்து, சஞ்சலப்பட்டு, கண்டுபிடித்த ஒரு உண்மையை, உருத்தெரியாமல் அடித்து விட்டார்களே இந்த முரட்டாத்மாக்கள்? இனியும் மனிதனுக்கு உய்வு உண்டா" என்று அவர்கள் ஏங்குகிறார்கள்.

"என்னைப்பார்! என் நடையைப் பார்! என் பீரங்கியைப்பார்! என் தொப்பியைப்பார்! என் உடையை அலங்கரித்து நிற்கும் போர் வீரத்தின் அடையாளங்களாகிய நட்சத்திரங்களைப் பார், மனிதனின், ஆபாசமான கோழையாகப் போய்க்கொண்டிருந்ததை தடுத்த என்னை, இரண்டு கையாலும் சலாம்செய்யுங்கள்" என்று போர்மல்லன் கொக்கரிக்கின்றான்.

அங்கே விஷக்காற்று! அடுத்தாற்போல, கிலிபிடித்து ஓடும் சிப்பாய். கருணையின்றி, ஈட்டியால் துளைக்கும் அரக்கன். இரத்தக்காடு! கழுகுகளின் கூட்டம். அதோ, முனகிக்கொண்டே இறக்கிறான் ஒரு இளைஞன். அவன் உள்ளத்தில், என்ன எண்ணங்கள் தோன்றினவோ!

பீரங்கி வெடிகள். தரை "டார் டாராய்" வெடிக்கின்றது. எங்கு பார்த்தாலும் ஒரே புழுதி. பேரிரைச்சல். கண் ஒளி மங்கல். இந்த சந்தர்ப்பத்தில், தன்பட்டாளத்தை, "முன்னே செல்" என்று உத்திரவு கொடுத்து, கால் நடைகளை வெருட்டுவதுபோல, வெருட்டுகிறான் சார்ஜண்ட். குழியிலிருந்து, சிப்பாய் தன் தலையை மேலே தூக்குகிறான். தூக்கின சமயம்பார்த்து, எதிரி சுடுகிறான். தூக்கினவன், தொங்கின தலையோடு சாய்கிறான், மாய்கிறான்.

அழ ஆள் உண்டா? ஆதரவு சொல்ல, பேர்வழி உண்டா?

தாகத்துக்கு தண்ணீர் கொடுக்க, ஆசாமி உண்டா? "மேலேபோ, கீழே வா, சுடு", இதுதான் யுத்தரங்கப்பேச்சு. அந்த சமயத்தில், "தான் மனிதன் என்றும் இந்த உலகம் மனிதன் வாழும் நாகரிக உலகம்" என்றும் அவனுக்கு நினைவு உண்டா? ஒரே மயக்கம்! ஒரே ஏமாற்றம்.

இதற்குத்தான் போர் என்று பெயர். இறப்பது இயற்கை என்றால், கொல்லுவதும் இயற்கை என்று கட்சியும் சாஸ்திரமும் பேசலாமா? ஆயிரம் ஆண்டுகளாக, அணு அணுவாகச் சேகரித்து வைத்த, சேகரித்து வந்த நாகரிகத்தை, அரை நிமிஷத்தில் தோற்றுவிட்டு, மனிதன் மிருகப் பிராயம் அடையலாமா?

இறப்பது இயற்கை. 'கொல்லுவது முட்டாள்தனம். கொல்லுவது ஆபாசம். கொல்லுவது மாகா பாபம். 'கொல்லுவது— வார்த்தை அகப்படவில்லையே!



சாப்பிடவந்தவர் :—என்ன அய்யர்வாள், பத்தரைமணி வண்டிக்கு நாழியாகி விட்டது. செத்தே சீக்கிரமா பரிமாறி எழுப்பிட்டாத் தேவல்லையே!

பதில் ;—ஹரிஹி, சீக்கிரமா பரிமாறிவிடரேன். ஆ...ன பின்னாலே சொன்னேளே அதுமாத்திரம் நம்மாலே ஹூ......ஹூம்,

என் சுபாவம்

(கரிச்சான்)

என்னுடைய மாமனாரின் பழக்கங்களுக்கும் என் பழக்கங்களுக்கும் நேர் விரோதம். அதனால் இருவருக்கும் எப்பொழுது பார்த்தாலும் தகராறென்று நினைக்கவேண்டாம். விரோதம் என்பது மாமனார்—மருமகன் உறவிற்கு சம்பந்தப்பட்டதென்றும் நினைக்க வேண்டாம். அது இருவருடைய சுபாவங்களைப் பொருத்தது; வேறொன்றுமில்லை.

"திருவல்லிக்கேணியிலிருந்து மாம்பலத்துக்கு என்ன பஸ் சார்ஜ்?" என்று என் மாமனார் கேட்பார். அவர் உள்ளூராயிருந்தால் கேட்கவே மாட்டார்; இதெல்லாம் அவருக்கு மனப்பாடமாயிருக்கும். அவர் வெளியூர். ஏதோ கேஸ் விஷயமாக சென்னை வந்தவர் என்னுடன் தங்கியிருக்கிறார்.

"என்ன, இரண்டணா இருக்கும்" என்பேன் நான்.

"எவ்வளவு என்று நிச்சயமாகத் தெரியாதா?" என்பார்.

"தெரியாது!" என்பேன்.

"திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் புறப்படுவது 8-20 க்கா 8-25க்கா?" என்று கேட்பார்.

"தெரியவில்லை" என்பேன்.

அவர் ஆச்சரியத்துடன் என் முகத்தைப் பார்ப்பார்—இப்படியும் உலகத்தில் ஒரு மாப்பிள்ளை உண்டா என்றல்ல—இதெல்லாம் தெரியாமலா காலட்சேபம் செய்கிறாய் என்ற அர்த்தத்துடன்.

ஆமாம். இதெல்லாம் தெரியாமல் அவரால் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. எல்லாம் கணக்காகத் தெரிய வேண்டும். எனக்கு அக்கரை கிடையாது; தெரிந்து கொண்டாலும் மனதில் நிற்காது.

மாம்பலம் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்துகொண்டு கண்டக்டரைக் கேட்டால் சார்ஜ் சொல்லுகிறான். அதற்காக 'ஊருக்கு முன்னால்' நமது மூளையை ஏன் குழப்பிக்கொள்ள வேண்டும் என்பது என் கொள்கை. அவர் அப்படியல்ல. என்ன சார்ஜ் என்று தெரிந்தால் தான் அவருக்கு மேலே யோசனை ஓடும். திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் 8—20க்கா, 8-25க்கா கிளம்புகிறது என்று தெரிவது எனக்கு அனாவசியம். ஏனென்றால், நான் 8 மணிக்கே ஸ்டேஷனில் போய் ஆஜராகி விடுகிறேன். என் மாமனார் ஐந்து நிமிஷத்துக்கு முன்பு தான் ஸ்டேஷனில் நுழைவார்.

அப்படி அதற்கு முன்பு அவர் பல ஜோலிகள் கொண்டவர் என்பதல்ல; எனக்குப் பல ஜோலிகள் இருந்தாலும் நான் என் வழக்கப்படி

ான் செய்வேன். அவர் வழக்கம் அது. பத்து மணிக்கு ஆபீஸென்ருல் 9-45 வரையில் அவர் சும்மாவாவது சாய்ந்து கொண்டிருப்பாரே தவிர கிளம்பமாட்டார். ஏனென்ருல் ஆபீஸுக்குப் போக 15 நிமிஷம் என்று அவர் பட்ஜட் போட்டுவைத்திருக்கிருர்.

ஒருதரம் அவர் சென்னைக்கு வந்துவிட்டுப் போன பிறகு எழுதிய கடிதம் இது.

"ஆசிர்வாதம்.

நேற்றிரவு நான் அங்கே வீட்டைவிட்டுப் புறப்பட்ட பொழுது 8-5 என்று நீ மணி பார்த்துச் சொன்னது பிசகு. அப்பொழுது 7-45 தான் ஆயிருக்க வேண்டும். ஏனெனில், நான் மௌண்ரோட்டில் பார்த்தபோது மணி 8 தான். 8-10க்கே பிளாட்பாரத்தில் நுழைந்து விட்டேன். வண்டி 8-25 க்குத்தான் புறப்பட்டது. சௌகரியமாக 'பெர்த்' ஒன்று கிடைத்தது. ஜங்ஷனில் காப்பி சாப்பிட்டேன்......"

இந்தமாதிரி கடிதம் பூராவும் விவரங்கள்! அவர் டயரியில் ஒருநாள் நடந்த ஒரு சம்பவம் கூட விட்டுப் போகாது. கடைசியில் வரவு செலவுக் கணக்கு—பைசா முதல்.

என் உயிர் போவதாயிருந்தாலும்கூட நான் அந்த மாதிரி ஒரு நிமிஷங்கூட நடந்துகொள்ள முடியாது. நல்ல வேளையாக—என்னுடைய அதிருஷ்டம்தான்—பெண், தகப்பனுர் சுபாவம் கொள்ளவில்லை—பிழைத்தேன்.

எனக்கு வாழ்க்கையில் திட்டமே கிடையாது. அதனுல் தானே என்னவோ நான் வாழ்க்கைப் பந்தயத்தில் பின் தங்கியே போய் விடுகிறேன். எதிலும் எனக்கு ஒரு தீர்மானம் கிடையாது.

இரவு எட்டு மணிக்குக் கும்பகோணம் போகவேண்டியிருக்கும். மாலே ஆறுமணி வரை அதைப்பற்றி நினைவே இருக்காது; நிச்சயமும் இருக்காது. ஏழு மணிக்கு அரை வயிறு சாப்பிட்டுவிட்டு ரயிலுக்குப் போவேன்.

பிரயாணத்தில் மட்டும் எனக்கு மிகவும் தீர்மானமான ஆசை. ரயிலோ பஸ்ஸோ—ஏறி உட்கார்ந்துவிட்டால் உலகத்தையே மறந்து விடுவேன். அந்த இடம் ஸ்வர்க்க ஸ்தானமாக மாறிவிடும்.

'உலகத்தையே மறந்து விடுவேன் என்று சொன்னேன். அது அவ்வளவு சரியில்லை. வாழ்க்கையின் தொல்லைகளை மறந்து விடுவேன். வாழ்க்கைப் புழுதியை கால்படியில் தட்டிவிட்டு கற்பனை விமானத்தில் ஏறி விடுவேன்.

என் சுபாவம் இப்படியாகி விட்டது. சுபாவமாவது, தன்னை ஒருவன் சீர்திருத்திக்கொள்ள முடியாவிட்டால் என்ன பயன் என்று கேட்கலாம். செய்து கொள்ளுகிறேன். என் சுபாவத்திலிருக்கும் பிசகை எடுத்துக் காட்டுங்கள்.

பெரிய இடத்து சிநேகம்

ஜயம்

எனது நண்பன் நீலகண்டனை உங்களுக்குத் தெரியாது. அவன் பெரிய இடத்துப் பிள்ளை.

நானும் அவனும் எஸ். எஸ். எல். ஸி. யில் மூன்று வருஷம் ஒருவரை ஒருவர் வென்றுவிட வேண்டுமென்று போட்டி போட்டோம்.

நான் உத்யோகத்தைத் தேடி சென்னை புறப்பட்டேன். அவன் வேறு கலாசாலையைத் தேடிப் சென்னை புறப்பட்டான்.

எங்கள் இருவருக்கும் நடுவில் சில வருஷங்கள் சந்திப்பே எற்பட வில்லை. திடீரென்று சென்ற வாரம் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுதுதான் அவன் பழைய நீலகண்டன் இல்லையென்பது தெரிந்தது.

* * *

"என்ன நீலகண்டா! என்னை அடையாளமே தெரியவில்லையா? மறந்தே போய் விட்டாய் போல் இருக்கிறது" என்றேன்.

"மறக்க வில்லை ஞாபகம் வருகிறது. ஆனால் யார் என்பது சட்டென்று நினைவுக்கு வரவில்லை" என்றான் அவன்.

மறக்கவில்லை, ஆனால், நினைவுக்கு வரவில்லை. இது ஒரு சாமர்த்தியமான பேச்சு போல இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு "நான்தான் சாமி! ஞாபகமில்லையா? நாம் இருவரும் சேர்ந்தாற் போல் மூன்று வருஷம்" என்று ஆரம்பித்தேன்.

"அடடே! நம்ம சாமியா? அப்படிச் சொல்லு. மறந்தே போய்விட்டாயேஎங்களைஎல்லாம்! வாப்பா! எங்கே இப்பொழுது? கல்யாணமாகி விட்டதா?" என்றெல்லாம் கேள்விக்குமேல் கேள்வியாக ஆரம்பித்தான்.

"எல்லாம் சொல்கிறேன் நீ எங்கே இருக்கிறாய்?" என்றேன்.

"நானா! தெரியாதா உனக்கு? இங்கே தான் இருக்கிறேன்" என்றான்.

"அதெல்லா மிருக்கட்டும். ஒரு விஷயம்" என்றேன்.

"என்ன விஷயம்?" என்றான்.

"ஒன்றுமில்லை. ஒரு அவசரம் அடுத்த மாதம் தந்து விடுகிறேன். ஒரு பத்து ரூபாய் சகாயம் செய்ய முடியுமா? வீட்டில் உடம்பு அசௌகரியமாக இருக்கிறது" என்றேன்.

"அதான் நீ கூட ஒருமாதிரியாக இருக்கிறாயா? உம் அப்புறம்" என்றான்.

"அப்புறம் என்ன,பணம்தான். நாளைய தினம் வீட்டு வாடகை கொடுக்காவிட்டால் மானம்போய் விடும்! என்ன செய்வது? வேலை ஒன்றும் தோதாககிடைக்கவில்லை. நீ இந்த சமயம் கொஞ்சம் ஒத்தாசை செய்தால் சவுகரியமாக இருக்கும்."

“அடாடா இதை நாலுநாளைக்கு முன்னேயே கேட்டிருக்கக் கூடாதோ! உம்! இப்பொழுது தான்என்ன? உனக்கென்ன பத்து ரூபாயா வேண்டும்?”

“ஆமாம். அடுத்த மாசமே கொடுத்து விடுகிறேன். இந்த ஒத்தாசை நீ செய்தால் அதை என்றும் மறக்கவே மாட்டேன்.”

“நன்றாகச் சொன்னாய். நீ யார்? நான் யார்? நான் உனக்கு ஒத்தாசை செய்யக் கடமைப்பட்டவனல்லவா? இந்த ஒத்தாசைகூட செய்யாவிட்டால் பிறகு இவ்வளவு நாள் பழகினதற்கு என்ன அடையாளம்? நீ நாளைக் காலையில் ஒன்பது மணிக்கு, வேண்டாம் எட்டுமணிக்கே வா, தருகிறேன்” என்றான்.

எனக்கிருந்த அவசரத்தில் “எங்கேவர” என்றேன். அவன் விலாசத்தைச் சொன்னான். மறுநாள் காலையில் அவன் வீட்டிற்குச் சென்றேன். என்னை வரவேற்று உபசாரமெல்லாம் செய்தான்.

“ஓஹோ! நேத்து சொன்ன விஷயமா? உன் ஞாபகமே இல்லை. நாளைக்கு வாயேன். கட்டாயம் தரேன்” என்றான். நானும் மறுநாள் சென்றேன்.

நான் அவன் இருக்கும் அறையின் வாசற்படியருகில் சென்றதும் உள்ளே இருவர் பேசுவது காதில் விழுந்தது.

“நேத்திக்கி வந்தாரே அவர் யார்?”

“அவனா! என்னமோ என் கூடப் படிச்சானாம்!”

“சரி. எங்கே வந்தாராம் ஒங்க கூட!”

“எங்கூடவா! அட இழவே, நான் மூந்தா நாள் சென்ட்ரல் ஸ்டேஷன்பக்கம் போனேன். எங்கிருந்தோ ஓடி வந்து நீல கண்டனான்னு நின்றான்.”

“உம்! அப்புறம்?”

“எங்கேயாவது ரூவா கீவா கேட்டு வைக்கப்போரானேன்னு தெரியாதவனைப்போல நடிச்சுப் பார்த்தேன். ஒண்ணும் பலிக்கல்லே. என்னென்னமோ பூர்வோத்தரமெல்லாம் சொல்ல ஆரம்பிச்சுட்டான். சரிதான் நாளைக்கு வாடான்னு தட்டிக் கழித்துக் கொண்டு வந்தேன். அதுவும் நிஜந்தான்னு அவன் நேத்திக்கி வந்தே விட்டான்.”

“அப்புறம்?”

“இன்னிக்கி வரச் சொன்னேன்!”

“இன்னிக்கி வந்தா?”

“வந்தா என்ன? வந்தா” உங்களுக்காகத்தான் ரூபாய்க்குப் போயிருக்கிறார். வந்தால் கொடுத்தனுப்புவதாகச் சொன்னார்’ என்று சொல்லி அனுப்பி விடேன் நீ!”

“இந்தாருங்கோ! உங்க திப்பிசத்துக்கெல்லாம் பதில் சொல்லியனுப்ப என்னாலே முடியாது. ரூபாய் இல்லாட்டா இல்லேன்னு சொல்லிவிட்டுப் போறதானே! என்னத்துக்கு வீணா அவனை அலைக்கழிக்கரேள்?”

“நானா அலைக் கழிச்சேன்? அவன் விட்டால்தானே!”

“ஆமாம். ஆமாம், இந்த பொய் கௌரவத்துக்குச் குறச்சலா?”

அதற்கு மேல் நான் அங்கே நிற்கவில்லை.

எல்லாம் பெரிய இடத்து சிநேகம் இப்படித்தானோ, என்னமோ?

காதல்

உலகம் பூராவும் சுறுசுறுப்பாக வேலை செய்து வரும் வஸ்து காதல். இதை பல ரூபங்களில் நாம் பார்க்க முடிகிறது. கணவன் ஹிருதயத்தோடு ஒன்றுபடும், பிரியமும் காதலும் கொண்ட ஒரு மனைவியின் நடத்தையில் காண்கிறோம்.

மார்புறக் குழந்தையை தழுவிக் கொண்டிருக்கும் ஒரு தாயின் செயல்களில் பார்க்கிறோம். தன் யஜமானனிடம் உண்மையாக நடந்துகொள்ளும் வேலைக்காரனிடம் காண்கிறோம்.

தன் சுகத்தை மறுத்துக் கொள்வது, அலுக்காத உழைப்பு, கஷ்டங்கள், தனிமையில் அவஸ்தை, இந்த மாதிரி எவைகளைத்தான் காதல் பொறுத்துக் கொள்ளத் தயாராக இல்லை?

எவ்வளவு உற்சாகத்தோடு காதல் தன் லக்ஷியத்திற்கு உழைத்துப் பாடுபடுகிறது?

* * *

ஹிருதயத்திலே ஏற்படும் ஒரு உத்வேகம், மாறின உலகத்தின் அழகுக்கும், இனிய கானத்துக்கும், கண்ணும் காதும் செலுத்தும் ஒரு தீக்ஷண்ய புலனறிவு, ஒரு பிரகாச தீபம், — இதைத்தான் காதல் என்கிறார்கள் மனிதர்கள்.

* * *

மொட்டு மலரும் வாலிப நாட்களில்தான் காதலின் உயர்ந்த நிலை, பிரகாசம் இருக்கிறது என்று நினைப்பது தவறு.

அதன் நிர்மலத்தன்மை, இனிமை, புனிதத்துவம், இதெல்லாம் பின் வாழ்க்கையிலே தான் தெளிவு படுகின்றன. ஆக்கிரம், மோக வெறி, இதெல்லாம் அடங்கிப்போய், பழுத்த நாட்களில்! இந்த உலகத்தையும், அதில் இருக்கும் பொருள்களையும், தேவலோகத்திலிருந்து வரும் ஒளியின் முன்வைத்துப் பார்க்கும் சக்தி காலத்தில்!

* * *

எல்லாம் காதலுக்குத் துரோகிகள்! அதை க்ஷணம் தாழ்த்தாமல் காட்டிக்கொடுத்து விடுகின்றன—குரல், மௌனம், கண்கள் எல்லாம்! கண்ணில் தோன்றும்

அந்த வெறியை, அரைகுறையாகக் கண்களை மூடி அடக்கினாலும் கூட, இன்னும் வெடித்துக் கிளம்புகிறது.

* * *

காதல் எப்போதும் குருடு தான். அவளுடைய குறைகள் அவனுக்குத் தெரிவதில்லை. ஆனால் அந்த அத்தனை வசீகரமும் அவன் மனதிலே உறுதியடைந்துபோயிருக்கிறது.

* * *

காதல் நம் கண்களை மூடிவிடுகிறது. உடனே எல்லாம் சரியாகப் போய்விடுகிறது.

* * *

பரிசுத்தமான காதலை, அழகான கிளை, இலை, பழங்களோடு கூடின ஒரு மரத்துக்கு ஒப்பிடலாம். வாழ்க்கையின் காதல் அந்த மரம். இலையோடு கூடின கிளைகள்தான், உண்மை, நல்லது கலந்த அன்பு. இந்த அன்பிலிருந்து விளையும் ஆனந்தம்தான் அந்தப் பழங்கள்.

* * *

மதிப்பு இல்லாத, கீழ்த்தர, கேவலமானதை எல்லாம் காதல் எதிரிடையாக மாற்றி விடும். காதல் கண்ணைக்கொண்டு பார்ப்பதில்லை; மனதைக்கொண்டு பார்க்கிறது. காதல் மனதுக்கு நியாய சக்தி கிடையாது, அதற்கு ருசியும் தெரியாது. அதோடு காது கொடுத்து கேட்காத ஒரு ஆத்திரம் அதற்கு. பறக்கத்தான் தோன்றும், பார்க்கத் தோன்றாது. ஆகையால் தான் காதலைக் குழந்தை என்று சொல்கிறார்கள்.

எப்போதும், கல்யாணம் ஆகிவிட்டால் காதல் முடிந்த மாதிரிதான்!

* * *

ஒன்றை, நீண்ட நாட்கள் காதலிக்க வேண்டுமானால் அதை தர்க்கரீதியாய் பார்த்தால்தான் முடியும். ஆத்திரம், வெறி, அவசரத்தோடு பார்ப்பது கூடாது.

* * *

உண்மையான காதல் வாழ்க்கைப் பாதை கரடு முரடானது தான்.

* * *

காதல் ஒரு ஜ்வாலை! உள்ளத்தில் ஏற்படும் ஒரு உத்வேகம். காதலிப்பவனை காதலுக்கு பாத்திரமானவளை ஒரு க்ஷணத்தில் மாற்றி விடுகிறது. அவனோ, அவளோ காதலிப்பவர்கள், முதன் முதலில் தாங்கள் காதலிக்கும் பொருளை முதலில் தங்களுக்குள்ளேயே முத்திரை வைத்துக் கொள்ளுகிறார்கள். அல்லது கண்ணாடிகளைப் போல் அவர்களின் மனதுகள் தங்கள் காதற் பொருளின் உருவமாக அதில்பிரதிபலிக்கின்றன.

அன்புகள் ஒன்றுபடுவது தான் காதல். இரண்டு உயிர்களின் ஆத்மார்த்திகச் சேர்க்கை தான் காதல்.

* * *

உதாசீனத்துக்கு மேல் உதாசீனமாக வந்து விழுந்தாலும் சரி; அவமரியாதைக்கு மேல் அவமரியாதையாகக் கிடைத்தாலும் சரி; தளராமல் வலு ஏற்படும் காதல் துணிகரமானதும், தெய்வீகமானதும் ஆகிவிடுகிறது.

உவர் மண்ணிலே விளையும் புஷ்பமல்ல காதல்! கால ஓட்டத்தில் துளிர் விடுகிறது. சூரியனுக்காக அது காத்திருக்க வேண்டும். மழைக்கும் தான். அங்கம் அங்கமாக முதிர வேண்டும்—தன் காலப் போக்கில் ஏற்பட வேண்டும். தண்டு விட, இலை விட, மொட்டு விட, வீசி ஆடவும், அதற்கு வளப்பமான பூமி உண்டு; சீக்கிரமாக வளரக்கூடிய விதையும் காதலுக்கு உண்டு.

நீ அதை தேடிப் பார்க்கிறுய். ஆனுல் பார்க்க முடியவில்லை. அது மட்டுமா! நீ விதையைத் தேடிக் கொண்டிருக்கும் போதே அந்த விலை மதிப்பற்ற புஷ்பமே மலர்ந்து விடுகிறது.

* * *

நம்பிக்கையிலேயே காதல் ஜீவித்திருப்பது என்ருல், அந்த நம்பிக்கையோடேயே காதலும் சாகிறது. கரி இல்லாமல் அணையும் நெருப்பைப் போன்றது அது.

* * *

பட்டு வலை வீசி என்னைப் பிடித்துவிட்டான் அவன்! அது மட்டுமா? தங்கக் கூண்டிலே என்னை அடைத்து விட்டான்! இதுதான் காதல்.

* * *

மறைந்துபோன நிலவு திரும்பி வருகிறது. வசந்த காலமும் திரும்பி வருகிறது. பறவைகள் கூட! மரங்கள் கூட, புதுத்துளிர் விடுகின்றன. ஆனுல் காதல் ஒரு தரம் நம்மை விட்டுப் போய் விட்டால் திரும்ப வருகிறதே இல்லை. மிஞ்சினது துக்கம்தான்.

கண்ணீரிலே ஸ்நானம் செய்து விட்டபோதுதான் காதல் ரொம்ப அழகாக இருப்பதாகத் தோன்றுகிறது.

* * *

நமது இன்பத்தின் உச்ச நிலை பரஸ்பரக் காதல்தான்!

* * *

ஒரு கண்ணில் குறை இருக்கும் நண்பனின் படத்தை,சித்திரமெழுதும் சித்திரக்காரன், அவனுடைய முகத்தின் மறு பக்கத்தைத்தான் தீட்டுவான், குறை தெரியாதிருக்கும் பொருட்டு. அதேமாதிரித்தான் காதலும். குற்றம் உள்ளதை விட்டுவிட்டு குணத்தையே பெரிது படுத்திக் காட்டும்.

* * *

சோம்பேறிகளின் தொழில் தான் காதல். ஒரு யுத்த வீரனை அவன் வழியிலிருந்து பிறழச் செய்வது காதல்.

* * *

காதல்,வாழ்க்கையின் லக்ஷியம். ஆனுல் அது முடிவற்றது. உற்சாகம், மகிழ்ச்சி, சன்மானம் எல்லாம் அது தருகிறது. வாழ்க்கையின் பொக்கிஷம் காதல். எப்போதும் செலவழிந்துகொண்டே இருக்கிறது. ஆனுல் ஆகிப் போய்விடுகிறதில்லை. கொடுக்க கொடுக்க வளர்கிறது.

காதல், வாழ்க்கையின் வெகுமதி. அது கிடைத்து விட்டவுடனே கவலை மனதை விட்டு ஓடிப்போய் விடுகிறது.

———

அரளிப் பெண்

"ரஞ்சனன்"

1

தாமரை, மல்லிகை எல்லாவற்றையும் விற்றுக் கொண்டு பல பெண்கள் வீதி வழியே போய் விட்டார்கள். கடைசியில்தான் அரளிப்பூவை விற்றுக்கொண்டு அப் பெண் அந்தத் தெரு வழியாக வந்தாள். 'அரளிப் பூ வாங்கலியோ' என்ற அவளது குரல் வீணையைப் பரிகாசம் செய்தது. அந்தத் தெருவிலுள்ள வீணைகள் வெட்கி வெறும் மரக் கட்டைகளாய்க் கிடந்தன.

அந்த சமயத்தில் பிரேம்முகர்ஜி தனது இருதயத்திலுள்ள ஜீவ வேகத்தினின்றும் பொங்கி வழியும் கலையில் ஐக்கியமாகி அதிலேயே லயித்துப்போயிருந்தார். சந்தோஷத்தினால் அவருடைய மனம் கோதுமைப் பூரியையும் விட அதிகமாகப் பூரித்துப்போயிருந்தது. எதிரில் உள்ள மசிக் கூட்டில் ஒருதரம் புருசை எடுத்துத் துவைத்து எதிரேயுள்ள படத்தில் ஒரு கோடு இழுத்தார். உடனே 'ஹா!' என்று கூவினர்.

ஏனெனில், அவருக்கு எதிர்ப் பக்கத்தில் கொஞ்சம் தள்ளி வைக்கப்பட்டிருந்த வீணை அந்த சமயத்தில் தலை குனிந்து கொண்டு, நிமிர்ந்து பார்க்கவே மாட்டேனென்று சொல்லி விட்டது அவர் சித்திரக் கலையில் ஈடுபட்டு இருக்காதபோது கொஞ்சம் வீணையும் வாசிப்பார். அவர் ஒரு அபூர்வ கலைஞன்! கலை என்றால் அவர் உயிரையும் விட்டு விடுவார்.

மறுபடியும் 'அரளிப் பூ வாங்கலியா — அரளிப்பூ' என்ற சத்தம்! உடனே அந்தச் சைத்ரீகர் எழுந்திருந்து 'திடுதிடு'. வென்று ஓடி தெருவிற்கு வந்து அந்தப் பெண்ணைப் பார்த்தார்.

'ஹா! நீயா இப்படித் தரையில் நடந்து கொண்டு அரளிப் பூ விற்பது! ஏ, மகா லட்சுமியின் அம்சமே, இந்த மாதிரியான சௌந்தர்யத்தை என் கலைக்குக் கொடுத்துக் கடாட்சிக்கும் பாக்கியம் நான் பெற்றிலனே?' என்று கதறினர்.

நான் போகும்போது அவர்கள் இருவரும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

'இல்லை. முடியாது, நான் வர மாட்டேன். ஐயோ என் அரளிப் பூ எல்லாம் கொட்டிப் போச்சே!' என்று கூவிக்கொண்டிருந்தாள் அந்தப் பெண். பல கிளிப் பிள்ளைகள் அவளைச் சுற்றி நின்று கொண்டு, 'ஐயோ! என் அரளிப் பூ எல்லாம் கொட்டிப் போச்சே!'

என்று அவள் பேசுவதைக் கற்றுக்கொண்டிருந்தன.

அதை நான் பார்த்தேன். எனக்கு உணர்ச்சிகள் தொண்டையில் அடைத்துக் கொண்டன வாதலால் பேச முடியவில்லை. ஆனால் கண்களின் வழியாக மாத்திரம், ரோட்டுப் புழுதியில் நின்று கொண்டிருந்ததால், ஜலம் வந்து கொண்டிருந்தது. பிரேம் முகர்ஜி என் உயிர் நண்பர்.

'ஏ பெண்ணே! நீ கொஞ்சம் பெரிய மனது பண்ணி அங்கே வரக்கூடாதா?' என்றேன், மனம் உருகி.

அந்தப் பெண் முடியாது என்று மறுத்து விட்டாள்.

அது மாத்திர மில்லை — கடைசியில்...

ஆ! அந்த இடத்தை விட்டுப் போய் விட்டாள்.

2

பிரேம் முகர்ஜி படம் போடுவது எனக்கு ஆச்சரியமில்லை. ஆனால் அன்று கண்ட பெண்ணைப் போலவே அவர் எழுதிக் கொண்டிருந்ததைக் கண்ட உடனே தான் எனக்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. 'ஈச்வரா! பைத்தியம் பிடிக்காமல் இவர் இருக்க வேண்டுமே!' என்று பிரார்த்தனை செய்து கொண்டேன். நான் வந்த சப்தம் கேட்டதே என் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

எங்கள் இருவர்கள் கண்களும் சந்தித்தனவே ஒழிய நாங்கள் பேசவில்லை. கடைசியில் அவரே தான் மௌனத்தைக் கலைத்தார்.

'நண்பா அந்தப் பெண்ணின் பெயரை எப்படியாவது தெரிந்து கொண்டு வந்துவிட மாட்டாயா? இதையும் முடித்து, அவள் பெயரையும் அதன் அடியில் எழுதி விட்டு, உடனே இறந்து போய் விட வேண்டும். இதுதான் என்னுடைய கடைசி ஆசை!' என்று சொல்லிக் கொண்டே வருகையில் அவருடைய குரல் உடைந்து விட்டது.

நானே இதற்கு முயற்சி செய்து பார்த்துவிட்டேன். என் நண்பர் சொல்லுவதற்கு முன்னாலேயே இதை, அவர் என்னிடம் கேட்பார் என்று எனக்குத் தெரியாதா? ஆகையால் அவர் கேட்ட உடனே நான் சொன்னேன்; 'ஐயோ! அதுதானே என்னால் முடியவில்லை. நான் என்ன செய்வேன்? நான் எவ்வளவோ கேட்டுப் பார்த்தும், அவள் அதைச் சொல்ல மாட்டேன் என்கிறாளே!'

என் மனத்திலும் வருத்தம் சொல்ல முடியாது. இதற்கு என்ன செய்யலாம் என்று

யோசித்துக் கொண்டிருக்கும் போது, அவர் சோகம் நிறைந்த குரலில், "அதுகூட அகப்படா விட்டால் கடைசியில் 'அரளிப் பெண்' என்று போட்டு விடுகி றேன்" என்றார். சட்டென்று எனக்கு ஒரு யுக்தி தோன்றியது.

'ஒரு யோசனை!' என்றேன்.

அவர் ஆவலுடன் 'என்ன?' என்றார்.

அவருடைய காதருகில் போய் 'எப்படியாவது நான் தெரிந்து கொண்டு வந்து விடுகிறேன். ஒரு சூழ்ச்சி செய்து...நான்... நீங்கள் பாருங்கள்...' என்று சந்தோஷத்தால் உளறிக் கொட்டி னேன். உடனே அவர் முகம் மேகங்களால் மூடப்பட்ட சந் திரனைப்போல் களங்க மடைந் தது.

'நண்பா நாம் செய்வது தபசு. தர்ம வழியில் அஹிம் ஸையை உபயோகித்து நீ அதைக் கொண்டு வர முடியுமானல், அப் படிச் செய். இல்லாவிட்டால் வேண்டாம்' என்றார்.

நான் 'சூழ்ச்சி' என்று சொன் னதை அவர் தப்பர்த்தம் செய்து கொண்டு விட்டாரே என்ற மகத் தான துக்கம் மேலிட அநேகமாக சுயப்ரக்ஞையை இழந்து வீடு வந்து சேர்ந்தேன்.

3

'என்னத்துக்கு?' என்று எரிந்து விழுந்தாள் என் மனைவி.

'என் நண்பர் கேட்டார். ஆகை யால் நீ எப்பாடு பட்டாயினும் அவள் பெயரைத் தெரிந்து கொண்டு விடவேண்டும்' என்று சொன்னேன். அவளும் என் மீதுள்ள சந்தேகத்தைத் தீர்த் துக்கொண்டு, 'சரி' என்று ஒப்புக் கொண்டாள். எனவே, நாங்கள் இருவரும் எப்போது சாயங்காலம் ஆகும் என்று காத்துக்கொண் டிருந்தோம்.

மாலை சூரியனின் கிரணங்கள் சுற்றி யிருந்த வீடுகளின் மேல் விழுந்து அந்த ஓட்டு வில்லைகளை எல்லாம் தங்கமாக்கியது. அதைப் பார்த்த மனைவி ஒன்றிரண்டு ஓடு களை எடுத்துக்கொண்டு வந்து, அப்புறமாவது விற்கலாம் என்று ஒளித்து வைத்தாள்.

திடீரென்று ஒரு குயில் கூவிற்று. 'இங்கே மரம், மட்டை ஒன்றுமே இல்லாதபோது எதுடா குயில்?' என்ற சந்தேகம் வரவே எழுந்துபோய் வெளியில் பார்த்தேன். ஆஹா! அது குயில் இல்லை. அரளிப் பெண் ணின் குரல்! அப்படியே மயங்கிப் போய்விட்டேன்!

'ஏ அரளிப்பூ! இப்படிக் கொண்டா'—என்று என் மனைவி அவளைக் கூப்பிட்ட சத்தத்தில் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு உள்ளே மறைந்து கொண்டேன். என்னைப் பார்த்துவிட்டால், பிறகு அவள் தன்னுடைய பெய ரைச் சொல்ல மாட்டாளோ என்ற பயம் எனக்கு. என் மனைவி அவளிடம் பேச்சுக் கொடுத்து 'பூ ஆழாக்கு என்ன விலை?' என்று கேட்டாள்.

'ஆழாக்கிலே அளந்து குடுக் கிறதில்லேம்மா, இந்தப் பூவை கோத்துக் கொத்தா அள்ளி வச் சுத்தான் குடுப்போம்' என்றாள் அந்தப் பெண்.

'எங்கே காலணுவுக்கு எடுத்து வை' என்றாள் அவள்.

அரளிப் பெண் கைகளினால் ஒரு தரம் எடுத்து வைத்து, 'உம்,' என்றாள்.

'அட, என்ன இது? இது தானு காலணுவுக்கு?' என்று சண்டை போட்டாள் என் மனைவி. சண்டையின் சுவாரஸ்யத்தில் முக்கிய காரியத்தை மறந்துவிடப் போகிறாளே என்று எனக்குக் கவலை!

பூவை வாங்கிக்கொண்டு அவளை, 'ஒரு ரூபாய்க்குச் சில்லறை இருக்கா?' என்று என் மனைவி கேட்டாள்.

அவள் 'இல்லையே, அம்மா!' என்று பதில் சொல்லியதும் வேலைக்காரனிடம் ஒரு ரூபாயைக் கொடுத்து சில்லறை மாற்றிக் கொண்டு வரச்சொல்லி அனுப்பினாள்.

திடீரென்று "உன் பேரென்ன?" என்றாள். அந்த நிமிஷத்திற்குள் என் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது.

'எம்மா! எம்பேரு மாதவி!' என்றாள். இவ்வளவு சுலபமாகவே அவள் பதில் சொல்லியதில் எனக்கு உண்டான சந்தோஷம் இவ்வளவவ்வளவல்ல!

நான் ஒளிந்து கொண்டிருந்த இடத்திலே இருந்து வெளியில் வந்தேன். ஆனால்.........நான் நினைத்தபடி அவள் பயந்து ஓடவில்லை. அது மாத்திரமா? என்னை ஒரு தரம் பார்த்துச் சிரித்தாள். எனக்கு வெகு கோபம் வந்து விட்டது.

"இங்கே இவ்வளவு நாழி உட்கார்ந்து கொண்டு வம்படித்துக் கொண்டு இருக்கிறாய். அன்றைக்கு என் சிநேகிதர் 'கொஞ்ச நேரம் வந்து விட்டுப்போ. உன்னைப் பார்த்து ஒரு படம் எழுதனும்' என்றால் 'முடியாது' என்று சொல்லி விட்டுப் போய் விட்டாயே!" என்றேன்.

அவள் திடுக்கிட்டுப் போனாள். 'அவர் சொன்னது ஒண்ணுமே எனக்குப் புரியவில்லை. என் கிட்ட பூதான் விலைக்குக் கேட்கிறாக்கும் என்று நினைத்துக் கொண்டு நான் 'தர முடியாது'ன்னு சொன்னேன்! சாமி கோவிலுக்குக் கொண்டு போக வேண்டிய பூ அவ்வளவும் கீழே கொட்டிப் போச்சு!' என்றாள்.

மறுநாள் நான் அவர் வீட்டுக்கு போன போது ஸ்ரீ முகர்ஜி படமெழுதிக் கொண்டிருந்தார். என் னுடன் மாதவியும் வந்தாள்; பின்னால் தங்கி விட்டு மெள்ள வந்தாள். அவள் வருவதை அவர் பார்க்கவில்லை.

'என்ன, அவளுடைய பெயரைத் தெரிந்து கொள்ள முடிந்ததா?' என்றார் அவர் ஏங்கிப் போன குழந்தையைப் போல?

'பெயர் மாத்திரமில்லை, பேர் வழியையும் கொண்டுவந்து விட்டேன்' என்று அரளிப் பெண்ணைக் காட்டினேன்.

அவர் திரும்பி அவளைப் பார்த்தார். உடனே சந்தோஷம் தாங்காமல் பிராணனை விட்டுவிட்டார்.

அவர் இறந்ததைக் கண்ட அரளிப் பெண் துயரம் தாங்க முடியாமல் அவர் மேல் விழுந்தாள். உடனே இறந்து விட்டாள். நானும் அவர்கள் மேல் விழுந்து இறந்து விட்டேன்.

ஆலயப்பிரவேச உரிமை

(புரோபசர். அ. முத்தையா, எம். ஏ., பச்சையப்பன் கல்லூரி)

நமது தென்னாட்டில் உள்ள ஆலயங்கள் இருவகைப்படும். பெரும்பாலானவை அரசர்களால் கட்டப்பட்டவை; பொதுவானவை. சில, தனிப்பட்டவர்களின் சொந்தக் கோயில்கள்! இவை மிகச் சிலவேயாகும். இந்த தனிப்பட்டவருடைய சொந்தக் கோயில்களுங்கூட, அநேக மக்கள் அங்கே வழிபாடாற்றுவதாலும், பலர் பல சொத்துக்களைக் கொடுத்தலாலும், பொதுக் கோயில்களின் தன்மையைப் பெற்று நிற்கின்றன.

[புதுமைக் கருத்துகளைக்கொண்ட புஸ்தகங்களை திராவிட மொழிகளில் எழுதுவதற்காக, சென்னை சர்வகலா சாலையால் கொடுக்கப்படும் வெகுமதி, இந்த வருஷம் (1939), பச்சையப்பன் கல்லூரிஉதவிப் பொருளாதார ஆசிரியர் ஸ்ரீ முத்தையா எம். ஏ. அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பரிசுபெற்ற புஸ்தகத்தின் பெயர் "கூட்டுறவு".—ஆசிரியர்]

இக் கோயில்கள் சைவ வைஷ்ணவக் கோயில்களே. வேறு சில தேவதைகளின் கோயில்களும் பல ஆங்காங்கே இருக்கின்றன. இக் கோயில்களில் அந்நிய மதத்தினர் உள்ளே செல்ல அநுமதிக்கப்படுவதில்லை. ஹிந்துக்கள் தான் உள்ளே செல்லலாம்.

அந்த ஹிந்துக்களிலும் ஜாதி ஹிந்துக்கள் தான் உள்ளே நுழையலாம் என்ற ஒரு கட்டுப்பாடு எப்போதோ ஏற்பட்டு விட்டது. ஜாதி ஹிந்துக்களில் கூட சில வகுப்பினர் உள்ளே செல்லலாகாதென்ற தடையும் உண்டாயிற்று. உள்ளே செல்லும் ஏனையோரில் கூட, ஒவ்வொரு ஜாதியினர் ஒவ்வோரளவு தூரம்தான் உள்ளே செல்லலாமென்ற ஒரு வரையறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வைஷ்ணவ ஆழ்வார்களும், சைவ நாயன்மார்களும் பல வகைச் ஜாதிகளையும் சேர்ந்தவர்கள். கடவுளறிவு பெற்றவர்களிடையே ஜாதி வேற்றுமை இருந்ததாகவும் தெரியவில்லை. லௌகீக வாழ்க்கையினர்தான் ஜாதி வேற்றுமையைப் பாராட்டுவாராயினர். கடவுளைச் சார்ந்தார், எல்லோரையும் சமமாகவே எண்ணுவாராயினர்.

இறைவன் தாளை யடைவதற்கு கடவுள் வணக்கம் அவசியமென ஹிந்து சமயங்கள் கூறுகின்றன. மிகச் சிறந்த ஞான நிலையை அடைந்தவர்களுக்கு, அநுபூதிமான்களுக்கு, விக்கிரகம் அவசியமில்லை. ஆனால் ஞான மார்க்கத்தின் தொடக்கத்திலேயே இருப்பவர்கட்குத்தான் உருவ வழிபாடு அத்தியாவசியமாகும். அவ்வுருவ வழிபாட்டைப் பலருக்கும் பயன்படும்படி நடத்துமிடமே தேவாலயங்களாகும்.

எனவே குறைந்த அறிவுடையோருக்கே, கோயில் வணக்கம் முக்கியமானது. அக் குறைந்த சமய அறிவு பெற்றத் தாழ்ந்த வகுப்பினருக்குப் பயன்படாத முறையில் கோயில்களை வைத்திருப்பது நியாயமாகுமா? கல்வி கேள்வியிற் சிறந்த உயர் குடியினர் மாத்திரம் கடவுளைக் கோயிலில் வழிபடுவோமெனக் கூறுதல் சரியா? ஞான சூன்யர் அல்லவா கோயில்களுக்குப் போதல் அவசியம்?

"தாழ்ந்த ஜாதியினர் ஒழுக்க ஹீனர்கள்; அதனால் அவர்கள் உள்ளே செல்லுதல் கூடாது" என்று சிலர் கூறுகிறார்கள். அது சரியா? பெரும்பாலும் உலகிலே உயிர் ஜாதியினர்களிற் பலர்தான் மிகுந்த மோசமான நடையினர்களாக இருக்கின்றனர். பணமும் பவிஷும் குறைவாக இருக்கிற இடங்களிலேதான் கடவுள் தன்மை அதிகமாக இருக்கிறது. நல்லொழுக்க முடையோர்தான் செல்லலாமெனில், இப்போது உட்செல்லுபவர்களிற் பலர், வெளியே நின்றுவிட வேண்டியதுதான். மேலும் சிலரை ஒதுக்கியே வைத்திருந்தால் அவர்கள் எப்படி பல விஷயங்களையும் கற்று அதற்குத் தக நடக்கக் கூடும்?

உலகிலே கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், ஜைனம் முதல பல மதங்கள் இருக்கின்றன. அந்த அந்த மதத்தைச் சேர்ந்தவர்கள், அந்த அந்த மதக்கோயில்களில் எங்கே வேண்டுமானாலும் செல்லலாமே? அப்படியிருக்க, ஹிந்து மதத்தைச் சேர்ந்த சிலரை ஹிந்துக் கோயில்களில் செல்லவொட்டாது தடுப்பது என்ன அடாத செய்கை? ஒரு ஆசாமி ஹிந்துவாக இருக்கிறவரையில் ஹிந்துக் கோயிலில் இடம்பெற அவனுக்கு உரிமை உண்டே! அதை ஏன் எவரும் தடுக்க வேண்டும்?

ஆலயப்பிரவேச உரிமையை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று மத உரிமை; மற்றொன்று மனித உரிமை அல்லது சிவில் உரிமை. ஒரு மனிதன் ஒரு மதத்தைச் சேர்ந்தவனானல், அவனுக்கு அம்மதத்தினருக்குள்ள சகல உரிமையும் இருத்தல் வேண்டும். அம் மதப்பொதுநிலையங்களில் அவனுக்குச் சம உரிமை வழங்கப்படல்

வேண்டும். அப்படி இல்லாமல் ஏதானும் ஒரு உரிமை தடுக்கப்படுமானால், வழங்கப்படாதிருந்தால், அந்த உரிமையை அவன் பெறுவதற்கான எல்லா முறைகளையும் கையாள வேண்டும்.

இக சாதனத்துக்கான அரசியல் உரிமைக்காக எவ்வளவோ தியாகம் செய்கிறோமே! எவ்வளவோ போராடுகிறோமே! அப்படி இருக்கையில் உயிருக்கு உறுதி பயப்பதற்கான உரிமையைப் பெறாமல் ஒரு சாரார் ஏன் இருத்தல் வேண்டும்? மத உரிமையைப் பெறுதற்காக, நியாயமான தமது உரிமைகளைப் பிறர் பறிக்காதிருப்பதற்காக, உரிமையை இழந்தோர் உழைத்தல் அவசியமன்றோ?

மனிதனை மனிதனாக எண்ண வேண்டுமென்பதே ஜனநாயகத் துவத்தின் அடிப்படைக் கொள்கை. ஒரு சமூகத்தில் உள்ள ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் பல சமுதாய உரிமைகளும், மத உரிமைகளும் உண்டு. சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒவ்வொருவருக்கும் சம உரிமை இருத்தல் வேண்டும். அரசியலிலும் சரி: சமூகத்திலும் சரி: மதத்திலும் சரி. அனைவரும் ஒன்றென எண்ணப்படல் வேண்டும். அது மனிதனின் அடிப்படையான உரிமை.

ஒரு மதத்தைச் சேர்ந்தவனுக்கு, அம்மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் இருத்தல் வேண்டும். இல்லையேல், அவைகளைப் பெறப் பாடுபட வேண்டும். ஹிந்து ஒருவனுக்குக் கோயில் செல்வதில் நம்பிக்கை இல்லாதிருக்கலாம். ஆனல் அவனுக்கு, அவன் ஹிந்துவாக இருக்கிறவரையில், ஹிந்து ஆலயத்தில் இடம் பெறும் உரிமை உண்டு. அவ்வுரிமை கிடையாதெனக் கூறுபவர்களைத் தண்டிக்கச் சட்டம் ஏற்படுத்தப்படல்வேண்டும். பொது ஸ்தாபனங்களில் எல்லோருக்கும் சம உரிமை உண்டு. மதம் பற்றிய பொதுஸ்தாபனங்களாகிய கோயில்களில், அந்த மதத்தைச் சேர்ந்த அனைவருக்கும் சம உரிமை உண்டு. அதை அம் மதத்தினர் அனைவரும் பெறுதல் வேண்டும்.

நாம் சிலகாலம் சில உரிமைகளை இழந்திருந்தால், அவைகளைப் பெற முயலுதல் வேண்டுமல்லவா? அவ்வாறே அரசியல் உரிமைகளுக்காகப் போராடவில்லையா? தனிப்பட்டவர்களின் சொத்தான கோயில்களில் பல, பொதுக் கோயில்களாக ஆகிவிட்டவை. அங்கெல்லாம் ஹிந்துக்கள் அனைவரும் சமஉரிமை பெறும்படி உழைப்பது மிக அவசியம்.

ஆலயப் பிரவேசத்தை மத உரிமை எனக் கொண்டு, மத ஆவேசங் காரணமாக அவ்வுரிமையைப் பெற விரும்புபவர் அதற்கானவைகளைச் செய்யலாம். ஆலயப் பிரவேசம் ஒவ்வொரு ஹிந்துவின் அடிப்படையான மனித உரிமை எனக் கொண்டு, அந்த சமூக உரிமையைப் பெற மிகவும் பாடுபடுதல் அவசியம்.

" உரிமையற்றோர் உலகம் இழந்தோர்."

நரி காண் காதை

ரா. ஆறுமுகம்

மாதவியிடம் தன் பொருளையெல்லாம் இழந்த பிறகு, அவளால் அவமதிக்கப்பட்ட கோவலன் கண்ணகியிடம் விஷயத்தைக் கூறுகிறான். கண்ணகி தன் கணவனின் மனச் சஞ்சலத்தை நீக்க எண்ணி தன்னிடம் மிஞ்சியிருக்கும் கால் சிலம்பை அவனுக்கு ஞாபகப்படுத்துகிறாள். அதுகேட்ட கோவலன் சந்தோஷமடைந்து தான் முன்னொரு சமயம் வியாபாரத்தின் பொருட்டு செல்லுங் காலை அதை வாங்கிய இடமாகிய மதுரையம்பதியிலேயே கொண்டுபோய் விற்றால்தான் விலையாகுமெனக் கூறி அவளையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு காவிரிப்பூம் பட்டினத்தை விட்டு நடுநிசியில் புறப்பட்டு விடுகிறான்.

நகரத்தின் எல்லையைத் தாண்டிய இருவரும் திருமால் கோவிலுக்குள் நுழைந்து வலம் வந்து, திருமாலைப் பணிந்து, சிலாவட்டத்தைக் கடந்து காவிரியின் வடகரையோரமாகவே சென்று கொண்டிருக்கையில் பொழுதும் புலர்ந்து விடுகிறது. செல்வக் குடும்பத்தில் பிறந்து செல்வத்திலேயே முழுகி, அடைதற்கரிய சுகபோகங்களையெல்லாம் அநுபவித்து, நடப்பதென்பது இன்னதென்றே யறியாத அவர்கள் இப்போது பாதி ஜாமம் நடந்த களைப்பால் ஆற்றின் கரையில் ஓய்ந்தமர்கிறார்கள். அப்பக்கம் கழனிகளுக்குச் செல்லும் குடியானவர்களைக் கண்டு 'இன்னும் மதுரை எத்தனை தூரமிருக்கிற'தென வினவுகிறார்கள். அவர்கள் 'மதுரை முப்பது காத வழி' யென்று பகர்ந்து செல்கின்றனர்.

அதன் பின் மேலும் வெகுதூரம் நடந்து ஜைன மதத்தினராகிய கவுந்தியடிகள் என்னும் மகாதவத்தினியின் ஆசிரமமிருக்கக் கண்டு அவளை வணங்கி நிற்கின்றனர். அவள் இவர்களிருவரையும் பார்த்துத் திடுக்கிட்டு, "இக்கானக மார்க்கமாக எங்கு செல்லத் துணிந்து புறப்பட்டீர்கள்?" என்று கேட்க, "மதுரையை யடைந்து பொருள் தேடச் செல்லுகிறோம்" எனக் கூறுகின்றனர்.

கவுந்தியடிகள் மதுரைக்குச் செல்லும் வழியிலுள்ள கஷ்டங்களையெல்லாம் எடுத்து விளக்கி, "சரி, உங்கள் விதிப் பயனை அநுபவித்தே யாக வேண்டும். மதுரையிலுள்ள பெரியோர்கள்பால் அறநூற்கேள்விகளைக் கேட்டற்கு வெகு நாட்களாக நான் ஆவல் கொண்டுள்ளேனாதலின் உங்களோடு நானும் வருகிறேன். நமக்குத் தெய்வம்தான் வழித்துணை" என்று அவர்களுக்கு ஆறுதல் கூற, மூவரும் புறப்பட்டுச் செல்கின்றனர்.

வழியில் சில சாரணர்களைச் சந்தித்து நல்லுபதேசங்களைக் கேட்டு, பின்னர் காவிரியைக் கடந்து ஒரு பொழிலில் தங்கியிருக்கும்போது கண்ணகியையும் கோவலனையும் அவமதித்துப் பேசிய ஒரு பரத்தையை

யும் தூர்த்தனையும் கவுந்தியடிகள் நரியாகச் சபித்து விடுகிறாள். கோவலன் அவர்களுக்காகப் பரிந்து கேட்டுக் கொண்டதன் பலனாக அச்சாபம் ஒரு வருடத்தில் விமோசனமாகும்படி பிரதி சாபம் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். அதன் பிறகு கோழி என்னும் நகரினைக் கடந்து, மாங்காட்டிலிருந்து மதுரையைக் கண்டு களித்துத் திரும்பிக் கொண்டிருந்த ஒரு முதிய அந்தணரை வழியில் சந்தித்து, அவரை ‘மதுரைக்கு எவ்வழியாகச் செல்வது’ எனக் கேட்டார்கள். அம் முதியவர் பகர்ந்த பதிலை இளங்கோவடிகள் தன் சிலப்பதிகாரத்து ‘காடுகாண் காதை’யில்,

“அறையும் பொறையு மாரிடை
[மயக்கமு
நிறைநீர் வேலியு முறை படக்
[கிடந்த விந்
நெடும் பேரத்த நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்
[டகம் புக்காற்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோ
[னேந்திய
வரை வாய்ச் சூலத் தருநெறி
[கவர்க்கும்”

என்று எழுதி வைத்திருக்கிறார்.

இளங்கோ வர்ணித்துள்ள கொடும்பை, நெடுங்குளம் என்னும் இரு கிராமங்களையும் பார்க்கும் பாக்கியம் எனக்கு ஒருநாள் வாய்த்தது. எங்கள் வீட்டுக்கு வழக்கமாய் வருடக் கணக்கில் வந்து போய்க் கொண்டிருந்த வண்ணான் எக் காரணத்தாலோ ‘வெள்ளை’யைக் கொண்டு வந்து கொடுக்காமல் ஒரு திங்களாக தன் கிராமமாகிய கொடும்பையில் தங்கிவிட்டான். அவனைத் தேடிப் பிடித்துக்கொண்டு வரும்படி எனக்கு என் தந்தையின் கட்டளை பிறந்தது தான் தாமதம். வெகுநாட்களாகவே கோவலனும் கண்ணகியும் நடந்து சென்ற அக்கிரமத்தைப் பார்க்க வேண்டுமென்றும், இளங்கோவடிகள் வர்ணித்திருப்பது உண்மைதானா என்றும் அறிய ஆவல் கொண்டிருந்த நான் உடனே சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

மதுரையிலிருந்து வடக்கே திண்டுக்கல்லை நோக்கி சுமார் 15 மைல்கள் சென்றதும், ராஜபாட்டையினின்றும் ஒரு சிறு வழி பிரிந்து காட்டு மார்க்கமாகச் செல்லுகிறது. இவ்வழி 5 மைல்கள் சென்றதும் புல் பூண்டற்ற பரந்த கட்டாந்தரைப் பிரதேசம் தென்படுகிறது. ஆங்காங்கே ஓரிரண்டு கருவேல மரங்கள் கன்னங்கரேலென கைகளைப் பரப்பிக் கொண்டு பைசாசங்களைப்போல் நிற்கின்றன. கண்ணுக் கெட்டிய தூரம் வரை வெரிச்சென்று கடல் போல் பரந்து கிடந்த அந்தக் காட்டைக் கடந்து சென்று கொண்டிருக்கும் போது, பகல் 11மணி தானிருக்கும். சூரியன் தன் கிரணங்களின் முழுபலத்தையும் அங்கு செலுத்தி ஆட்சி புரிந்தான்.

வற்றி, வரண்டு கிடந்த அப்பாறை போன்ற நிலத்திலிருந்து கிளம்பிய ஆவியாலும், தலைக்குமேல் தகிக்கும் கதிரவனின் கொடுமையாலும் களைப்படைந்த நான் சைக்கிளை வழியிலேயே நிறுத்திவிட்டு ஒரு கருவேல மரத்து நிழலில் போய் நின்று சுற்றிலும் பார்த்தேன். கண் வீச்சுக்கு எட்டியவரை ஒரு மனிதனோ, மிருகமோ, பக்ஷியோ, ஒன்றும் தென்படவில்லை. அப்போதுதான் என் தனிமையை உணர்ந்தேன். பட்டப் பகல்தான்; என் சட்டைப் பையிலும் சில அணாக்கள் தானிருந்தன. வேறு பொருள் எதுமில்லை, திருடனைப் பற்றிப் பயப்பட.

என்னையு மறியாமல் மனதில் ஏதோ பயம் உதித்தது. ‘இன்னும் மதுரை எவ்வளவு தூரமிருக்கிறது?’ என்று கோவலன் வழிப்போக்கர்களைக் கேட்டது போல நானும் ‘கொடும்பை எத்தனை மைல்க

விருக்கிறது?' என்று கேட்டறியக் கூட ஒரு மனிதன் அப்பக்கம் வர வில்லை. வந்த வழியே திரும்பிவிட லாமா என்று கூட யோசித்தேன் பயத்தினால். ஆனால் வீட்டில் போய் என்ன சொல்வது? பயத்தினால் திரும்பி வந்துவிட்டேன் என்றால் சகோதரர்கள் கேலி செய்யமாட்டார் களா? இந்த எண்ணம் எழுந்ததும் பயம் மாறியது.

மரத்து நிழலைவிட்டு அகல நினைத் துக் கொண்டிருக்கும்போது பின் னால் யாரோ வரும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். என் காலடி யில் ஒரு நாய் வந்து நின்றது. கூர்ந்து கவனித்ததில் அது நாய் அல்ல, நரி என்று தெரிந்தது. அவ் வளவுதான். ஒரே ஓட்டமாய் சைக் கிள் இருந்த இடத்திற்கு ஓடினேன். நரியும் பின் தொடர்ந்தது. சடா ரென சைக்கிள் 'பம்பை' எடுத்து ஓங்கி அதட்டினேன்.

அது சற்று பின்தாங்கி நாக்கைத் தொங்கவிட்டு மேல் மூச்சு வாங்க என் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தது. என்னைச் சுற்றி வல மாகவும், இடமாகவும் வந்தது. ஆனால் மேல் விழுந்து கடிக்கவில்லை. அதற்கு என்னைக் கடிக்க வேண்டுமென்ற எண்ணமில்லை யென்பதை அதன் முகம் காட்டி யது. எனக்கும் பயம் நீங்கி சற்றுத் தைரியம் மீண்டது. பசியின் கொடு மையாலோ, அன்றி தாகத்தைத் தணிப்பதற்காகவோ அது கஷ்டப் படுவதாக யூகித்தேன். ஆனால் என் னிடம் ஒன்றுமில்லையே அதற்குக் கொடுக்க!

நானும் அதன்மேல் இரக்கங் கொண்டு சற்று நேரம் பார்த்துக் கொண்டே நின்றேன். அது என்ன நினைத்ததோ, என்னைப் பிரிந்து ஓடி சிறிது தூரம் சென்று மறுபடி யும் நின்று நின்று பார்த்துவிட்டு மறைந்தது. நானும் என் வழியில் மேலும் சென்றேன். ஒரு மணி நேரம் சென்றதும் தூரத்தில் ஒரு குளக்கரையும் அதன்மேல் வரிசை யாக மரங்களும் தெரிந்தன. இளங் கோவடிகள் கூறியுள்ள கொடும்பைக் கும் நெடுங்குளத்திற்கும் பொது வாகவுள்ள ஏரிக்கரைதான் அது. கொடிய கடலில் கொந்தளிப்பால் திசை தப்பி அலையும் மரக்கலத்தின் மாலுமி கரையைச் சற்று தூரத்தில் கண்டதும் அடையும் ஆனந்தம் தான் எனக்கும் அப்போது ஏற் பட்டது.

ஏரிக்கரையை ஒருவாறு அடைந்து விட்டேன். ஏரியும் சுமாரானது தான், மிகப் பெரிதல்ல. அதன் மத்தியில் கலங்கலாய் செம்மண் கலந்த நீர்தான் தேங்கி யிருந்தது. கரையின் மேலிருந்த மரங்கள் அத் தனையும் கருவேல்தான். கொத்துக் கொத்தாகத் தொங்கிய மஞ்சள் வர் ணப்பூக்கள் காற்றில் குலுங்கிக் கொண்டிருந்தன. தொலையாத பாலைவனத்தில் ஆங்காங்கே தென் படும் நீர்நிலையங்கள்போல இதுவும் காக்ஷி யளித்தது. கரையில் நின்று பார்த்ததும் சற்றுத் தொலைவில் கூரை வேயப்பட்டதும், 'நாட்டு' ஓடுகளால் மூடப்பட்டதுமான வீடு கள் கொண்ட இரண்டு கிராமங்கள் ஒன்றிற் கொன்று அரை மைல் தூரத்தில் தெரிந்தன.

கிராமத்திற்குள் செல்ல கரையின் மேல்தான் செல்ல வேண்டும். கரை யின் மேல் 2 அடி அகலமுள்ள ஒரு வழி செல்லுகிறது, சைக்கில் மேல் சவாரி செய்து கொண்டே கரை யைக் கடப்பது சற்று சிரமம்தான். ஏனெனில், அந்த இரண்டடி அகலத் தின் இருபுறத்திலும் கரை நெடுக கருவேல மரத்தினின்றும் கொட் டிய முட்கள் படுக்கை விரித்தாற் போற் கிடந்தன. சைக்கிளின் சக்க ரங்கள் வழியை விட்டு ஒரு சிறிது விலகினும் உடனே நூறு முட்கள்

'ட்யூப்பின்' ஆழத்தைப் பார்த்து விடும். சைக்கிளைத் தள்ளிக் கொண்டே அவ்விரண்டடி அகலத்தில் நடந்து செல்லலாமென்றாலோ காலில் செருப்பு இல்லை.

ஒரே ஒரு உபாயம் தான் தோன்றியது. சைக்கிளை கரையின் இக்கோடியிலேயே நிறுத்திவிட்டு கிராமத்திற்குள் செல்ல வேண்டியது தான். ஆனால் யாரை நம்பி வைத்துப் போவது? இப்படி யோசனை செய்து கொண்டிருக்கும் போதே கரையில் எனக்கு எதிரில் எங்கிருந்தோ ஒரு மாட்டு மந்தை வந்தது. அதை மேய்க்கும் சிறுவர்கள் தங்கள் கால்களில் முட்கள் தைக்கா வண்ணம் எருமைகளின் முதுகுகளில் ஆரோகணித்து தெம்மாங்கு பாடி வந்தனர். வேகமாய் வந்த மாடுகள் என் சைக்கிளைக் கண்டதும் ஏதோ ஒரு பூதத்தைக் கண்டது போல் மிரள மிரள விழித்து நின்று விட்டன. சைக்கிள் மணியை ஓசைப்படுத்தினதும் வால்களைத் தூக்கிக் கொண்டு நாலாபக்கமும் சிதறி ஓட ஆரம்பித்தன.

சில மாடு மேய்க்கும் சிறுவர்கள் என்னை வந்து சூழ்ந்து நின்று கொண்டு, "எங்கேயிருந்து சாமி வர்றீங்க? இங்கே யாரைப் பார்க்கணும்" என்று பல கேள்விகள் கேட்டார்கள். அவர்கள் மூலம் முதலில் கொடும்பை, கொடுங்குளம் என்பவைகள் தூரத்தில் தெரியும் அக்கிரமங்கள்தான் என்பதை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டு, நான் வந்த காரியத்தைத் தெரிவித்தேன். அவர்களிடம் ஒப்படைத்து விட்டு கிராமத்தை நோக்கி விரைந்தேன். கரையின் மேல் பரப்பெங்கும் கிடந்த அக்கூரான வெண்மை நிற முட்களைப் பட்டணவாசிகள் பார்த்தேயிருக்க மாட்டார்கள்! ஒவ்வொரு முள்ளும் 2½ அல்லது 3 அங்குல நீளமுள்ளது. காலில் பாய்ந்து விட்டாலோ அதைப் பிடுங்கி எறிவதே மகாசிரமம். அவைகளைப் பார்க்கும் போதே உள்ளங்காலிலிருந்து உச்சி வரை ஒருவித உணர்ச்சி மேலிடுகிறது.

இதை ஒருவாறு கடந்து கரையை விட்டுக் கீழே இறங்கியதும் ஒரே பருக்கைக் கற்கள். அம்முட்களாவது பரவாயில்லை போலிருந்தது. கற்களில்லாத இடம் ஒரு அடி கூடக் காண முடியவில்லை. செம்பஞ்சுக் குழம்பு தட்டப் பெற்ற மெல்லிய பாதங்களை யுடையவள் கண்ணகியென்று இளங்கோ வர்ணித்துள்ளாரே! இவள் இதை எப்படித் தான் கடந்து சென்றாளோ!

முதலில் கொடும்பைக்குள் சென்றேன். இது இப்போது கொடும்பாளூர் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இதில் சுமார் 200 வீடுகள் தானிருக்கின்றன, எல்லாம் களிமண் வீடுகள். என்னைத் தூரத்திலேயே கண்ட வண்ணான் ஓடோடியும் வந்து மிக்க மரியாதையாக வணங்கி நின்றான். என் முகத்திலிருந்த களைப்பைக் கண்டதும் பக்கத்து வீட்டிற்கு ஓடி ஒரு பாத்திரம் நிறைய மோர் கொண்டு வந்து கொடுத்தான். அதே வீட்டுத் திண்ணையில் அமர்ந்து அதைப் பருகி ஆயாசம் தீர்ந்ததும், "எப்பா, இந்த ஊர் வழியாகத் தானே கோவலனும் கண்ணகியும் சென்றார்கள்?" என்று கேட்டேன்.

"ஆமா, சாமி. அதோ பாருங்கள். அது தான் கண்ணகியம்மன் கோயில்" என்று ஊர் மத்தியிலுள்ளதைக் காட்டினான்.

அங்கிருந்த முதியவர், "தம்பீ, இந்த ஊரில்தான் கோவலனும், கண்ணகியும் தங்கிப் போனார்கள். என்று சொன்னார். அன்றிரவை அங்கேயே கழித்து, மறுநாட் காலை மதுரையை நோக்கி, நானும் வண்ணானும் புறப்பட்டோம்.

சங்கீத சிட்சை

(சி. எஸ். நாராயணி)

கடத்தூர் கிராமத்து மிராசுதார் சுப்பண்ணுவய்யர் என்றால் அந்த வட்டாரங்களில் தெரியாதவர் யாருமே இருக்க மாட்டார்கள்.

ஏனென்றால், ஒன்று அவர் பெரிய மிராசுதார்; இரண்டாவது சிறந்ததர்மிஷ்டர்.

இதெல்லாவற்றையும் தவிர அவருடைய சங்கீதப் பிரேமை ரொம்பப் பிரசித்தமானது.

பெரிய சங்கீத வித்வான்களை வரவழைத்துத் தன் ஊர் பஜனை மண்டபத்தில் கச்சேரி வைப்பது வழக்கம். ஆகையால் அநேக வித்வான்கள் அவரைத் தேடிவந்ததில் ஆச்சரியம் இல்லையல்லவா!

* * *

அன்று சுப்பண்ணுவய்யர் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். காலை மணி எட்டு இருக்கும். யாரோ ஒரு பிராம்மணன் கையில் பழுப்புத் துணி உறையில் மூடின வீணையுடன் அவர் வீட்டுவாசலில் வந்து நின்று 'இதுதான் மிராசுதார் சுப்பண்ணு வீடோ' என்றார்.

ஆமாம் என்று சுப்பண்ணு வய்யர் அவரை வரவேற்று உபசரித்தார்.

வந்தவர் தான் ஒரு வைணிகரென்றும் ரொம்ப ஏழ்மையால் கஷ்டப் படுவதாகவும் ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்றும் சொன்னார்.

சங்கீதம் என்றால் கேட்க வேண்டுமா? சுப்பண்ணு அய்யருக்குச் சந்தோஷம்தான். அன்று மாலையே கச்சேரி ஏற்பாடு செய்வதாகச் சொல்லி, "தாங்கள் போய் நதியில் ஸ்நானம் செய்துவிட்டுவாருங்கள். நம்மாத்திலேயே சாப்பிட்டு விடலாம்" என்றார்.

வந்த வித்வான் வீணையை சுப்பண்ணு அய்யரிடம் கொடுத்துவிட்டு ஸ்நானத்திற்குச் சென்றார். சுப்பண்ணு ஐயர் வீணையை ஒரு அறையில் வைத்து கதவைச் சாத்திவிட்டு ஸ்நானத்திற்குச் சென்று விட்டார்.

* * *

கிட்டுவும் பட்டுவும் சுப்பண்ணு அய்யரின் அருமைக் குமாரர்கள். இருவரும் பந்தாடுவதற்காக

பந்தை எடுக்க அறைக்குள் வந்தனர்.

அறையில் பழுப்பு உறை போட்டு மூடிவைத்திருக்கும் வஸ்துவைக் கண்டதும், அதை அறிய ஆவல்உண்டாயிற்று அவர்களுக்கு இதற்குள் பட்டு அங்கிருந்த பெஞ்சியின்மேல் ஏறி மேலே பிரையிலிருந்த பந்தைஎடுத்தான்.

பந்து கை தவறி வீணையின் மேல்விழ அது ஙொய்...என்று சப்தித்தது.

கிட்டுவும் பட்டுவும் ஆச்சர்யமும் பயமும் அடைந்தார்கள்.

"அடேய்...இதில் யாரோ ஒளிந்துகொண்டிருக்கிறார்கள்" என்றான் பட்டு.

"ஆமாம்" என்றான் கிட்டு.

இருவரும் யார் அது என்று கேட்டனர் பதிலில்லே. இரண்டாம் முறை, மூன்றும் முறை, ஒன்றும் பதிலில்லே.

கோபம் வந்துவிட்டது, பக்கத்தில் கிடந்த தடியை எடுத்து ரொக்கலானார்கள்.

வீணையிலிருந்து இரண்டு நிமிஷம் ஙொய், ஙொய் என்ற சப்தம் வந்து பிறகு ஓய்ந்தது. பையன்களுடைய கையும் ஓய்ந்தது. அவர்கள் சென்றனர்.

* * *

மாலே கச்சேரிக்காக வீணையை எடுத்துப் பார்த்த வித்வான் திடுக்கிட்டுப்போனார். அவருடைய உயிரினும் இனிய பொருளான வீணையை யாரோ சித்ரவதை செய்திருந்ததைக் கண்டு அவர் உள்ளம் பதறியது.

அவர் சுப்பண்ணா அய்யரிடம் விஷயத்தைச்சொல்லி அழலானார்.

சுப்பண்ணா அய்யர், யோசிக்கனார். அவருக்கு சகல விஷயங்களும் விளங்கிவிட்டது. கிட்டுவின்மேலும் பட்டுவின்மேலும் கோபம் அளவுக்குமீறி வந்தது. என்ன செய்வது? வைணிகரிடம் ரொம்ப நயமாக, "ஸ்வாமி! என் குழந்தைகள், இம்மாதிரி செய்துவிட்டனர். மன்னித்துக் கொள்ளுங்கள். இதோ இருநூறு ரூபாய் இருக்கிறது. வேறு வீணை வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார்.

வித்வான் ஆச்சர்யத்துடன், "தங்களேப்போன்ற ரசிகர் வீட்டுக் குழந்தைகள் இம்மாதிரி காரியங்களைச் செய்தது எனக்கே வருத்தமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது" என்றார்.

"அதற்கென்ன செய்யலாம், கடவுள் எனக்கு இம்மாதிரி முட்டாள் குழந்தைகளே கொடுத்துவிட்டார்" என்றார் மிராசுதார்.

"இப்பொழுது ஒன்றும் முழுகிப் போய்விடவில்லே. இரண்டே வருஷத்தில் அவர்களே நான் வித்வானுக்கிவிடுகிறேன் என்றார்" வித்வான்.

"ரொம்ப சந்தோஷம். தங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளே நான் செய்து தருகிறேன் நாளைக்கே ஆரம்பித்துவிடுங்கள் சிட்சையை" என்றார் மிராசுதார்.

மறுநாளே கிட்டுவும் பட்டுவும் சங்கீத சிட்சை கற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள். பிறகு பிரசித்தி பெற்று "வீணா சகோதரர்கள்" என்ற கியாதியை அடைந்தார்கள்.

எது தியாகம்?

அ. கி. ஜயராமன்

1

"மானஸ சஞ்சர ரே!" என்று பாடிக்கொண்டே வந்து ஊஞ்சலில் உட்கார்ந்தான் பாலு.

அது அவனுடைய தாயார் வைத்த செல்லப் பெயர். அவனுடைய முழுப் பெயர் பாலகிருஷ்ணன். அவனாக சம்பாதித்த எழுத்துக்கள் இரண்டு—ஆக அவன் மிஸ்டர் பாலகிருஷ்ணன், பி.ஏ.

காப்பி டம்ளரைக் கொண்டு வந்து வைத்தாள் மதுரம். பாட்டை நிறுத்தி மதுரத்தின் முகத்தைப் பார்த்தான் பாலு. சிந்தைபற்று இருக்கும் அவள் முகத்தில் ஏதோ ஒரு வருத்தம் நிழல்போலப் படர்ந்திருந்தது.

பாலுவின் மனதில் அது பிரமாதமாகப் படவில்லை. ஆயினும் "என்ன மதுரம் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" என்று ஆரம்பித்தான்.

"ஒன்றுமில்லை!" என்று அவள் சொன்னபோது உள்ளிருந்து குமுறும் துக்கத்தின் பிரதித்வனி கேட்டது.

பாலு காப்பியை சாப்பிட்டு விட்டு டம்ளரைக் கீழே வைத்து திரும்பிப் பார்த்தான். பொங்கி எழும் கண்ணீர்த் துளிகளைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள் மதுரம்.

பாலுவின் மனம் திடுக்கிட்டது. "என்ன மதுரம் இது?" என்றான்.

அவள் பதில் சொல்லவில்லை. காப்பி டம்ளரை எடுத்துக் கொண்டு சட்டென்று உள்ளே சென்றுவிட்டாள்.

பாலுவின் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சி தோன்றி அவனை வாட்டலாயிற்று. ஏன் அவள் இம்மாதிரி கண்ணீர் விட்டாள் என்பதை அறிய அவன் உள்ளம் துடித்தது. எழுந்து உள்ளே போய்க் கேட்போமா என்று எண்ணினான். ஆனால் உள்ளே அவன் தங்கையும், தாயாரும் பேசும் குரல் கேட்டது. மௌனமாக ஊஞ்சலிலேயே உட்கார்ந்து விட்டான்.

2

மதுரத்தின் தாய் அந்த ஊருக்கு வந்து குடியேறினவள். ஆனாலும் பாலுவின் வீட்டிற்கு ரொம்ப பழக்கமாகி விட்டாள்.

அப்பொழுது மதுரத்திற்கு வயது எட்டு இருக்கும். நல்ல சிகப்பு. அதிக உயரமில்லை. கலகலவென்று பேசுவாள். அவள் சங்கீதம் சிட்சை சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால் அவள் பாடினால் அபஸ்வரமே இருக்காது. அவ்வளவு சுத்தமாகவும்,

மதுரமாகவும் பாடுவாள். பானு வின் தங்கைக்கும் அவளுக்கும் ரொம்ப சிநேகம். பள்ளிக் கூடத்திலும் சரி, வெளியேயும் சரி, ஒருவரை யொருவர் பிரிய மாட்டார்கள். அநேகமாக சாப் பிடும் நேரம் தவிர மதுரம் பானு வின் வீட்டில்தான் இருப்பாள்.

அப்பொழுதிருந்தே மதுர மும் பானுவும் நண்பர்களாகிவிட் டார்கள். அந்தக் குழந்தை உள்ளங் களுக்குள் அவர்களை அறியா மலே ஒரு அன்பு வளர்ந்து வந் தது. பின்னால் அதுவே அவர் களைப் பிணைக்கும் பொற் சரடா கவும் இருந்தது.

மதுரத்திற்கு பனிரண்டு வய தானபோது அவள் தாய் அவளு டைய கலியாண விஷயமாக பானு வின் தாயிடம் பேச்சை ஆரம் பித்தாள்.

பானுவின் தாயாருக்கு மதுரத் தின்மேல் ரொம்ப ஆசை. கெட் டிக்காரப் பெண்; தன் பிள்ளைக் குப் பண்ணிக்கொண்டால் குடும் பத்தைக் கருத்தாய்ப் பார்ப்பாள் என்று எண்ணினாள். ஆனாலும் சட்டென்று பிடி கொடுக்கவில்லை. ஆகவேண்டியதுதான் என்று அவளுக்குப் பதில் சொன்னாள்.

அவள் "பணத்தில் இருக்கி றாள்" என்று மதுரத்தின் தாயா ருக்குத் தெரியும். எப்படியாவது பெண்ணை அந்த இடத்தில் கொடுக்க வேண்டுமென்பதே அவளுடைய விருப்பம். பானுவும் அதற்கு அனுசரணையாக இருந் தான். ரூபாய் நாலாயிரத்துடன் மதுரம் பானுவின் வாழ்க்கைத் துணைவியானாள். இன்று மதுரம் புக்ககம் வந்து ஒரு வருஷமாகி றது. புக்ககம் அவளுக்குப் புதி தல்ல. சிந்தையற்றுத் திரியும் பக்ஷியைப்போல் இருந்தவள். இன்று அவளுக்கு என்ன வந்து விட்டது?

3

"ஆனகாலமெல்லாம் போக இப்பொழுதுதானா எனக்கு இந்த அவமானம் வரவேண்டும்? அப் பொழுதே ஆயிரம் தரம் சொன் னேனே கேட்டானா? இந்தப் பழிகாரன்! என்னமோ கொள்ளை போகிறதென்று ஓடிப்போய்க் கட்டிக் கொண்டானே!

இப்பொழுது யாருக்கு அவ மானம்? ரொம்ப சாதுவாட்டமா, மஹா உத்தமியாட்டுமா, பேசி னாளே அவம்மா! சிரித்து சிரித்து என் குடியைக் கெடுக்கவந்தாளே இவளும்.

அந்தச் சிரிப்பிலே மயங்கிப் போய்த்தானே அவள் காலில் போய் விழுந்தான். கொலைகா ரன்! இவனாலேதானே என் குலத்திற்கே நாசம் வந்தது. உம்! அவளை எல்லாம் சொல்வ தில் என்ன பலன்! நான் பெண் பிறந்தவளே. எனக்குச் சாவு வரவில்லையே இந்த கண்டராவி யை எல்லாம் பார்க்காமல் போக!" என்று ஆத்திரமும் அழுகையும் பொங்க கதறலானாள் பானுவின் தாயார்.

பானுவுக்கு ஒன்றும் புரிய வில்லை. என்னவோ பிரமை பிடித் தவன் போல், "அம்மா! நீ என்ன சொல்லுகிறாய்? யார் குடியை யார் கெடுத்து விட்டார் கள்? எனக்கொன்றும் புரிய வில்லையே!" என்று கேட்டான்.

“புரியுமா உனக்கு? ஒன்றும் புரியாது. நீ தான் அவன் சிரிப்பில் மயங்கிக் கிடக்கிறாயே! உனக்கென்ன தெரியப் போகிறது?”

“யாரா? உன் ஆம்படையார் தான்!”

“ஏன், அவளுக்கென்ன?”

பாலுவின் தாயாருக்கு கோபத்



தால் முகம் சிவந்தது. கண்களில் கண்ணீர் மலமல வென்று பொங்க ஆரம்பித்தது.

“என்னவென்று கேட்கிறாய்? பாவி! உன் சம்பந்தத்தால் வெளியே தலை நீட்ட முடியவில்லை! அந்தப் பாவி என்னைக் கெடுத்தாளே!

“என்ன அம்மா இது? யார் சிரிப்பில் நான் மயங்கி, உன் குடி கெட்டுவிட்டது?”

அவள் நன்றாக இருப்பாளா பாலு! நீ இந்த மாதிரிகூட மோசம் போகலாமா?” என்றாள்.

பாலுவுக்கு ஒன்றும் விளங்க வில்லை. சற்று முன் மதுரம் கண்ணீர் விட்டதும், இப்பொழுது தாய் இம்மாதிரிப் பேசுவதும் எதனால் என்று நிச்சயம் செய்ய முடியாதவனாய் பேசாமல் உட்கார்ந்திருந்தான். அவள் உள்ளம் படபடவென்று துடித்துக்கொண்டிருந்தது.

"என்ன அம்மா, எனக்குப் புரியும்படிச் சொல்லேன்" என்றான்.

"என்ன அண்ணா, ஒண்ணும் தெரியாததைப் போல் கேட்கிறாய்? அவள் ஊரிலிருந்து வந்திருந்த அந்த பாட்டிதான் எல்லாவற்றையும் சொன்னாள். வா, நான் சொல்கிறேன்" என்றாள் பாலுவின் தங்கை. இருவரும் எழுந்து அடுத்த அறைக்குச் சென்றார்கள்.

4

பாலு கட்டிலில் உட்கார்ந்திருந்தான். அவன் முகம் கோபத்தால் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. மதுரம் எதிரே சுவரோரம் நின்று கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள். அன்று மலர்ந்த புஷ்பம் போன்று அவள் வாடி வதங்கி துவண்டு சுவரில் சாய்ந்து தலை குனிந்து நின்றிருந்தாள்.

"அவர்கள் சொல்வதெல்லாம் உண்மையா?" என்றான் பாலு.

"எது?" என்றாள் மதுரம்.

"உன் அம்மாவைப்பற்றி!"

"சிவ சிவா! இதென்ன அநியாயம்?"

"ஓ! உண்மையைச் சொல்"

"நீங்களும் அதை நம்புகிறீர்களா?"

"வீணாக என் கோபத்தைக் கிளப்பாதே. விஷயத்தைச் சொல்லிவிடு!"

"என்ன ரகசிய மிருக்கிறது சொல்ல?"

"ஆனால் எல்லாம் பொய்யா?"

"பின்னே என்ன?"

"உன் தந்தை?"

"நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார்."

"கர்மம்! கர்மம்! இது போராதா? வேறென்ன வேண்டும்?"

மதுரத்தின் ஹ்ருதயம் துடித்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டே "அவசரப்படாதீர்கள்! நீங்கள் எல்லாம் நினைப்பதுபோல் அல்ல அது" என்றாள்.

"விபரத்தைத் தான் சொல்லேன்!"

"என் தாயார் மூன்றுமாத கர்ப்பமாக இருக்கும்போது எங்கப்பா இறந்துவிட்டார். பிறகு என் தாயார் என் மாமா வீட்டிற்குச் சென்றாள். அங்கேதான் நான் பிறந்தேன். சிறிது காலத்திற்குப் பிறகு என் தாயாருக்கும் என் அம்மாமிக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. என் அம்மாமியின் தாயார் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். பிறகுதான் நாங்கள் இந்த ஊருக்கு வந்தோம். வீணாக கலகக்காரர்கள் பேச்சைக் கேட்டு அநியாயமாகப் பெண் பாவத்திற்கு ஆளாகாதீர்கள்!"

பாலு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். இது உண்மையா? பொய்யா? இந்த சந்தேகம் அவன் மனதில் எழுந்து போராடியது.

இதெல்லாம் உங்கம்மா சொன்னதுதானே?" என்றான் பாலு.

"ஆமாம்" என்றாள் மதுரம். அவள் குரல் கம்மியது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

பாலுவின் முகம் கோபத்தால் விகாரமடைந்தது. "இதை எப்படி நம்புவது?" என்றான் பாலு.

"என்னிடம் நம்பிக்கை இல்லையா? என் வார்த்தையில்......" என்றாள். அந்தக் குரலில் அன்பும், ஏக்கமும் கலந்திருந்தன.

"உன்னிடம் எவ்வளவுக் கவ்வளவு பிரியமாக இருந்தேனோ அவ்வளவும் நேர் விபரீதமாக அல்லவா ஆகிவிட்டது. இனி என்ன செய்ய முடியும்? நான் தீர்மானித்து விட்டேன்" என்றான் பாலு.

"என்ன?" என்றாள் மதுரம். அவள் நாக்குக் குழறியது. உள்ளம் பதறிற்று.

"யார் என்ன செய்வது, உன் தலையெழுத்து அப்படி!"

"என் தலை எழுத்தா?" என்றாள் மதுரம். இந்த உலகமே அவள் கண்முன் சுற்றுவதுபோல இருந்தது.

"இனி நாம் சேர்ந்து இருக்க முடியாது. நீயும் உன் அம்மாவும் இந்த ஊரைவிட்டுப் போய் விடுங்கள். இல்லாவிட்டால் நானாவது போய் விடுகிறேன்" என்றான் பாலு.

"என்ன?"

"ஒன்றுமில்லை. நீ இனி இந்த வீட்டில் இருக்க முடியாது. உனக்கும் எனக்கும் ரொம்ப தூரம்."

"மதுரத்தின் முகம் துக்கத்தாலும் கோபத்தாலும் சிவந்தது. தாரை தாரையாக கண்ணீர் பொங்கி பட்டுப்போன்ற கன்னங்களின்மேல் விழுந்து கீழே விழுந்தது. கட்டி இருந்த தலைமயிர் தளர்ந்து அவிழ்ந்து முதுகின் மேல் புரண்டது. அவள் சர்வாங்கமும் நடுங்கியது. அவள் தடைப்படும் குரலில்" உண்மையாகவா?" என்றாள்.

"ஆமாம்" என்றான் பாலு. அவன் குரலில் உறுதியும் வெறுப்பும் கலந்திருந்தன.

"ஆனால்..." என்று ஆரம்பித்தாள் மதுரம்.

"ஆனால் என்ன?" என்று சீறி எழுந்தான் பாலு.

"உங்களுடைய இந்த ஞாபக சின்னம்...?

"என்ன?"

"உங்களுக்குத் தெரியாதா?"

"நீ என்ன சொல்கிறாய்?"

"என்ன சொல்கிறேன்?"

அவள் உடல் சிலிர்த்தது. வெட்கத்தால் முகம் சிவந்தது. கண்ணீர் கண்களை மறைத்தது. மெள்ள சமாளித்துக் கொண்டு பாலுவின் முகத்தைப் பார்த்தாள். அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை.

பாலுவின் உள்ளத்தில் மின்னல் போன்ற ஒரு உணர்ச்சி ஊடுருவிப் பாய்ந்தது. அவனையறியாமல் அவன் கண்கள் கண்ணீர் முத்துக்களை உதிர்த்தன. அவன் உள்ளம் பதறியது.

"மதுரம்! இப்படிவா!" என்றான்.

5

இரவு மணி பத்து. வானத்தில் பறந்து செல்லும் மேகங்களிடையே சந்திரன் ஒளி வீசிக் கொண்டிருந்தான். கிராமம் நிசப்தமாக இருந்தது.

கூடத்தில் புகைந்து கொண்டிருந்த ஹரிகேன் விளக்கை கொஞ்சம் தூக்கினுள், பாலுவின் தங்கை. பாலுவின் தந்தை ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்திருந்தார். பாலுவின் தாய் கீழே உட்கார்ந்திருந்தாள். மதுரம் கண்ணும் கண்ணீருமாக சமையற்கட்டு வாசற்படிக்கருகில் நின்று கொண்டிருந்தாள். பாலு ஒரு தூணில் சாய்ந்துக்கொண்டு நின்றிருந்தான்.

"உம் அப்பறம் என்ன தீர்மானம்?" என்ருர் பாலுவின் தந்தை.

"தீர்மானம் என்ன? நீங்கள் தான் சொல்ல வேண்டும்" என்ருன் பாலு.

"அவளோடு நீ இனி இந்த வீட்டில் இருக்க முடியாது."

"பின்னே என்ன செய்ய வேண்டும்?"

"நாங்கள் மானமாக வாழ வேண்டுமானுல் அவளை இந்த வீட்டைவிட்டு முதலில் அனுப்பி விடு."

"அது முடியாத காரியம்! எதற்காக அப்படிச் செய்ய வேண்டும்?"

"உனக்கு விஷயம் தெரியாதா!?"

"எல்லாம் தெரியும். தெரிந்து தான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன். அவளை ஒரு பொழுதும் விடமுடியாது."

"உனக்குத் தாய் தந்தையர் வேண்டாமா?"

உங்களுக்குப் பிள்ளை வேண்டாமா?"

"அதற்காகத்தான் இவ்வளவு தூரம் சொல்கிறேன். யாருக்கு அவமானம் வந்தாலென்ன?"

"அவமானப் படக்கூடிய விஷயம் ஒன்றுமே இல்லை. வெறும் புரளிக்காக ஸ்திரீஹத்தியை நான் ஏற்றுக் கொள்ள முடியாது."

"நீ சிறுபிள்ளை, நான் சொல்வதைக் கேள்."

"இந்த விஷயத்தில் முடியாது."

"எங்களை இழக்க விரும்புகிருயா?"

"அவளுக்காக இந்த உலகத்தையே வேண்டுமானுலும்."

"நீங்கள் எங்கு வேண்டுமானுலும் செல்லலாம். இந்த வீட்டில் இனி அரை நிமிஷமும் இருக்க முடியாது."

* * *

மங்கிய நில வொளியில் சமூகத்தின் புரளியை எதிர்த்து வெளியே புறப்பட்ட இரண்டு ஜீவன்களுடன், ஒரு மாட்டுவண்டி தெருக்கோடியில் சென்றுகொண்டிருந்தது.

வெள்ளித் தகடு போன்று ஒளி வீசும் சந்திரனை மேகத்திரை வந்து மூடியது. எங்கும் இருள் வந்து கவிந்தது. அந்த இருளைத் துளைத்துக்கொண்டு மாட்டின் கழுத்தில் கட்டி இருந்த மணி டிங்-டிங் என்று சப்தித்தது.

இருளில் நின்றிருந்த ஒரு உருவத்தின் உள்ளத்தில் அந்தமணிச் சத்தம் சாங்கியின் அமிர்ததாரையாக வர்ஷித்தது. தன் வெள்ளைப் புடவைத் தலைப்பினுல் கண்களைத் துடைத்துக் கொண்டது அந்த ஜீவன். வண்டி முடக்குத் திரும்பி மறைந்தது.

நட்சத்திர பலா பலன்கள்

(1) அஸ்வனி-மகம்-மூலம்.

10-9-39 இரவு 1-5 முதல்
11-9-39 இரவு 10-21 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய்த் தொழில் நடக்கும். இஷ்ட காரியாதிகள் தடைப்படும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்க முற்றகலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும், பொதுவில் சமபலன் தரும் நாளாம்.

11-9-39 இரவு 10-21 முதல்
12-9-39 இரவு 7-27 வரை.

இந்நாளில் தொழில் சாதாரணமாய் நடக்கும். நேசரால் அல்லது தன் குடும்ப வகையில் கொடுக்கல் வாங்கலில் சிந்தனை, மயக்கம் உண்டாயின் உடனுக்குடன் நீங்கும், சில சந்தோஷச் சேதியும், நேசரொற்றுமையும் காரிய வெற்றியும் உண்டாகும். பொதுவில் சமபலன் தரும் நாள்.

12-9-39 இரவு 7-27 முதல்
13-9-39 மாலை 4-33 வரை.

இக்காலம் நிலையான தனங்கள் அடைவதற்கு ஆன எதுவைச் செய்யின் பின் மிகப் பலன் தரும். கொடுக்கல் வாங்கலில் சீர்திருத்தம் செய்ய எத்தனிக்கின் நன்மையுண்டாகும். நூதனத் தொழிலைச் செய்யத் தொடரின் மேன்மையைத் தரும். மேலோர்களைக் காணின் காரியம் கைகூடும். பொதுவில் இந்நாள் உத்தமமானது.

13-9-39 மாலை 4-33 முதல்
14-9-39 பகல் 1-47 வரை.

இந்நாளில் எத்தொழிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து கொள்வது நலமாம். மோட்டார் முதலிய வாகன நடையிலும் முடிந்த வரை நிதானமாய்ச் செல்வது நலம். நூதன பலன் தரத்தக்க காரியங்களைச் செய்யாதிருத்தல் நலம். எழுத்து முறையிலும் வழக்கு முதலிய காரியங்களிலும் முன் ஜாக்கிரதையுடன் ஆய்ந்து செய்வது நலமாம், பொதுவில் இத்தினம் மத்திமம்.

14-9-39 பகல் 1-47 முதல்
15-9-39 பகல் 11-25 வரை.

தேக சௌக்கியம், குடும்ப உல்லாசம், மித்திரரால் மகிழ்ச்சி, சேதியால், சந்தோஷம், தொழிலில் சமப் பலன், எக்காரியமும் எதிர் பார்த்த அளவில் நடக்கா விட்டாலும் சற்றேறக்குறைய பலன் தரும். அனுமதி

லாபம் பெறத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தராது, சமப் பலன் தரும் தினம்.

15-9-39 பகல் 11-25 முதல்
16-9-39 காலை 9-30 வரை.

இத்தினத்தில் சாதாரணமாகத் தொழில் நடக்கும்; சேதியால் கவலை, களத்திர புத்திர முகத்திருப்பம். பந்து மித்திரரால் கவலை, அன்னியர்களுக்காக அலைச்சல், வீணான சில காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், ஆயினும் இந்நாளில் ஒன்றும் கெடுதிகள் நேராது. முக்கிய காரியங்களைப் பொறுத்துச் செய்வதே நலமாம். பொதுவில் இந்நாள் சமப்பலன் தரும்.

16-9-39 காலை 9-30 முதல்
17-9-39 காலை 8-15 வரை.

முடியக்கூடாத காரியங்கள் ஆயினும் இத்தினத்தில் தொடருவார்களாயின் தக்க வெற்றியைத் தரும், பிறரிடமிருந்து தன் காரியத்தை ஜெயிக்க வேண்டுமாயினும் இந்நாளில் எத்தனம் செய்தால் தக்க பலன் தரும். அனுமத்து லாபங்கள் அடைய எத்தனிக்கினும் நலன் தரும், தேக சௌக்கியம், சாதாரணத் தொழிலில் மன உல்லாசம், ஆக இந்நாள் உத்தமமாம்.

(2) பரணி-பூரம்-பூராடம்

10-9-39 இரவு 1-5 முதல்
11-9-39 இரவு 10-21 வரை.

இந்நாள் மிகவும் உத்தமமான பலன் தரும், இஷ்டர்களால் மன மகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தாத்தக்க நூதன் தொழில்களைத் தொடரின் வெற்றி தரும். பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

11-9-39 இரவு 10-21 முதல்
12-9-39 இரவு 7-27 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய்த் தொழில் நடக்கும், இஷ்ட காரியாதிகள் தடைப்படும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்க முற்றகலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும். பொதுவில் சமப்பலன் தரும் நாளாம்.

12-9-39 இரவு 7-27 முதல்
13-9-39 மாலை 4-33 வரை.

இந்நாளில் தொழில் சாதாரணமாய் நடக்கும், நேசரால் அல்லது தன் குடும்ப வகையில் கொடுக்கல் வாங்கலில் சிந்தனை, மயக்கம் உண்டாயின் உடனுக்குடன் நீங்கும், சில சந்தோஷச் செய்தியும், நேசரொற்றுமையும் காரிய வெற்றியும் உண்டாகும், பொதுவில் சமப்பலன் தரும் நாள்.

13-9-39 மாலை 4-33 முதல்
14-9-39 பகல் 1-47 வரை.

இக்காலம், நிலையான தனங்கள் அடைவதற்கான எதுவைச் செய்யின் பின் மிகப் பலன் தரும், கொடுக்கல் வாங்கலில் சீர்திருத்தம் செய்ய எத்த

னிக்கின் நன்மையுண்டாகும், நூதன தொழிலைச் செய்யத் தொடரின் மேன்மையைத் தரும், மேலோர்களைக் காணின் காரியம் கைகூடும், பொதுவில் இந்நாள் உத்தமமானது.

14-9-39 பகல் 1-47 முதல்
15-9-39 பகல் 11-25 வரை.

இந்நாளில் எத்தொழிலிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்துகொள்வது நலமாம். மோட்டார் முதலிய வாகன நடையிலும் முடிந்த வரையிலும் நிதானமாய்ச் செல்வது நலம், நூதன பலன் தரத்தக்க காரியங்களைச் செய்யாதிருத்தல் நலம், எழுத்து முறையிலும் வழக்கு முதலிய காரியங்களிலும் முன் ஜாக்கிரதையுடன் ஆய்ந்து செய்வது நலமாம், பொதுவில் இத்தினம் மத்திமம்.

15-9-39 பகல் 11-25 முதல்
16-9-39 காலை 9-30 வரை.

தேக சௌக்கியம், குடும்ப உல்லாசம், மித்திரர்களால் மகிழ்ச்சி, சேதியால் சந்தோஷம், தொழிலில் சமப்பலன், எக்காரியமும் எதிர்பார்த்த அளவில் நடக்காவிட்டாலும் சற்றேறக்குறைய பலன் தரும், அனுமத்து லாபம் பெறத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தாராது, சமப் பலன் தரும் தினம்.

16-9-39 காலை 9-30 முதல்
17-9-39 காலை 8-15 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய்த் தொழில் நடக்கும், சேதியால் கவலை, களத்திர புத்திர முகத்திருப்பம், பந்து மித்திரரால் கவலை, அன்னியர்களுக்காக அலைச்சல், வீணான சில காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், ஆயினும் இந்நாளில் ஒன்றும் கெடுதிகள் நேராது. பொதுவில் இந்நாள் சமப்பலன் தரும்.

(3) கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்.

10-9-39 இரவு 1-5 முதல்
11-9-39 இரவு 10-21 வரை.

தொழிலில் சில சங்கடங்கள், மனக்குழப்பம், எதிர்பாராதபடி காரியங்கள் முடியாததினால் கலக்கம், வீண் அலைச்சல், அகால போஜனம், குடும்பக் கவலை, பொருள் விரயம் அல்லது முடக்கம், செய் காரியங்களில் மறதி அல்லது பிசகு நேருதல். ஆதலின் இத்தினத்தில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாய் இருக்கின் நலம், பலன் தரத்தக்க நூதன காரியங்கள் எதையும் தொடரக் கூடாது, பொதுவில் இத்தினம் மத்திம பலனைத் தரும்.

11-9-39 இரவு 10-21 முதல்
12-9-39 இரவு 7-27 வரை.

இந்நாள் மிகவும் உத்தமமான பலன் தரும், இஷ்டர்களால் மனமகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தரத்தக்க நூதன தொழில்களைத் தொடரின் வெற்றி தரும், பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

12-9-39 இரவு 7-27 முதல்
13-9-39 மாலை 4-33 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய்த் தொழில் நடக்கும், இஷ்டகாரியாதிகள் தடைப்படும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்க முற்றகலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும்.

13-9-39 மாலை 4-3 முதல்
14-9-39 காலை 1-47 வரை.

இந்நாளில் தொழில் சாதாரணமாய் நடக்கும், நேசரால் அல்லது தன் குடும்ப வகையில் கொடுக்கல் வாங்கலில் சிந்தனை, மயக்கம் உண்டாயின் உடனுக்குடன் நீங்கும், சில சந்தோஷச் சேதியும் நேசரொற்றுமையும், காரிய வெற்றியும் உண்டாகும், பொதுவில் சமப் பலன் தரும் நாள்.

14-9-39 பகல் 1-47 முதல்
15-9-39 பகல் 11-25 வரை.

இக்காலத்தில் நிலையான தனத்தை அடைவதற்கான ஏதுவைச் செய்யின் பின் மிகப் பலன் தரும். கொடுக்கல் வாங்கலில் சீர் திருத்தம் செய்ய எத்தனிக்கின் நன்மையுண்டாகும், நூதன தொழிலை செய்யத் தொடரின் மேன்மையைத் தரும். மேலோர்களைக் காணின் காரியம் கைகூடும். பொதுவில் இந்நாள் உத்தமமானது.

15-9-39 பகல் 11-25 முதல்
16-9-39 காலை 9-30 வரை.

இந்நாளில் எத்தொழிலிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து கொள்வது நலமாம், மோட்டார் முதலிய வாகன நடையிலும் முடிந்த வரை நிதானமாய்ச் செல்வது நலம், நூதன பலன் தரத்தக்க காரியங்களைச் செய்யாதிருத்தல் நலம், எழுத்து முறையிலும் வழக்கு முதலிய காரியங்களிலும் ஜாக்கிரதையுடன் ஆய்ந்து செய்வது நலமாம், பொதுவில் இத்தினம் மத்திமம்.

16-9-39 காலை 9-30 முதல்
16-9-39 காலை 8-15 வரை.

தேக சௌக்கியம், குடும்ப உல்லாசம், மித்திரரால் மகிழ்ச்சி, சேதியால் சந்தோஷம், தொழிலில் சமபலன், எக்காரியமும் எதிர் பார்த்த அளவில் நடக்கா விட்டாலும் சற்றேறக்குறைய பலன் தரும், அனுமத்து லாபம் பெறத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தராது, சமப்பலன் தரும் தினம்.

(4) ரோகிணி-அஸ்தம்-திருவோணம்.

10-9-39 இரவு 1-5 முதல்
11-9-39 இரவு 10-21 வரை.

முடியக்கூடாத காரியங்கள் ஆயினும் இத்தினத்தில்தொடருவார்களாயின் தக்க வெற்றியைத் தரும், பிறரிடமிருந்து தன் காரியத்தை ஜெயிக்க வேண்டுமாயின் இந்நாளில் எத்தனம் செய்தால் தக்க பலன் தரும், அனுமித்து லாபம் பெற எத்தனிக்கினும் நலன் தரும், தேக சௌக்கியம், சாதாரணத் தொழிலில் மன உல்லாசம், ஆக இந்நாள் மிக உத்தமம்.

11-9-39 இரவு 10-21 முதல்
12-9-39 இரவு 7-27 வரை.

தொழிலில் சில சங்கடங்கள், மனக்குழப்பம், எதிர்பார்த்தபடி காரியங்கள் முடியாததினுல் கலக்கம், வீண் அலேச்சல், அகால போஜனம், குடும்பக் கவலே, பொருள் விரயம், அல்லது முடக்கம், செய் காரியங்களில் மறதி அல்லது பிசகு நேர்தல், ஆதலின் இத்தினத்தில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாக இருக்கின் நலம், பலன் தரத்தக்க நூதன காரியங்கள் எதையும் தொடரக்கூடாது. பொதுவில் இந்நாள் மத்திம பலனேத் தரும்.

12-9-39 இரவு 7-27 முதல்
13-9-39 மாலே 4-33 வரை.

இந்நாள் மிகவும் உத்தமமான பலன் தரும், இஷ்டர்களால் மன மகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தரத்தக்க நூதன தொழில்களேத் தொடரின் வெற்றி தரும், பிறர் கையில் சிக்கிய தனத்தை பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

13-9-39 மாலே 4-33 முதல்
14-9-39 பகல் 1-47 வரை.

இத்தினத்தில் சாதாரண்மாய்த் தொழில் நடக்கும், இஷ்ட காரியாதிகள் தடைபடும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்கமும் உற்று அகலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும்.

14-9-39 பகல் 1-47 முதல்
15-9-39 பகல் 11-25 வரை.

இந்நாளில் தொழில் சாதாரணமாய் நடக்கும், நேசரால் அல்லது தன் குடும்ப வகையில் கொடுக்கல் வாங்கலில் சிந்தனே, மயக்கம் உண்டாயின் உடனுக்குடன் நீங்கும், சில சந்தோஷச் சேதியும் நேசரொற்றுமையும் காரிய வெற்றியும் உண்டாகும், பொதுவில் சமப்பலன் தரும் நாள்.

15-9-39 பகல் 11-25 முதல்
16-9-39 காலே 9-30 வரை.

இக்காலம் நிலேயான தனங்கள் அடைவதற்கான எதுவைச் செய்யின் பின் மிகப் பலன் தரும், கொடுக்கல் வாங்கலில் சீர் திருத்தம் செய்ய எத்தனிக்கின் நன்மையுண்டாகும், நூதன தொழிலேச் செய்யத் தொடரின் மேன்மையைத் தரும், மேலோர்களேக் காணின் காரியம் கைகூடும், பொதுவில் இந்நாள் உத்தமமானது.

16-9-39 காலே 9-30 முதல்
17-9-39 காலே 8-15 வரை.

இந்நாளில் எத்தொழிலிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து கொள்வது நலமாம். மோட்டார் முதலிய வாகன நடையிலும் முடிந்த வரை நிதானமாகச் செல்வது நலம், நூதன பலன் தரத்தக்க காரியங்களேச் செய்யாதிருந்தால் நலம், எழுத்து முறையிலும் வழக்கு முதலிய காரியங்களிலும் முன் ஜாக்கிரதையுடன் ஆராய்ந்து செய்வது நலமாம், பொதுவில் இத்தினம் மத்திமம்.

(5) மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம்.

10-9-39 இரவு 1-5 முதல்
11-9-39 இரவு 10-21 வரை.

இத்தினத்தில் சாதாரணமாகத் தொழில் நடக்கும், சேதியாற் கவலை, களத்திர புத்திர முகத்திருப்பம், பந்து மித்திரரால் கவலை, அந்நியருக்காக அலைச்சல், வீணான சில காரியங்களைக் குறித்து சிந்தித்தல். ஆயினும் இந்நாளில் ஒன்றும் கெடுதி நேராது. முக்கிய காரியங்களைப் பொறுத்துச் செய்வதே நலமாம், பொதுவில் இந்நாள் சமப் பலன் தரும்.

11-9-39 இரவு 10-21 முதல்
12-9-39 இரவு 7-27 வரை.

முடியக்கூடாத காரியங்களாயினும் இத்தினத்தில் தொடருவார்களாயின் தக்க வெற்றியைத் தரும், பிறரிடமிருந்து தன் காரியத்தை ஜெயிக்க வேண்டுமாயின் இந்நாளில் எத்தனம் செய்தால் தக்க பலன் தரும், அனுமத்து லாபங்கள் அடைய எத்தனிக்கினும் நலன் தரும், தேக சௌக்கியம், சாதாரணத் தொழிலில் மன உல்லாசம், ஆக இந்நாள் மிக உத்தமமாம்.

12-9-39 இரவு 7-27 முதல்
13-9-39 மாலை 4-33 வரை.

தொழிலில் சில சங்கடங்கள், மனக்குழப்பம், எதிர் பார்த்தபடி காரியங்கள் முடியாததினால் கலக்கம், வீண் அலைச்சல், அகால போஜனம், குடும்பக் கவலை, பொருள் விரயம் அல்லது முடக்கம், செய் காரியங்களில் மறதி அல்லது பிசகு நேருதல். ஆதலின் இத்தினத்தில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாய் இருக்கின் நலம், பலன் தாத்தக்க நூதன காரியங்களை எதையும் தொடரக்கூடாது. பொதுவில் இந்நாள் மத்திய பலனைத் தரும்.

13-9-39 மாலை 4-33 முதல்
14-9-39 பகல் 1-47 வரை.

இந்நாள் உத்தமமான பலன் தரும், இஷ்டர்களால் மனமகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தாத்தக்க நூதன தொழில்களைத் தொடரின் வெற்றி தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

14-9-39 மாலை 1-47 முதல்
15-9-39 பகல் 11-25 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய்த் தொழில் நடக்கும், இஷ்ட காரியாதிகள் தடைப்படும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்கமுற்றதலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும், பொதுவில் சமப் பலன் தரும் நாளாம்.

15-9-39 பகல் 11-25 முதல்
16-9-39 காலை 9-30 வரை.

இந்நாளில் தொழில் சாதாரணமாய் நடக்கும், நேசரால் அல்லது தன் குடும்ப வகையில் கொடுக்கல் வாங்கலில் சிந்தனை, மயக்கம் உண்டாயின் உடனுக்குடன் நீங்கும், சில சந்தோஷச் சேதியும் நேசரொற்றுமையும் காரிய வெற்றியும் உண்டாகும், பொதுவில் சமப் பலன் தரும் நாள்.

16-9-39 காலை 9-30 முதல்
17-9-39 காலை 8-15 வரை.

இக்காலம் நிலையான தனங்கள் அடைவதற்காக எதுவைச் செய்யின் பின் மிகப் பலன் தரும், கொடுக்கல் வாங்கலில் சீர் திருத்தம் செய்ய எத்தனிக்கின் நன்மையுண்டாகும், நூதன தொழிலைச் செய்ய தொடரின் மேன்மை தரும், மேலோர்களைக் காணின் காரியம் கைகூடும், பொதுவில் இந்நாள் உத்தமமானது.

(6) திருவாதிரை-சுவாதி-சதயம்.

10-9-39 இரவு 1-5 முதல்
11-9-39 இரவு 10-21 வரை.

தேக சௌக்கியம், குடும்ப உல்லாசம், மித்திரரால் மகிழ்ச்சி, சேதியால் சந்தோஷம், தொழிலில் சமப்பலன், எக்காரியமும் எதிர்பார்த்த அளவில் நடக்காவிட்டாலும் சற்றேறக்குறைய பலன் தரும், அனுமத்து லாபம் பெறத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தராது, சமப்பலன் தரும் தினம்.

11-9-39 இரவு 10-21 முதல்
12-9-39 இரவு 7-27 வரை.

இத்தினத்தில் சாதாரணமாகத் தொழில் நடக்கும், சேதியால் கவலை, அந்நியருக்காக அலைச்சல், களத்திர புத்திர முகத்திருப்பம், பந்து மித்திரரால் கவலை, வீணை சில காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல். ஆயினும் இந்நாளில் ஒன்றும் கெடுதி நேராது. முக்கிய காரியங்களைப் பொறுத்துச் செய்வதே நலமாம். பொதுவில் இந்நாள் சமப்பலன் தரும்.

12-9-39 இரவு 7-27 முதல்
13-9-39 மாலை 4-33 வரை.

முடியக்கூடாத காரியங்கள் ஆயினும் இத்தினத்தில் தொடர்வார்களாயின் தக்க, வெற்றியைத் தரும், பிறரிடமிருந்து தன் காரியத்தை ஜெயிக்க வேண்டுமாயின் இந்நாளில் எத்தனம் செய்தால் தக்க பலன். அனுமத்து லாபங்கள் அடைய எத்தனிக்கினும் நலன் தரும், தேக சௌக்கியம், சாதாரணத் தொழிலில் மன உல்லாசம், ஆக இந்நாள் மிக உத்தமமானது.

13-9-39 மாலை 4-33 முதல்
14-9-39 பகல் 1-47 வரை.

தொழிலில் சில சங்கடங்கள், மனக்குழப்பம், எதிர்பார்த்தபடி காரியங்கள் முடியாததினால் கலக்கம், வீண் அலைச்சல், அகால போஜனம், குடும்பக் கவலை, பொருள் விரயம் அல்லது முடக்கம், செய் காரியங்களில் மறதி அல்லது பிசகு நேருதல். ஆதலின் இத்தினத்தில் எதிலும் சர்வ சாக்கிரதையாய் இருக்கின் நலம், பலன் தரத்தக்க நூதன காரியங்கள் எதையும் தொடரக் கூடாது. பொதுவில் இத்தினம் மத்திம பலனைத் தரும்.

14-9-39 பகல் 1-47 முதல்
15-9-39 பகல் 11-25 வரை.

இந்நாள் மிகவும் உத்தமமான பலன் தரும், இஷ்டர்களால் மனமகிழ்ச்சி நல்லோரிணக்கம். பலன் தரத்தக்க நூதன தொழில்களைத் தொடரின் வெற்றி தரும், பிறர் கையில் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு

எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

15-9-39 பகல் 11-25 முதல்
16-9-39 காலை 9-30 வரை

இத்தினத்தில் சாதாரணமாய்த் தொழில் நடக்கும், இஷ்ட காரியாதிகள் தடைபடும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்க முற்றகலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும், பொதுவில் சமப் பலன் தரும் நாளாம்.

16-9-39 காலை 9-30 முதல்.
17-9-39 காலை 8-15 வரை

இந்நாளில் தொழில் சாதாரணமாய் நடக்கும், நேசரால் அல்லது தன் குடும்ப வகையில் கொடுக்கல் வாங்கலில் சிந்தனை, மனமயக்கமுண்டாயின் உடனுக்குடன் நீங்கும், சில சந்தோஷ சேதியும் நேசரொற்றுமையும் காரிய வெற்றியும் உண்டாகும். பொதுவில் சமப் பலன் தரும் நாள்.

(7) புனர்ப்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

10-9-39 இரவு 1-5 முதல்
11-9-39 இரவு 10-21 வரை.

இந்நாளில் எத்தொழிலிலும் சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்வது நலமாம், மோட்டார் முதலிய வாகன நடையிலும் முடிந்த வரை நிதானமாய்ச் செல்வது நலம், நூதன பலன் தரத்தக்க காரியங்களைச் செய்யாதிருத்தல் நலம், எழுத்து முறையிலும் வழக்கு முதலிய காரியங்களிலும் முன் ஜாக்கிரதையுடன் ஆராய்ந்து செய்வது நலமாம், பொதுவில் இத்தினம் மத்திமம்.

11-9-39 இரவு 10-21 முதல்
12-9-39 இரவு 7-27 வரை.

தேக சௌக்கியம், குடும்ப உல்லாசம், மித்திரரால் மகிழ்ச்சி, சேதியால் சந்தோஷம், தொழிலில் சமப் பலன், எக்காரியமும் எதிர் பார்த்த அளவில் நடக்காவிட்டாலும் சற்றேறக் குறைய பலன் தரும், அனுமத்து லாபம் பெறத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தராது சமப்பலன் தரும் தினம்.

12-9-39 இரவு 7-21 முதல்
13-9-39 மாலை 4-33 வரை.

இத்தினத்தில் சாதாரணமாகத் தொழில் நடக்கும், சேதியால் கவலை, களத்திர புத்திர முகத்திருப்பம், பந்து மித்திரரால் கவலை, அன்னியர்களுக்காக அலைச்சல், வீணை சில காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், ஆயினும் இந்நாளில் ஒன்றும் கெடுதி நேராது, முக்கிய காரியங்களைப் பொறுத்துச் செய்வதே நலமாம், பொதுவில் சமப்பலன் தரும்.

13-9-39 மாலை 4-33 முதல்
14-9-39 பகல் 1-47 வரை.

முடியக்கூடாத காரியங்கள் ஆயினும் இத்தினத்தில் தொடருவார்களாயின் தக்க வெற்றியைத் தரும், பிறரிடமிருந்து தன் காரியத்தை

ஜெயிக்க வேண்டுமாயின் இந்நாளில் எத்தனம் செய்தால் தக்க பலன் தரும் சாதாரணத் தொழிலில் மன உல்லாசம், ஆக இந்நாள் மிக உத்தமமாம்.

14-9-39 பகல் 1-47 முதல்
15-9-39 பகல் 11-25 வரை.

தொழிலில் சில சங்கடங்கள், மனக்குழப்பம், எதிர்பார்த்தபடி காரியங்கள் முடியாததினால் கலக்கம், வீண் அலைச்சல், அகால போஜனம், குடும்பக் கவலை, பொருள் விரயம் அல்லது முடக்கம், செய் காரியங்களில் மறதி அல்லது பிசகு நேருதல், ஆதலின் இத்தினத்தில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாய் இருக்கின் நலம், பலன் தாத்தக்க நூதன காரியங்கள் எதையும் தொடரக் கூடாது, பொதுவில் இத்தினம் மத்திப பலனைத் தரும்.

15-9-39 பகல் 11-25 முதல்
16-9-39 காலை 9-30 வரை.

இந்நாள் மிகவும் உத்தமமான பலன் தரும், இஷ்டர்களால் மன மகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தாத்தக்க நூதன தொழில்களைத் தொடரின் வெற்றி தரும், பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

16-9-39 காலை 9-30 முதல்
17-9-39 காலை 8-15 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய்த் தொழில் நடக்கும், இஷ்டகாரியாதிகள் தடைபடும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு மனக் கலக்கமு முற்றகலும். தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும், பொதுவில் சமப்பலன் தரும் நாளாம்.

(8) பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி.

10-9-39 இரவு 1-5 முதல்
11-9-39 இரவு 10-21 வரை.

இக்காலத்தில் நிலையான தனங்கள் அடைவதற்கான எதுவைச் செய்யின் பின் மிகப் பலன் தரும், கொடுக்கல் வாங்கலில் சீர்திருத்தம் செய்ய எத்தனிக்கின் நன்மையுண்டாகும். நூதன தொழிலைச் செய்யத் தொடரின் மேன்மையைத் தரும், மேலோர்களைக் காணின் காரியம் கைகூடும், பொதுவில் இந்நாள் உத்தமமானது.

11-9-39 இரவு 10-21 முதல்
12-9-39 இரவு 7-27 வரை.

இந்நாளில் எத்தொழிலிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து கொள்வது நலமாம், மோட்டார் முதலிய வாகன நடையிலும் முடிந்த வரை நிதானமாய்ச் செல்வது நலம், நூதன பலன் தாத்தக்க காரியங்களைச் செய்யாதிருத்தல் நலம், எழுத்து முறையிலும் வழக்கு முதலிய காரியங்களிலும் முன் ஜாக்கிரதையுடன் ஆராய்ந்து செய்வது நலமாம், பொதுவில் இத்தினம் மத்திமம்.

12-9-39 இரவு 7-27 முதல்
13-9-39 மாலை 4-33 வரை.

தேக சௌக்கியம், குடும்ப உல்லாசம், மித்திரரால் மகிழ்ச்சி, சேதியால் சந்தோஷம், தொழிலில் சமப்பலன், எக்காரியமும் எதிர் பார்த்த அளவில் நடக்கா விட்டாலும் சற்றேறக்குறைய பலன் தரும், அனுமத்து லாபம் பெறத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தராது. சமப் பலன் தரும் தினம்.

13-9-39 மாலை 4-33 முதல்
14-9-39 பகல் 1-47 வரை.

இத்தினத்தில் சாதாரணமாகத் தொழில் நடக்கும், சேதியால் கவலை, களத்திர புத்திர முகத்திருப்பம், பந்து மித்திரரால் கவலை, அந்நியர்களுக்காக அலைச்சல், வீணான சில காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், ஆயினும் இந்நாளில் ஒன்றும்கெடுதிகள் நேராது, முக்கிய காரியங்களைப் பொறுத்துச் செய்வதே நலமாம், பொதுவில் இந்நாள் சமப் பலன் தரும்.

14-9-39 பகல் 1-47 முதல்
15-9-39 காலை 11-25 வரை.

முடியக்கூடாத காரியங்கள் ஆயினும் இத்தினத்தில் தொடருவார்களாயின் தக்க வெற்றியைத் தரும், பிறரிடமிருந்து தன் காரியத்தை ஜெயிக்க வேண்டுமாயின் இந்நாளில் எத்தனிக்கின் தக்க பலன் தரும், அனுமத்து லாபங்கள் அடைய எத்தனிக்கினும் நலன் தரும், தேகசௌக்கியம் சாதாரணத் தொழிலில் மன உல்லாசம், ஆக இந்நாள் மிக உத்தமமாம்.

15-9-39 பகல் 11-25 முதல்
16-9-39 காலை 9-30 வரை.

தொழிலில் சில சங்கடங்கள், மனக்குழப்பம், எதிர்பார்த்தபடி காரியங்கள் முடியாததினால் கலக்கம், வீண் அலைச்சல், அகால போஜனம், குடும்ப கவலை, பொருள் விரயம் அல்லது முடக்கம், செய் காரியங்களில் மறதி அல்லது பிசகு நேருதல், ஆதலின் இத்தினத்தில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாய் இருக்கின் நலம், பலன் தரத்தக்க நூதன காரியங்கள் எதையும் தொடரக்கூடாது, பொதுவில் இத்தினம் மத்திப பலனைத்தரும்.

16-9-39 காலை 9-30 முதல்
17-9-39 காலை 8-15 வரை.

இந்நாள் மிகவும் உத்தமமான பலன் தரும், இஷ்டர்களால் மன மகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தரத்தக்க நூதன தொழில்களைத் தொடரின் வெற்றி தரும், பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

(9) ஆயில்யம்-கேட்டை-ரேவதி.

10-9-39 இரவு 1-5 முதல்
11-9-39 இரவு 10-21 வரை.

இந்நாளில் தொழிலில் சாதாரணப் பலன். நேசர் அல்லது தன் குடும்ப வகையில் கொடுக்கல் வாங்கலில் சிந்தனை, மயக்கம் உண்டாயின் உடனுக்குடன் நீங்கும், சில சந்தோஷச் சேதியும் நேசரொற்றுமையும் காரிய வெற்றியும் உண்டாகும், பொதுவில் சமப்பலன் தரும் நாள்.

11-9-39 இரவு 10-21 முதல்
12-9-39 இரவு 7-27 வரை.

இக்காலத்தில் நிலையான தனங்கள் அடைவதற்கு எத்தனம் செய்யின் பின் மிகப் பலன் தரும். கொடுக்கல் வாங்கல் சீர்திருத்தம் செய்ய எத்தனிக்கின் நன்மையுண்டாகும். நூதன தொழிலைச் செய்யத் தொடரின் மேன்மையைத் தரும், மேலோர்களைக் காணின் காரியம் கைகூடும். பொதுவில் இந்நாள் உத்தமமானது.

12-9-39 இரவு 7-27 முதல்
13-9-39 மாலை 4-33 வரை.

இந்நாளில் எத்தொழிலிலும் சர்வ ஜாக்கிரதையாய் நடந்துகொள்வது நலமாம். மோட்டார் முதலிய வாகன நடையிலும் முடிந்த வரை நிதானமாய்ச் செல்வது நலம், நூதன பலன் தரத்தக்க காரியங்களைச் செய்யாதிருத்தல் நலம். எழுத்து முறையிலும் வழக்கு முதலிய காரியங்களிலும், முன் ஜாக்கிரதையுடன் ஆய்ந்து செய்வது நலமாம். பொதுவில் இத்தினம் மத்திமம்.

13-9-39 மாலை 4-33 முதல்
14-9-39 பகல் 1-47 வரை.

தேக சௌக்கியம், குடும்ப உல்லாசம், மித்திரரால் மகிழ்ச்சி, சேதியால் சந்தோஷம், தொழிலில் சமப்பலன், எக்காரியமும் எதிர்பார்த்த அளவில் நடக்காவிட்டாலும் சற்றேறக்குறைய பலன் தரும். அனுமத்து லாபம் பெறத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தராது. சமப் பலன் தரும் தினம்.

14-9-39 பகல் 1-47 முதல்
15-9-39 பகல் 11-25 வரை.

இத்தினத்தில் சாதாரணமாகத் தொழில் நடக்கும், சேதியால் கவலை, களத்திர புத்திர முகத்திருப்பம், பந்து மித்திரரால் கவலை, அன்னியர்களுக்காக அலைச்சல், வீணான சில காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், ஆயினும் இந்நாளில் ஒன்றும் கெடுதிகள் நேராது, முக்கிய காரியங்களைப் பொறுத்துச் செய்வதே நலமாம். பொதுவில் இந்நாள் சமப்பலன் தரும்.

15-9-39 பகல் 11-25 முதல்
16-9-39 காலை 9-30 வரை.

முடியக்கூடாத காரியங்கள் ஆயினும் இத்தினத்தில் தொடருவார்களாயின் தக்க வெற்றியைத் தரும். பிறரிடமிருந்து தன் காரியத்தை ஜெயிக்க வேண்டுமாயினும் இந்நாளில் எத்தனம் செய்தால் தக்க பலன் தரும், அனுமத்து லாபங்கள் அடைய எத்தனிக்கினும் நலன் தரும், தேக சௌக்கியம், சாதாரணத் தொழிலில் மன உல்லாசம். ஆக இந்நாள் மிக உத்தமமாம்.

16-9-39 காலை 9-30 முதல்
17-9-39 காலை 8-15 வரை.

தொழிலில் சில சங்கடங்கள், மனக்குழப்பம், எதிர்பார்த்தபடி காரியங்கள் முடியாததினால் கலக்கம், வீண் அலைச்சல், அகால போஜனம், குடும்பக் கவலை, பொருள் விரயம் அல்லது முடக்கம், செய் காரியங்களில் மறதி அல்லது பிசகு நேருதல். ஆதலின் இத்தினத்தில் எதிலும் சர்வ ஜாக்கிரதையாய் இருக்கின் நலம், பலன் தரத்தக்க நூதன காரியங்கள் எதையும் தொடரக்கூடாது. பொதுவில் இத்தினம் மத்திமப் பலனைத் தரும்.

திரை உலகம்

தமிழ்

மாடர்ன் தியேட்டர்ஸாரின் சத்தியவாணி எடிட்டிங் வேலைகள் முடிந்து இம்மாத முதல் வாரத்தில் சென்னாருக்குக் காட்சியளிக்கத் தயாராக இருக்கிறது. தென்னிந்தியாவில் பிரபல நகரங்களில் திரையிட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

* * *

சதி மகானந்தா படப்பிடிப்பு வேலை மும்முரமாக நடந்து வருகிறது. டைரக்டர் பாபுராவ் சவான் இதன் வெற்றிக்காக பெரிதும் சிரமமெடுத்துக் கொண்டிருக்கிறார். இதில் வி. வி. வி. பந்துலு, பி. பி. ரங்காச்சாரி, காமெடியன் ஏழுமலை, கொக்கோ, ராமய்ய சாஸ்திரி, பாகீரதி (சுந்தரமூர்த்தி நாயனார் புகழ்) கோமளம் (சிந்தாமணி புகழ்) சி. எஸ். சாமண்ணா மற்றும் பல நக்ஷத்திரங்களும் நடிக்கின்றனர்.

* * *

டைரக்டர் ஸ்ரீ டி. ஆர். சுந்தரம் பல சிவஸ்தலங்களைப் படம் பிடிக்க தென்னாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார். இந்த வாரத்தோடு படப் பிடிப்பு வேலை முடிந்துவிடும்.

* * *

மாடர்ன் தியேட்டர்ஸார் கூட்டுறவில் தயாராகும் ஹரிஹரமாயா என்ற படத்தை ஸி. வி. ராமன் டைரக்ட் செய்வார். இதன் படப் பிடிப்பு வேலை இரவு பகலாக நடந்து வருகிறது. இதில் டி. எஸ். கிருஷ்ணவேணி கதாநாயகியாகவும், எம். எஸ். முருகேசன் ஹாஸ்ய பாகத்திலும் நடிக்கிறார்கள்.

* * *

அரோரா பிலிம் கம்பெனியாரின் ஜகத்குரு சங்கராச்சாரியார் அநேகமாக இந்த மாதத்திற்குள் முடிந்துவிடும். எல்லாம் ஒரே சங்கீத மயமாக இருக்குமாம்.

* * *

திருநீலகண்ட நாயனாருக்குப் பிறகு ஸ்ரீ தியாகராஜ பாகவதர் மதுரை முருகன் டாக்கி பிலிம் கம்பெனியாரின் மஞ்சுகோஷா என்ற படத்தில் தோன்றுவார். இவருடன் பிரசித்தி பெற்ற கன்னட நடிகையான திருபுராம்பாள் நடிப்பார்.

சியாமளா பிக்சர்ஸாரின், சீதையின் ஜனனத்திற்கு பி. எஸ். ராமய்யா கதை வசனம் எல்லாம் எழுதி முடித்துவிட்டார். மேற்கொண்டு வேலைகள் நடந்து வருகின்றன. இதில் வி. வி. சடகோபன் செல்லம் முதலியவர்கள் நடிக்கின்றனர்.

* * *

டி. பி. ராஜலக்ஷிமி, வி. ஏ. செல்லப்பா, பேபி ருக்மணி மூவரும் நடித்துவரும் மாத்ரு தர்மம் என்ற படம் மதர் இந்தியா என்ற கதையைத் தழுவியதாக இருக்கும். அநேகமாக காக்ஷிகள் எல்லாம் அதே மாதிரியே அமைக்கப்பட்டிருக்கின்றன.

* * *

பிராக் ஜோதி பிலிம் கம்பெனியார், ஒளவை என்ற படத்தை எடுக்கப் போகிறார்கள்.

* * *

எம். பி. பி. ஸி. ஸ்டுடியோவில், பக்த சேதா படப் பிடிப்பு வேலை ஆரம்பமாகி விட்டது. ஸ்ரீ பிரகாஷ் டைரக்ட் செய்கிறார். பாபநாசம் சிவன் முக்கிய நடிகர்.

* * *

சந்திரபிரபாவின் சகுந்தலை சென்னை கியூடோன் ஸ்டுடியோவில் எடுக்கப்படும். சீக்கிரம் டங்கன் டைரக்ஷனில் வேலை ஆரம்பமாகும்.

* * *

தெலுங்கு

மள்ளி பெள்ளியில் விதவா விவாக ஸீன் ஒன்று சென்ற வாரம் எடுக்கப்பட்டது. மணமகனாக ஒய். வி. ராவும், மணமகளாக காஞ்சனமாலாவும் நடித்தார்கள். இதை ஒய். வி. ராவ் டைரக்ட் செய்கிறார்.

* * *

மெட்ரோபாலிடன் பிச்சர்ஸார் டைரக்டர் வி. புல்லய்யாவைக் கொண்டு மாலதி மாதவ் என்ற படத்தை கல்கத்தா பாரத் லக்ஷிமி ஸ்டுடியோவில் எடுத்து வருகின்றனர். இதில் புஷ்பவல்லி, பானுமதி, சீனுவாசராவ், ஏ. வி. சுப்பராவ் முதலியவர்கள் நடிக்கின்றனர்.

* * *

ரகுராமா பிக்சர்ஸார், வசந்தசேனா என்ற படத்தை ஆந்திரா ஸினிடோனில் நடித்த நக்ஷத்திரங்களையும் திறமை வாய்ந்த டைரக்டரையும் கொண்டு எடுக்கப் போகிறார்கள்.

* * *

சாரதி பிலிம்ஸார் ரயத்து பிட்டாவுக்குப் பிறகு அவர்களுடைய இரண்டாவது படமான தேச பந்துவில் நடிக்க ரயத்துபிட்

டாவில் நடித்த நடிகர்களையே அமர்த்தி இருக்கிறார்கள். டைரக்டர் ஸ்ரீ ராமப்பிரும்மம்தான்.

* * *

அடையாறு பிராக் ஜோதி பிலிம் ஸ்டுடியோவில் அப்பாஜீ என்று ஒரு படம் எடுக்கப்படும். இது விஜய நகரத்தை அரசாண்ட ராயர் பரம்பரையைப் பற்றியதாக இருக்கும்.

* * *

பேமஸ் புரொட்யூஸர்ஸ், என்ற கம்பெனியார், ஸ்திரீ அல்லது பதி விரதை என்ற தெலுங்கு படத்தை எடுப்பார்கள்.

* * *

ஹிந்தி

சுதாமா புரொடெக்ஷனின் (மோதிலால், சபிதாதேவி னுடையது) இரண்டாவது படத்திற்கு வங்க ஆசிரியர் சரத் சந்திர சட்டர்ஜியின் கதை ஒன்றைத் தழுவி எழுதப்படும்.

* * *

பிரபாத் கம்பெனியின் பிரசித்த நடிகையான சாந்தா ஆப்தே கல்கத்தா கம்பெனி ஒன்றுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறாராம். அநேகமாக பிலிம் கார்ப்பொரேஷன் கம்பெனியாரின் நாலாவது படத்தில் தோன்றுவார் என்று தெரிகிறது.

* * *

முடிவுறுத கதை என்ற படம் சிக்கிரம் திரைக்கு வந்துவிடும். இதில் தூர்க்காபாய் கோட்டே, வாஸந்தி, ரோஸ், பிரிதிவிராஜ் முதலியவர்கள் நடிக்கின்றனர். இதை சதுர்புஜ தேசாய் டைரக்ட் செய்திருக்கிறார்.

* * *

ஆங்கிலம்

கொலம்பியா கம்பெனியாரின் பிரபல டைரக்டர் பிராங்க் காப்ரா (Mr. Smith goes to Washington) 'ஸ்மித் வாஷிங்டன் போகிறார்' என்ற படத்தை முடித்துவிட்டார். இதில் ஜீன் ஆர்தர், ஜேம்ஸ் ஸ்டூவர்ட் இருவரும் முக்கிய நடிகர்கள்.

* * *

அவர்களுடைய மற்றொரு படமான, 'கோல்டன் பாய்' என்பதில் பார்பாரா ஸ்டான்விக்கும் புதிய நடிகரான வில்லியம் ஹோல்டனும் நடிக்கின்றனர்.

* * *

ஷெர்லி டெம்பிளின் அடுத்து வரும் படத்தின் பெயர் (Susannah of the Mounties) 'ஸூஸானா ஆப் தி மௌண்டிஸ்' என்பது. இது ரொம்ப அபூர்வமாக இருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

* * *

சுபாஷின் விகடம்

(போன்னி)

சென்னை கடற்கரையில், சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலையில் மாஜி காங்கிரஸ்வாதி ஸ்ரீ. எஸ். சீனிவாச அய்யங்காரின் தலைமையின் கீழ் நடந்த கூட்டத்தில், தேச கவுரவ் சுபாஷ் சந்திர போஸ், காங்கிரஸ் காரிய கமிட்டியைக் கீழ்க்கண்டவாறு கேலி செய்திருக்கிறார்.

"காங்கிரஸ் பிரசிடெண்ட் ரஞ்சியில் இருக்கிறார். அவரது வலது கை, பம்பாயில் இருக்கிறது. அவரது இடது கை, லட்சுமண புரியில் இருக்கிறது. அவருடைய மனச்சாட்சி வார்தாவில் இருக்கிறது."

இப்பேர்ப்பட்ட காரிய கமிட்டியால் என்ன ஆகும் என்று 'தேச கவுரவ்' கிண்டல் செய்கிறார். இது வெறும் அரட்டை. இதைப்போல, நான் போஸைப்பற்றிக் கேலி செய்யட்டுமா?

"சுபாஷின் கால்கள் தரையில் நடக்கின்றன. அவரது கைகளோ, இரண்டு கங்குகளிலும் தொங்குகின்றன. அவரது திவ்ய முக மண்டலமோ, அவரது தலையில் பதிந்து கிடக்கின்றது. அவரது தலையோ, ஆகாயத்தில் ஊசலாடுகிறது. அவரது உடல், தலைக்கும் காலுக்கும் நடுவில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கின்றது: அவரது இதயம், ஒரு சமயம் பாஸிஸத்திலும், ஒரு சமயம் பொதுஉடமையிலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது!'

இப்பேர்ப்பட்ட சுபாஷ் பாபுவால் என்ன ஆகும் என்று நான் கேட்கலாமா? கேட்கக்கூடாது என்பீர்கள். நான் உபயோகப்படுத்தினது நாகரிக பாஷை அல்ல என்றும், வெறும் புரளி செய்வது பொறுப்பில்லாத்தனம் என்றும் என்னை நீங்கள் கோபித்தாலும் கோபிக்கலாம்.

சுபாஷ் பேசியிருப்பதைப் போலவே, நானும் வேறு விஷய சம்பந்தமாக விகடம் செய்யலாமா?

"வீடு என்றால், தனித்தனி பகுதிகளாகப் பிரிந்து கிடப்பது. எவ்வளவு அசௌகரியம்! சமையலறையும் கக்கூசும் ஒரே இடத்திலிருக்கவேண்டும், படுக்கை அறையும், பேச்சு இடமும் ஒன்றாக அமையவேண்டும். மாடியும் கீழும் ஏன் ஒன்றாக இருக்கக்கூடாது? வீட்டின் பல பகுதிகளும், ஒன்றாக அமையவேண்டாமா?"

இந்த மாதிரி, நான் உங்களைக் கேட்டால், எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்லுவது மல்லாமல், என்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க, கட்டாயமாக, முயற்சி செய்வீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனாலேதான், அப்படி யொன்றும் வாயால் சொல்லாமல், எழுத்தில் எழுதிவிட்டேன்.

தேச கவுரவ் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டிருக்கும் சுபாஷ், மேற்சொன்ன கிண்டலின் மூலமாக, தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுகிறாரா? நீங்களே யோசித்துப் பார்த்து, முடிவுக்கு வாருங்கள்.

அவர் குறிப்பிடும் பேர்வழிகள் யார்? ராஜேந்திர பிரசாத், ஸர்தார் படேல், அபுல்கலாம் ஆசாத், மகாத்மா காந்தி, இந்த நான்கு பேர்களைப்பற்றி, போஸ் அவர்கள் கிண்டல் செய்யலாமா? பதுங்கிப் பதுங்கிப் பேசி வந்த "தேசகவுரவ்", சென்னைக் கடற்கரைக் கூட்டத்தைக் கண்டவுடன், குஷி ஏற்பட்டு, கண்டபடியெல்லாம், பெரியார்களைப்பற்றிப் பேசலாம் என்று (அசட்டு) துணிவு கொண்டாரோ என்னவோ?

சாதாரணமான பள்ளிக்கூடப் பையன் பேசுகிற தோரணைக்கு வந்துவிட்ட தேச கவுரவ், இனி பாஷைக்கு எவ்வித மதிப்பும் கொடுக்க மாட்டார் என்பது நிச்சயம். பெரியார்கள், அவரது திருக்கரங்களில் அகப்பட்டுக்கொண் டிருப்பதுபோல, சொற்களும், இனி, அவர் வாயில் அகப்பட்டுக்கொண்டு விழிக்க வேண்டியதுதான்.

இன்ன சொல்லை, இப்படித்தான், இந்த சந்தர்ப்பத்தில்தான் உபயோகப்படுத்த வேண்டும் என்ற நிர்ணயத்துக்கு, இனி தேச கவுரவ், கட்டுப்படமாட்டார் என்பது உறுதி. அவ்வாறு கட்டுப்பட்டால், அவரது பிரஜா உரிமைக்கு ஆபத்து வந்து, அது அழிந்து போனாலும், போய்விடாதா!

தேசக்கவுரவ், இனி பெரியார்களுக்கு மதிப்பு வைக்கமாட்டார்; பாஷைக்கு மதிப்பு வைக்கமாட்டார். கருத்துக்கும் உண்மைக்கும் பக்தி செலுத்த வேண்டும் என்ற தேவை, அவருக்கு இனி இல்லை. லட்சியத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் அடங்காத சென்னை கடற்கரை கூட்டம் செய்த அற்புதத்தைப் பாருங்கள்.

நிமிஷக் கதைகள்

முடியாது.

"ஐந்து ரூபாய் கடன் கொடுக்கிற ஆசாமி எங்கே இருக்கிறுன் என்று சொல்ல முடியுமா?"

"முடியாது, அது தெரிந்தால் நான் உன்னிடம் ஏன் சொல்கிறேன்?"

* * *

இவன் எப்படி?

வேலைக்காரன்:—இன்னிக்கு பூரா முனியன் தோட்டத்திலே ஒருகை மண்ணுகூட வெட்டிப் போடலீங்க.

எஜமான்:—ஆமாண்டா அது உனக்கு எப்படித் தெரியும்?

வேலைக்காரன்:—நான் தான் அவனைக் கவனிச்சுக்கிட்டே நாள் பூராவும் நின்னுகிட்டு இருந்தே னுங்களே.

* * *

அவன் யுக்தி

கிட்டு கடைக்குப் போய் கடைக்காரனிடம் "ஒரு அணுவுக்கு 'கிரஷ்' கொடு" என்று கேட்டான். கடைக்காரன் எடுத்துக்கொடுத்தான். இதற்குள் கிட்டு என்னவோ நினைத்துக் கொண்டான் "கிரஷ் வேண்டாம் அதற்குப்பதில் ஒரு அணுவுக்கு பிஸ்கெட் கொடு" என்றுன். கடைக்காரன் பிஸ்கெட்டை எடுத்துக் கொடுத்தான், கிட்டு பிஸ்கெட்டை வாங்கிக்கொண்டு காசு கொடுக்காமல் நழுவினன்.

கடைக்காரன்:—அம்பி! பிஸ் கெட்டுக்குக் காசு எங்கே?

பையன்:—அதற்குப் பதில் தான் ஒரு கிரஷ் கொடுத்து விட்டேனே.

கடைக்காரன்:—அப்படியானல் கிரஷுக்கு பணம் எங்கே?

பையன்:— கிரஷைத்தான் நீயே வாங்கிக் கொண்டாயே.

* * *

உத்தியோக தோரணை

ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர் தன் மனைவியிடம் பிரமாதமாகச் சண்டையிட்டு விட்டுக் கோபமாக வெளியில் போனர். இதைக்கண்ட பக்கத்து வீட்டு ஸ்திரீ அவளிடம் வந்து "என்ன சண்டை?" என்று கேட்டாள்.

"அவருக்கு வேறு வேலை என்ன? என்னைப் பிறந்தாத்திலேருந்து நேற்றே வரச் சொல்லி கடிதம் எழுதியிருந்தார். இன்றைக்குதான் வந்தேன். ஏன் லேட் என்று எங்கப்பா விடமிருந்து சீட்டு வாங்கிவரச் சொல்கிருர்."

* * *

உமக்கேன் கவலை?

நடு ராத்திரியில் எழுந்து உலாத்த ஆரம்பித்தார் சாம்பசிவய்யர். அவர் மனைவி "ஏன் இப்படி?" என்று கேட்டாள்.

"நாளையதினம் ராமய்யருக்கு பத்து ரூபாய் கடனைக் கொடுக்க வேண்டும். கையிலே பணமில்லை எப்படிக் கொடுப்பது என்று கவலையாயிருக்கிறது."

"ரொம்ப நன்றாயிருக்கிறது. அவரல்லவோ உங்களிடம் எப்படி வாங்குவது என்று தூங்காமல் இருக்கவேண்டும். போய்ப்படுத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

* * *

ரொம்ப புத்திசாலி!

"அடே அம்பி, இந்தக் குளத்தில் ஆழம் அதிகமோ?"

"இல்லை மாமா!"

பெரியவர் குளத்தில் இறங்கினார். ஆழம் அதிகமாயிருந்ததால் முழுகித் திக்குமுக்காடி வெளியே வந்தார்.

"எலே, ஆழமே இல்லேன்னு சொன்னாயேடா?"

"இருக்காதே மாமா! காலையிலேகூட ஒரு வாத்து இந்தக் கரையிலேருந்து அந்தக் கரைக்குப் போச்சு. அதுக்கு வயிறு அளவுக்குக்கூட ஜலம் வரவில்லையே."

* * *

நம்பாதீர்

கைதி குதிரையைத் திருடினவன். கோர்ட்டில் வக்கீல் அவன் சார்பில் பேசிக் கொண்டிருந்தார்.

ஜட்ஜ்:—சரிதானய்யா, கைதி தான் குதிரையைத் திருடியதாக ஒப்புக்கொள்ளுகிறானே. அப்புறம் என்ன?

வக்கீல்:—ஆனால் அவன் வார்த்தையை நம்பாதீர்கள். அவன் மகா மோசக்காரன்.

* * *

புரிந்ததா?

தினம் நேரம் கழித்து வரும் பேரனைப் பார்த்து அவனுடைய தாத்தா, "ஏண்டா சீனு! நீ பள்ளிக்கூடம் விட்டதும் நேராக வீட்டுக்கு வராமல் எங்கெல்லாம் போய்விட்டு வருகிறாய்?" என்று கேட்டார்.

சீனு:—தாத்தா! பள்ளிக்கூடம் விட்டதும் ஒரு இடத்துக்குப் போவேன். அந்த இடம் எது என்று சொன்னால் உனக்குத் தெரியாது. அப்புறம் மணி ஏழுக்கெல்லாம் வேறொரு இடத்துக்குப் போவேன், அந்த இடமும் உனக்குத் தெரியாது. பிறகு அங்கிருந்து இன்னொரு இடத்துக்கு வேடிக்கை பார்க்கப் போவேன். அந்த இடத்தை நீ சொப்பனத்திலே கூட கண்டிருக்கமாட்டாய். அதற்குப் பிறகு இரண்டு மணி நேரம் கழித்து என்னவெல்லாமோ விளையாடி விட்டு வீட்டுக்கு வருவேன்.

தாத்தா:—தினமும் இதை உன்னைக் கேட்டுத் தெரிஞ்சுக்கணும் என்று நினைக்கிறது. இன்று தான் கேட்டுத் தெரிஞ்சு கொண்டேன்.

* * *

ஆஹா ஹா!

"எனக்கும் என் மனைவிக்கும் சண்டை வந்தது என்றால் கடைசி வார்த்தை என்னுடையதாகத்தான் இருக்கும்."

"நல்லது; அப்போதுதான் நீ ஜயித்தவனாவாய்."

"ஆமாம்; கடைசியில் நான் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விடுவேன்."

பாரத தேவி

வாக ஆசிரியர் வ. ரா. | தனிப்பிரதி 2 அணு

மலர் 1 | ஞாயிறு 17-9-'39 | இதழ் 11

பொருள் அடக்கம்

18691

விஷயம்			பக்கம்
இருள் மாயை	...	...	2
காரிய கமிட்டியின் தீர்ப்பு	...	...	3
லோக சஞ்சாரம்	...	...	7
போர் முனையில்	...	...	10
வின்ஸ்டன் சர்ச்சில்	...	...	14
அகத்தியன் வைத்தியம்	...	...	16
பாரதியாரின் மூர்த்தி	...	வ. ரா.	19
பொறுப்பு கழிய	...	அசுவதி	23
யுத்தம் வந்துடுத்தாமே!	...	சி. ரா. சேஷாத்திரி	25
லஞான வரலாறு	...	...	29
ாகத்தின் முன்னிலையில்		கு. ப. ராஜகோபாலன்	33
சம்பந்தி விஜயம்	...	ஜயம்	39
தக்கடி	...	சி. சு. செல்லப்பா	42
பழிக்குப் பழி	...	படம்	48
ஆளுக்குள்ளே ஆளு ; எத்தனை ஆளு ;	...	...	49
மேரி கியூரி	...	வெ. ம.	52
னிஷம இனியதா ?	...	....	57
லக்கின குணாதிசயங்கள்	...	...	60
ராண் நிழல்	...	"ரஞ்சனன்"	65
பெரிய விஷயம்		பு. வே. சுப்ரமண்யம்	70
அதிருஷ்டக் கட்டை	...	"குகப்பிரியை"	72
நிஜம்மா !	...	ராஜம்	76
காதலுக்காக !		சுசீலா ஸாக்ஸேனு	81
நட்சத்திர பலா பலன்கள்	...	...	87
திரை உலகம்	...	...	97
திருநீலகண்ட நாயனார்	...	வ. ரா.	100
நிமிஷக் கதைகள்	...	...	103

மாயை இருள்

சென்னை மரீனா 'கடற்கரை'யில் இப்பொழுது இரவில் விளக்கு கிடையாது;—அதாவது அஸ்தமித்தவுடன் மின்சார விளக்குகள் முன்போல மினுக்கென்று பற்றிக்கொள்வதில்லை. யுத்த நிலைமையை உத்தேசித்து வெளிச்சம் வரிசையாகத் தென்பட்டால் சென்னைக்கு குண்டு வீச்சு ஆபத்து ஏதாவது வந்துவிடுமோ என்றுதான் இந்த மாதிரி 'பிளாக்கவுட்டு.'

ஆனால் இருட்டினதற்கு மேலும் உல்லாசக் (ப்ளெஷர்) கார்கள் ஓயாமல் 'ஹெட்லைட்'களுடன் 'பூம்பூம்' என்று எட்டுமணிவரையில் இருட்டில் அங்குமிங்குமாக ஓடி அலறிக்கொண்டேதான் இருக்கின்றன. அந்த இருளில் அவை பிரம்மாண்டமான மின்மினிகள் எங்கும் மொய்த்துக்கொண்டது போல ஒளி கக்கிக்கொண்டு பறக்கின்றன.

ஆறரை மணிக்கு இருட்டி விடுகிறது. மணலில் உட்கார்ந்து மாலையை அனுபவிப்பவர்களுக்கு என்றுமே தெரு விளக்குகள் தேவை இருந்ததில்லை. ரோட் ஓரத்து மேடையில் மௌஜாக நடந்து அங்கு மிங்கும் பார்த்து அகமகிழ்பவர்களுக்கும், ரேடியோ அருகில் கைப்பிடிச் சுவரின்மேல் உட்கார்ந்து கொஞ்சமும் மரியாதையின்றி மாதர்களைப்பார்க்கும் கோஷ்டிக்கும் தான் இப்பொழுது இருட்டினவுடன் ஆனந்தம் ஓய்ந்து விடுகிறது. முகத்துக்கு முகம் தெரிகிறதில்லை.

இருட்டில் கடல் மணலில் உட்கார்ந்துகொண்டோ அல்லது மேல் வேஷ்டியை விரித்துப் படுத்துக்கொண்டோ எண்ணாத விஷயங்களைப்பற்றி எண்ணிக்கொண்டு பொழுது போக்குவது ஒரு தனி இன்பம். பக்கத்தில் ஒரு நண்பன் ஒத்த மனதுடன் ஒரு வார்த்தையும் பேசாமல் இருப்பது தான் என்ன கவர்ச்சி !

பக்கத்தில் பல தலை நாகம்போல் கடல் அலைப் படங்கள் எடுத்து இடைவிடாமல் சீறிக்கொண்டிருக்கிறது. உலகத்தையே அழிக்கக் கூடிய ஒரு பிருகிருதி சக்தி அப்படிக் கரையோரத்தில் மந்திரத்தால் போலக் கட்டுண்டு கிடக்க, மற்றொரு பக்கம் வாழ்க்கைத் தெருவில் உயிர் ஓட்டமும் நடையுமாக இருக்கிறது.

அந்தக் கடல் ஓசைக்கும் கார் ஓசைக்கும் மேலே, அவை நடுவே கிளம்பி வருகிறது ரேடியோ மூலம் ஏதோவொரு உள்ளத்தை உருக்கும் பெண் குரல். இவை யாவற்றையும் கூட கொஞ்சம் மறந்து இருள் கட்டிய அமைதி வீட்டில் மனது சிறிதளவு இளைப்பாறி, வாழ்க்கையையே விட்டு வெளியேறி கூட்டுக்கு வெளியே பட்சி கிளையில் இருப்பதுபோல சற்று காற்று வாங்குகிறது.

காரிய கமிட்டியின் தீர்ப்பு?

யுத்தக் காலத்தில், காங்கிரசை நடத்தும் சர்வாதிகாரியாக காந்தி இருக்க வேண்டும் என்றும், அவருக்கு அது சம்பந்தமாக, பூரண அதிகாரம் கொடுப்பது என்றும் காங்கிரஸ் காரிய கமிட்டி அனேகமாக முடிவுக்கு வந்துவிட்டதாக, செய்தி கூறுகிறது. இந்த முடிவு, முன்னணிக்கட்சியின் தலைவர் ஸ்ரீ சுபாஷ் போஸ் அவர்களுக்கும் அவர்களைப் போன்றவர்களுக்கும் பிடிக்காமலிருக்கலாம். ஆனால், பொதுவாக, நமது நாடு, அந்த முடிவை வரவேற்கும், அதுவும் குதூகலத்துடன் வரவேற்கும் என்பதில் சந்தேகமில்லை.

காங்கிரஸ் தலைவரின் மனச்சாட்சி காந்தி என்று சுபாஷ் கேலி செய்தார். காந்தி, ஹிந்துஸ்தானத்தின் மனச்சாட்சி என்பதை, காரியக் கமிட்டியின் முடிவு தெளிவுபடுத்திவிடும். மேற்சொன்னவாறு, காரிய கமிட்டி, முடிவுக்கு வருமுன்னர், காந்தியும் ஜவஹரும், சில மணி நேரம் தனித்துப் பேசிக்கொண்டிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இதுவும் கிரமப்படி நடக்க வேண்டிய விஷயம்தான்.

“ சுயராஜ்யம் தானாக வரும்; ஆனால் லண்டன் நகரம் ஜெர்மனி இவைகள் அழிவது என்பதை யோசித்துப் பார்த்தால் உடல் நடுங்குகிறது ” என்று காந்தி சொன்னதைப் போல உலகத்தில் எத்தனைபேர்கள் சொல்ல முடியும்? சுயராஜ்யத்துக்காக இந்தியா போராடி, பூரண வெற்றி கிடைக்காமல் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், “ சுயராஜ்யத்தைப்பற்றி கவலை இல்லை. அது வந்தே தீரும். ஆனால் மனிதவர்க்கம் தனது அழிவைத் தேடிக்கொள்ளும் அறிவீனத்தை நினைக்கையில், உடல் நடுங்குகின்றது ” என்று காந்தி சொன்னது, இந்தியாவின் தனி நாகரிகத்தின் தனிக் குரலாகும்.

சுயராஜ்யத்தைப் பற்றிக் கவலை இல்லை என்று வேறு ஒருவரும் இவ்வளவு துணிவோடு பேச முடியாது. காந்தியால்தான் முடியும். மனிதவர்க்கத்தின் க்ஷேமத்தைக் கருத்தில் கொண்டே, இந்தியா பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கிறது. “ தன்

வீடு நன்ருக இருக்கவேண்டும்; அயல் வீடு, இமைப் பொழுதில், பாழாகப் போகவேண்டும்" என்று பொதுவாக எந்த இந்தியனும் எண்ணத்துணிய மாட்டான். உலகம் வாழ்க என்பதுதான் அவன் எப்பொழுதும் செய்யும் பிரார்த்தனை. இதை, அவனுடைய அசட்டுத்தனமாகவும் பலவீனமாகவும் அர்த்தம் செய்துகொண்டு, ஏளனம் செய்பவர்களும் உண்டு.

அவர்களுக்கு இந்தியாவின் தனிப் போக்கான நாகரிகம் தெரியவில்லை என்பது தெளிவு. அரசியலில் இந்தியா, பிரிட்டனுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதால், இந்தியாவுக்கு தனி நாகரிகமும் பெருமை கொண்ட தனிப் பாரம்பரையும இல்லை என்று சொல்லத் துணிவது தவருகும். ரோமாபுரிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த ஆதென்ஸ் (கிரீஸ்) ராணுவ பலத்தில் தவிர, மற்றெல்லா அம்சங்களிலும் ரோமாபுரியைக் காட்டிலும் உயர்வு கொண்டதாகவே வாழ்ந்தது.

காந்தியை குண்டுக்கட்டாகக் கட்டி தனி அறையில் தள்ளக்கூடிய உடல் வலிமை யுள்ளவனை, காந்தியைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று கொண்டு, அவனைக் கும்பிட முடியுமா? அவனுக்கு, முரட்டு முட்டாள் என்று தயங்காமல் பட்டம் சூட்டிவிடலாம். தரித்திர காலத்தில் தனது கௌரவத்தையும் தர்மத்தையும் இழக்காமல் வாழ்பவனே உத்தமன். "மற்றவனுடைய கஷ்டம் எனது அதிருஷ்டம்" என்று எண்ணுபவன் அதமன், கேவலமானவன்.

அரசியல் போராட்டத்தில் தர்ம சாஸ்திரத்துக்கு வேலை இல்லை என்று சொல்லுவது தவறு. வாழ்க்கையின் எந்தப் பகுதியிலே, தர்ம சாஸ்திரம் தேவையோ! "அரசியலிலே தர்மம் பார்க்க வேண்டாம். கோர்ட்டிலே, உண்மை சொல்ல வேண்டாம். வியாபாரத்திலே, பொய் சொன்னுல்தான், லாபம் கிடைக்கும். காதலிலும் போரிலும், எத்தனை பொய்கள் வேண்டுமானுலும் சொல்லலாம்" என்று நாம் அடுக்கிக் கொண்டே போனுல், மெய் பேசுவதற்கு, மனித வாழ்க்கையில் எந்த சந்தர்ப்பம் மிஞ்சும் என்று தெரியவில்லை.

வாழ்க்கையை, அறியாப் பிள்ளையின் கண்ணுல் பார்ப்பதும் குழந்தை அறிவால் ஆராய்ச்சி செய்வதும் மிகவும் பாபமான காரியமாகும். வாழ்க்கை, அவ்வளவு எளிதான வேலை அல்ல. வாழ்க்கையின் ஒரு பகுதியைத் தொட்டு அழுத்தினுல், அது மற்றப்பகுதிகளில் போய் உதையும். ஆகவே, இலட்சியமும் அதற்கேற்ற சாதனமும் இல்லாத வாழ்க்கை, மிருகப் பிராயமான வாழ்க்கை என்பதில் சந்தேகமில்லை. அந்த மிருகப் பிராயமான வாழ்க்கையின் இலட்சியத்தையும் சாதனத்தையும் கைக்கொண்டு, மனித வர்க்கம் ஒரு நாளும் முன்னேற முடியாது.

நெருக்கடிக் காலத்தில் இலட்சியத்தைத் தளர்த்துவதும் கௌரவத்தைக் குறைத்துக் கொள்ளுவதும் உத்தம புருஷர்கள் செய்யக்கூடிய காரியமல்ல. அது குளத்தில் விளையாடும் தவளைகளின் பேரில், கல்லை விட்டெறிந்து வேடிக்கை பார்க்கும் விளையாட்டுப் பிள்ளைகளின் வேலையாகும்.

தற்போதய போர் நெருக்கடிக் காலத்தில், காந்தி உயிருடன் இருப்பது இந்தியாவின் அளப்பரிய பாக்கியமாகும். காந்தி இந்தக் காலத்தில் இல்லாமலிருந் திருந்தால், "பிறனுடைய கஷ்டம் என்னுடைய அதிருஷ்டம்" என்ற சுய நலத் தத்துவம் மேலோங்கி, நமது நாட்டின் கௌரவத்தையும் குலைத்துவிட்டு, நாடு கோரும் பலனையும் கிட்டாமல் அதுசெய்திருக்கும்.

எதையும் பலவீனக் கண்ணோடு அல்லது சுய நலப்பார்வையோடு பார்ப்பது முடியாத காரியம். சுய நலம் என்பதே ஒரு பொய்யான உணர்ச்சி. அதைப்பற்றி பன்னிப் பன்னிப் பேசி, மனிதர்கள் தங்கள் மூளைகளைக் குழப்பிக்கொண்டு விட்டார்கள்; தங்கள் இயற்கையான கௌரவத்தையும் குறைத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில், காந்தி, தலைநிமிர்ந்து, மனிதனுடைய உண்மையான தன்மை இன்னதென்று உலகத்துக்கு எடுத்துக் காண்பிப்பது இந்தியாவின் பாக்கியம் அல்லவா?

பேரம் செய்யாமல் பிரிட்டனுக்கு இந்தியா உதவிசெய்தால், கடைசியில் பிரிட்டன், இந்தியாவை ஏய்த்துவிடும் என்று சிலர் சொல்லக்கூடும். பேரம் செய்து, உதவி செய்தால், அப்பொழுது மட்டும் பிரிட்டன் இந்தியாவை ஏய்க்காது என்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது?

இந்தக் காலத்திலேயே, பிரிட்டனோடு போராட வேண்டும் என்று சுபாஷ் போன்றவர்கள் சொல்லுகிறார்கள். இந்தியாவின் போராட்டம் தனித்தன்மை கொண்டது. அந்தப் போராட்டத்தின் சாதனங்கள் குண்டு துப்பாக்கி அல்ல; விஷக்காற்றல்ல; வெடிகுண்டல்ல; ஆகாய விமானமல்ல; போர்க்கப்பல் அல்ல; அந்தப் போராட்டத்துக்கு அடிப்படையான சாதனம் அஹிம்சையாகும்.

நாட்டிலும் காங்கிரஸ் வட்டாரத்திலும் அஹிம்சை உணர்ச்சியும் அஹிம்சையில் நம்பிக்கையும் குறைந்து வருவதால், அஹிம்சைப் போராட்டத்துக்கு இது தக்க தருணம் அல்ல என்று காந்தி சொல்லுகிறார். சாத்விகப் போராட்டம் நமது நாட்டின் சாதனமாக இருக்கும் வரையிலும், சாத்விகப் போராட்டத்தைக் கண்டுபிடித்த காந்தியின் சொல்படி நடந்து தான் ஆகவேண்டும். வேறு வகைப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்கள், எதையாவது உளறிக் கொண்டிருப்பார்கள்.

அவர்களுக்கு நமது நாட்டின் பிரத்யேகமான நிலைமை, இன்னும் தெளிவுபடவில்லை என்பது நிச்சயம்.

பிரிட்டனை எதிர்த்துப் போராட, எப்பொழுதும் இந்தியாவுக்கு வல்லமை உண்டு என்பதை உணர்ந்தவர்கள், பிரிட்டனுடைய தற்போதைய கஷ்ட நிலைமையை, உபயோகப்படுத்திக் கொள்ள, மனம் ஒப்பார்கள். கீழே விழுந்து கிடப்பவன் பேரில், கல்லை எரிவது கோழைத்தனமாகும். அது கனவான் செய்யும் காரியம் அல்ல.

கனவானவது களிமண்ணுவது என்று எளனம் செய்வதில் பயனில்லை. நெருக்கடிக்கு உபயோகப்படாத தைரியம், தைரியம் அல்ல. நெருக்கடிக்கு உதவாத உண்மை, உண்மை அல்ல. நெருக்கடிக்கு உதவாத கண்ணியம், கண்ணியம் அல்ல. "தற்போது ஏமாற்றித் தட்டிவிடுவோம்; பிறகு கனவானைப் போல, கண்ணியமாக நடந்து கொள்ளலாம்" என்று சொல்லத் துணியலாமா?

நெருக்கடி காலத்தில், மனிதனுடைய உயர்ந்த தன்மையை வெளிக் காண்பித்தால் தான், அந்த தன்மை அழியாமல் இருக்கும். அந்த தன்மையின் பயன் உலகத்துக்கு நன்ருக விளங்கும். ஒளித்து பிடிக்கும் உத்தமமான தன்மைகள், ஒருக்காலும் பயன் படா, ஒருவருக்கும் பயன் படா.

சமயோசிதப்படி செய்யுங்கள் என்று காந்திக்கு அதிகாரப் பத்திரம், காரிய கமிட்டி கொடுப்பதுதான் முறை என்றும் அழகான ராஜ தந்திரம் என்றும் காந்திக்கு காண்பிக்கவேண்டிய பக்தி என்றும் இந்த நாட்டு மக்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். சிலர், இந்த முடிவைக்கண்டு ஆத்திரப்படலாம். ஆனால், அவர்களுக்கு, அவர்களுடைய ஆத்திரம்தான் மிச்சம். காந்தியின் சிறு விரல் அசைந்தால்தான், இந்த நாடு அசையும். மற்றவர்கள் குட்டிக்கரணம் போட்டாலும், மடிப் பிச்சைக்கூட, கிடைக்காது.

லோக சஞ்சாரம்

பேராசைக்காரர்கள்

விற்பனை வரி விதித்தபோது, அதை எதிர்த்து, வியாபாரிகள் எவ்வளவு கண்ணீர் விட்டுக் கரைந்து நின்றார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் சொல்லுவதும் நியாயம் தானே என்று பலர் சந்தேகம் கொள்ளவும் ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், நாட்டின் நன்மையைக் கருதி, அவர்கள் அப்பொழுது கரையவில்லை என்பது இப்பொழுது வெட்ட வெளியாகி விட்டது.

யுத்தம் துவங்கி நான்கு நாட்கள் ஆவதற்கு முன்னமேயே, பண்டங்களின் விலைவாசிகளைத் தூக்கி விற்கத் துவக்கிவிட்டார்கள் வியாபாரிகள். அயல்நாடுகளிலிருந்துவரும் சாமான்களை விலைகூட்டி விற்றாலும் அதிலே கொஞ்சம் பொருத்தமாவது இருக்கும்.

நமது நாட்டிலே, அதுவும் தமிழ் நாட்டிலே உற்பத்தியாகும் அரிசி முதலிய தானியங்களை, விலை ஏற்றி விற்பது எப்படிப் பொருந்தும்? யுத்த காலத்திலே, மக்கள், அதிகமாகச் சாப்பாடு சாப்பிடக்கூடாது என்று இந்த புண்ணியவான்களுடைய கருத்தா? பண்டங்களைப் பழைய விலைக்கு விற்றால், அவைகளை ஜனங்கள் அதிகமாக வாங்கி, வீணாக்கி விடுவார்கள் என்று வியாபாரிகள் எண்ணங்கொண்டார்களா?

தங்களுக்கு, அதிகமான லாபத்தை இந்த சந்தர்ப்பத்தில் தேடிக்கொள்ளவேண்டும் என்ற சுயநலத்தைத் தவிர, வேறு எவ்வித நன்னோக்கையும் கொள்ளாதவர்கள் போல இவர்கள் நடந்துகொண்டது மிகவும் விசனிக்கத் தக்கதாகும். இப்பேர்ப்பட்டவர்கள், விற்பனை வரிக்கு விரோதமாக கிளர்ச்சி செய்ததை எதோடு சேர்க்கிறது? அவர்களுடைய பேராசை ஒன்றே, கிளர்ச்சி செய்யும்படியாக, அவர்களைத் தூண்டிற்று என்று பொதுவாக, ஜனங்கள் இப்பொழுது பேசிக்கொள்ளுகிறார்கள். இது வியாபாரிகளின் காதில் விழாமல் இருக்குமா?

தேசத்தின் பொது நன்மைக்கும், தாங்கள் நடத்தும் தொழிலுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லைபோல, யுத்தத்தின் துவக்கத்தில் நடந்துகொண்டு, 'அ

சாங்க ஆக்கினையை தங்கள் பேரில் வரவழைத்துக் கொண்ட காட்சி, மிகவும் கேவலமான காட்சி யாகும்.

நடுநிலைமையாம் !

ஜப்பான், இந்தப் போரில் நடு நிலைமை வகிக்கப்போகிறதாம்! இந்தச் சேதியில் அடங்கியிருக் கிற விநோதம் ஜப்பானியர்களின் கண்களில் படவில்லையோ; என்னவோ ?

ஜப்பான் தான், இப்பொழுது சீனுவோடு சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறதே! என்ன நடு நிலைமை வேண்டியிருக்கிறது. 'கை வந்தால்போதும், கம்பளிமூட்டை வேண்டாம்' என்று கூக்குரல் போடும் நிலைமையில் இருக்கும் ஜப்பான், நடுநிலைமையைப்பற்றிப் பேசும்பொழுது, எல்லோருக்கும் சிரிப்பு வரத்தான் செய்யும்.

ஜப்பானுல், நடுநிலைமையைத் தவிர்த்துவிட்டு, என்ன செய்ய முடியும் ? ஜெர்மனியோடு யுத்தம் செய்வதா? ஜப்பானுக்கு கண்ணுக் கெட்டிய தூரம் வரையில், ஜெர்ம னிக்குச்சொந்தமான பூமி எதுவும் கிடையாது. அதைக் காப்பதற்கு என்று சேனையும் இல்லை. ஆகவே, ஜப்பான் எதை எதிர்ப்பது ? எதைத் தாக்குவது? எதன்பேரில் வெடிகுண்டு போடுவது ?

ஜெர்மனியை எதிர்க்காமல், பிரிட்டனை எதிர்ப்பதென்ருல், சிங்கப்பூர் தளத்தை, ஜப்பான் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தியாவிலிருக்கும் சேனையையும் ஞாபகத்தில் வைத் துக் கொள்ளவேண்டும். காங்கிர சுக்கு ஜப்பானுடைய துஷ்ட நடத்தையிலே வெறுப்பு என் பதையும் அது மறக்க முடியாது.

ஆகவே, ஜப்பான் நடுநிலைமை வகிக்காமல், வேறு எவ்வித அற்புதமான காரியத்தை செய்ய முடியும்? சீனுவோடு போர் செய்து மீண்டு வரும் யோசனையை ஜப்பான் செய்தால் போதும். வீணை ஜம்பப்பேச்சுப் பேசி, பிறரை ஏமாற்றுவதாக எண்ணிக்கொண்டு, தன்னை, ஜப் பான் ஏமாற்றிக்கொள்ள வேண் டாம்.

ஜப்பானுடைய நடுநிலைமைப் பேச்சை, இறந்துபோன தெனுலி ராமன் கேட்டால், அவன் ஒருக் கால் திடீரென்று உயிர்பெற்று, விழுந்து விழுந்து சிரித்துவிட்டு, அதிகமாகச் சிரிக்கமாட்டாமல், இறந்துபோனுலும் போவான்.

மூன்று வருஷப் போரா ?

போர் மூன்று வருஷ காலம் நீடிக்கலாம் என்ற முடிவின் பேரில், பிரிட்டனுடைய அர சியல் நிர்வாகச் செலவு திட் டத்தை அமைக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் மந்திரி சபை, எல்லா இலாக்காக்களுக்கும் அறிக்கை விடுத்திருக்கிறது. ராணுவ நுட்பங்களைப்பற்றி, நமக்கு அதிகமாகத் தெரியாது. ஆகவே, மூன்று வருஷம் எல்லை போட்டது சரியா, சரியில்லையா என்பதை நம்மால் அறிய முடிய வில்லை.

நிபுணர்களின் வேலை ஒரு வேடிக்கையான வேலை; சிக்க லான வேலையுங்கூட. போர் மூன்று வருஷம் நீடித்திருக்கும்

என்று புள்ளி போட்டிருக்கும் நிபுணர்கள், அந்த முடிவுக்கு எவ்வாறு வந்தார்கள்? ஜர்மனியின் படை வலிமையை கணக்கு எடுத்துப் பார்த்தார்களா? நாளொன்று இத்தனை படைவீரர்கள் அழிந்து போவார்கள் என்று திட்டம் போட்டு விட்டார்களா? இது எல்லாம் அசட்டுத்தனமான கணக்கு.

ஜர்மனிக்கு, போர்த்தளவாடங்களுக்குத் தேவையான பொருள்களும், உணவுப் பொருள்களும் அவர்களின் கையிருப்பைப் பார்த்தால், மூன்று வருஷங்களுக்குத் தாங்கும் என்று கண்டு பிடித்து விட்டார்களா? திடீரென்று யுத்தம் ஏற்பட்டதுபோலவே, திடீரென்று யுத்தமும் நின்றுபோய் விடலாம்.

ஜர்மனியில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டு, ஹிட்லர் வீழ்ச்சி யடையலாம். அதே போன்ற கதி, நேசக் கட்சியாருக்கு நேரக் கூடாது என்று நாம் எல்லோரும் பிரார்த்தனை செய்து கொண்டு தான் இருக்கிறோம். ஆனால், எதிர்பாராமல் நேரும் அவகேடுகளுக்கு எப்படி குத்து மதிப்புப் போட முடியும் என்று தெரியவில்லை.

ஆகவே, யுத்தம் மூன்று வருஷம் நடக்கலாம்; அல்லது ஆறு வருஷத்துக்கு நடக்கலாம். ஆறு மாத காலத்துக்குள் முடிந்து போனாலும் போகலாம். நிலைத்து ஒன்றையும் சொல்ல முடியாது. சொல்லத் துணிவது முட்டாளின் வேலை என்று நிச்சயமாகச் சொல்லி விடலாம்.

எதற்காக முஸ்தீப்பு?

ருஷ்யா, போருக்கான முஸ்தீப்புகள் செய்வதாகச் சொல்லப் படுகிறது. எதற்காக முஸ்தீப்பு என்று சொல்ல முடியவில்லை. இந்த சந்தர்ப்பத்தில், ராணுவ நிபுணர்கள் தங்கள் மூளையை செலவழித்து, உலகத்துக்கு விஷயத்தைத் தெளிவுபடுத்தக் கூடாதா?

ருஷ்யாவுக்கு இப்பொழுது எதிரி யார்? எதிரி எந்தத் திசையில் இருக்கிறான்? அவன் எப்பொழுது ருஷ்யாவைத் தாக்கப் போகிறான்? இவைகள் மர்மமாயிருக்கையில், ருஷ்யா, போர் முஸ்தீப்புகள் செய்கின்றன என்ற செய்தியைக் கேட்பது, மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஆச்சரியமே சிறிது காலத்துக்குள், பயங்கரமாக மாறிவிடலாமோ?

போர் முனையில்

செப்டம்பர் 1௳

மகாயுத்தம் ஆரம்பமாகிவிட்டது. தகராறுக்கு ஆரம்ப காரணம் டான்ஸிக் பிரச்னை. டான்ஸிக் ஜெர்மனிக்குச் சொந்தமானதென்று ஹிட்லர் சொல்லுகிறார்; ஆனால் தன் எல்லைக்குள்ளிருக்கும் டான்ஸிக்கை, போலந்து விட்டுக்கொடுக்க மறுத்து விட்டது. எனவே செப்டம்பர் மாதம் முதல் தேதியின்று டான்ஸிக் ஜெர்மனியுடன் சேர்க்கப்பட்டு விட்டதாக ஹிட்லர் அறிக்கை செய்துவிட்டு போலந்தின் மீது படையெடுத்ததும் யுத்தம் ஆரம்பமாயிற்று.

ஜெர்மனி போலந்தை ஆக்ரமித்து விட்டதால் போலிஷ்—பிரிட்டிஷ் உடன்படிக்கையின்படி பிரிட்டன் போலந்துக்கு உதவியளிக்க வேண்டுமென்று போலிஷ் ஸ்தானுதிபதி ஹாலிபாக்ஸைக் கேட்டார். போலந்தின்மீது ஜெர்மனி எடுத்துக்கொண்டிருக்கும் ஆக்ரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்தாவிடில், அந்த உடன்படிக்கைப்படிதான் பொறுப்பை நிறைவேற்ற முன் வரவேண்டியிருக்குமென்று பிரிட்டனும் உடனே ஜெர்மனிக்கு எச்சரிக்கை செய்தது.

அதை ஸர். ஹெண்டர்சன், ஜெர்மனியின் வெளிநாட்டு மந்திரி ரிப்பன்டிராப்பினிடம் சமர்ப்பித்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

செப்டம்பர் 2௳

பதில் கொஞ்சம் தாமதப்பட்டதற்குப் பல காரணங்கள் கூறப்பட்டன. யுத்தம் நின்றுவிட வேண்டுமென்றும், உடனே பிரிட்டன், பிரான்ஸ், போலந்து, ஜெர்மனி, இதாலி ஆகிய ஐந்து நாடுகளும் கூடிய ஒரு வல்லரசு மகாநாடு கூட்டவேண்டுமென்றும் இதாலி சொல்லியது.

இதற்கிடையில் யுத்தம் வெகு மும்மரமாக ஆரம்பித்து விட்டது. போலந்தின் தலைநகரமான வார்ஸாமீது ஆறு தடவை விமான குண்டு வீச்சு நடைபெற்றதாகவும், 130 பேர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிகிறது. ஜெர்மன் பக்கத்திலும் பலத்த நஷ்டமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தம் ஆரம்பித்து 48 மணி நேரமாகியும் பிரிட்டன் ஒரு முடிவுக்கும் வரவில்லை என்பதை பிரிட்டிஷ் பார்லிமெண்டில் எதிர் கட்சித்தலைவர் கிரீன்வுட் எடுத்துக் காட்டினர்; நெவில் ஹெண்டர்சன் ஹிட்லரிடமிருந்து அன்று பதிலுடன் திரும்பவில்லை.

பல நாடுகள், எந்தக் கட்சியில் சேருவது என்ற அவரவர்களுடைய தீர்மானத்தை வெளி

யிட்டார்கள். பிரிட்டன் பக்கமே தான் சேரத் தீர்மானித்திருப்ப தாகத் துருக்கி பிரிட்டிஷ் ஸ்தானீக ரிடம் தெரிவித்தது. ஸிரியா பிரான்சு தேசத்தின் பக்கபலமாக இருக்கும் என்று ஸிரியா கவர் மெண்டார் அறிவித்தார்கள்.

இப்பொழுது நடுநிலைமை வகிக்க உத்தேசித்திருக்கும் நாடு கள் ஜப்பான், இதாலி, பெல்ஜியம், போர்ச்சுகல், நார்வே, அமெரிக்கக் குடியரசு நாடுகள் முதலியன. ஸ்பெயின், யுகோஸ்லேவியா முதலிய நாடுகளும் அவர்களு டைய நடுநிலைமையை அறிவித்து விட்டன.

செப்டம்பர் 3உ

பிரிட்டன் கொடுத்த இறுதிக் கடிதத்திற்கு ஜெர்மனியிட மிருந்து காலை பதினோரு மணிக் குள் பதில் வர வேண்டுமென்று கேட்டிருந்தது. அது முடிந்த பிற கும் கூட ஒரு பதிலும் ஜெர்மனி யிடமிருந்து கிடைக்காமல் போகவே, பிரிட்டன் ஜெர்மனிக்கு எதிரிடையாக யுத்தம் செய்வதாய் பிரகடனம் செய்து விட்டது. சேம்பர்லின் இதை காலை 11-15 க்கு ரேடியோ மூலம் தேசத் திற்கு அறிவித்தார்.

சேம்பர்லேன் ஜெர்மனிக்குக் கொடுத்த இறுதி எச்சரிக்கை யைப் போலவே, பிரான்சும் கொடுத்தது. 'மாலை ஐந்து மணிக்குள் பதில் வராவிடில் நாங் களும் யுத்தத்தில் இறங்குபவர்க ளாவோம்' என்று ஜெர்மனியிடம் சொல்லி யிருந்தது. அதற்குள் பதில் வராமல் போகவே பிரான் சும் ஜெர்மனிக்கு எதிரிடையாக யுத்தத்தில் இறங்கிவிட்டது.

யுத்தத்திற்கு முதல் பலியாக ஒரு கப்பல் ஸ்காட்லந்துக்குப் பக்கத்தில், இருநூறு மைல்களுக் கப்பால், நாசமாயிற்று. கடல் மூழ்கியொன்று 1400 பேர் கொண்ட அந்தக் கப்பலை மூழ்க வைத்து விட்டது. அதிலிருந்து கிட்டத்தட்ட 1200 பேர் பிறகு காப்பாற்றப் பட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.

செப்டம்பர் 4உ

பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர் மனி மீது பறந்து சென்று 'ஜெர் மனி செய்ததுதான் அக்ரமம்' என்று எழுதிய துண்டு பிரசுரங் களை ஜெர்மனிக்குள் விநியோ கித்தது.

ருமேனியா, பின்லந்து முதலிய நாடுகள் நடுநிலைமை வகிக்கின்றன என்ற செய்தி கிடைத்திருக் கிறது.

செப்டம்பர் 5உ

வார்ஸாவிலிருந்துவந்த செய்தி யிலிருந்து போலந்தும் வீரா வேசத்துடன் ஜெர்மனியை எதிர்த்துப் போராடுகிறதென்று தெரிகிறது. ஜெர்மன் முன்னணி நிலை குலைந்து ஓட்ட மெடுத்தது என்றும், பல ஜெர்மானியர் கைதி களாகப் பிடிக்கப்பட்டார்கள் என் றும் அந்தச் செய்தி கூறுகிறது.

ஜெர்மனியர்களின் வெடிகுண்டு வீச்சினால் போலந்திலுள்ள ஒரு கிராமமே நெருப்புப் பிடித்துக் கொண்டு எரிந்தது. அதோடு அவர்கள் நின்று விடவில்லை. பிரிட்டிஷ்ஷாரின் இரண்டாவது

கப்பல் நாசமாக்கப்பட்டது. அதிலிருந்து ஒருவனைத் தவிர எல்லோரும் காப்பாற்றப்பட்டார்கள்.

பிரிட்டனின் விமானப்படையில் கால்வாயருகில் ஜெர்மன் கப்பல்கள் இரண்டை நாசம் செய்துவிட்டன. இன்னும் பிரிட்டன் துண்டுப் பிரசுரங்களின் மூலம் ஜெர்மனியில் பிரசாரம் செய்வதை நிறுத்தவில்லை. நேற்றிலிருந்து லண்டனை விட்டு குழந்தைகள், தாய்மார்களெல்லாம் வெளியேற்றப்படுகிறார்கள். ஜெர்மன் தொழிலாளிகளும் கிருஷிகர்களும் போரை விரும்பவில்லை என்று ஜெர்மன் சோஷலிஸ்ட்கள் பிரிட்டிஷ் சுயேச்சை தொழில் கட்சிக்கு செய்தி அனுப்பி இருக்கிறார்கள்.

செப்டம்பர் 6௳

ஜெர்மனிக்கும் பிரஞ்சுக்காரருக்கும் பீரங்கிப் பிரயோகங்களின் மூலம் இரவெல்லாம் கூட யுத்தம் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. போலந்தின் தெற்குக் கோடியிலுள்ள கிராகோ என்னுமிடத்தை ஜெர்மனி பிடித்துக் கொண்டதாக ஜெர்மனி அரசாங்கத் தோரணையில் அறிவித்தது; ஆனால் அது பொய் என்றும் ஜெர்மனியினுடைய விமானங்கள் தான் கீழே சுட்டு வீழ்த்தப்பட்டனவென்றும் வார்ஸாவிலிருந்து ஒரு ரேடியோ செய்தி கூறுகிறது.

வார்ஸாவிலிருந்து குழந்தைகள் வெளியேற்றப்படுகிறார்களே ஒழிய, மற்றைய எவரையும் அந்த அரசாங்கம் வெளியேபோக அனுமதிக்கவில்லை. பிரிட்டனும், பிரான்சும் சேர்ந்து போலந்துக்கு பெருத்த பண உதவி செய்வதாக தீர்மானித்து விட்டன.

வார்ஸாவிலிருந்து லப்ளினுக்குத் தலை நகரை மாற்றும் வேலைகள் இன்று முடிந்து விட்டது.

செப்டம்பர் 7௳

கிராகோ, பிராம்பெர்க், கிராடன்ஸ் முதலியவைகள் ஜெர்மன் கைகளுக்கு மாறிவிட்டன என்று ஜெர்மன் பிரதம தளபதி அறிவித்து விட்டார்.

தென் ஆப்பிரிக்கா ஜெர்மனியுடன் யுத்தம் செய்ய நிச்சயித்து விட்டது. பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் ஜெர்மனியினுடைய நீர் மூழ்கிகளைத் தாக்குவதாக பிரிட்டிஷ் விளம்பர இலாகா தெரிவிக்கிறது. ஜெர்மனியின் சப்மரீன்களோ இன்னும் இரண்டு கப்பல்களை உடைத்துத் தள்ளிவிட்டன.

செப்டம்பர் 8௳

வார்ஸாவை ஜெர்மனி பிடித்த செய்தியை ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் வெளியிட்டதற்கு போலந்து பதிலளித்திருக்கிறது. அந்தச் செய்தி ஆகாயப்புளுகு என்று போலந்து மறுக்கிறது. ஆனால் போலந்து யுத்த முன்னணியிலிருந்து, யுத்த தந்திரத்திற்காகப் பின்வாங்கி இருக்கிறது என்று போலிஷ் செய்தி கூறுகிறது.

காரிடாரை சேர்த்துக்கொண்ட பிறகு, முதல் தடவை ஹிட்லர் அதைப் பார்வை இட்டார். இன்னும் இரண்டு மூன்று கப்பல்கள் நீர் மூழ்கிகளால் தாக்கப்பட்டன.

செப்டம்பர் 9உ

மார்ஷல் கோயரிங் ஒரு பிரசங்கம் செய்கையில் ஜெர்மனிதான் ஆக்கிரமிப்புக் குள்ளான தேசம், இந்த நிமிஷத்திலும் சமாதானத்துக்கு அவர் தயாராக இருக்கிறரென்றும் சொன்னர்.

போர் முனை முழுவதிலும், ஜெர்மனி, பிரஞ்சு முன்னேற்றத்தைக் கடுமையாக எதிர்க்கிறது என்று பிரஞ்சு யுத்தச் செய்தியொன்று கூறுகிறது. ஜெர்மனி பீரங்கிகள் மிக மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கின்றன.

இரண்டு பிரஞ்சு விமானங்கள் வீழ்த்தப்பட்டன என்று ஜெர்மன் செய்தியொன்று கூறுகிறது.

மேலும்போலன்மாகாணத்தை எதிர்ப்பின்றி பிடித்ததாகவும் ஜெர்மன் அறிக்கை கூறுகிறது.

பிரிட்டன் யுத்தத்தை நடத்த 50 கோடி பவுன் கடன் வாங்க சர்க்காருக்கு அதிகாரமளிக்கப் பட்டிருக்கிறது.

செப்டம்பர் 10 உ

இன்றிலிருந்து கானடாவும் பிரிட்டிஷ்ஷாரோடு சேர்ந்து கொண்டு, ஜெர்மனிக்கு எதிராக யுத்தத்தில் இறங்கி விட்டதாகத் தெரிவிக்கிறது.

ரஷ்யாவும் படைதிரட்டிக் கருங்கடல் லெனின்கிராட் பக்கத்தில் வைத்து விட்டது. வர வர யுத்தம் பெரிதாகிக்கொண்டு வருவதால் தற்காப்புக்காக அது அவசியமென்று ரஷ்யா கருதுகிறது.

ஜெர்மனிக்குள் பிரஞ்சுத் துருப்புகள் பிரவேசித்து, கஷ்டமான இடங்களில் சண்டை செய்து,பிரஞ்சு சேனை முன்னேறி இருக்கிறது. ஜெர்மனி சென்ற ஒரு வருஷகாலமாக சாமர்த்தியமாக அமைத்த அரண்களை பிரான்ஸ் தகர்த்து எறிகின்றன. இது வரையில் 10,000 ஜெர்மன் சோல்ஜர்கள் யுத்தத்தில் மரணமடைந்திருக்கிறர்கள் என்ற போலிஷ் செய்தி இன்னும் மறுக்கப்படவில்லை.

இன்றைய திகதத்திற்கு ஒரு பிரிட்டிஷ் கப்பல் தாக்கப்பட்டு சமுத்திரத்திற்குள் மூழ்கிவிட்டது. உயிர்கள் நஷ்டம் ஒன்று மில்லை.

செப்டம்பர் 11உ

வார்ஸாவுக்கருகிலிருந்து ஜெர்மன் துருப்புகள் பின்வாங்கி விட்டனவென்று போலிஷ் ரேடியோவில் யுத்த நிர்வாகிகள் பேசினர்கள். ஜெர்மனி வசம் வார்ஸா விழாமல் இருப்பதற்கு நீண்டகால யுத்த தளவாடங்களை போலந்து அமைக்கிறது.

லண்டனிலிருந்து பேசும் போது ஸ்ரீ ஈடன் "வேண்டுமென்றே, சமரஸப் பேச்சு வார்த்தைகளுக்கு இடமில்லாமல் ஹிட்லர் செய்துகொண்டு விட்டார். இனிமேல் ஹிட்லரிடம் உலகத்தை விட்டு ஒழியும் வரையில் போராட்டம்தான்" என்றர்.

ஜப்பான், ஜெர்மனியுடன் சேராது என்று ஜப்பானிய பிரதம மந்திரி அறிவிக்கிறர்.

வின்ஸ்டன் சர்ச்சில்

இன்று ஜனங்களுடைய மனதைக் கவர்ந்தவர்கள் யார், யார் எவர்களை ஜனங்கள் தலையில் வைத்துக் கொண்டாடுகிறார்கள். என்பதை எப்படி உலகத்துக்குக் காட்டுவது? தன் நாட்டு மக்

களுக்கு இவன் தான் இன்று மஹா புருஷன் என்பதை தெரிவிக்க இங்கிலாந்து ஒரு நூதன முறையைக் கையாளுகிறது. அதாவது ஒருவன் தவறாது எல்லாரும் சர்ச்சிலின் உருவம் பொறிக்கப்பட்ட கோட்டு பித்தானை அணிந்திருக்கிறார்களாம். இவ்வளவு தூரம் திடீரென்று மக்களின் உள்ளத்தை சர்ச்சில் வசீகரித்ததின் காரணம் என்ன?

போன யுத்தத்தில் பெரிய பதவிகளை வகித்து சாமார்த்தியமாக நிர்வாகம் செய்த நிபுணரை இந்த நெருக்கடியில் ஜனங்கள் மறக்க முடியுமா?

அவர் ஒரு அபூர்வமான பிரகிருதி. சாணக்கியனைப் போன்ற ராஜ தந்திரவாதி. மேடைப் பிரசங்கத்தில் இவருக்கு இணையானவர்கள் இங்கிலாந்திலே ஒரு சிலரே. அதிசாமர்த்தியமான எழுத்தாளர் இவருடைய வார்த்தை ஒன்றுக்கு ஒரு அணா வீதம் கணக்கிட்டு இவர் கட்டுரைகளுக்கு பணம் தரப்படுகிறதென்று சொல்லுகிறார்கள், கூரிய அறிவுபடைத்த சரித்திர ஆராய்ச்சிக்காரர் இவர்.

இவரது, குடும்பம் புராதனமான செல்வவந்தர் குடும்பம். பிரசித்தி பெற்ற மார்ல்பரோ குடும்பத்தோடும் இவருக்கு தொடர்பு உண்டு. இவர் தந்தை பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் இருந்த சிறந்த அரசியல்வாதிகளில் ஒருவர். குழந்தைப் பருவத்திலிருந்தே யுத்த சம்பந்தமான விஷயங்களில் இவருக்கு நாட்டமுண்டு. பெயர் போன சேண்டுஹர்ஸ்ட் யுத்தப் பள்ளியில் பயிற்சி பெற்றவர். சிறு பிராயத்திலேயே சாதுரியமான பத்திரிகை நிருபர் என்று பெயர் எடுத்துவிட்டார். இந்தியாவில் எல்லைப்புற யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்போது சிறந்த கட்டுரைகளை இங்கிலீஷ் பத்திரிகைகளுக்கு அனுப்பி வந்தார். தென்

ஆப்பிரிக்கா போயர் யுத்தத்தில் இவர் கைதியானார்.

அவர் அங்கிருந்து தப்பியது ஒரு ஆச்சரியமான வீரச்செயல். இங்கிலாந்து சேர்ந்தாரோ இல்லையோ, ஒரு பெரிய பதவியோடு இவரை அந்த நாடு வரவேற்றது. இருபத்தேழாவது வயதில் பார்லிமெண்டில் கன்சர்வேடிவ் மெம்பரானார். ஆனால் அதே கட்சியை விடாப்பிடியாய் பற்றிக்கொண்டிருக்கவில்லை. பல தடவை, கட்சி மாறினார். பெரிய பெரிய பதவிகளை திறமையுடன் வகித்தார். ஆனால் பொக்கிஷ மந்திரி வேலையை அவரால் நிர்வகிக்க முடியவில்லை.

மகா யுத்தத்திற்குப் பிறகு அவர் மதிப்பு குறைந்தது. ஏனென்றால் "முஸ்தாபா கமாலோடு யுத்தம் செய்யவேண்டும்", என அவர் யோசனை கூறினார். அப்பொழுது பிரதம மந்திரியாயிருந்த பால்டுவின் அதற்குச் சம்மதிக்கவில்லை.

தனி மனிதனை தேவனாகப் புகழும் வழக்கத்தை வெறுக்கும் இங்கிலாந்தில், 'அவர் மந்திரி சபையில் சேர்க்கப்படவேண்டும்' என்னும் கூச்சல் நமக்கு ஆச்சரியமுண்டாக்கலாம். ஆனால் அதற்குக் காரணமில்லாமல் போகவில்லை. இன்று அவர் கட்சி விவாதத்திற்கும் புறம்பான மனிதராய் விட்டார். இவர் சேம்பர்லினுக்கு தகுந்த 'ஆப்பு' என்று கூறும் எதிர் கட்சிக்காரர் மாத்திரமல்ல சேம்பர்லினுடைய; கன்சர்வேடிவ் கட்சியை சேர்ந்த ஆஸ்டர் போன்றவர்கள் கூட அவர் வரவை ஆவலாக எதிர்பார்க்கிறார்கள்.

அவரை தீர்க்கதரிசி யென்றே பலர் எண்ணுகிறார்கள். ஏனென்றால் அவர்தான் முதன் முதலில் நாஜி கொள்கையால் உலகத்துக்கு விளையப்போகும் தீமையை முன்கூட்டியே எடுத்துக்கூறி எதிர்ப்பு முன்னணியைத் தயாரிப்பதின் அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறார். அவருடைய பிரசங்கங்களின் பலனாகத்தான் இங்கிலாந்து ரொம்ப நாளைக்கு முன்னிருந்தே ஆயுத முஸ்தீப்புகளை அதிகரிக்க ஆரம்பித்தது.

இங்கிலாந்திலுள்ள பத்திரிகைக்காரர்களெல்லாம், அவர் திரும்பவும் மந்திரி சபைக்கு வரவேண்டுமென்று விரும்புகின்றனர். இன்றைய [illegible]ன் ஆட்சி முறையை அவர் [illegible]வு தீவிரமாக எதிர்த்திருக்கிறார் என்பது உலகறிந்த விஷயம். "ஒவ்வொரு ஜனநாயகமும் பாஸிஸ்டு மனப்பான்மையை தங்கள் பூரா ஆயுத பலத்தோடும் எதிர்க்க வேண்டு"மென்பது அவருடைய கொள்கை.

சேம்பர்லேன் அவரைத் தன் மந்திரி சபையில் சேர்த்துக் கொள்வதற்கு ஏன் சம்மதிக்கவில்லை? தன் சமாதான முயற்சிக்கு அவர் ஒரு பெரிய முட்டுக்கட்டை என்ற காரணம்தான்.

ஆனால் இன்று யுத்தம் ஆரம்பித்துவிட்டது. சர்ச்சில், ஈடன் இவர்களையும் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் உடனே அவர்களை மந்திரி சபையில் சேம்பர்லேன் சேர்த்துக்கொண்டு சர்ச்சிலை கப்பற்படைக்குத் தலைவராக்கி விட்டார். அவருக்கு வயது இப்போது அறுபத்தைந்து ஆகிறது.

அகத்தியன் வைத்தியம்

மதுமேக ரோகம் (Diabetes).

மதுமேக ரோகத்தைத் தடுத்துக் கொள்ளும் உபாயங்கள்

1. அளவு கடந்த மதுபானங்களை உபயோகப் படுத்துவதால், கல்லீரல்க[illegible]வும், நீர்க்காய், குடல் முதலிய உள் உறுப்புகளும், அவ்விடத்தி[illegible] மெல்லிய நரம்புகளும் புண்ணாகி நொந்து, பலவிதமான மே[illegible]ாந்த ரோகங்களும், வயிற்றில் அஜீரணம் உண்டாகி, ரணத்துடன் [illegible]ரத்தில் உஷ்ணம் அதிகரித்து, சப்த தாதுக்களின் பலத்தைக் குறைத்து, சுக்கிலத்தை நீர்க்கச் செய்து, நீர் வியாதிகளை உண்டாக்குவதால், மதுமேக வியாதியஸ்தர்கள் மதுபானம் என்னும் பேயை அறவே ஒழித்துவிட வேண்டும்.

2. மேலும் சூரிய வெப்பத்தினாலும் உஷ்ண வியாதிகளாலும் சரீரம் மிகவும் காங்கையாயிருக்கையில் அதிகரித்த நாவரட்சியும் தாகமும் ஏற்பட்டால், மதுமேக ரோகம் கண்டவர்கள் மிகுந்த குளிர்ச்சியான ஜலத்தையோ அல்லது பானத்தையோ உபயோகப்படுத்தக் கூடாது.

ஏனெனில் நெருப்பில் காய்ந்து கொண்டிருக்கும் ஒரு பாத்திரத்தில் ஜலம் விட்டவுடன் எவ்விதமாக அந்த ஜலம் உடனே வற்றி ஆவியாக மாறிவிடுகின்றதோ, அதைப்போலவே சரீரத்தில் மூலாக்கினி அதிகரித்து உஷ்ணம் அதிகமாயிருக்கையில், குளிர்ச்சியுடன் அருந்தும் ஜலம் ஆவியாக மாறி சூட்சம நாடி நரம்புகளில் ஆவி ரூபமாகப் பிரவேசித்து, சரீரத்தின் சத்தை உருக்கி மதுமேக ரோகத்தை அதிகப்படுத்தி விடுகின்றதாகையால், மிகுந்த குளிர்ச்சி யில்லாமலும் அதிக சூடில்லாமலும் நடுத்தரமாயிருக்கும் ஜலத்தையே உபயோகிக்க வேண்டும்.

3. சரீரத்தில் மேன்மேலும் அதிகமான கொழுப்பை விருத்தி செய்யக்கூடிய மாப்பண்டங்கள், இறைச்சிகள், கிழங்கு, மதுர வஸ்துக்கள் இவைகளை மதுமேக வியாதியஸ்தர்கள் நீக்கவேண்டும்.

ஏனெனில், மதுமேக ரோகம் கண்டுள்ளவர்களுக்கு போஜனம் செய்த பிறகுதான், அடிக்கடி நீர் இறங்குவதும் அந்நீரில் சர்க்கரை அதிகமாயிருப்பதும் அநுபவமாகக் காணப்படுகின்றது.

இதன் காரணம் யாதெனில், நாம் உட்கொள்ளும் உணவுகளில், திராட்சை சர்க்கரைபோல் ஓர் வகை இனிப்பான சக்தியுண்டு. இந்தச் சக்தியானது வியாதிகளில்லாத சரீரத்தில் ரத்தக் குழாய் மார்க்கமாய் சுவாசத்தில் சென்று சடராக்கினியினுல் தகனமாய் விடுகின்றது.

பலவித தொந்த வியாதிகளால் மெலிந்த சரீரத்திலும், மதுமேக ரோகம் கண்டுள்ள திரேகத்திலும், சடராக்கினி குறைந்திருப்பதால், மேற்படி சத்தானது சரிவர தகிக்கப்படாமல் தகிக்கப்பட்டது போக, மற்றது நீர்வழியாக வெளிப்பட்டுக் கொண்டே வருவதால், மதுமேக ரோகம் மென்மேலும் விருத்தியாய்க் கொண்டே வருகிறது.

ஆகவே இதில் குறிப்பிட்டுள்ள ஆகார வகைகளை நீக்குவதுடன் பத்திய பதார்த்தங்களையே உபயோகப்படுத்த வேண்டும். சிலர் சர்க்கரைக்குப் பதிலாக சாக்கிரீனும் (Sacharine) உபயோகிக்கிறுர்கள். அதுவும் ஆரோக்கியத்திற்குக் கெடுதலானதேயாம். காபி, தேயிலை இவைகளுக்குப் பதிலாக பசுவின் மோர் ஒன்றையே உபயோகப் படுத்த வேண்டும்.

மதுமேக ரோகத்தின் ஆரம்பத்திலும், முதிர்ச்சி யடைந்திருக்கும் சமயத்திலும், தேன் முதலிய இனிப்பான பண்டங்களும், இனிப்புள்ள காய் கறிகளும் உருளைக்கிழங்கு, பட்டாணி, பீன்ஸ், முள்ளங்கி, அரிசி, சப்பரிசி, சேமியா, ஓடுள்ள மச்ச வகைகள் முதலியவைகளை அறவே ஒழிக்க வேண்டும்.

பாலில் இயற்கையாகவே மதுரச் சுவையிருப்பதால் காய்ச்சி ஏடு நீக்கிய பாலையே உபயோகப்படுத்த வேண்டும்.

மதுரச் சுவையுள்ள கனிவர்க்கங்களை உபயோகப் படுத்தக் கூடாது.

மாப்பண்டங்களையும், நவதானியத்தில், மொச்சை, கடலை, உளுந்து முதலியவைகளை ; நீக்கி துவரை, பயத்தம் பருப்பு, கோதுமை, எள்ளு முதலியவைகளை உபயோகப் படுத்தலாம்.

பொதுவில் முருங்கை, கத்திரி, அவரை, அத்தி, பாவை முதலிய காய்கறிகளையும் கீரை வகைகளையும் மிளகு, சீரகம், பெருங்காயம் முதலியவைகளையும் உபயோகப்படுத்தலாம்.

ஒவ்வொருவரும் அவரவர்களுடைய பழக்கமான ஆகாரங்களை திடீரென நிறுத்தி விடுவதும் கெடுதலானதேயாகையால், நாளுக்கு

நாள் சிறுகச் சிறுக ஆகார நியமங்களைக் குறைத்துக்கொண்டு வருவது நலம்.

ஒவ்வொரு தினமும் ஆகார பதார்த்தங்களை வெவ்வேறு தினுசுகளாக மாற்றிக்கொண்டே வரவேண்டும்.

கண் விழிப்பதும், கடும் வெயில், மழை, பனி, காற்று இவைகளில் திரிவதும் கூடாது.

இவைகள் மதுமேக ரோகத்தை விருத்தியாக விடாமல் தடுத்துக் கொள்ளும் உபாயங்களாகும். இது விஷயத்தைப்பற்றி ஏற்கனவே 27—8—39 தேதியில் வெளிவந்த பதிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்திரிகளுக்கு இந்த மதுமேக ரோகம் மிகவும் உபத்திரவத்தை உண்டாக்குவதால் மிகவும் நியமத்துடன் நடந்து கொள்ளுவது மேலாம்.

முக்கிய கவனிப்பு : நாம் இது வரையில் மதுமேக ரோகத்தைப் பற்றிய லட்சணங்களையும், இவ்வியாதியைத் தடுத்துக் கொள்ளும் உபாயங்களையும் தெரிவித்துக்கொண்டு வந்தோம். இத்துடன் இவ்விஷயம் முடிவடைகிறது. இதற்குமேல் மதுமேக ரோகத்தை அறவே ஒழிக்கும் சித்த ஔஷத முறைகளை வெளியிடப்படும். நாம் வெளியிடப்போகும் அருமையான சித்த முறைகள் இதுவரையில் எந்த நூலிலும் காணப்படாதது.

இம் முறைகள் அகத்திய நூலிலிருந்தே எழுதப்பட்டு வருகிறது. இதன் அற்புத குணங்களை பல முன்னோர்கள் அநுபவ பூர்வமாக கண்டிருப்பதாகத் தெரிகிறது. பொதுஜன நன்மைக்கென்றே இம்முறைகள் நமது பாரத தேவியில் வெளியிடப்படுகிறது.

(தொடரும்.)



பாரதியாரின் மூர்த்தி

(வ. ரா.)

பாரதியாரை நேரே பார்க்காதவர்கள், துரதிருஷ்டசாலிகள் என்றே சொல்ல வேண்டும். சிலரை நேரே பார்க்காமல் இருந்தால் நன்றாக இருக்கும். சிலர், படத்தில் அழகாக விழுந்திருப்பார்கள். ஆனால், நேரே பார்த்தால், வேறு விதமாக இருக்கும்.

பாரதியாரை, எத்தனையோ படங்களில் இதுவரையில் நான் பார்த்திருக்கிறேன். ஆனால், அந்தப் படங்களில், பாரதியாரின் மூர்த்தியின் மாண்பையும் வசீகரத் தன்மையையும் நான் காணவில்லை. கிராமபோன் பாட்டில் சங்கீத வித்வானுடைய மூர்த்தியைக் காண முடியுமா? ஒருக்கால், ராகத்தின் மூர்ச்சையைக் காணலாமோ, என்னவோ?

உடல் வனப்புகொண்ட பலரை நான் பார்த்திருக்கிறேன். ரவிவர்மாவின் உடல் பொலிவு கொண்ட படங்களை நான் பார்த்திருக்கிறேன். நீங்களும் பார்த்திருப்பீர்கள். ஆனால், பாரதியாரின் முகத்தைப் பார்க்காதவர்கள் புண்ணியம் பண்ணாதவர்கள். அவரது காலத்திலேயே, அவரைப் பெரும்பான்மையான தமிழர்கள் பார்த்ததில்லை. அவர் மறைந்துபோன பிறகு, அதைப் பற்றிப் பேசிப் பயன் என்ன?

பாரதியாரின் முக மண்டலத்தைக் கண்டவர்களுக்கு, ஒரு வகை குதூகலம் உண்டாகும் என்பது, அதை அனுபவித்தவர்களின் மறக்க முடியாத அனுபவமாகும். என்ன வசீகரமான முகம்!

அந்த முகத்தில் என்னதான் இருக்குமோ! அது எனக்கு விளங்கினதே யில்லை. அந்த முகத்தை, இடைவிடாமல் பார்த்துக்கொண்டே யிருக்க வேண்டும் என்ற ஆசை என்னிடம் குடிகொண்டது. அவரது முகத்தில் வசீகரத் தன்மை கொண்டது எது? அவரது, செவ்வரி படர்ந்த செந்தாமரைக் கண்களா? அவரது விசாலமான நெற்றியா? ஹாஸ்ய ரஸத்துக்கு இருப்பிடமாயிருப்பதுபோல விளங்கும் அவரது கூரிய மூக்கா? செம்பஞ்சுக் குழம்பு தடவியது போலத் தோன்றும் அவரது உதடுகளா? வாயைத் திறந்தால் "தின்னுவதற்கல்ல; தின்னப்படுவதற்காக" அமைந்திருப்பது போலத் தோன்றும் அவரது முத்துப் பல் வரிசைகளா?

அல்லது, எங்கிருந்தோ, அன்பும் ஆர்வமும் வல்லமையும் கலந்து, "தம்பீ, வா! தங்கை, வா அம்மா" என்று கூப்பிடுவது

போலத் தோன்றும் அவரது குரலா? அல்லது இவைகள் எல்லாம் சேர்ந்துதானே என்னமோ, அவருடைய முகத்தை, தெவிட்டாத காட்சியாக ஆக்கிவிட்டன.

அவருடைய பக்கத்தில் இருந்தால், சாதாரணமாக செய்ய முடியாது என்று நாம் நினைக்கும் காரியங்களை எல்லாம் எளிதிலே செய்துவிடலாம், என்ற எண்ணம் உண்டாகின்றதே, அது எதனாலே? பாட்டிமார்கள் சொல்லுவதுபோல, பாரதியார், சுக்குப் பொடிபோட்டு மயக்கும் மந்திரவாதியா?

இமயமலையைப் பற்றி பாரதியார் வர்ணிக்கத் தொடங்குவார். வெள்ளைப்பனி முடிச் சிகரங்கள் நம் கண் முன்னே வந்து, கை காட்டிக் கூப்பிடுவதுபோல இருக்கும். அடுத்த நிமிஷத்தில், நமக்கே இறக்கை முளைத்து, அந்த சிகரங்களின் பேரில் நின்றுகொண்டு, உலகப் பரப்பை, காட்சியாகக் காணுவதாகத் தோன்றும். அவர் குரல் நின்றதும், மண்ணுலகில், கிழிந்த பாயின் பேரில், உலர்ந்த வெற்றிலையும் வெட்டல் பாக்குகளும் உள்ள தட்டின் பக்கத்தில், பாரதியாரோடு உட்கார்ந்திருப்பதாக நினைவு வரும்.

இத்தகைய மாயா சக்தி அவருக்கு யார் வரமாகக் கொடுத்தார்கள்? எதற்காகக் கொடுத்தார்கள்? பாரதியாருக்குக் கிடைத்த சக்தி, உலகத்தின் புண்ணை ஆற்றி, மனிதனுக்கு வீர்யமும் கம்பீரமும் சக்தியும் கொடுத்தன. அவர் கலகல வென்று சிரிக்கும் பொழுது பார்த்தால், அகார "சாதகம்" தேர்ந்த சங்கீத வித்வான் என்று தோன்றும். ரவை ஜாதிகள் அவ்வளவு லாகவமாக அவரது திவ்யகானத் தொண்டையில் புரளும்.

மகா வைத்தியநாதய்யர், கோவிந்தமாரார் முதல் காஞ்சிவரம் நைனுபிள்ளை வரையிலும் உள்ள பிரபல சங்கீத வித்வான்களைக்கேட்டு அனுபவித்த ரசிகர்கள், புஷ்பவனத்தின் சாரீரத்தை வெகு சிலாக்கியமாகக் கொண்டாடுகிறார்கள். நான் புஷ்பவனத்தைப் பல தடவைகளில் கேட்டு அனுபவித்திருக்கிறேன். ஆனால் புஷ்பவனத்தின் தொண்டை, பாரதியாரின் தொண்டையிடம் பிச்சை கேட்க வேண்டும். அவ்வளவு கனமும் சன்னமும் கலந்த சாரீரம் பாரதியாருடையது.

புதுச்சேரியில், "விளக்கெண்ணெய் செட்டியார்" வீட்டு மெத்தையிலிருந்து, இரவு பத்து மணிக்கு, நிசப்தமான சமயத்தில், பாரதியார் பாடும்பொழுது கேட்டுப் பார்த்திருக்க வேண்டும். சுமார் பத்து மைலுக்குக் கேட்குமோ என்று நாம் சந்தேகப்பட வேண்டியதாயிருக்கும்.

சம்பாஷணையின் ரசமறிந்து பேசுபவர்கள் மிகச் சிலர். சம்பாஷணையை சிலர் துவக்கும்போதே, அவர்கள் சண்டைக்கு வருகிறாப் போல இருக்கும். மற்றும் பலருக்கு, ஐந்து நிமிஷத்துக்கு அதிகமாகப் பேசுவதற்கு சரக்கு இருக்காது. சில்லறை விஷயங்களை அல்லது காதல் சங்கதிகளைப்பற்றித்தான் பேசுவார்கள். சிலர், எப்பொழுதும் சோகரஸப் புளி

மூட்டை வேதாந்தமே பேசிக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் பாரதியாருடன் சம்பாஷிப்பதே, ஒரு தனியான கௌரவமாகும். அவர், மேடைப் பிரசங்கியாக ஆகிவிடமாட்டார். நமக்குப் பேசத் தெரியாது என்ற எண்ணத்தை, நம்மிடம் உண்டாக்காமல், நம்மை எப்படியோ, கூடவே, அழகாக இழுத்துக் கொண்டே போய் விடுவார். அவரும் அரவிந்தயோகியும் சம்பாஷணை செய்வது, அற்புதக் காட்சியாக இருக்கும்.

உபநிஷத உண்மைகள் முதல் தெருக்கூத்து வரையில் உள்ள பொருள்களைப்பற்றி, அவர்கள் எவ்வளவு சுவாரஸ்யமாகப் பேசுவார்கள்! அவிட்டு, பலவர்ணங்களுடன் வெடிப்பதைப்போல, நவநவமான கருத்துக்கள் சம்பாஷணைக்கிடையே தோன்றிக் கொண்டேயிருக்கும். இவைகள் எந்த ஊற்றிலிருந்து வருகின்றன என்று அறிய முடியாமல், கேட்பவர்கள் பிரமை தட்டிப் போவார்கள்; பிரம்மானந்தம் அடைவார்கள்.

பல சமயங்களில், இந்த இரு பெரியார்களும் மாலை நான்கு மணிக்கு சம்பாஷிக்கத் துவக்குவார்கள். இரவு பத்து மணியாகும். பதினொன்றும் ஆகும். சம்பாஷணையில் சளைப்பு இருக்காது. கேட்பவர்களுக்கு அலுப்பு உண்டாகாது. சிரிப்பும் நிற்காது. நவரசங்களும் அவ்வப்போது தாண்டவமாடும் பாரதியாரின் சம்பாஷணையை, அப்படியே காபி எடுக்கும் பாக்கியம் பெறாமல் போய் விட்டேன், என் பேரில், எனக்கு அளவில்லாத கோபம் என்பதைத் தயக்கமன்னியில் ஒப்புக்கொள்ளுகிறேன்!

இரக்கமும் குதூகலமும் பாரதியாருக்கு எப்படி இயற்கையான குணங்களோ, அப்படியே ரௌத்திரமும். "நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்" என்று கூப்பாடு போடும் பாரதியாரின் உள்ளத்தில் எவ்வளவு ஆத்திரமும் வருத்தமும் குடிகொண்டிருக்க வேண்டும் என்பதை நீங்களே ஒருவாறு நிர்ணயம் செய்து கொள்ளலாம். அநியாயத்தை, எங்கே கண்டாலும், எந்த வகையில் கண்டாலும், அவருடைய உள்ளம் துடிதுடித்துப்போகும்.

யார் யார் சின்ன மனிதர்கள் என்று உலகம் நினைத்து, ஏளனம் செய்கின்றதோ, அவர்களுக்கு மரியாதை கொடுத்து, அவர்களை அந்தஸ்தில் ஏற்றுவதை, பாரதியார் தமது கடமையாகக் கொண்டிருந்தார். அன்பர்கள் பாரதியாருக்குப் பெருமையாகக் கொடுக்கும் சரிகை அங்கவஸ்திரத்தை, சிறிது நேரத்திற்குள், பாரதியாரை வண்டியில் வைத்து இழுத்துக் கொண்டு போகும் "புஸ்" வண்டிக்காரனுடைய கழுத்திலே பார்க்கலாம்.

விளக்கெண்ணெய் செட்டியார் என்று பாரதியார் பிரியமாகப் பெயர்வைத்துக் கூப்பிடும் செட்டியார் வீட்டில், நீண்ட காலம் பாரதியார் குடியிருந்தார். மாதா மாதம் வாடகை கொடுப்பதற்கு, பாரதியாரிடம் பணம் இருக்காது. ஆறு மாத வாடகை சேர்ந்து போகும். செட்டியார், வாடகைப்

பணம் கேட்க வருவார். ஆனால் கிட்ட நெருங்கமாட்டார். தூரத்தில், கையைக் கட்டிக்கொண்டு, நின்று கொண்டிருப்பார்.

"எங்கே வந்தீர் செட்டியார், வாரும்" என்று பாரதியார், அவரை வரவேற்று விட்டு, "வாடகைப் பணத்துக்குத்தானே வந்திருக்கிறீர்? சேர்ந்தால் போல வாங்கிக் கொள்ளுகிறதுதானே? சீக்கிரம் உமக்கு 'செக்' கிடைக்கும், போம்" என்று பாரதியார், புன்னகையோடு சொல்லுவார்.

பாரதியார் சொல்லுவது கேலி என்றே செட்டியார் நினைக்க மாட்டார், "'செக்' பின்னாலே வாங்கிக்கிறேனுங்க" என்று சொல்லி விட்டு, கும்பிடு போட்டுப் போய் விடுவார் செட்டியார். வாடகைப் பணத்துக்கு, பாரதியார் பதில் சொன்னதைப் போல, நம்மில் யாராவது தகவல் சொல்லி மீள முடியுமா? பாரதியாரின் மூர்த்தியின் பெருமை இதுவே.

இன்றைக்குத் தீண்டாமை விலக்கு என்று எல்லோரும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். பாரதியாரோ, புதுச்சேரி அறிய, ஹரிஜனப் பையன் ஒருவனுக்கு மந்திர பூர்வமாக, பூநூல் போட்டு வைத்தார். இந்த வைபவத்துக்குப் பல பார்ப்பனர்கள் வந்திருந்தார்கள். இது 1912-ம் வருஷம் நடந்த சம்பவம்.

புதுச்சேரி ஈசுவரன் தர்மராஜா கோவில் வீதியில் வசித்த பொழுது, பொன்னு முருகேசம் பிள்ளையின் தர்மபத்தினி, பாரதியாரை, தமது அருமைக் குமாரனைப்போல பாவித்து, போஷித்து வந்ததை, நான் பெரு மகிழ்ச்சியுடன் சொல்லுகிறேன்.

கடைசியாக ஒரு சிறு குறிப்பு. பாரதியாரும் அடியேனும் புதுச்சேரி வீதி ஒன்றின் வழியாக, ஒரு நாள் காலை, சுமார் எட்டரை மணிக்குப் போய்க்கொண்டிருந்தோம். அந்தத் தெருவிலே, திண்ணையொன்றில், ஒரு பையன் ஆத்தி சூடி படித்துக் கொண்டிருந்தான். அவன், "இளமையில் கல்" என்றான்.

தூக்கி வாரிப் போட்டது மாதிரி, பாரதியார், "முதுமையில் மண்" என்று சொல்லிவிட்டு, "என்! ஓய்! ஒருவன் இளமையில் கல்லாயிருந்தால், அவன் எவ்வித கீர்த்திகரமான செயலையும் செய்யாமல், முதுமையில் மண்ணாய்ப் போவது நிச்சயம் தானே" என்று சிரித்தார். சூட்சுமமான மேதை!

[சென்னை ரேடியோவில் 11-9-'39 பேசிய பேச்சு]

பொறுப்பு கழிய

அசுவதி

'சார், ஊருக்குப் போய் அசிரத்தையாக இருந்துவிடாதீர்கள். அடிக்கடி கடிதம் போட்டுக்கொண்டிருங்கள்' என்று ஸ்டேஷனில் விடைபெற்றுக் கொள்ளும் போது, புறப்பட்டுப் போகும் வண்டியையும் தொடர்ந்து கொண்டே போய் எத்தனை தரம் சொல்லிவிட்டு வருகிறோம்.

அவரும், 'ஆஹா! கட்டாயம் போடுகிறேன். அதுமூலம் தானே தொடர்பு இருக்க முடியும் இனிமேல் நமக்குள்ளே' என்று, கேள்விக்கு தக்க பதில், ஈடு கொடுத்து பிளாட்பாரத்திலிருந்து வண்டி இறங்குமட்டும் தலையை வெளியில் நீட்டிக் கொண்டே பிரிவு பெற்றுக்கொள்கிறார்.

அவரும் தன் வாக்குப்படி, போனதும் போய்ச்சேர்ந்த விஷயத்துக்கு கடிதம் எழுதுகிறார். விவரமாக பிறகு எழுதுவதாகவும் சொல்கிறார் அதில். உடனே கடிதம் பெற்றுக்கொண்டவரும், புதுப் பசுக்குப் புல் போட்ட சதை மாதிரியாக, விஷயம் இருக்கோ இல்லையோ பதிலும் எழுதிவிடுகிறார்.

இப்போது நான் என் நண்பருக்குச் சுருக்க சுருக்க இரண்டு கடிதங்கள் போட்டுவிட்டேன். அந்த இரண்டுக்கும் பதில் வந்துவிட்டது.

ஆகவே அடுத்தபடியாக கடிதம் போட வேண்டியது என்னுடைய முறைதான். அதைப் போட்டுவிட்டுப் பிறகுதான் நண்பரிடமிருந்து பதில் எதிர்பார்க்க முடியும்.

நான் இன்னும் பதில் போடவில்லை; அவரிடமிருந்து கடிதம் வந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது. 'போடாதது தவறு தான்' என்று ஒப்புக்கொண்டு தீர வேண்டியதுதான். தட்டிக் கழித்துப் பேசுவதில் அர்த்தம் இல்லை.

ஆனால் 'ஏன் போடவில்லை' என்ற ஒரு கேள்வி பிறக்கிறது. ஒப்புக்கு நான் வெளியே, 'எங்கே அவகாசம் இருக்கிறது. பாழும் உத்யோகம் ஒரு நிமிஷம் அவகாசமாவது கொடுத்தால் தானே' என்று சொல்லிவிடலாம். ஆனால் இது எவ்வளவு தூரம் பொருத்தமான விளக்கமாக இருக்கும்?

கடிதம் எழுதுவதற்கு அவகாசம் இல்லை என்று சொல்வதை நான் எப்போதும் நம்புவதில்லை. அதில் அர்த்தமே கிடையாது. சாப்பிடுவதற்கு அவகாசம் இல்லை; தூங்குவதற்கு அவகாசம் இல்லை என்பதைப் போலத்தான்.

'இவ்விடம் க்ஷேமம், அங்கே க்ஷேமமா' என்று இரண்டு வரி

எழுதி கையெழுத்துப் போடுவ தற்குக்கூட அவகாசம் இல்லாமல் நாம் பொழுதை அவ்வளவு அளந்து, விரயமாக்காமலா போக்கிக் கொண்டிருக்கிறோம்? அப்படி அளந்து திட்டம் வகுத்து பொழுது போக்கினாலும், அந்த அளவில் இந்தத் திட்டத்துக்கும் கொஞ்சம் அவகாசம் சேர்த்துப் போடலாமே.

ஆகவே இதை சால்ஜாப்பாக நான் சொல்லத் தயாராக இல்லை. பின் ஏன் எழுதவில்லை? எழுத வேண்டும் என்ற நினைப்புத் தோன்றவில்லையா?

இல்லை, அதற்கு நேர் எதிரிடை யாகத்தான் நினைப்பு. அவருக்குக் கடிதம் எழுதவேண்டுமே என்ற நினைப்பு, அவர் நினைவு வரும்போ தெல்லாம் தோன்றுகிறது. இன்னும் பதில் போடாமல் இருக்கிறோமே என்ற குற்ற உணர்ச்சியும் கஷ்டப்படுத்திக் கொண்டு தான் இருக்கிறது. ஏன், எத்தனை யோதரம் பேனாவை எடுத்துக் கொண்டுகூட உட்கார்ந்தேன்.

அதற்குள் எத்தனை குறுக்கு யோசனைகள்! எங்கெங்கேயோ மனது சிதறுகிறது. இரண்டு வரி எழுத ஆரம்பிக்கிறேன். அதற்குள் அந்த நிலை, கடிதம் எழுதுவதற்கான மனப்பக்குவம் எங்கேயோ?

'சரி, நாளை எழுதிக்கொள்வோம்' என்று பேனாவையும் பேப்பரையும் மூலையில் போடுகிறேன். அதற்குப் பிறகு அந்த 'நாளை' வருவதற்கு எத்தனை நாட்கள் ஆகிறது. அட! கடிதம் எழுதுவதற்குக் கூடவா மனது பக்குவமடைய வேண்டி இருக்கிறது.

'ஆமாம், இங்கு சௌக்யம்... அங்கே சௌக்யம்' என்று கடிதம் எழுத எனக்குப் பிடிப்பதில்லை. இதைவிட கடிதம் வராத வரையில், எழுதாத வரையில் எல்லாம் சௌக்யம் என்று வைத்துக் கொள்வது மேல். என் மனதை அந்தக் கடிதத்தில் கொஞ்சமாவது காட்டினால்தான் எனக்குத் திருப்தி ஏற்படுகிறது.

ஊரிலே நான் வைத்து ஆரம்பப் பயிரிட்ட புஷ்பக் கொடிகளைப் பற்றி, இத்தனை மைல் தூரத்திலிருந்து 'அது நன்றாக வளர்கிறதா, புஷ்பிக்கிறதா, யார் ஜாக்ரதையாக பார்த்துக் கொள்கிறார்கள், அந்த 'ஜோதி'—மான் —எப்படி வளர்கிறது. அதை இளைக்க விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்' என்றெல்லாம் நான் நினைப்பதை எழுதிக் கேட்டால் மனதுக்கு ஒரு திருப்தி; அதற்குச் சரியான பதிலையும் ஆவலோடு எதிர்பார்க்கிறது.

இந்த சின்ன விஷயங்கள் எல்லாம் கடிதத்திலா என்று சிரிக்கிறவர்கள் சிரிக்கட்டுமே!

இந்த ரீதியில் ஒரு கடிதம் எழுதி முடித்து எப்படியோ நண்பருக்குக் கடிதம் போட்டுவிட்டேன். என் பொறுப்பு கழிந்தது. இரண்டு மாத அவஸ்தையை முடித்துக்கொண்டு விட்டேன். அந்தப் பொறுப்பு அவரிடம் போய்ச் சேர்ந்துவிட்டது. இனி நான் நிமிர்ந்து நிற்கலாம். 'அவருக்கு நான் கடிதம் போட்டேன் இன்னும் பதில் போடவேயில்லை;' என்று குபாரை துணிவுடன் சொல்ல முடியுமல்லவா?

யுத்தம் வந்துடுத்தாமே!

சி. ரா. சேஷாத்திரி

வில்லேச் சேவகன் தலை தெறிக்க ஓடிவந்தான். செக்ரெடரி அப்பொழுதுதான் தாகசாந்தி செய்து கொள்ளப் போனார் என்பது எனக்குத் தெரியும். அவனை வழி மறித்துக் கையிலிருந்த காகிதத்தை அவசர அவசரமாகப் பிடுங்கிப் படித்தேன்.

1-9-'39—மாலை $2\frac{1}{2}$ மணி அவசரத் தந்தி

ஜெர்மனி போலந்தின் பேரில் படை எடுத்து விட்டது. வார்ஷா தீக்கு இரையிடப்படுகிறது. மாட்சிமை தங்கிய நம் மன்னரின் அரசாங்கம் யுத்தத்தில் கலந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை போலிருக்கிறது.

அரசாங்க விளம்பர இலாகா.

'ஓடு, ஓடு, ஓடு, எங்கேயிருந்தாலும் கொண்டுபோய் கொடுத்து விடு!' என்று அவனைத் துரத்தினேன்.

காலையில் வரும்போதே என்னென்னவோ அபசகுனக் குறிகள் தென்பட்டன. கோட்டைக்குள் நுழையும்போது அண்ணாந்து கொடியைப் பார்த்தேன். அதன் ஓரங்கள் கொஞ்சங் கொஞ்சம் கிழிந்து நிறம் மங்கி, காற்றில் லப லப என்று அடித்துக்கொண்டிருந்தது. உச்சாணியில் ஒரு கழுகு வேறு உட்கார்ந்திருந்தது. சட்டென்று மாக்பத் கதை ஞாபகம் வந்தது. ஐயோ யுத்தம் வராதிருக்க வேண்டுமே யென்று நினைத்தேன்.

ஆனால் மனிதன் நினைப்பதற்கு விரோதமாகத் தானே நடக்கிறது இந்த உலகத்தில்! எதைக் கேட்காதிருக்கவேண்டும் என்று நினைத்தேனே அதையே கேட்டதும் மனசு ஓடவில்லை. அப்படியே உட்கார்ந்துவிட்டேன்.

கொஞ்ச நேரத்திற்குள் இந்த நிலை மாறிவிட்டது. மனசு சரியான நிலைக்கு வந்துவிட்டது. கேட்டதும் தாக்கி வாரிப்போட்டதே தவிர, அது நீடித்திருக்கவில்லை. ஒரு வட்டமடித்து சகபாடிகளோடு கலந்து அவர்கள் அபிப்பிராயத்தையும் தெரிந்துகொள்வோமே என்று தோன்றிற்று.

அய்யங்கார் மேஜையண்டை போனேன். தலையைக் கொஞ்சம் சாய்த்து ஒரு தினுசாகப் பார்த்தேன். அவருக்கு என்ன தோன்

றிற்ரூே என்னவோ, " நீர் கொஞ்சம் சும்மாயிரும். சிறு புள்ளைத் தனமா என்னத்தையாவது பண்ணிவெச்சுப் புடாதேங்கோ, செக்ரெடரி பார்த்தால் ஏதாவது தப்பா நினைச்சுப்பார்'' என்றூர்.

"பார்த்தையா! எவ்வளவு திடுக்கிடக்கூடிய சம்பவம்? இதைக் கேட்டுவிட்டு மனுஷன் கல்லுப் பிள்ளையார் மாதிரி இருக்கானே. இவருக்கு உணர்ச்சி, கிணர்ச்சி என்ற விஷயமே கிடையாதா? மூஞ்சியில் ஒரு மாறுதலேயும் காணேம். சரிதான், தான் சொந்தமா நினைச்சே ரொம்ப நாளாச்சுபோல் இருக்கு. இவருக்கும் இந்த மகத்தான நிகழ்ச்சிக்கும் நேரே சம்பந்தமில்லே; செக்ரெடரி மூலமாகத்தானே இவர் இதை யோசிக்கிறூர். வயசில் கொஞ்சம் சின்னவர்களாகக் கண்டு பேசுவோம்'' என்று எண்ணி அவர்கள் மேஜையண்டை போனேன்.

இந்த செய்தி அவர்களை ஒரு ஆட்டு ஆட்டி விட்டது என்று தான் சொல்ல வேண்டும். உலக விவகாரம் கொஞ்சம் தெரிந்தவர்களல்லவா? ஆகையால், ஐரோப்பிய நெருக்கடியை அலசி ஆராய ஆரம்பித்து விட்டார்கள்.

" அப்புறம் இங்கிலீஷ்காரன் வரான், பிரஞ்சுக்காரன் வரான், அமெரிக்சன்கூட வரலாம். ஆனல் முதல் அடி விழுகிறபோது அவா தானே தாங்கணும்? நிமிஷ நேரத்துலே முக்கால்வாசி போலண்டு சாம்பலாயிடுமே?"

" இந்த சமயத்துலெ ரஷ்யாக்காரன் என்ன பண்ணப்போருனே அவன் சமாச்சாரமே மூடுமந்திரமா அல்லவா இருக்கு ......"

" மூடாவது மந்திரமாவது ஐயா, இப்போ அவன் விஷயந்தான் ஜோர். ரொம்ப சுகம்னு அவனுக்கு. ஜெகோஸ்லேவேகியாவைக் காட்டிக் கொடுக்கிறதுக்கு முன்னுலே அவன் எவ்வளவு தூரம் சொன்னுன். அப்பெல்லாம் சேம்பர்லேன் இவா ரெண்டு பேரையும் (ஜர்மனியையும் ரஷ்யாவையும்)முட்டவிட்டு மட்டம் தட்டணும்என்று நினைச்சான். எப்படியோ ரஷ்யாக்காரன் தப்பிச்சுண்டுட்டான். இன்னுமேஇவாளெல்லாம் ஒருமாதிரி ஒழியட்டும் என்றுபேசாதிருப்பான். அப்புறம் உலகம் பூரா சோஷியலிஸத்தைப் பரப்பரத்துக்கு ஏற்பாடு பண்ணுவான். அவ்வளவுதான்."

" டே ஒரு கப் காப்பி கொண்டாடா!" சரி இதோடு தீர்ந்தது. இவ்வளவு காரமான பேச்சுக்கள், உஷ்ணமான வாதங்கள் ஒண்ணும் ரொம்ப நேரம் தங்கவில்லே. கொஞ்ச நேரத்துக்கு அப்புறம் நாங்கள் பழையபடி ஆபீஸ் குமாஸ்தாவாக ஆகிவிட்டோம். அய்யங்காரையும் விட ஒரு கம்மி டிகிரி.

சாயங்காலம் வீட்டுக்குப் போகிறபோது நான் பழைய சொக்கன் சொக்கன்தான். ஆனல் மற்றவர்களை இந்தச் செய்தி எப்படி

பாதித்தது. அவர்கள் எப்படி பிரதிபலிக்கிறார்கள். இதைப் பார்ப்பது கொஞ்சம் தமாஷ்தானே என்று, ரோட்டில் வருவார் போவாரை எல்லாம் கூர்மையாகவே கவனித்தேன்.

நான் வெளியே வந்ததும் முதல் முதலில் பார்த்தது ரிக்ஷா வண்டிக்காரர்கள். அவர்களுக்கும் சமாச்சாரம் எட்டியாய்விட்டது. ஆனால் அவர்கள் அபிப்பிராயம் நமக்கு ருசிப்படாது என்று மேலே நடந்தேன்.

கொஞ்ச தூரம் போனதும், பழைய ‘மஹா யுத்தத்தின்’ ஞாபகச் சின்னமாகக் கட்டப்பட்ட ஸ்தூபி பிசாசு மாதிரி முன்னால்நின்றது. வழக்கமாக இதை பார்க்கிற போதெல்லாம் எனக்கு இது உண்மையில் நம் அடிமையின் சின்னம் என்றுதான் தோன்றும். நம் பாரத நாட்டு வீரர்களைப் போற்ற வேண்டியதுதான். அவர்கள் செய்த சேவை மறக்கமுடியாதபடி அவ்வளவு சிறந்தது. அதை ஆங்கிலேயர்கள் நன்றியோடு உணர்ந்ததைப்பற்றி ரொம்ப சந்தோஷம். ஆனால் இந்த ஸ்தூபியை எங்கு கட்டவேண்டும்? சென்னையில் அல்ல; லண்டனில் ராஜ மாளிகைக்கு எதிரில் அதுவும் அவர்கள் பணத்தைக் கொண்டு.

அந்த ஸ்தூபியின் அடியில் ஒரு போலீஸ்காரன் நின்றுகொண்டிருந்தான். ஒரு அப்பாவி குமாஸ்தா அவனிடம் போய் ‘என்ன ஸார் யுத்தம் வந்துடுத்தாமே’ என்று பல்லைக் காட்டினார். எனக்கு சிரிப்பு அடக்க முடியவில்லை. ‘அட பைத்தியமே, போயும் போயும் போலீஸ்காரனிடம் போய் இதையெல்லாம் கேட்கிறையே. அவன் என்ன சேம்பர்லேன் மந்திரிகளில் ஒருவனா, அல்ல இந்திய யுத்த ஆபீஸ் தலைமை செக்ரெடரியா? என்று அவனை மனதுக்குள்ளேயே வைதேன்.

நடை பாதை ஓரத்தில் நின்று இருவர் மும்முரமாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஒருவன் ஹிட்லர் மீசை வைத்திருந்தான். ஆனால் இரண்டு பேரும் முட்டங்காலுக்கு மேல் வேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டிருந்தனர்.

“காங்கிரஸ் ஏது புரஞ்சாலும் எனக்கு ஒன்னும் அறியண்டாம். கேப்டன் நம்பியார் கம்பவுண்டராயாண அவடப் போய், பின்னே வரும்போள் ஹெல்த் ஆபீசர் வேலையுங் கிட்டி.” ஓஹோ வேலையில்லாதவர்கள் பாவம். எப்படியும் வேலை கிடைத்தால் போதும் என்று இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள் என்று எண்ணி அவர்களைத் தாண்டிப்போனேன்.

இந்தியர்கள் விஷயம் மாத்திரம் தெரிந்தால் போதுமா? வெள்ளைக்காரர் மூஞ்சிகளையும் கொஞ்சம் பார்ப்போமே என்று நடை பாதையில் போட்டிருக்கும் பெஞ்சியில் உட்கார்ந்தேன். சிலரைக் கவனித்தேன். ஒருவர் மூஞ்சியிலும் களையில்லை. சிறிது வருத்தக் குறிகள் காணப்பட்டன. திடீரென்று கடகடவென்று சத்தம்

கேட்டது. சமுத்திரக் கரையோரத்தில் சில சட்டைக்கார சிப்பாய்கள் வாசஞ் செய்கிறார்களல்லவா; அவர்கள் தங்களுக்கென்று தனியாக சிருஷ்டிக்கப்பட்ட கோவேறு கழுதைகள் பூட்டிய வண்டிகளை முடுக்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். ஓஹோ! சமுத்திரக் கரையை இப்படிதான் எதிரிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றுவார்கள் போலிருக்கிறதென்று நினைத்துக்கொண்டு வீடு சேர்ந்தேன்.

அடுத்த வீட்டுத் திண்ணையில் இரண்டு மூன்று ரிடயர்டு கிழவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். "லாஸ்ட் வாரின்போது நான் மெட்றாஸிலேதான் இருந்தேன். எம்டன் வந்து ஒரு குண்டை போட்டானோ இல்லையோ, ஊரே அல்லோலகல்லமாப் போச்சு. ராத்திரி ஒரு மெயில்லேயாவது இடமில்லை. ஒரு அரை இஞ்சு இடம் மிச்சமிருக்கணுமே. எல்லாம் கிராமத்தைப் பார்க்க ஒரே ஓட்டம்."

"அந்த விலைவாசிகள்தான் எப்படி......" என்று என்னவோ ஆரம்பித்தபோது இன்னொருவர் குறுக்கிட்டு, "ஒரு ரசமான விஷயம்னா அந்த நாலாவது வீட்டிலே வந்திருக்கானே தன் உயிர்தான் வெல்லம் என்று எண்ணிண்டிருக்கற புள்ளைண்டான். அவன் என்ன பண்ணினான் தெரியுமோ? துரையண்டை போய் "எனக்கு கொஞ்ச நாளா உடம்பு சரியா இல்லை. இ...இ...இ..." என்று இளிச்சுப்புட்டு லீவு ஒரு மாசத்துக்குக் கேட்டானாம். யுத்த சமாசாரங் கேட்டு இவன் பயந்து நடுங்கிட்டான் என்று தெரிஞ்சுண்டு, 'உனக்கு, கழுத்துலே ஒரு கை இடிப்பிலே ஒரு கால் வைச்சு பலமான தள்ளோடே நீண்ட லீவுந்தரேன் என்றானாம் துரை" என்றார்.



கலைஞான வரலாறு

(முன் கதைச் சுருக்கம்.)

[கருப்பூர் என்னும் கிராமத்தில் சிவஞான தேசிகன் என்னும் பிராமணனுக்கு சுவாமிநாதன் என்ற ஒரு மகன். சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தோங்கிய அம்மறைமகன், பத்தொன்பதாம் வயதில் ஞான மேலீட்டினால், தாய் தந்தையர் செய்வித்த மண ஏற்பாடுகளை வெறுத்து, பெற்றோர் அறியாமல் முனிவர்க்கிடமான வனத்தையடைந்து, அங்கொரு முனிவரையடுத்து, ஞான உபதேசம் செய்தருளும்படி அவரை வேண்டினன். முதலில் முனிவர் அவனைத் தடுத்து இல்லறத்தினின்றும் நற்கதி அடைவதற்கு மார்க்கமுண்டு என பல உரைத்தும், துறவறத்தையே அம்மறைமகன் வேண்ட, முனிவரும் ஞானம் உதயமாகும் சில உபதேசங்கள் செய்து தனது இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். மகன் வரவைக் காணாத தாய் தந்தையர்கள், தவித்துத் துயரில் ஆழ்ந்தனர்.

எனினும் ஒருவாறு தேறி, தங்கள் இல்லத்தை விடுத்து, மகனைத் தேடி, வனவழி சென்றனர். வனவழியில் நெடுந்தூரத்தில், ஆசிரமம் ஒன்று அவர்களுக்குத் தென்படவே, அங்கு சென்றனர். அந்த ஆசிரமத்தில் எழுந்தருளியிருந்த முனிபுங்கவர், வந்தடைந்த சதிபதிகளின் மனதைத் தேற்றுவதற்காக, முனிவர் பெருமானான அகஸ்திய மாமுனி உபதேசம் செய்த பார்வதிதேவியின் தவ வரலாற்றை அவர்களுக்குச் சொல்லுகின்றார்.

தவத்திலிருந்த மலைமன்னன் முன் உமாதேவி மூன்று வயது குழந்தையாக உற்பவிக்கின்றாள். அதைக் கண்டு மலைமன்னன் மகிழ்ச்சி கொண்டு குழந்தையை எடுத்துக்கொண்டு வீடு போய் செல்வமாய் வளர்க்கிறான். ஐந்தாம் வயதில் பார்வதி என்று பெயர் வைத்தான். பதின்மூன்று வயதான பொழுது பார்வதி பரமேசுவரனைக் குறித்துத் தவம் செய்ய வேண்டுமென்று தந்தையை வேண்டினள். தந்தையும் அதற்கிணங்கி அவளை மலைச்சாரலில் தவம் புரிந்த வசிஷ்ட முனிவரிடம் கூட்டிச் செல்லுகிறார். வசிஷ்டர் பார்வதிக்கு தவ முறையைச் சொல்ல அவள் அதன்படியே தவம் செய்கின்றாள். தவத்தின் நடுவே சிவபெருமான் ஒரு கிழவன் வேடம் தரித்து வந்து பார்வதியை சோதனை செய்கிறார். பரமசிவனைத் தூற்றுகிறார். பார்வதி கோபங் கொண்டு கிழவனை வெளியே போகச் சொல்லுகிறாள். கிழவேடந்தரித்த சிவபெருமான் ரிஷபாருடராக, பார்வதிக்கு, காட்சி அளித்து, தேவியை மணம் முடித்துக்கொள்ளுவதாக வாக்கு கொடுத்து, திருமணம் செய்துகொள்ளுகிறார்.]

சிவஞான தேசிகருக்கும் அவர் மனைவியாருக்கும், முனிவர், முன் தினம் ஜெயவதி நட்சத்திரங்களையும் சந்திரனையும் பார்த்து நிந்தித்

துரைத்த சிலவற்றைச் சொல்லி, மற்றதை நாளைச் சொல்லுவதாக அச்சதிபதிகளை அழைத்துக்கொண்டு ஆஸ்ரமத்துக்குச் சென்ருர்.

இது இப்படி இருக்க, மற்ருேர் முனிவர் சுவாமிநாதனுக்கு உப தேசித்து வருவதை சில சொல்லுவோம்.

முனிவர், "சுவாமிநாதா! கண் போன்ற ஞானத்தை அடையாத வர்கள் மனேவிருத்தியால் உலர்ந்து துரும்பைப்போல் உழல்வார்கள். ஞானத்தை அடையக் கருத்தில்லாத சகலரும் மாயையால் பலகாலும் வாடுவார்கள். குழந்தாய்! இதுவரைச் சொல்லி வந்த யாவையும் உன் மனத்தில் பதிந்ததோ?" என்றனர்.

அதற்குச் சுவாமிநாதன், "முனிபுங்கவ! தாங்கள் சொல்லி வந்த யாவும் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. இத்துடன் மனமடங்கும் யோக சாதனைகளிலும் பழக அவாக் கொண்டுளேன். தங்களின் சித்தம் எப்படியோ?" என்றனன்.

முனிவர், "நல்லது குழந்தாய்! இன்று முதல் மனமடங்கி ஞானம் பெறுதற்கான யோகாப்பியாசத்தையும் செய்து காண்பிக் கின்றேன். நீயும் சர்வ ஜாக்கிரதையாய் குறி தவருது பழகி வருவாய். சுவாசத்தை வசப்படுத்தி, மனத்தை இறுக்கி, சரீரத்தை ஒடுக்கி செய்யும் அப்பியாச காலங்களில் எச்சிந்தனையு மில்லாமல் பழகவேண்டும்," என்று சொல்லி யோகாசனத்தில் நிற்கும் அநேக வழிகளையும் முனிவர் முறைப்படி செய்து காண்பித்து வந்தார்.

சுவாமிநாதனும் அச்சாதனைகளில் பலநாள் பழகித் தேர்ச்சி யடைந்தான். முனிவர் பின்னும் மோட்சத்தை அடைவதற்கான அநேக வழிகளைச் சுவாமிநாதனுக்கு உரைத்து, தனித்து தவஞ் செய் வதற்கான ஓர் ஆசிரமும் உண்டு பண்ணிக் கொடுத்து பிரம்ம ஞான பூஜையில் அமரும்படி கட்டளை யிட்டார். சுவாமிநாதனும் விடை பெற்றெழுந்து தனதாசிரமத்தை அடையுமுன், ஓர் யுவதி முனி வரும் சுவாமிநாதனும் உட்கார்ந்திருக்கும் இடத்தை நெருங்கி முனி வரை வணங்கிய வண்ணம் சுவாமிநாதனைப் பார்த்து உடல் நடுங்க கண்களினின்றும் நீர் தாரை தாரையாய் விழுக ஒடுங்கி நின்றனள்.

முனிவரும் அவ்வரிவையைப் பார்த்து "அம்மா நீ யார்? இங்கு ஏன் வந்தாய்? கலங்கி அழும் காரணம் என்ன?" என்றனர்.

"சுவாமி, நான் இதோ உட்கார்ந்திருக்கும் ஆடவரின் ஊரைச் சேர்ந்தவள். என் பெயர் உமா" என்றனள். இதைக்கேட்ட சுவாமி நாதனின் உடல் பதைபதைத்து ஏதோ சொல்லுவதற்கு முயன் ருன். நாவெழ வில்லை. முகம் வெளுத்தது. தலை பூமியை நோக்கியது.

தன் பெயர் உமா என்று சொன்னவுடன் அப்பெண்ணை முனி வர் பார்த்து "நல்லது அம்மா, இப் புருஷன் நன்ருய் உனக்குத் தெரி யுமோ?" என்ருர்.

அதற்கு உமா, "ஆமாம், சுவாமி, நன்றாய்த் தெரியும். இவர் என் தந்தையின் நெருங்கிய உறவைச் சேர்ந்தவர். சில நாள்களுக்கு முன் இவருடைய தாய்தந்தையரான எனது மாமன்மாமியார் என்தாய் தந்தையரை அடுத்து என்னை இவருக்கு மணஞ் செய்து தரவேண்டு மென்று கேட்க, அவர்களும் சம்மதிக்க, தக்க தினத்தைக் குறித்து மணம் செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து முடிக்க முன் நடக்கும் மணச் சடங்குகளை எனக்குச் செய்தும் வந்தனர். கடைசி யாக மணத்தினத்தன்று மாப்பிள்ளையான இப் புண்ணிய புருஷர் மணத்தை வெறுத்து இல்லத்தினின்றும் பிரிந்தாரெனத் தெரிந்தது.'

"சுவாமி, இது எந்த தருமத்தைச் சேர்ந்ததாய் இருக்கலாம்? தாங்கள்தான் சொல்ல வேண்டும். என்னை இவருக்கு மனைவியாக்க நிச்சயதார்த்தம் முதலிய எல்லாம் செய்தாய்விட்டது. என் மனமும் இவர் கணவன் என்கிற நிச்சயத்திற்கு வந்த பிறகு இவர் மணத்தை வெறுத்துப் போய் விட்டால் நான் இன்னொருவனை விவாகம் செய்து கொள்வது தருமமோ? அப்படிச் செய்து கொண்டால் நான் கற்புடை யவளாய் வாழ முடியுமோ? ஒருவருக்கு நிச்சயம் செய்த என்னை மற் றும் ஒருவர் விவாகம் செய்து கொள்ளத்தான் வருவானோ? எங்கள் முன்னோர்களிலும் இப் பழக்கத்தைக் காணோமே."

"முனிவ! நானோ இளகிய மனதையுடைய பெண். என் வாழ் நாளுக்கே இத்தனை இடர்களைச் செய்துவந்த இவர் தங்களிடத்தில் துறவறத்தின் செயல்களைத் தெரிந்து கொண்டு மாத்திரம் என்ன பல னைப் பெற முடியும். என் மன வேதனை இவர் எத்தகைய நல் வழி களில் சென்றாலும் தாக்குமல்லவா!?"

"இவர் ஒன்று சொல்லலாம். 'நான் உன்னை விவாகம் செய்து கொள்வதாய் நிச்சயிக்க வில்லை' என்று. நம் முன்னோர்களின் இந்த நாள் வழக்கம்வரை தாய் தந்தையர்கள் தானே மணமகனையோ மக ளையோ ஆராய்ந்து நிச்சயிப்பது. தாய் தந்தையர்கள் வாக்குறுதி யுடன் நிச்சயித்த ஒரு காரியத்தை எத்தகைய இடையூர்கள் வரினும் அது பிசகாது காப்பாற்றுபவன் அல்லவோ உத்தமனான ஆண் மகன். பாவம், இவருக்கு தெரியாது போலும்."

ஏதோ துறவரம்தான் பெரிதென்று நினைத்துக்கொண்டு ஓடி வந்து விட்டாரே யொழிய, தந்தை சொல்லை மீறியவனுக்கு எத்தகைய மந்திரங்களும் பலிக்காதென்பதை இவரறியவில்லை. தாய் சொல்லை யும் மீறிய இப் புருஷனுக்கு தாங்கள் சொல்லும் வாசகங்கள் ஒருக் காலும் பலிக்காது. இதிருக்க ஓர் பெண்ணின் வாழ்நாளைக் கெடுத்து பழியைச் சுமந்து கொண்ட இப் புண்ணிய புருஷனுக்கு மோட்சம் உடனே கிடைத்துவிடாதா! கனவுதான் காண வேண்டும்."

"பாவம், இவரை நிந்திப்பதில் பலன் என்ன? தக்க தரும சாஸ் திரங்களையும், ஞான நூல்களையும் முற்றும் அறிந்தாரில்லை போலும்.

அறிந்திருந்தால் இல்லறத்தினின்றும் எத்தனையோ பேர்கள் மோட்ச மடைந்திருக்கிறார்கள் என்பது தெரிந்திருக்குமல்லவா? ஏதோ முனிவர் போல் வேடந்தரித்துக் கொண்டு ஊரை ஏமாற்றித் திரியும் மோசக்காரர்களைக் கண்டிருப்பார். அவன், 'துறவறந்தான் பெரிது. அதனால்தான் மோட்சத்தை அடையலா'மென்று சொல்லி யிருக்கக் கூடும். அதை நம்பி இவரும் ஓடி வந்துவிட்டார்."

"சுவாமி, எனக்குள்ள ஆத்திரத்தின் மிகுதியால் ஏதேதோ உளறிவிட்டேன். பிழைகளை மன்னிக்கவேண்டும். நான் சொல்லி வந்ததிலிருந்து இப்புருஷன் எனக்கு நன்றாய்த் தெரிந்தவரென்று தங்களுக்குத் தெரிந்திருக்கும்."

"முனிபுங்கவ! நான் சொல்லியதிலிருந்து பின்னும் இவரை இந்நிலையினின்றும் பிரித்து மணஞ் செய்து இல்லறத்தை நடத்தக் கருதி வந்தவளென்று நினைக்க வேண்டாம். பேதமைக் குணமே ஆபரணமாகக் கொண்டுள்ள பெண்களின் மனதைக் கெடுத்து பல துர்வழிகளிலும் ஈடுபடச் செய்வது கன்மனமுள்ள இவர் போன்ற ஆடவர்கள் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டேன். அதிலிருந்து ஒரு முடிவிற்கும் வந்துவிட்டேன். பெண்கள் கற்பழிந்து கவலைப் படுவதற்குக் காரணகர்த்தாக்கள் இவர் போன்ற ஆண்மக்கள், என்னும் உண்மையைத் தெரிந்து கொண்டு நானும் மணத்தை வெறுத்து, தங்கள் போன்ற முனிவரை அடுத்து ஞானோபதேசம் கொண்டு நற்சாதனத்தில் பழகவேண்டு மென்று முடிவுக்கு வந்து என் தாய் தந்தையர்கள் உத்தரவையும் பெற்று வந்துளேன். தங்களை யும் கண்டேன். இன்னும் என்னைக் கர்மம் விடாததினால் மறந்தொழிந் தவை பின்னும் என் மனத்தில் வர இப்புருஷனையும் கண்டேன், என்றனள்.

(தொடரும்)

சோகத்தின் முன்னிலையில்

கு. ப. ராஜகோபாலன்

"அப்பா, உங்களுக்கு என்னை அப்படிக் கேட்கக்கூட மனம் வருகிறதா?" என்று சாவித்திரி பலபலவென்று கண்ணீர் உதிர்த்துக் கொண்டே கேட்டாள்.

"சாவித்திரி! நீ சிறு குழந்தையல்ல. நடந்தது நடந்து விட்டது. இனிமேல் என்ன செய்வது? இருக்கிற வரையில் நீ சோற்றுக்குத் திண்டாடாமல் இருக்க வேண்டாமா?" என்று அவளுடைய தகப்பனார் கெஞ்சுதலாகச் சொன்னார்.

"அப்பா, உங்களுக்கு என்னை வைத்துக் காப்பாற்றச் சக்தியில்லையென்றா சொல்லுகிறீர்கள்?" என்று அவள் நெஞ்சு உடைந்தது போன்ற வேதனையுடன் கேட்டாள்.

அந்த வார்த்தை அவருடைய ஹிருதயத்தில் அம்புபோல் பாய்ந்தது. ஆனால் அவர் தன் வருத்தத்தை வெளிக்காட்டவில்லை.

"இல்லையம்மா, இல்லை. உன்னை விடஎனக்கு எது மேல்? ஆனால் உன்னுடையது என்று, நீ சுதந்தரத்துடன் கையாள, ஏதாவது இருக்கவேண்டாமா?" என்று அவர் மறுபடியும் கேட்டார்.

"என்னுடையதென்று நான் சொல்லிக்கொள்ள வேண்டியது இனிமேல் வாழ்க்கையில் என்ன இருக்கிறது? என்னை ஏன் இன்னும் புண்படுத்துகிறீர்கள்? எனக்கு என்ன சுதந்திரம் வேண்டியிருக்கிறது வாழ்க்கையின் கைதியான பிறகு?" என்று சாவித்திரி துக்கமும் ஆக்கிரமும் கலந்த குரலில் சொன்னாள்.

"என்ன இப்படிப் பேசுகிறாய்? அவர்கள் ஏன் கொடுக்கக்கூடாது? ஏராளமான சொத்தாச்சே. நீ எதற்காகக் கஷ்டப்பட வேண்டும்?"

"என்ன கஷ்டம்? இனிமேலா கஷ்டப்படப் போகிறேன்? அப்பா நீங்கள் கூடவா இப்படிப் பேசுகிறீர்கள்?" என்று தகப்பனாரைக் கடிந்துகொண்டாள் சாவித்திரி.

"எவ்வளவு துக்கத்துடன் நான் இதை உன்னிடம் சொல்லுகிறேன், தெரியுமா?"

"எதற்காகச் சொல்லுகிறீர்கள்?"

"எவ்வளவு நாள் சும்மா இருப்பது சொல்லாமல்?"

"சொல்லவே வேண்டாமே!"

"பிராது போடத் தாமதம் ஆகக்கூடாது. இதெல்லாம் உன்னிடம் சொல்லி உன் மனதை சிரமப்படுத்த வேண்டாமென்றுதான் உன் கையெழுத்து மட்டும் வேண்டுமென்றேன். இத்தனை நாள் நான் ஏதாவது வாயைத் திறந்தேனா? இனிமேல் சாவகாசமில்லை, அம்மா!" என்று சொல்லி

நாகரத்தினம் அய்யர் நாற்காலி யில் சாய்ந்து கொண்டிருந்தவர் எழுந்து உட்கார்ந்தார்.

சாவித்திரி ஜன்னலில் உட் கார்ந்துகொண்டு, வெளியே தெரு வைக் கவனித்துக் கொண்டிருந்த வள் போல முகத்தை வேறு பக் கம் திருப்பிக் கொண்டிருந்தாள். தகப்பனாரைப் பார்த்தால் உடனே தன்னை மறந்து அழுகை வந்து விடுமோ என்று பயந்து தான் அப்படி இருந்தாள்.

"அப்பா, அந்தப் பேச்சை இனிமேல் எடுக்காதீர்கள்!" என்று கடைசியில் கண்டிப்பாகச் சொன்னாள்.

"என்ன, சாவித்திரி, எதற்காக இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாய்?" என்று அவர் சொன்ன குரலில் அவர் அறியாமல் என்ன மாறுதல் ஏற்பட்டதோ, சாவித்திரி, சட் டென்று திரும்பி அவர் முகத் தைப் பார்த்தாள். அவர் லேசாக வருத்தமும் மனஸ்தாபமும் கொண்டிருந்தது தெரிந்தது.

"அப்பா, நீங்கள் வேண்டுமா னால் என்னை வைத்துக் காப்பாற்ற வேண்டாம்—அவர்கள் காசு எனக்கு வேண்டாம். அவர் இருக் கிற பொழுது அவருக்கும் எனக் கும் உபயோகப்படாத காசு எனக்கு இப்பொழுது தேவை யில்லை" என்று அவள் தடதட வென்று பேசினாள்.

அந்தப் பேச்சிலிருந்த காரத்தை உணராதவர் போல அவர் மறுபடியும் "நாய் விற்ற காசு குரைக்குமா?" என்றார்.

சாவித்திரிக்குக் கோபம் தாங்கவில்லை. ஆனால் அந்தக் கோபத்துடன் தகப்பனாருக்குப் பதில் சொல்ல பயப்பட்டாள். ஏதாவது துடுக்கான வார்த்தை வெளிவந்துவிடுமென்று பெரு முயற்சி செய்து சும்மா இருந் தாள்.

சாவத்திரியின் புருஷன், சாம்பு, இறந்த நாள் முதல் நாக ரத்தினமய்யர் அந்த ஜீவனாம்சப் பேச்சை எடுத்த போதெல்லாம் சாவித்திரி அழுது அழுது அவ ரை அடக்கிவிட்டாள். ஹிருதயம் வெடித்துவிடும் போல அவள் நிலைகுலைந்த காட்சியைப் பார்க்கச் சகிக்காமல் அவர் சும்மா இருந்து விடுவார். சாம்பு இறந்து மூன்று வருஷங்கள் ஆகப்போகிறதால் ஒருவேளை பெண்ணின் மனப் புண் கொஞ்சம் ஆறியிருக்கும் என்று எண்ணினார் அவர். அதற் கேற்றாற் போல சாவித்திரியும் முன்போல உள்ளே அடைத்துக் கொண்டு கிடக்காமல் வீட்டுக் காரியம் செய்வதும் படிப்பது மாக இருந்தாள். சில சமயங் களில் கொஞ்சம் குதூகலமாகவும் வேடிக்கையாகவும் கூட அவள் இருந்ததாக அவருக்குப் பட்டது. அதைக் கண்டு அவர் பரம சந் தோஷம் அடைந்தார். அந்த மட்டுமாவது தன் 'குழந்தை' துக் கத்தை மறந்து திரிந்தாளே என்று ஒருவிதமான நிம்மதி கூட அடைந்தார்.

ஆனால் அவ்வளவு குதூகல மும் வேடிக்கையும் வெளிக்கு அவள் கொண்டது என்று அவ ருக்கு எப்படித் தெரியும்? சதா அழுது கொண்டு வீட்டில் இருப் பவர்களைத் துன்புறுத்தக் கூடாது என்றுதான் அவள் அந்த மாதிரி நடந்து கொண்டாள். மேலும்

அந்த துக்கம் அவளைச் சோர்வடையச் செய்து விட்டது. அழுது அழுது அவள் கண்களில் கண்ணீர் ஊற்று அற்றுப் போயிற்று. பொங்கி பொங்கி அவளுடைய

ஹிருதயத்தின் துக்கம் ஒருவாறு அடங்கி விட்டது. சரீரம் பலஹீனமடைந்ததால் உணர்ச்சிகளும் பலகீனமடைந்தன. அழக்கூடத் திறமையற்றுப் போனாள். மறுபடியும் கொஞ்சம் சிரித்துக் கொண்டு திரிந்தால் பிறகு அழலாமோ என்று எண்ணினாள். துக்கத்தின் எல்லையைக் கண்டு விட்டாள். மேலே அவளுக்கு ஒருவித திடமும் அமைதியும் கூட ஏற்பட ஆரம்பித்தது. அனல் ஏறினால் பால் பொங்கு

வது போல தகப்பனர் பேச் செடுத்த போதெல்லாம் அவள் உள்ளம் குபீலென்று குமுறியது. அது அவளுடைய தகப்பனு ருக்கு அர்த்தமாக வில்லை.

நாகரத்தினமய்யருடைய உயிர் பெண்ணின்மேல். மூத்த சம்ஸா ரத்தின் பெண். தனக்குப்பின் அவள் திக்கற்றுப் போகக் கூடா தே என்றுதான் அவர் ஏதாவது 'ஏற்பாடு' செய்ய வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தார்.

சாவித்திரியின் மாமனர் நல்ல சொத்துக்காரர். அவரும் இரண் டாம் தாரம் கொண்டவர். சாம்பு முதல் தாரத்து மகன். அவன் காலேஜில் படிக்கும் போதே தகப்பனுருடன் சண்டை போட் டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டான். அதாவது சிறிய தாயாருக்கும் அவனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டது. தகப்பனர் அவள் வார்த்தையை நம்பித் தன்னைக் கடிந்தது அவ னுக்குத் தாங்கவில்லை. பிறகு அவன் தகப்பனர் முகத்தைப் பார்க்கவில்லை.

தனக்குரிய சொத்து பாகத்தை வியாஜ்ஜிய மூலம் பெறும்படி பலர் தூண்டியும் அவன் கேட்கவில்லை. விஷக்காசு தனக்கு வேண்டா மென்று சொல்லி விட்டான். சாவித்திரி அந்தத் துணிவில் அவனை முழுமனதுடன் ஆதரித் தாள். ஆனல் நாகரத்தினமய்ய ருக்கு மாப்பிள்ளையின் போக்கு பிடிக்கவில்லை. அவர் மாப்பிள்ளைக் குக் கொஞ்சம் காரமாகவே கடி தங்கள் எழுதினர். அது சாவித் திரிக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்க வில்லை.

சாவித்திரி பிறவியாலும் படிப் பினும் மிகுந்த 'ரோஷ'மும் தன் மதிப்பும் கொண்ட பெண்ணுக இருந்தாள். சாதாரணமாக அவ ளுடைய வயது பெண்களிடம் தென்படாத ஒரு விசால நோக் கும் கௌரவ புத்தியும் அவளுக்கு இருந்தது. எனவே புருஷன் போக்கு பூராவும் அவளுக்கு நன் ருக அர்த்தமாயிற்று. அதற்காக அவனை மிகவும் போற்றினள். அந்தப் பணம் இல்லாததால் தாங் கள் அடைந்த துன்பங்களைப் பொருட் படுத்தாமலே வாழ்க்கை கவலையின்றிக் கழிய அவனுக்கு ஒத்தாசையாக இருந்தாள்.

சாம்புவும் சாவித்திரியும் ஆதி முதலே வாழ்க்கையில் ரொம்ப கஷ்டப்பட்டார்கள். என்றாலும் இருவரிடையே இருந்த பாசம் மட்டும் அந்தக் கஷ்டங்களால் இறுகத்தான் செய்தது. பணக் கஷ்டம் மட்டுமல்ல அவர்கள் பட்டது. இரண்டு குழந்தைகள் பிறந்து கொஞ்சம் காலம் வளர்ந்து இறந்தன. அந்த துக்கமும் அவர்களுடைய குணத்தைப் பதமாக்கிற்றே தவிர அவர்கள் பொறுமை இழக்கவில்லை. எங்கோ ஒரு சில்லறை ஸ்டேஷன் மாஸ்டர் உத்தியோகத்திலிருந்து வந்த சிறு சம்பளத்தை வைத்துக் கொண்டு இருவரும் காலம் தள்ளி வந்தார்கள்.

சாம்பு திடீரென்று ஏதோ வொரு விஷக் காய்ச்சலால் இறந் தது தான் சாவித்திரிக்குத் தாங்கமுடியாத துக்கமாக வந்தது. உயிர்வைத்துக் கொண்டிருக்கத் தனக்கிருந்த அந்த ஆறுதலும் போய் விட்டதால் ஊன்று கோல்

இல்லாத கொடிபோல் அலைந்தது அவள் உள்ளம். தகப்பனர் வீட்டில் அவள் முள்ளின்மேல் இருப்பது போல இருந்தாள். அவருடைய அன்பும் ஆதாவுமே அவளுக்குச் சகிக்க முடியாத கஷ்டமாக இருந்தது. கணவன் இறந்த துக்கம் ஒரு புறமிருக்க வேறு பல துக்கங்கள் அவளைச் சூழ்ந்து கொண்டன.

"அப்பா, அவர் இறந்த துக்கத்தை நான் மறந்து விட்டேன். இப்பொழுது எனக்கு நான் இருப்பதுதான் துக்கமாக இருக்கிறது" என்று சாவித்திரி வெகு நேரம் கழித்து மறுபடியும் பேசலானள்.

"சாவித்திரி, நீ புத்திசாலி. நான் என்ன சொல்லப்போகிறேன்? ஏதோ நேர்ந்து விட்டது விபரீதம். இனிமேல் நாம் என்ன செய்கிறது? உயிர் இருக்கிறவரையிலும் நீ உபத்திரவமில்லாமல் இருக்க வேண்டாமா?"

"நீங்கள் தான் என்னை உபத்திரவம் செய்கிறீர்கள்" என்று சாவித்திரி சட்டென்று குறுக்கிட்டுச் சொன்னள்.

"உன்மேல் பிசகில்லை, சாவித்திரி! நான் என்ன செய்யப்போனலும் எல்லோருக்கும் அப்படித்தான் படுகிறது" என்று அவர் கொஞ்சம் கசந்துகொண்டு சொன்னர்.

"அதற்காகத்தான் ஒன்றும் செய்யவேண்டாம் என்றேன்! அப்பா, உலகம் நன்றி கெட்டது."

"நன்றியைப்பற்றி நான் கவலைப்படவில்லை, என் கடமையை நான் செய்து முடித்துவிட வேண்டியது என்பதுதான் என் எண்ணம்."

"உங்கள் கடமை எனக்கு இழிவையோ துன்பத்தையோ கொடுக்குமானல்?"

"உனக்குச் சேரவேண்டிய பணத்தை நீ பெறுவதில் உனக்கென்ன இழிவு?"

"என் புருஷனுக்குச் சேர வேண்டிய பணம் அவருக்கே உபயோகப்படவில்லை. அது எனக்கு வேண்டாம். அதை நான் பெற்றுக்கொண்டால் அவருக்குத் துரோகம் செய்தவளாவேன். கூடாது. மாட்டேன்!"

"உனக்கேற்பட்டிருக்கும் மகத்தான துக்கத்தில் உனக்கு அப்படித்தான் தோன்றும். அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனல் நான் உன் சார்பாக அந்தப் பணத்தை வாங்கித்தான் ஆக வேண்டும் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள்."

"என் மனதிலிருப்பது அவர்களுக்கென்ன தெரியும்?"

"நல்லதைத்தானே சொல்லுகிறார்கள்?"

"அப்பா, எனக்கு ஒன்றும் வேண்டாம். உங்களுக்கு சௌகரியமிருந்தால் ஒரு வேளை சோறு போடுங்கள், இரண்டு துணி வாங்கிக் கொடுங்கள். இல்லாவிட்டால்......"

"சாவித்திரி, நீ இந்த மாதிரி பேசி என் மனதையும் புண்படுத்துகிறாய்" என்று நாகரத்தினமய்யர் தன்னையும் மறந்து கோபமாகச் சொல்லி விட்டார்.

"ஆமாம், அதுதான் உங்களுக்குத் தெரியும், என் மனது படும் அவஸ்தை உங்களுக்கு எப்படித் தெரியும்? தெரிந்திருந்தால் இந்த மாதிரி என்னை நீங்கள் கேட்க

மாட்டீர்கள்" என்று சாவித்திரி கொட்டிவிட்டாள்.

சாவித்திரி சொன்ன வார்த்தைகள் அவளுடைய தகப்பனாரை உலுக்கி எடுத்து விட்டன. இது வரையில் அவர் தன் துக்கத்தை அடக்கிக்கொண்டு பேசினார். அதற்கு மேல் அவரால் அடக்க முடியவில்லை, கண்களில் ஜலம் பெருகிற்று. உரக்க அழ ஆரம்பித்தார். இரவும் பகலுமாக தன் கண்ணெதிரில் காணும் அந்த சோகக் காட்சியைக் கண்டு கண்டு புண்பட்டுப் போன ஹிருதயத்தின் உணர்ச்சி கட்டு மீறிபோய் விட்டது. சாவித்திரியின் வாழ்க்கை சிர்குலைந்த தினம்முதல் அவர் எக்கம் பிடித்துப்போய் திரிந்தார். எதிலும் அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. சாப்பிட முடியவில்லை, அவரால்நிம்மதியாக. பேச முடியவில்லை, கலகலவென்று சிரிக்க முடியவில்லை. மறைந்து கிடந்த அந்த மகா துக்கத்தின் மேல் அந்த அடி விழுந்ததும் அவள் குழந்தைபோல விம்மி விம்மி அழுதார்.

சாவித்திரிக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. தன் தகப்பனார் அந்த மாதிரி நிலை குலைந்து கதறுவதை அவள் பார்த்ததே இல்லை. திடீரென்று அப்பொழுதுதான் அந்த சோகத்தின் முன்னிலையில் தன் சோகத்தின் அளவு தெரிந்தது அவளுக்கு. உடனே அவள் எல்லாவற்றையும் மறந்தாள்.

எழுந்தோடி தகப்பனாருடைய முகத்தைப் பிடித்துக்கொண்டு கண்ணீரைத் துடைத்தாள்.

"அப்பா, நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யுங்கள் அப்பா, நான் என்ன செய்ய வேண்டும்? கையெழுத்து தானே போட வேண்டும்? போடுகிறேன் அப்பா! நீங்கள்—"

"சாவித்திரி — சாவித்திரி" என்றுதான் அவரால் சொல்ல முடிந்தது நெஞ்சடைப்பில்.

"அப்பா, இப்படியா உங்கள் சோகத்தை உள்ளே வைத்துக் கொண்டு ....? வேண்டாம், வேண்டாம். அழாதேயுங்கள் அப்பா! என்னைப் பாருங்கள்!" என்று தன் துக்கத்தை மறந்து சாவித்திரி தகப்பனார் துக்கத்தை மாற்ற முயன்றாள்.

சம்பந்தி விஜயம்

ஜயம்

சாக்கோட்டை வெங்கட சுப்பய்யர் என்றால் அந்த வட்டாரங்களில் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள்.

ஏனென்றால், அவர் வம்ச பரம்பரையாகவே பெரிய மனிதர். அவர் தாத்தா காலத்தில் சொத்து அதிக மில்லாவிட்டாலும் ஊரில் சாஸ்திரிகள் என்று மதிப்பு இருந்து வந்தது.

வெங்கட சுப்பய்யரின் தந்தை வியாபாரம் செய்து ஏராளமாக சம்பாதித்து விட்டார். அதனால் தான் வெங்கட சுப்பய்யர் படித்த வரையில் போதுமென்று புஸ்தகத்தை மூட்டை கட்டிவிட்டு அந்தக் காலத்திலேயே வீட்டுக்கு வந்து விட்டார்.

ஆனாலும் அவர் தன் பிள்ளை நாகநாதனைப்படிக்க வைக்கத்தவறவில்லை. அவன் எத்தனை தரம் பரீக்ஷை தவறினாலும் இவர் ரூபாய் கட்டத் தவறுவதே இல்லை.

யாராவது ஏன் இப்படி ரூபாயைச் செலவு செய்கிறீர்கள் என்று கேட்டால் எல்லாம் வட்டியும் முதலுமாக வந்து விட்டுப் போகிறது என்று சொல்லுவார். அவருக்கு இரண்டுவித தைரியம். ஒன்று தான் பணக்காரர். இரண்டாவது தன் பிள்ளை பீ.ஏ. படிக்கிறான். ஆகையால் தான் வரதக்ஷிணையை எதிர்பார்ப்பது சரியானதுதான் என்பதே அவர் அபிப்பிராயம்.

அவருடைய சிநேகிதர் ஒரு சாஸ்திரிகள். யாராவது வெங்கட சுப்பய்யர் வீட்டிற்கு வந்தால் அவர்களிடம் இவர் குடும்பத்தையும் ஐவேஜியையும் பற்றி வானளாவப் புகழ்ந்து விடுவார்.

வந்தவர்கள் பிரமித்துப் போவார்கள். சிலர் இவ்வளவு பெரிய இடத்தில் நம்மால் சம்பந்தம் பண்ணிக்கொள்ள முடியாதென்று எண்ணி திரும்பிக்கூட சென்று விட்டார்கள்.

வெங்கடசுப்பய்யருக்குக்கொஞ்சம் ஜோஸ்யம் கூடத் தெரியும். இரவில் கடிகாரமில்லாமல் நக்ஷத்திரங்களைப் பார்த்து மணி சொல்லுவார்.

யாராவது ஊரில் மாடு காணாமல் போய்விட்டது, எந்த திக்கில் சென்றிருக்கும் என்று கேட்டால் எந்தப் பக்கம் பசுமை இருக்கிறதோ அந்தத்திக்கில் இருக்கும் என்று சொல்லி விடுவார்.

அவர் நடுநடுவே சாஸ்திரிகளிடம் தமது ‘பிள்ளை நல்ல யோக ஜாதகக்காரன். அவனுக்கு மாமனார் வீட்டு மூலமாக நிறைய ஸ்திரீ தனம் வர இருக்கிறது. அவனுடைய ஜாதக ரீதியே அப்படி’ என்று அடிக்கடி சொல்லிக்

கொண்டு வந்தார். எத்தனையோ பேர் பெண் கொடுப்பதாக வந்து திரும்பினார்கள்.

அன்றும் ஒருவரை சாஸ்திரிகள் அழைத்து வந்தார். வந்தவர் பெரிய மனிதர். கூட ஒரு பியூன் கூட வந்திருந்தான்.

" இவர் பெயர் தெரியுமோல்யோ ?"

" தெரியாதா—வெங்கடசுப்பய்யர்! அதிருக்கட்டும், பையனுக்கு படிப்பைத் தவிர வேறு ஏதாவது ?"



வெங்கடசுப்பய்யர் சரியான இடம் என்று தனக்குள் எண்ணிக் கொண்டார். வந்தவருக்கு காப்பி சப்ளை உபசாரமெல்லாம் நடந்தது.

வந்திருந்தவர் மெள்ள பேச்சை ஆரம்பித்தார்.

" பையன் பெயர் என்ன ?" என்றார் வந்தவர்.

" நாகநாதன் !" என்றார் சாஸ்திரிகள்.

" உம். என்ன வாசிக்கிறான் ?"

" என்ன வாசிக்கிறனு ? பி. ஏ. தான் !

" இவாளுக்கு பூர்வீகம் ?..."

" இதே ஊர்தான் ! இவர் பாட்டனர் காலத்துலேர்ந்து, சாக்கோட்டை.........

" ஆமாம் ! ஆமாம் ! கேள்விப்பட்டிருக்கேன் !"

" வேறென்ன வேண்டும் ? இருவது வேலி அயன் நஞ்சை நிலம் இருக்கிறது !"...

" அவ்வளவுதானு ?... "

" ஏன் புன்செய் ?......"

" அதெல்லாமிருக்கட்டும் !... ரொக்கமாக ஏதானும் ?"

" ஏதானும் என்ன ? இரண்டு லகாரத்துக்கு இருக்கு ஸ்வாமி ! இரண்டு லகாரம் !"

" அப்படியானல் ?......"

" அப்படியானல் என்ன ? ரொக்கமாப் இன்னி தேதியிலே வேணும்னுலும் ரூபா இரண்டு லக்ஷம் வந்துவிடும். அப்பேர்ப்பட்ட இடத்தில்தான் கொடுத்திருக்கிறர்."

" ஏதாவது ?" என்று ஆரம்பித்தார் வந்தவர்.

அதுவரை மௌனமாக இருந்த வெங்கடசுப்பய்யர் சட்டென்று "சாஸ்திரிகளே அவாள் அவநம்பிக்கைப்படராப்பிலே இருக்கு, நான் சொல்ரதைக் கேளும்" என்று சொல்லி "அடி! யாரங்கே உள்ளே! இந்தா சாவி! அந்த தஸ்தாவேஜுக்கட்டுகளை எடுத்துக் கொண்டு வா" என்று சாவியை உள்பக்கமாக எறிந்தார்.

இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு பட்டுத் துணியில் கட்டிய ஒரு கட்டு தஸ்தாவேஜுகளைக் கொண்டு வந்து தன் கணவர் முன் வைத்தாள் வெங்கடசுப்பய்யரின் மனைவி.

உம்! "சாஸ்திரிகளே! எடுத்துக் காட்டுங்கள் அவருக்கு" என்றார் வெங்கடசுப்பய்யர்.

சாஸ்திரிகள் பெரிய தொகையாக இருக்கும் தஸ்தாவேஜுகளாகப் பார்த்து எடுத்துக் காட்டிக்கொண்டே வந்தார்.

வந்தவர் சலிப்பில்லாமல் எல்லாவற்றையும் பார்த்து முடித்தார். எல்லாம் ஆயிற்று.

"என்ன சொல்லுகிறீர்கள்?" என்றார் சாஸ்திரிகள்.

வந்தவர் சிரித்துக்கொண்டே, "என்ன சொல்லுவது? எனக்கே சொல்ல வருத்தமாகத்தான் இருக்கிறது" என்றார்.

"வெறுமனே சொல்லுங்கோ! உங்க அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டியதுதானே! சொல்லுங்கோ" என்றார் சாஸ்திரிகள்.

"என்னத்தைச் சொல்வது? தங்களை ஏமாற்றியதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். நான் தான் இந்த ஜில்லா இன்கம் டாக்ஸ் ஆபீஸர்" என்றார் வந்தவர்.

சாஸ்திரிகளும் வெங்கட சுப்பய்யரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சி. சு. செல்லப்பா

கல்யாணங்களுக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரனாக போவதிலேதான் எப்போதும் குஷி இருக்கிறது. பெண் வீட்டுக்காரனாகப் போய், சமையல் சாமான் பொறுப்பை ஒப்புக்கொண்டு, அறைக்கு வெளியே நடக்கும் விஷயமே தெரியாமல் இருப்பதைப்போல் துரதிர்ஷ்டம் வேறெதுவும் இல்லை.

இரண்டு நாள் விருந்துதான் சாப்பிட்டிருப்போம். அதற்குள் தேகத்தில் ஏற்பட்ட தெம்பிலேதான், 'முகூர்த்தமோ ஆச்சு; எங்கே போகலாம்' என்று மனதுகள் வட்டமிடத் தொடங்கின. காற்று வாக்கில் செய்தி பரவி, நாலைந்து இளவட்டங்களாகப் போகப் போட்டிருந்த திட்டம், கூட நாலைந்து ஸ்திரீகள்—பெரிதும் சிறிதும்—அரை டஜன் குழந்தைகள், ஒரு கிழம் இத்தனைக்கும் நீண்டு கொடுத்தது.

உத்தமபாளையத்திலிருந்து ஒரு பஸ்ஸை அமர்த்திக்கொண்டு

புறப்பட்டோம். உத்தமபாளையம், கொடைக்கானல் ரோடு ஸ்டேஷனிலிருந்து, ஐம்பதிலிருந்து அறுபது மைலுக்குள் இருக்கும். பாளையமே சோங்கான இடம். மலைப் பிரதேசத்தின் நெருங்கிய தொடர்பு அதற்கு உண்டு. வெய்யில் அடித்துக் கொண்டிருக்கும்போதே, போகிற போக்கில் சாரல்கள் விசிறிவிட்டுப் போகும். ஒரு நிமிஷ மழையிலே தெருவில் ஜலம் ஊற்றெடுத்து ஓடும்.

அங்கிருந்து கம்பம் ஐந்து மைல். பிறகு கூடலூர் ஐந்து மைல் தாண்டியதும் கொஞ்ச தூரத்தில் மலை ஏற்றம் ஆரம்பமாகிறது. சுமார் பத்து மைல்களுக்குமேல் ஒன்றிரண்டு மைல் தூரம் மலைமேலே செல்ல வேண்டும். குமிழி வந்து சேருகிறது. பிறகு தேக்கடி — பெரியாறு அணைக்கட்டு. இந்த தேக்கடியைப் பார்ப்பதற்காகத்தான் நாங்கள் புறப்பட்டது.

மலை அடிபாகத்திலே இருபத்திமூன்று சீட்டாக இருந்த பஸ், ஏற்ற ஆரம்பத்தில் எப்படியோ நாற்பது சீட்டாகிவிட்டது. அந்த பாரத்தைச் தாங்க முடியாமல் வீறிட்ட வேதனை சப்தம் போட்டுக்கொண்டு மேலே ஏறினது பஸ். கரிசல் காட்டு பூமியைப் பார்த்துப் பார்த்து பழகியிருந்த எங்கள் கண்களுக்கு மலை ஏற்றம் ரொம்ப உற்சாகமாக இருந்தது.

சின்னஞ் சிறு பாறைகள் வர ஆரம்பித்து, வர வர உயர்ந்து நீண்டன. ஒரு சமயம் இரு பக்கங்களிலும் நிமிர்ந்து பார்த்தால் கழுத்து ஒடியும் அளவுக்கு பிருமாண்டமான சுவர்களை எழுப்பிவிடும். இன்னொரு சமயம் உலகத்தின் ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக் காட்டுவது போல், ஒரு பக்கத்து உயர்வுக்கு ஈடுகட்டும் அளவுக்கு—கீழே குனிந்தால் தலை சுற்றும் அளவுக்கு—பள்ளத்தை எழுப்பிப் போகும். இன்னொரு சமயம் இரண்டு பக்கத்து பள்ளங்களுக்கும் நடுவே தொங்கிக் கொண்டிருப்பது போல் போகும் ரஸ்தா, எந்தச் சமயம் நம் முன் உதிர்ந்து விழுந்து விடுமோ, என்ற திகிலைக் கிளப்பிச் செல்லும்.

திடீர் திடீரென, ஒரு மயிரிழை தப்பினால் என்ன கதி ஆகுமோ என்று பீதி ஊட்டும் எத்தனை முடக்கல்கள்! ஒரு சுழி சுழித்து பஸ் அலறித் திரும்பும்போது டிரைவர் கை கொஞ்சம் தளர்ந்துவிட்டால் எங்கள் உசிர்? இதை அதிகமாக நினைத்துக்கொள்வோம்; பேசிக்கொள்வோம்.

மலை ஏற்றச் சாலைகள், சிக்கல், எதிர்பாராத தொந்திரவு, தொல்லைகள் அடங்கின வாழ்க்கையைப் போல. செப்பனிட்டு, ஆபத்து அதிகம் இல்லாத வகையில் பண்பிடப்பட்ட சாலைகளுக்கு, புதிசை ஆராய்ந்து சிக்கலை சமாளிக்க வேண்டிய மனத்துணிவு இல்லாமல், பழைய சுவட்டிலேயே,—போய் பண்பட்டிருந்த வழிகளிலேயே—பின்பற்றும் மனப்போக்குகளைச் சொல்லலாம். நூற்றுக்கணக்கான முடக்கல்கள் எங்கள் உசிரை எச்சரித்து கீழே இறங்க, அவைகளைக் கணக்கிட்டுக்கொண்டே மேலே போனோம்.

ஒரு பக்கம் தலைக்குமேல் பெரிய பெரிய பாறைகள். மறு புறம் பாதாளத்திலிருந்து கிளம்பி, அடித்தூறும், வேரும் கண் அறியா முடியாத நிலையில், தலைக்கு மேலே எழுந்து அந்தப் பாறைகளோடு போட்டி போடும் விருக்ஷங்கள். அத்தனையும் தேக்கு! அதனால் தான் தேக்கடி என்று ஒரு வேளை பெயர் வந்ததோ என்னமோ? எவ்வளவோ வெட்டித் தள்ளியும், அசுரனின் ஒரு சொட்டு ரத்தத்திலிருந்து பல அசுரர்கள் முளைப்பதாக கேட்டிருக்கிறோமே, அந்த மாதிரி வளர்ந்தன போலிருக்கிறது.

விதவிதச் செடிகள், புஷ்பங்கள், மரங்கள். எங்கள் கோஷ்டியில் தோட்டம் போடுவதில் பித்துக் கொண்ட ஒருவருக்கு செடிகளில் கவனம். குழந்தைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் புஷ்பங்களில். ஒரே களேபர சப்தம். மலைமீது ஏற ஏற, எதிரில் மலை உச்சிகளும், வானமும், விருக்ஷங்களும் ஒன்று கூடி ஒரு பகைப்புலனை ஏற்படுத்தி இருந்தன. ஒரு விநாடி சூரியன் மூடும்; சாரல் வீசும். சாரல் நிற்கும்; சூரியன் திறக்கும். சூரியனும் இருக்கும்; சாரலும் வீசும். மறுகணம் சூரியனும் மூடும்; சாரலும் இருக்காது. மப்பும் மந்தாரமுமாக இருக்கும். இயற்கையின் அதி துரித மாறுதல்கள்! முடிவில்லாமல் திரும்பத் திரும்ப வரும் மலையும், மரமும், பள்ளமும்.

இயற்கை பூரண அரசு செலுத்தின பிரதேசமாக இருந்தது அந்த இடம் பூராவும்.

பாதி தூரம் வந்திருப்போம். கார் ஒரு முடக்கு திரும்பினதும் திடீரென பேயோசை கிளம்பினது, பஸ்ஸின் சப்தத்தை ஒரே திரியாக அடக்கிவிட்டு. திடுக்கிட்டு நேர் எதிரே பார்த்தோம். எங்கோ உச்சியிலிருந்து அலறிப் புடைத்து வரும் ஒரு பிரவாகம், வெள்ளம். பாறைகளில் அடித்து மோதி விழுந்த நீர்த்திவலைகள் பொடிப் பொடியாகச் சிதறினது போல, ஒரே வெள்ளைப் புகையிடை கிளம்பி எங்களுக்கு எதிரில் பறந்து கொண்டிருந்தது. பஸ் ஸும் சட்டென்று நின்றது. கீழே இறங்கி புளியடையாக அப்பிக்கிடந்த உடம்புகளை நெகிழ்த்திக் கொண்டோம்.

அந்த இடம்தான் பிள்ளையார் சுற்று. அந்த நீர் வீழ்ச்சிக்கும் அதே பெயர்தான். 'ஸார், இங்கே நீர் வீழ்ச்சி இருப்பதாகச் சொல்லவில்லையே' என்று எங்களுக்கு வசதியாக, துணைக்கு வந்திருந்த ஓவர்சியரைக் கேட்டேன்.

'இது நீர்வீழ்ச்சி யென்று யார் சொன்னது' என்று மடக்கினர் அவர்.

'பின்? ஆயிரக்கணக்கான யானைகளை இதில் போட்டு......'

'இது ஒரு வாய்க்கால்' என்றார் அவர் அமைதியாக. அவர் மேலே சொன்னர். 'நாம் பார்க்கப்போகும் இடம்தான் இதன் உற்பத்தி ஸ்தானம். நீங்கள் நினைக்கிறபடி இது இயற்கை நீர் வீழ்ச்சி யல்ல, மனிதன் ஆக்கி வைத்திருப்பதுதான். கொஞ்சம் பொறுத்து மேலே அதை அறிந்து கொள்ளலாம்' என்றார்.

நாங்கள் அந்த நீர்வீழ்ச்சியை—இன்னமும் அப்படியேதான் நினைக்கிறேன்—கடந்து போக ஒரு இரும்புப் பாலம்தான் உதவி செய்தது. அதிலே காலடி வைத்த உடனே பின் வாங்கின கால்கள். அந்த நீர்வீழ்ச்சி வேகத்திலே கிடுகிடென்று ஆடின அந்த இரும்பு தளத்தில், அழுத்திக் காலடி எடுத்து வைத்து சில எட்டுக்கள் வருவதற்குள் ஒரே தொப்பலாகி விட்டது. எவ்வளவு வேகத்தோடு அந்த ஆழத்திலிருந்து எழுந்து நீர்த்திவலைகள் விசிறி அடித்தன!

எதிரே சிறி சிறிக் கிளம்பின அலைகளைப் பார்த்துக் கொண்டே நின்றுவிட்டேன். 'அடே, காருக்கு வா நாழியாச்சு' என்ற குரல்கள் காதிலே மங்கலாக விழுந்த உடனேதான் திரும்பிப் பார்த்தேன். காரும் பாலம் தாண்டி, எல்லோரும் உட்கார்ந்து விட்டார்கள். நான் மட்டும் இன்னும் பாலத்தின் மத்தியில். ஏன், இப்போது இதை எழுதும் போதும் அதே இடத்தில் இருப்பதாகத்தான் என் உணர்ச்சி? எப்படி மறக்க முடியும்?

பஸ் புறப்பட்டது. இன்னும் அதே முடிவற்ற இயற்கை ஓட்டம். ஆனால் அலுப்புக்கு இடம் ஏற்படாத வகையில்.

மறுபடியும் பஸ் நின்றது. நாங்களும் நெகிழ்ந்து கொடுத்து இறங்கினோம். எங்கெல்லாமோ சுற்றி, பாதை குறுகி, ஒரு மட்ட நிலத்தில் வந்து நின்றிருந்தது. இயற்கையின்மீது செயற்கை ஆதிக்கம் செலுத்தின குறி அங்கே பளிச்சென கண்ணுக்குத் தென்பட்டது. வெட்டி, சீர்படுத்தி, பண்படுத்தின சாலை இருபுறமும் கம்பிக் கிராதிகள். எதிரே சில கஜ தூரத்தில் ஆர்ச் வளைவு போட்ட கெட்டிக் கட்டடம். அந்த வளைவின் கீழ் ஒரு நீல உருவம். பின்னால் இன்னும் இரண்டு மூன்று உருவங்கள். வளைவுக்குள்ளே இரட்டை வரிசையாக சின்னச் சின்ன கட்டிடங்கள் தெரிந்தன.

'இதென்ன, திருவாங்கூர் சமஸ்தானப் போலீஸ்...'

'மாதிரி என்ன, அதே தான்!'

'இங்கே வேலை?'

'நல்ல கேள்வி? அவர்கள் ராஜ்யத்தில் அவர்கள் இல்லாமல் வேறே எங்கே'...

'இதென்ன திருவாங்கூர் ராஜ்யமா?'

'பின்னே, இந்தக் குமிழியிலிருந்து உட்புறம் திருவாங்கூர் சமஸ்தானம். எல்லை இந்த கம்பிக் கிராதியிலிருந்து ஆரம்பம்.'

எங்கள் ஊருக்கு இவ்வளவு கிட்ட திருவாங்கூர் எல்லை இருப்பது எனக்குத் தெரியாது. அப்போதுதான் அந்த ஓவர்சியர் சொன்னார். 'வாஸ்தவமோ, பொய்யோ ஒரு செய்தி. திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஒரு பகுதி, கன்யாகுமரி பக்கமோ, எங்கேயோ, பிரிட்டிஷார் வாங்கிக் கொண்டு, பதிலாக நமது பெரிய குளம் தாலூகா இன்னும் சுற்று வட்டங்களைத் திருவாங்கூர் சமஸ்தானத்துக்குக் கொடுத்து விடுவதென்று...

அவரை முடிக்கவிடவில்லை கூட்டத்தில் இருந்த கிழவர். 'போங்கோ ஸார், என்னாலே இந்த வய

திலே மலையாளம் கற்றுக் கொண்டு, தேங்காய் எண்ணெயைக் குடித்துக் கொண்டு இருக்க முடியாது' என்றார். இந்த ஹாஸ்யத்தை அனுபவிக்கத் தெரியாதா கூட்டத்துக்கு?

மேமேலே புறப்பட்டோம். ஆளுக்கொரு சோத்து மூட்டை கையில். கேட்டிலும் உள்புறமும் பலவர்ணக் காகித மாலை தோரணங்களும், வாழை மரங்களும் கட்டப்பட்டிருந்தன. திருவாங்கூர் அரசரின் பிறந்த நாள் என்று விசாரணையிலே தெரிந்தது. சுற்று முற்றும் கண்களை சுழற்றிக் கொண்டிருந்தேன்.

இரண்டு மைல்கள் தூரம் நடந்தோம். ரொம்ப சுகமான சீதோஷ்ண நிலையாக இருந்தது. வெயிலில் காய்வதற்குள் சாரலில் நனைவதும், சாரலில் நனைவதற்குள் வெயிலில் காய்வதுமாகவே இருந்தது அன்றைய பிரயாணம் முழுவதும்.

'இதுதான் தேக்கடி' என்றார் ஓவர்சியர். எதிரே இருந்த பல கட்டிடங்களையும் அதன் சுற்றுப் புறத்தையும் சுட்டிக் காட்டி, நான் உடனே ஏதோ கேட்கப் போனதை யூகித்துக்கொண்டவர் போல், 'ஆனால் இது திருவாங்கூர் சமஸ்தானத்துக்குச் சொந்தமல்ல. நம் சர்க்காருக்குத்தான் சொந்தம். இந்த தேக்கடி பிரதேசம் மட்டும் நம் சர்க்கார் பொது மராமத்து இலாகாவின் கீழ் நிர்வாகம். இதற்குத் தனியாக போஸ்டாபீஸ் பிராஞ்ச் எல்லாம் உண்டு' என்றார்.

தேக்கடியில் அந்தப் பெரியாறு அணை சம்பந்தமான இலாகா சிப்பந்திகள் எல்லோருக்கும் இருக்க இடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடங்களைப் பார்த்துக் கொண்டு வந்தோம். எங்களுக்கு எதிரில் ஒரு பெரிய ஜலத்தேக்கம், பல மைல் சதுரத்துக்குத் தெரிந்தது. இரண்டு பக்கம் முடிவு தெரியவில்லை. ஒரு பக்கத்தில் மட்டும் சுற்றி வளர்ந்து காடாரம்பமான மலைச்சரிவுகள் அடங்கி நின்றது. அந்தப் பகலிலும், சுற்றிலும்—ஜன சஞ்சாரம் இல்லாத அந்த இடத்தில்—அந்த ஜலப் பரப்பும் காடும் எவ்வளவு பயங்கர ஸ்வரூபத்தைக் காட்டினது. கற்பனைக்கு என்ன கோரத்தைக் கொடுத்தது!

அப்போது அங்கே இருந்த இலாகா அதிகாரி 'ஸார், இரவு காலங்களில் எங்கள் வீட்டைச் சுற்றி யானைகள் கத்தி வீறிடும். மரங்கள், கதவுகளைக்கூட சில சமயம் தாக்கும். இதற்காகப் பந்தங்களை இரவு முழுவதும் வெளியே எரிய விடுவதுண்டு' என்றார். 'நூற்றுக் கணக்கில் யானைகள் நேர் எதிர் மலைச் சரிவில் அமர்க்களம் பண்ணும் காட்சி எல்லாம் எங்களுக்கு சர்வ சாதாரணம். இன்னும் துஷ்ட மிருகங்களும் மான் கூட்டங்களும் கணக்கு இல்லாமல் வரும்' என்றார்.

அந்த ஜலத்தேக்கம்தான் மலையிலிருந்து கீழே சுரங்கவழி மூலம் பல மைல்கள் வந்து, பிள்ளையார் சுற்றில் நீர்வீழ்ச்சியாக மாறி, பெரியாறு வாய்க்காலாக கீழே வருகிறது. வெகு தூரம் போய் மதுரை, மேலூர் தாலுகா பிரதேசங்களுக்குப்

பாசனமாகப் போகிறது' என்றார் ஓவர்சியர். இந்த தேக்கத்தைச் சுற்றிவந்து, பெரியாறு அணைக் கட்டைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை. ஆனால் எஞ்சினியர் உத்திரவு முன்கூட்டி பெறுதால், ஸ்டீம் லாஞ்சில் போய் ஐந்தாறு மைல் உயரே உள்ள பெரியாறு அணைக்கட்டைப் பார்க்க முடியவில்லை.

அந்தப் பிரமாதமான தேக்கத்தை மட்டும் கண் ஆளாவிவிட்டு, தேக்கத்திலிருந்து கீழே ஜலம் போகத் தோண்டின சுரங்க வழி ஆரம்பத்தைப் பார்த்துவிட்டுத் திரும்ப வேண்டியதாக ஆயிற்று. அங்கே பிடித்த யானைகளைக் கட்டிவைக்க போட்டிருந்த யானைக்கட்டத்தையும் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

இந்தத் தேக்கம் திருவாங்கூர் சர்க்காருக்கும், நம் சர்க்காருக்கும் இடையே ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தின்படி ஒரு அளவுக்கு தேக்கி விடப்படுகிறது. மீதியெல்லாம் திருவாங்கூர் சமஸ்தானத்தின் பக்கம் போய் விழுகிறதாம்.

திரும்ப மலையிலிருந்து கீழே இறங்கும்போது ஒரு மைல் தூரம் வந்ததும் பஸ்ஸை நிறுத்தி ஓரிடத்திற்கு ஒற்றையடிப்பாதையில் நடத்திச்சென்றார் ஓவர்சியர். அங்கே கீழே பாதாளத்தில் கிணறு மாதிரி இருந்ததை சுட்டிக் காட்டி சொன்னார். 'இரண்டு பக்கத்திலிருந்தும் சுரங்கம் தோண்டிக்கொண்டு வந்தார்கள். குறிப்புத் தவறிவிட்டது. இரண்டு துவாரங்களும்பொருந்தி, சந்திக்க முடியவில்லை. அதற்காக இந்த இடத்தில் அகலமாக வெட்டி இரண்டையும் ஒட்டி இணைக்கும் ஒரு கிணறுபோல் ஜலம் அங்கே தங்கி கீழேபோக வழி செய்திருக்கிறார்கள்' என்றார்.

திரும்பி பஸ்ஸுக்கு வந்து ஏறப்போனோம். காலில் ஏதோ அரித்ததுபோல் இருந்தது. அசிரத்தையாக பஸ் பாதபோர்டில் காலை வைத்து தேய்த்தேன். பக்கத்தில் யாரோ 'உன் காலைப் பார்த்துக்கோ' என்றார்கள். பாதத்தை தூக்கிப் பார்த்தேன். ஒரே ரத்தமாக இருந்தது. 'இதோ என் காலைப்பாரு' 'என் காலைப்பாரு' 'எனக்கு மட்டும் இல்லையா' இப்படி ஆளுக்கு ஆள் பெருமை பாராட்டிக் கொண்டார்கள். எல்லோருடைய காலிலும் ரத்தம், அரிப்பு. புரியவில்லை.

'என்ன இது?' ஒரே சிரிப்பு!

'அடேடே, அட்டைக் கடின்னு!'

'கடித்ததே தெரியாதே. கண்ணுக்கும் தெரியவில்லையே! இங்கே ஏது?'

'சரகோடு சரகாக அவைகள் இருக்கும். மலைப்பிரதேசமில்லையா?'

அப்போது எடுத்த அரிப்பும், ரத்தக்கசிவும் நாங்கள் மலை அடிவாரம் வரும்வரையில் நிற்கவில்லை.

பழிக்குப் பழி



ஆளுக்குள் ஆளு; எழுதின ஆளு!

நாணுவைத் தெரியுமோ, நாணுவை? எந்த நாணுவையா? அதான், அந்த 'ராமதாஸ்' நாணு! ஓஹோ! அப்படிச் சொன்னால்தான் புரியும்போலிருக்கிறது! அந்த ருத்ராட்சப் பூனை விஷயம்தான் வெளியே வந்து ஊரெல்லாம் சிரிக்கிறதே!

நாராயணசாமியின் பக்தியைப் பற்றி ஒருவருக்கும் ஒரு சந்தேகமும் இல்லை. ஏன், இப்பொழுது கூட அவனுடைய பக்தி சிரத்தையைப்பற்றி ஒருவரும் குறை கூறவே கூடாது. மனிதனுக்கு ஆசை என்பது தலை தூக்கி விட்டால், பிறகு எப்பேர்ப்பட்டவனும் வழுக்கி விழுந்து விடுகிறான் என்பதற்குத்தான் நாணு உதாரணம்.

காலையில் கோழி கூவுவதும், நாராயணஸ்வாமி சாஸ்திரிகள் ஊரணியில் தலைமுழுகுவதும் ஒன்றாக இருக்கும். பிறகு உடனே மடியைக் கட்டிக் கொண்டு நேம நிஷ்டைகளுக்குப் பிறகு ஜால்ராவைக் கையிலெடுத்துக் கொண்டு, கழுத்தில் ஒரு சொம்பைக் கட்டித் தொங்கவிட்ட வண்ணம், பாடிக்கொண்டே வருவார்.

வந்த அரிசியைக் கொண்டு தான் சமையல்; சாப்பாடு. ராத்திரி பஜனை. பஜனை முடிய மணி பன்னிரண்டு, சில சமயங்களில் ஒன்றுகூட ஆகும். மிகுந்த உருக்கமாக, கண்களில் கண்ணீர் ததும்பப் பாடுவார். அடடா! அந்த கிருஷ்ண லீலா தரங்கிணியை அவர் பாடவேண்டும், கேட்க வேண்டும்!

இப்படி இருந்தவர் வீட்டில் திடீரென்று பஜனை நின்றுபோய் விட்டதென்றால் யார் நம்ப முடியும்? பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். உலகம் பலவிதம். 'பிழைப்புக்கு வழி இல்லை; எங்கேயோ போய்விட்டான்' என்றார்கள் சிலர். மொத்தத்தில் ஐரோப்பிய மகா யுத்த விஷயங்கள்கூடப் பேசப்படாத வகையில், நாணுவின் விவகாரங்கள் பேசப்பட்டன.

கடைசியில் உண்மை வெளி வந்தது. ஒன்றும் மகாப் பிரமாதமான விஷயமில்லை. யாரோ

தாயாதி முறைமையில் உள்ள ஒருவர் இறந்து போனதிற்காக நாராயணசாமி போயிருந்தார். போன இடத்தில் ஏதோ ஒரு சின்னத் தகராறு நேர்ந்திருக்க வேண்டும்; திரும்பி வந்துவிட்டார்.

இதுவரையில்தான் உப்புச் சப்பில்லாத, ரஸிக்க முடியாத விஷயங்கள்; இதற்கப்புறம் வந்த செய்திகள் மிகவும் ரஸமாக இருந்தன. அதாவது செய்திகள் புகைந்துகொண்டு வந்த விதத்தைப் பார்த்தால், நாணு ஏதோ ஒரு குற்றவாளி ஆகிவிட்டார் என்று எண்ணவேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது.

பிரஸ்தாப சமயத்தில், நாணு இறந்துபோனவரிடமிருந்து வாங்கின கடன் திருப்பிக் கொடுக்க வேண்டியதாக இருந்ததால், அந்தப் பிராமிசரி நோட்டு வெளியே எடுக்கப்பட்டு, எல்லோரும் பேசிக்கொண்டிருந்த பிறகு, அது காணமல் போய்விட்டதென்றும், அதோடுகூட ஸ்நானம் செய்யப் போகையில் நாணு சாஸ்திரிகள் எதையோ எடுத்துக் கிழித்து ஆற்றில் போட்டதைப் பலர் பார்த்ததாகவும், விபூதி கட்டின காகிதமாக இருந்தால் ஏன் கிழித்துப் போடவேண்டுமென்றும்... இத்யாதி......

நாராயணசாமியைப் பற்றிய வரையில் விஷயம் மிகத்தெளிவு! பிச்சை எடுத்துப் பிழைப்பு நடத்தும் அவர், தான் எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டை பணம் கொடுத்துத் தீர்க்கமுடியாது. இரண்டாவது விஷயம், பணம் கொடுத்தவர் இறந்து போய் விட்டார். இனிமேல் எவனுக்கோ போய் அந்தப் பணத்தைக் கொடுத்துக்கொண்டு ஏன் நிற்க வேண்டும்?

கடைசி நிமிஷம் வரையில் மனம் திக்கென்றுதான் அடித்துக் கொண்டது. இவ்வளவுக்கும் நடுவில் அவர் மகா பக்தியுள்ளவர் என்பதை மறந்துவிடக் கூடாது. கடவுள் இதை நிச்சயமாக மன்னித்து விடுவார் என்பது நாணு சாஸ்திரிகளின் பரிபூர்ண நம்பிக்கை. ஏனென்றால் தாயாதிக்காரனின் வாரிசு, கொடுக்க வேண்டிய பணத்தை விட்டுக் கொடுத்து விடுவானா?

பிராமிசரி நோட்டை அங்கே தேடினார்கள், இங்கே தேடினார்கள், நாராயணசாமி சாஸ்திரிகளின் காதில் படும்படி 'இந்த நோட்டைக் காணோமே' என்றார்கள், பிறகு அவர் எதிரிலேயே அதைத் தேடினார்கள், கடைசியில் அவரையே 'என்ன நாணு, இங்கே இருந்த நோட்டை நீ பார்த்தியோ? இல்லே, காற்று, கீற்று அடித்துக்கொண்டு போயிடுத்தோ?' என்றார்கள்.

நாணு சாஸ்திரிகள் அசைந்து கொடுத்தார். எல்லாவற்றிற்கும் நேர்முகமான சரியான பதில் ஒன்றும் சொல்லவில்லை. 'இந்தக் கஷ்டத்தை யார் கண்டது?' என்று ஓரேயடியாக அடித்து விட்டார், கடைசியில்.

மறுபடியும் ஒரு கலகலப்பு, வந்தவர்களிடையில்! 'அட, நான் பார்த்தேனையா!' அந்த பிராமிசரி நோட்டு ஆற்றோடு ஆறாக போய் எவ்வளவோ நாழியாகி விட்டது. இனிமேல், அது எங்கே உங்கள்

கையில் அகப்படப்போகிறது?' என்றார் ஒரு பெரியவர்.

தட்டி முட்டி விஷயம் நாணுவினிடமே வந்து விட்டது. "நிச்சயமாய் நீர் எடுக்கவே இல்லையா? சத்தியமாய் அப்படிச் சொல்லுவீரா? வாரும் கோவிலுக்கு" என்று அவரை இழுத்தார்கள் ஒருவர் இருவர். மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஒரே ஒரு வழிதான் இருந்தது நாணுவுக்கு.

"ஓய்! சத்தியமாய் நான் எடுக்கவில்லைங்காணும்!" என்றார் ஸ்ரீ நாணு. அந்த வினாடியில் அவர் மனதில் எவ்வளவு கோடானகோடி எண்ணங்கள் மின்னல்போல் தோன்றி மறைந்தனவோ! கடவுளுக்குத்தான் தெரியும். வாங்கின பணத்தைக் கொடுக்க சக்தியில்லை என்பதற்காக முதலில் களவு, பிறகு பொய் சத்தியம்!

சமரஸமாகவே போய்விடுவோமென்று பத்திரத்தை இழந்தவார்சுதார் சொன்னார்! போகிறது அதைப்பற்றி நமக்குள் மனஸ்தாபம் வருவானேன்? இருநூற்றைம்பதும் சொச்சம் நோட்டுக்கு செல்லும்படியான எழுபத்தி ஆறே காலும் போக, பாக்கியை நமக்குள்ளேயே..."

அந்த நிமிஷத்தில் நாணு சாஸ்திரிகள் நடந்துகொண்ட விதந்தான் எல்லோருக்கும் ஒரு பிரமிப்பைக் கொடுத்து விட்டது. எல்லாமே செல்லுபடியாகிவிட்டதென்றும், ஏழறை நாலு தம்பிடிதான் மிச்சமென்றும் சொன்னதில் தாயாதிக்காரனுக்கு வார்சாக வந்த பிராம்மணன் வேர்த்துப்போய் உட்கார்ந்து விட்டான்.

நாணு பலரோடு சேர்ந்து பழகினது அதுதான் கடைசித் தடவை. பக்தி, பக்தி என்று பஜனை செய்துக்கொண்டிருந்த ஆளுக்குள்ளே, — அடேயப்பா! — இவ்வளவு விஷயங்களா அடைந்து கிடந்தன? களவு, பொய், ஏமாற்றம்!

மேரி கியூரி

வே. ம.

போலிஷ் பள்ளிக்கூடத்திலுண்டான படிப்பையெல்லாம் மேரி படித்து முடித்துக்கொண்டாள். வயிற்றுப் பிழைப்புக்காக, பல வீடுகளில் குழந்தைகளுக்கு மேல் பார்வை பார்க்கும் வேலையில் அமர்ந்துகொண்டு காலத்தைக் கடத்தினாள். ருஷ்யாவின் ஆட்சி, போலிஷ்காரரை அடக்கி அழுக்கி வந்தது. எந்த தேசாபிமானிக்கும் அதைப் பொறுக்க முடியவில்லை. ஜனங்களுடைய கல்வியைப் பெருக்குவதில் தேசாபிமானிகள் ஈடுபட்டார்கள். அதிக நேரத்தையும் சுறுசுறுப்பையும் அதில் செலவழித்தார்கள். மேரியும் அவ்விதமே செய்தாள். கடைசியாக பௌதிக சாஸ்திரத்தில் உயர்தர ஆராய்ச்சியைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தாள். அதற்காகவே 1891-ல் பாரிஸ் நகரத்திற்குச் சென்றாள். அப்போது அவளுக்கு வயது இருபத்தி நான்கு.

ஸார்போன் என்ற பிரசித்தி பெற்ற பௌதிக ஸ்தாபனத்தில் மாணவியாகச் சேர்ந்து கொண்டாள். கணிதத்தில் தனது தேர்ச்சி போதாது என்பதைக் கண்டு, லீவு நாட்களையெல்லாம் அதையேமேலும் அறிவதில் செலவழித்தாள். இதன் பலன் அடுத்தாற் போல் தெரிந்தது. 1895-ம் வருஷத்தில், அந்தப் பள்ளிக்கூடத்திலேயே பௌதிகத்தில் முதல் ஸ்தானமும், கணிதத்தில் இரண்டாவது. ஸ்தானமும் அவளுக்குக் கிடைத்தது.

1894-ல் முதன் முதலாக பியர் கியூரியுடன் அவளுக்குச் சந்திப்பு ஏற்பட்டது. அவர் 1859-ம் வருஷத்தில் பிறந்தவர். பௌதிக ஆசிரியராக இருந்தார்; 1895-ல் இருவருக்கும் மணம் நடந்தது.

1896-ல் ஹென்ரி பெக்கேரேல் என்பவர், சில பண்டங்கள், "சுழற்றி வீசி எறியும் சுறுசுறுப்பை"ப் படைத்தவை என்பதைக் கண்டு பிடித்தார். உடனே இந்த கியூரி தம்பதிகள், அந்த விஷயத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

இந்த "வீச்சு"க்குக் காரணம் என்ன? வெளிச்சம் காரணமா? சீதோஷ்ண ஸ்திதி காரணமா? இதெல்லாம் காரணம் அல்லவென்பதை மேரி கியூரி கண்டு பிடித்துக்கொண்டாள். சில பண்டங்களின் சுபாவமே அதுதான் என்று கண்டு பிடித்தாள்.

சில பையன்களைக் குறித்து நாம் சொல்வதுண்டு; இவன் நல்ல சுபாவம், ஆனால் சகவாச தோஷத்தால் இப்படியாகி விட்டான் என்று. மற்ற பையன்களைப் பற்றி, இவன் சுலபமாகவே துஷ்டன், என்றும் சொல்வதுண்டல்லவா! அதுபோல சில பண்டங்கள் இந்த "வீச்சு"

சுபாவத்தையே படைத்திருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்தாள்.

யுரேனியம் என்ற பண்டத்தைப் பரிசோதித்ததில் இது ஏற்பட்டது. தோரியம் என்ற பண்டத்திற்கும் இந்த குணம் உண்டு என்று ஏற்பட்டது. இன்னமும் பரிசோதிக்கும்போது — சுத்த யுரேனியத்திற்கு உண்டான வேகத்தைக் காட்டிலும், 4 அல்லது 5 மடங்கு அதிகமான சுறுசுறுப்பை, யுரேனியக் கலப்புகளில் கண்டாள். இதன் அர்த்தம் என்ன? "அந்தக் கலப்புகளில் வேறு ஒரு சாமான் இருக்க வேண்டும். அதன் சுறுசுறுப்பு, யுரேனியத்தின் சுறுசுறுப்புக்கு மீறினதாக இருக்கவேண்டும்." அந்த சாமானைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று இந்தத் தம்பதிகள் பாடுபட்டார்கள்.

தனது சரித்திரக் குறிப்புகளில், "திருடனைப்போல் ஒளிந்துகொண்டு வேலை செய்யும் அந்த சாமானைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஆசையானது என்னை ஒரு ஆவேசம்போல் பிடித்துக்கொண்டது" என்று எழுதுகிறாள் மேரி.

திரவிய செளகரியங்கள் கிடையாது; கருவி வகைகள் போதாது; ஆராய்ச்சிச் சாலை என்று அதை அழைப்பதற்கே லாயக்கில்லை; அவ்வளவு கேவலம். ஆயினும் தம்பதிகள் விசேஷமான ஒற்றுமையுடன், அசாதாரணமான பொறுமையுடன், சம்பூரண பக்தியுடன், உயர்தரமான ஆழ்ந்த கருத்துடன் பூட்டிய ஆராய்ச்சிகளைச் செய்து வந்தார்கள். மிகப் பெரியனவும் சமூகத்திற்குப் பெரிய உபகாரமானவையுமான ரசியங்களைக் கண்டு பிடித்தார்கள்.

பள்ளிக்கூடத்து மைதானத்தில் ஒரு பந்தல்தான் இவர்களுடைய ஆராய்ச்சிச் சாலை. வேறு ஒரு வேலைக்கும் உபயோகப்படாமல் அது சும்மாக் கிடந்தது. அந்தப் பந்தலை உபயோகித்துக் கொள்வதற்கு, இந்த தம்பதிகள் அனுமதிக்கப் பட்டார்கள்.

ஆஸ்திரியா சர்க்கார் சுரங்கத்திலிருந்து யுரேனியத்தை எடுக்கும் போது, மற்ற கப்பிச் சாமான்களைக் குப்பையில் போட்டார்கள். இந்தச் சங்கதி தம்பதிகளுக்குத் தெரிந்ததும், அந்தக் கப்பிக் குப்பையைத் தங்களுக்குப் பிச்சையாகக் கொடுக்கும்படி சர்க்காரை வேண்டிக்கொண்டார்கள். அவர்கள் ஒரு டன் அளவு குப்பையைக் கொடுத்தார்கள்.

இந்தக் குப்பையை அலசிப் பார்த்ததில், யுரேனியத்தைக்காட்டிலும் அதிக "வீச்சு"ப் பண்டம் ஒன்றை அதில் 1898 ஜூலை மாதத்தில் கண்டு பிடித்தார்கள். தனது தாய் நாடு போலந்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மேரி, அந்தப் பண்டத்திற்கு போலோனியம் என்ற பெயரைக் கொடுத்தாள். ஆயினும் இதன் வீச்சைக் காட்டிலும் அதிக வீச்சுக் கொண்ட ஒரு பண்டம் அவசியம் இருந்தாக வேண்டும் என்று கணக்கு சொல்லிற்று. அதையும் 1898 டிசம்பரில் கண்டுபிடித்துவிட்டாள். அதுதான்கதிரி. அதை ரேடியம் என்று அழைத்தாள்.

கப்பிக் குப்பை திரும்பவும் வேண்டியிருந்தது. ஆஸ்திரிய சர்க்கார் இனமாகக் கொடுக்க

மறுத்துவிட்டார்கள். குப்பைக்குக் கிராக்கி ஏற்பட்டிருப்பதை சர்க்கார் கண்டு கொண்டார்கள்.

ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் சாஸ்திர சங்கம் ஒன்று உண்டு. அந்தச் சங்கத்தார், இந்த தம்பதிகளுக்கு குப்பையை மலிவாகக் கொடுக்க வேண்டும் என்று சர்க்காருக்கு சிபார்சு செய்தார்கள். அதை வாங்கிக்கொண்டு மேன்மேலும் தம்பதிகள் ஆராய்ச்சிகளைச் செய்து வந்தார்கள்.

1903-ல் இந்த தம்பதிகளுக்கும் மேலே சொல்லிய பேக்கரேலுக்கும் ஜாயின்டாக நோபேல் பரிசு கொடுக்கப்பட்டது.

1904-ல் ஸார்போனில் பௌதிக ஆசிரியராக பியர் கியூரியைத் தேர்ந்தெடுத்தார்கள்.

எவ்வளவு அருமையான ஒற்றுமையுடன் தம்பதிகள் வேலை செய்தார்கள்! தனது கணவனுடைய சரிதத்தில் மேரி எழுதுகிறாள்: "இரவில் சாப்பிட்ட பின்பு, எங்களுடைய வேலையறைக்கு நாங்கள் செல்லும் போது, மகத்தான ஆனந்தமாக இருக்கும். நாலாபக்கங்களிலும் நாங்கள் தயாரித்து வைத்திருக்கும் சாமான்கள் தங்கள் தங்கள் சீசாக்களில் இருந்து லேசான பிரகாசத்துடன் நாங்கள் மோஹிக்கும்படி — எங்களை அழைக்கும். அவைகளுடைய லேசான ஜொலிப்பு, தேவதைகள் அடிமையாகி மங்கின துபோலிருக்கும். அது அழகிய காட்சிதான்; — சந்தேகமேயில்லை. ஒவ்வொரு நாளும் எங்களுக்கு அவை புதுமையாகவே தோன்றின."

இடையில் இங்கிலாந்து சாஸ்திர சங்கத்தில் பியர் கியூரியை அழைத்திருந்தார்கள். அங்கு ஒரு விஷயத்துடன் கூடிய தெளிவான பிரசங்கத்தை அவர் செய்தார். தனது பெருமையெல்லாம் மேரியைத்தான் சேரவேண்டும் என்று விளக்கினார்.

இவ்வளவு நேர்த்தியான அருமையான, இன்பமான, லோகோபகாரமான தாம்பத்தியமான துயமனால் திடீரென உடைக்கப் பட்டது. 19-4-1906-ல் பாரிஸ் நகரத்தில் ஒரு தெருவில் பியர் கியூரி நடந்து சென்ற போது, ஒரு குதிரை வண்டியினால் தள்ளப்பட்டுக் கீழே விழுந்தார். எதிரே வந்த லாரியின் சக்கரம், கீழே கிடந்த பியர் கியூரியின்மீது ஏறியது. அந்த அபாரமான மூளை உடைந்தது. மேரி, தனது வீட்டில், காயங்களை எண்ணினாள். மூளை 18 சுக்கலாக உடைந்ததை எண்ணினாள். உண்மையான சகதர்மிணி எவ்வாறு துடித்தாள்! அந்த சோக ரஸப் பிரவாகம் சரித்திரத்தில் பாய்ந்து விட்டது. மனித வர்க்கம் நிகரற்ற பொக்கிஷம் போல் காப்பாற்ற வேண்டிய ஞாபக வரிசைகளில் அதுவும் ஒன்று.

மறு யோசனையின்றி, அவருடைய ஸ்தானத்தில் மேரியையே ஆசிரியையாக அதிகாரிகள் நியமித்துக் கொண்டார்கள்.

ஆராய்ச்சி வேலையை மேரி தொடர்ந்து நடத்தினாள். 1911-ம் வருஷத்தில் நோபேல் பரிசு மறுமுறையும் இவளுக்கு அளிக்கப்பட்டது.

ரேடியமானது வைத்தியத்தில் பிரமாதமான வியாதிகளுக் கெல்லாம் உபயோகிக்கப்பட்டு வருகிறது. அந்த வைதித்பத்திற்கே கியூரி — தேரபி என்ற பெயர் பிராஞ்சில் வழங்கப்பட்டு, வருகிறது.

ஆயினும் ரேடியம் கிடைப்பது மாத்திரம் லேசல்ல. 450 டன் சுரங்கப் பொருளை வேலைசெய்து, இரண்டேகால் கிராம் ரேடியத்தை எடுக்கிறார்கள். 7 டன் என்றால் 190 மணு. 450 டன் என்றால் 12,200 மணுவுக்கு அதிகமாகிறது. 2¼ கிராம் என்றால் ஒரு டீ ஸ்பூன் அளவு கூட இராது. ஆகையினால் 12,200 மணுவிற்கு அதிகமான சுரங்கப் பொருளில் இருந்து, ஒரு டீ ஸ்பூன் அளவிற்குக் குறைந்த ரேடியம் தயாராகிறது!

இப்படித் தயாரிக்கப்படும் ரேடியத்தின் விலை விவரம் என்ன? இடைக்கு இடை தங்கத்தைக் காட்டிலும் ரேடியத்தின் விலை இரண்டு லட்சம் மடங்கு அதிகமாக இருந்தது! இப்போது புதிய முறைகளைக் கண்டுபிடித்திருப்பதால், தங்கத்தைக் காட்டிலும் ஒரு லக்ஷத்தி இருபதினாயிரம் மடங்குதான் ரேடியத்தின் விலை அதிகமாகயிருக்கிறது!

இந்த ரேடியத்தைப் பாதுகாத்து வைப்பது வெகு சிரமம். படாதது பட்டால், ரேடியம் சிறிவிழும், சிறிவிழுந்து கொண்டேயிருக்கும். அது ஒரு பிரதேசத்தையே அழித்துவிடும். அழித்துக்கொண்டேயிருக்கும். ஆகையினால்தான்—இந்த 1939 ஆகஸ்டு 20உ வாக்கில்—ஜெர்மனியினுடைய ஆகாயக் கப்பல்களின் வேடிக்கைகளெல்லாம் ரேடியத்தைக் கிளப்பிவிடாமல் இருக்கும் பொருட்டு—லண்டன் ஆஸ்பத்திரிகைகளில் தேக்கி வைத்திருந்த ரேடியத்தை யெல்லாம், லிவர்பூலுக்குக் கொண்டுபோய், பூமிக்குள் 65 அடி ஆழத்தில் புதைத்து வைத்தார்கள்.

சென்ற மகாயுத்தத்தில் மேரி கியூரி பெரிய சேவை செய்தாள். அநேகம் மோட்டார்களுக்கு ரேடியம் வசதிகளை இணைத்து, வைத்திய வேலைக்கு லாயக்காகச் செய்து கொடுத்தாள். இந்த வைத்தியப் படையினரை பட்டாளத்திற்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். மேரி, ஸ்திரீகளைத் தயாரித்தாள். தானே கூடவேயிருந்து சில்லறை வேலைகளையும் செய்து காட்டினாள். இதனால் அவளுடைய உடம்பிற்குப் பாதகம் ஏற்பட்டது. அந்த யுத்தத்தின் போது—இவளுடைய ரேடியம் சரக்குகள் எல்லாம்—பாரிஸ் நகரத்தை விட்டு அப்புறப்படுத்தி—எட்டியிருக்கும் போர்டோ என்ற நகரத்தில் கொண்டுபோய் வைக்கப்பட்டது.

1921-ம் வருஷத்தில் அமெரிக்காவிற்கு மேரியை அழைத்தார்கள். அநேகம் சர்வ கலாசாலைகளில் மேரிக்குப் பட்டங்களும் மெட்டல்களும் கொடுத்தார்கள். அமெரிக்காவின் ஸ்திரீகளெல்லாம் சேர்ந்து இவளுக்கு ஒரு பெரிய பரிசு கொடுத்தார்கள். அந்தப் பரிசு, நாட்டுத் தலைநகரின் அரண்மனையிலேயே, பிரெஸிடென்டின் கையினாலேயே

கியூரியின் கையிலேயே கொடுக்கப்பட்டது. பரிசின் விலை ஒரு லட்சத்தி இருபதாயிரம் டாலர். அந்தப் பரிசு என்ன? ஒரு கிராம் ரேடியம்!

அமெரிக்காவிலேயே ஒரு பெரிய வக்கீலைக்கொண்டு, தஸ்தாவேஜியைத் தயார் செய்யச் சொல்லி, மேரி, அந்த ரேடியத்தை, பாரிஸிலுள்ள ரேடியம் ஸ்தாபனத்திற்கு இனமாக அளித்துவிட்டாள்!

திரும்பவும், 1929-ல் இதே மாதிரி பரிசு, 50,000 (ஐம்பதினாயிரம்) டாலர் பெருமானதை, பிரெஸிடெண்டு ஹூவர், மேரியின் கையில் கொடுத்தார். அதை மேரி, அப்படியே தனது தாய்நாட்டின் தலைமை நகரமாகிய வார்ஸாவிலுள்ள ஆஸ்பத்திரிக்கு இனமாகக் கொடுத்துவிட்டாள்.

இந்த விதமாக மனித வர்க்கத்திற்கும் ஞான விருத்திக்குமாக உழைத்து, உழைப்பின் மத்தியில், மேரி 1934-ல் இறந்தாள்.

அவளுக்கு இரண்டே மக்கள் இரண்டு பேரும் பெண்கள். ஒருவள் சாஸ்திரத்திலேயே ஈடுபட்டிருக்கிறாள். அவளும் அவளுடைய புருஷனும் சேர்ந்து — பெற்றோரைப்போலவே — பிரசித்தியுடன் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். மற்றவள் பெரிய விளையாட்டுக்காரி, சாதுரியமான எழுத்துக்காரி, வியாஸங்களாலும் விளையாட்டுகளினாலும் உலகத்தை மகிழ்வித்து வருகிறாள்.

இப்பேர்ப்பட்ட மேரியை உலகத்திற்குக்கொடுத்தது போலந்து! இன்றைக்கு ஜெர்மனியிடம் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கிறது!

மகாகவி பாரதி

பள்ளத் திலே வீழ்ந்து நின்ற
பாமர மக்கள் தம்மின்

உள்ள மேனும் பெரு ஆற்றில்
ஊறும் நல் வீரமேனும்

வெள்ளத் தையே வீழச் செய்து
வெற்றி யேனும் நல்லமுதை

அள்ளி அளித்த பாரதியுன்
அழகு நாமம் வாழ்கவே!

து. நாராயணன்.

தனிமை இனியதா?

அகண்ட விசாலமான கடலின் மேலே நான் உட்கார்ந்துகொண்டிருந்தேன். எவ்வளவு தனிமையாக இருந்தது அங்கே! சர்வ வியாபியான கடவுள்கூட அந்த இடத்தில் இருந்தாரோ இல்லையோ என்று சொல்லும்படியாக அவ்வளவு தனிமை அங்கே பரவி நின்றது.

* * *

இன்னொரு சமயம் ஆழ்ந்த தனிமையை விரும்பினேன். ஒரு பெரிய பள்ளத்தாக்குதான் என் கண்களுக்குச் சரியாகப் பட்டது. அந்த இடத்தில் பின்னியிருந்த நிழல்கள், பகலைப் பார்த்திருந்த கண்களை மூடின. கரடு முரடான அந்தப் பிரும்மாண்டமான மலைகள், ஆகாயத்தோடு ஒரு கருப்புப் பகைப் புலனை ஏற்படுத்தி இருந்தன.

நான் அங்கே போனேன்.

இத்தனை நாட்களாக உலகத்தின் கசமுசல்களிலும், ஜ்வரவேகங்களிலும் அலைபட்டு தவித்துத் தடுமாறிக்கொண்டிருந்தது மனது. 'சரி, தனியே உட்கார்ந்துகொண்டு இந்த தனிமையைக் குடித்துக்கொண்டிரு. இதற்குத்தானே இவ்வளவு நாளாக ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தாய்?" என்றேன்.

நான் அங்கிருந்ததைப் பார்ப்பதற்கு ஒரு சாக்ஷியும் அங்கே கிடையாது போல நினைப்பு தோன்றினது எனக்கு. ஆனால் அந்தப் புஷ்பங்கள்! ஒரு ஜாதிப்பூ என்னை வரவேற்றது போலிருந்தது. ஏன், அந்தப் புது ரோஜாவே என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தது. அது மட்டுமா? இன்னொரு இதழ் விரித்த சிறு திராக்ஷை புஷ்பம் என் கன்னத்தில் முத்தமிட்டது.

இதுமட்டுமில்லை. அங்கே குரல்களும் கேட்டன.

களகளவென்ற சப்தத்துடன் ஓடும் அந்த ஊற்று, அலுப்பு சலிப்பு இல்லாமல் வழியில் கிடந்த கூழாங்கற்களுக்குத் தன் சரித்திரத்தைச்சொல்லிக்கொண்டு போயிற்று. காற்றோடு இனிமையான கீதத்தை கிளப்பிக்கொண்டு வந்தது. அதற்குப் பதில் கொடுத்து விசிறி ஆடின அகலமான இலைகள். சுறுசுறுப்புள்ள

எந்தப் பொருளும், வாழ்க்கையும் அந்தப் பள்ளத்தாக்கிலே விழித்து இருந்தது.

அயர்ச்சி காணாத சிலந்தி தன்னுடைய வெள்ளி நூலாலான வலையை ஊற்றுக்கு ஊற்று தவிப்போய் விரித்துக்கொண்டிருந்தது. எறும்புகள் தங்கள் இடத்துக்கு உணவு பொக்கிஷங்களைச் சுமந்து சென்று கொண்டிருந்தன. தன் கூட்டுக்குத் தேனைத் திரட்டிக்கொண்டு போன தேனீக்கள்! பாறை இடுக்கிலே கட்டியிருந்த கூட்டிலிருந்து தாய்ப் பறவை குஞ்சுகளுக்கு ஹிதமாக பாடிக் காட்டிக்கொண்டிருந்தது.

இத்தனையும் இருந்தாலும் நான் என்னவோ அந்த இடத்தில் தனிமையாக இருப்பதாகத் தான் உணர்ந்தேன்.

மரங்கள், புஷ்பங்கள் எல்லாம் சௌஜன்யமாகவும், சமூகமாகவும், இதமாகவும் இருக்கின்றன. எவனொருவன் குளிர்ந்த பகலில் அவைகளுக்கு இடையில் சுற்றி அலைந்து, அதனதன் பாஷையில் அவைகளோடு அளவளாவிப் பேசுகிறானோ அவனுக்கு சுவர்க்கத்தில் இருப்பது போன்ற உணர்ச்சிதான் ஏற்படும்.

* * *

நம்முடைய சுபாவகுணம் மோகித்து விழக்கூடிய உயர்தர இன்பங்களில் தனிமையும் ஒன்று. ஆனாலும் அதை அளவுக்கு மீறி அநுபவிக்கத் தொடங்கி விட்டால் விவரிக்க முடியாததும், பொறுக்க முடியாததுமான ஒரு வேதனைக்கு அடிப்படையாகக் கூட ஆகிவிடுகிறது.

சமூகத்தோடு பழகுவதற்குத் தடையாக இருக்கும் சில மனப் போக்குகள் தனிமையில் நம்மை வந்து அடைந்து விடுகின்றன. முடிவில் அவை மனிதனின் அறிவு, வழக்கங்களைக் கெடச்செய்வதுடன், வாழ்க்கையின் கடமைகள், அதன் இருப்புகள் இவைகளுக்கு அவனைத் தகுதியற்றவனாகச் செய்து விடுகின்றன. கூட்டத்திலிருந்து ஓடியோ, தனியிடம் தேடியோ, அல்லது ஜனங்களுடன் சண்டை போட்டுக் கொள்வதன் மூலம், நம்மையோ, அல்லது அவர்களையோ உயர்த்திக்கொள்ள வில்லை.

* * *

ஏன், தனிமைதான் அநேக சமயங்களில் மிகச் சிறந்த சமூகக் கூட்டமாகத் தோன்றுகிறது. அதற்குள்ளே போய் விட்டால் எவ்வளவு இனிமையாக இருக்கிறது!

* * *

நான் தனிமையாக இருக்க விரும்புகிறேன். ஏதாவது ஒரு நிழல் வேண்டும் எனக்கு. என் வாழ்க்கையில் பாரம் அமிழ்த்தும் இந்த ரொம்பப் பொறுக்க முடியாத தொல்லை, கவலைகளை எல்லாம் அங்கே உதறி எறிந்துவிடவேண்டும் என்ற ஆசை எனக்கு. அங்கே உட்கார்ந்து கொண்டு கிளம்பி வரும் அந்த மிருதுவான குரலை, அமைதியின் பெருமூச்சை — எனக்கு என்னவென்றே தெரியாத ஏதோ ஒன்றை — என் ஹிருதயத்தில் ஏதோ ஒன்று இதமாக வேது கொடுப்பதை — கேட்க விரும்புகிறேன்.

அம்ம! அந்த நினைவு! பாரத் தோடு அமுக்கிவிடும் அந்த தனிமை!

* * *

சிருஷ்டி வியாபித்திருக்கும் சகல இடங்களிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் இன்னும் காற்று, பூமி, கடல், —இன்னும் கண்ணுக்குப் புலப்படாதது, கால் பாதம் படாதது—இன்னும் எந்த இடத்திலும், தனிமை என்று ஒரு மறைவான இடமும் கிடையாது.

* * *

ஏகாந்தத்தில்தான் நாம் தனியே இருப்பது அபூர்வம்.

* * *

கீழே விழும்போது தனியொருவனுக இருக்கிருனே அவன் நாசமாகப் போனுன்!

* * *

மற்ற மனிதர்கள் எல்லாரும் அருவருக்கத் தக்கவர்களாக இருக்கிருர்கள். தனக்குத் தான் தான் சிறந்த சாதகமான சமூகம்.

* * *

பிறவியின் ஆழ்ந்த கருத்து உத் வேகங்கள் எல்லாம் தனிமையில்தான் அவனுக்கு ஏற்பட்டது.

* * *

ஏகாந்தமே! மகா முனீசுவரர்கள் எல்லாம் உன் முகத்தில் கண்ட அழகு, வசீகரம் எல்லாம் இப்போது எங்கே? காட்டு!

நீ சோம்பேறியாக இருந்தால் தனிமை உனக்கு வேண்டாம். நீ தனிமையில் இருந்தால் சோம்பேறியாக இருக்காதே.

* * *

தனிமை அனுபவிப்பவன் நிச்சயமாக போகியாக இருக்கிருன். மூட பக்தி யுள்ளவனுகவும் இருக்கலாம், பைத்தியமாகவும் இருக்கலாம். வேலை இல்லாததால் மூளை வேலை செய்யாமல் தேக்கமாகிவிடுகிறது. மந்தமாகிக் கடைசியில், நாற்றம் வீசும் காற்றிலே அணையும் தீபம் மாதிரி ஆகிவிடுகிறது.

* * *

தனிமை, சேர்ந்திருத்தல் இரண்டும் மாறி மாறி தங்கள் ஸ்தானங்களை வகிக்கட்டும். ஒன்று மனித சமூகத்தை விரும்பும்படியான மன நிலையை நம்மிடையே எழுப்புகிறது. இன்னொன்று நாம் நம்மையே விரும்பிக் கொள்ளும் படியாகச் செய்கிறது.

கூடி இருப்பதில் ஒரு தொல்லை ஏற்பட்டபோது ஏகாந்தம் அமைதிப் படுத்துகிறது. தனிமையாக இருப்பதில் ஒரு சள்ளை தோன்றுகிறபோது சேர்ந்திருப்பது மாற்றுக ஆகிறது. தன் பொழுதை எப்படிப் போக்குவதெனத் தெரியாமல் அவஸ்தைப் படும் மனிதனைப்போல கண்றாவியானது வேறெதுவும் இல்லை.

லக்கின குணதிசயங்கள்

2. ரிடபம்

ரிடபத்தின் பொதுவான நாழிகை	...	4. 3/4
இதற்கு பூதம்	...	பிருதிவி
உருவம்	...	பெண்
உற்பவம்	...	மூலம் கிழங்கு
நிறம்	...	வெண்மை
திக்கு	...	கிழக்கு
அதிபதி	...	சுக்கிரன்
சாதி	...	சூத்திரன்
அங்கம்	...	கண்டம்
இடம்	...	விளைவனம்
குணம்	...	திரம்
வடிவம்	...	ரிடபம்
விழிப்பு	...	பகல்

ரிடப லக்கினத்தின் குணதிசயப் பலன்கள்.

உயர்ந்த சமவளப்பத்துடன் கூடிய அழகிய பலமுள்ள சரீரமுள்ளவன், சுருண்ட நெற்றியைப் பற்றிய காதளவு நீண்ட ரோமமுள்ளவன், சிவந்த உள்ளங்கால் உள்ளங்கைகளை யுடையவன், சமமான கல்வி அறிவுள்ளவன், ஆதியில் சுகமே பெரிதென நினைத்துப் பொருளை யிழந்து அதனால் சில காலம் கவலைப்படுபவன்.

நல்லோர்களின் நேசமுள்ளவன், நேசரால் தக்க உதவிகளையும் பெறுபவன், தனக்குத் தெரியாத காரியங்களிலும் ஈடுபட்டுத் தெரிந்ததுபோல் நடித்துக் காண்பிப்பவன், நல்ல வாகன சுகங்களையும் அனுபவிப்பவன், பந்துக்களைப் பிரிந்திருக்கப் பிரியப்படுபவன், சகோதரரால் பெருங் கஷ்டங்களை அனுபவிப்பவன், அல்லது ஆண் சகோதரமற்றவன், பிணியால் நலியத்தக்க களத்திரமுள்ளவன், அல்லது களத்திர தோஷமுண்டாகி பின்னும் மணஞ் செய்துகொள்ளுபவன்.

நீசர்களின் தொழிற்சாலைகளிலோ, தைல சம்பந்தமான தொழில்களிலோ, அய சம்பந்தமான தொழிலிலோ, மயக்கந் தரத்தக்க வஸ்

துக்களடங்கிய தொழில் முதலியவைகளிலோ ஜீவனம் நடத்துபவன், வேறெந்தத் தொழிலிலும் பலன் பெறுதவன்.

ஆண் புத்திர தோஷமுள்ளவன், எப்போதும் பகை, ருணம், பிணி முதலியவற்றால் வருந்துபவன், முன்னோர் பாக்கியத்தை இழந்து வருத்தப்படுபவன், லாபம் வருவதற்கு முன் செலவு செய்வதற்கான ஏற்பாடுகளைத் தயாரித்து வைத்துக்கொள்பவன், ஒன்றால் பெரிய சுகம் அடையலாமென்று நினைத்து பலநாள் எத்தனித்து அது கைகூடிய பிறகு அதைக்கொண்டே அதிக கவலைப்படுபவன், முன்னோர்கள் இயற்றிய நூல்களில் மோகமுள்ளவன், சுறுசுறுப்பில்லாத புத்தி யுள்ளவன், தெரியாத வார்த்தைகளையும் தெரிந்ததுபோல் சாமர்த்தியமாய்ப் பேசுபவன், தன் மதிப்புள்ளவன், கணித சாஸ்திரங்களில் அறிவைச் செலுத்துவானுயின் தக்க கீர்த்தியை அடைபவனுமாவான்.

பின்னும் ரிடபத்தில் சூரியன் இருக்கின் மனித வர்க்கத்திற்கு வேண்டிய சுகங்களெல்லாம் இவனுக்கு முடிவில் பகையாய்த் தோன்றும். வாகனங்களால் இடர் காயப்படுபவன், அல்லது வாகன சுகமற்றவன், கல்வி கற்பதற்கு பெரும் உதவியிருக்கினும் சிறு வயதில் மதிமயக்கங் கொண்டு தக்க வித்தையைப் பெறுதவன், புதன் சேர்ந்திருப்பானுயின் தக்க கல்விகளை ஆய்ந்து கனமான கீர்த்திகளைப் பெற்று மன்னவன் போல் வாழ்வான், பிதுர் பாக்கியம் இல்லாதவன், இருக்கின் சிறுவயதில் பிதாவை யிழப்பவன், கல்வியைக் கொண்டு கீர்த்தியடையாதவனுமாவான்.

முன் கூறியபடி ரிடபத்தில் சூரியனிருக்கப் பெண் பிறக்கின் எக்குறையு மில்லாது கணவனுடன் சுகமே வாழ்வாள்.

மேலும் ரிடபத்தில் சந்திரன் இருக்கின் திடமான மனமுள்ளதாதனமான பச்சை முதலிய நவரத்னங்கள் மீது பிரியப்படுபவன், மிகுந்த போக பாக்கியமுள்ளவன், அநேக வேலையாட்களை வைத்து ரட்சிப்பவன், நற் சிந்தனையுள்ளவன், வீரமுள்ளவன், சற்குணமுள்ளவன் நல்ல சகோதரமுள்ளவன், அவர்களோடு ஒற்றிருக்கப் பிரியப்படுபவன், சேகவத் தொழில்களில் தலைமை வகிப்பவன்; தாய் அல்லது தார வகையால் மிக்க பாக்கியமடைபவன், உத்தமனுமாவான்.

மேற்கூறியபடி ரிடபத்தில் சந்திரனிருக்கப் பெண் பிறக்கின் மிகுந்த போகபாக்கியவதியாயும் நவரத்ன ஆபரணலங்காரத்துடன் தக்க கணவனேடு இல்லறம் நடத்தி மகிழ்வாள்.

பின்னும் ரிடபத்தில் செவ்வாய் இருக்கின், வடுவடைந்த தேக முடையவன், ஸ்திரீகளால் தனமிழந்து வருத்தப்படுபவன், மனம் போல மனைவி கிடைக்காததினுல் கவலைப்படுபவன், ஆயுத சிகிச்சை செய்து கொள்ளுபவன், அல்லது பகையால் உடலில் பின்னப்படுப வனுமாவான், குரு நீங்கலாக மற்ற கிரகங்களின் சேர்க்கையோ பார் வையோ இருக்குமாயின் முன் கூறிய பலன்கள் சிறிது குறையலாம்.

மேற் சொல்லியபடி ரிடபத்தில் செவ்வாய் இருக்கப் பெண் பிறக்குமாயின் இடை வயதில் கணவனுல் கவலைப் படுபவாள், அல்லது கணவனைச் சில நாள் பிரிந்திருப்பாள், குணம், அக்னி, வைசூரி முத லியவைகளால் சரீரத்தில் பின்னப்படுதல், சூதகக்குறை, கெர்ப்பத் தில் தோன்றிய கருக்கள் நிறை மாதத்தின் முன் அழிதல், சில நாள் தரித்திரப் பிணியாலும் வாடுபவள், முன் கூறியவாறு கிரக சம்பந் தத்தாலோ அல்லது பார்வையாலோ சில குறையலாம்.

மேலும் ரிடபத்தில் புதன் இருக்க, வித்யா மேன்மை, கண் ணுங் கருத்துமாய் ஆய்ந்து சகல காரியங்களையும் அறிபவன், எதை யும் கணக்கிட்டுப் பார்ப்பவன், வீணே ஒரு காசும் செலவு செய்யா தவன், நயமான வார்த்தைகளுள்ளவன், சுயமாய்ப் பெரும் பாக் கியங்களைத் தேடுபவன், தருமஞ் செய்பவன், நூல் தரிப்பவர்களின் நேசத்தால் தக்க நலம் பெறுபவன், கணிதத்திலும் எழுதுவதிலும் வல்லவன், சம வளப்பத்துடன் அழகிய தேகமுள்ளவன், பாதம் முத லியதில் அதிக வலுவில்லாதவன், எதிலும் ஒழுக்கமுள்ளவனு மாவான்.

மேலே சொல்லியபடி ரிடபத்தில் புதன் இருக்கப் பெண் பிறக்கு மாயின் மிகுந்த ஐசுவரியத்துடன் வித்தை புத்திகளும் பொருத்த கணவனேடொற்று இல்லற தருமம் பிசகாது இல்லறத்தை நடத்து பவளுமாவாள்.

பின்னும் ரிடபத்தில் குரு இருக்கின் மிகுந்த யோகங்களை அனுபவித்து திடீரென தரித்திரம் வரத் தவிப்பதுடன், எப்பொழு தும் சஞ்சலம், பகை, பிணி, ருணம் இவைகளில் ஒன்று தன்னுடன் உறவுகொண்டு இருக்கக் காண்பவன் களத்திரத்தால் கவலையடை பவன், பிதுர் பாக்கிய மிழப்பவன், அல்லது சின்ன வயதில் பிதுர் கருமஞ் செய்பவன், அல்லது பிதாவைப் பிரிந்து பகை தொடுப்பவன், பிதுர் பாக்யமிருப்பினும் தான் அடையச் சக்தியற்றுத் தவிப்பவன், பெரிய வழக்குகள் உள்ளவன், அரச பயமுள்ளவன், தன்னுயிரை

இழக்கத் துணியும் வரை சங்கடங்கள் உள்ளவன், புத்திர சோகத் தாலும் வருந்துபவன். பொதுவில் பலதோஷமுள்ளவனுமாவான்.

முன் கூறியபடி ரிடபத்தில் குரு இருக்கப் பெண் பிறக்கின் தன் கணவனுடன் எப்பொழுதும் பகை கொள்பவள், சிக்கனமாய் குடும்பத்தை நடத்தச் சக்தியற்றவள், மாங்கல்ய தோஷமுள்ளவள், பெரும் யோகமுள்ள கணவனை யடைந்தும் இடையிற் சுகங் குறைந்து கவலைப்படுபவளுமாவாள்.

மேலும் ரிடபத்தில் சுக்கிரன் இருக்கின் எப்பொழுதும் சுகங் களையே விரும்பி அடைபவன், நேத்திர வசியமுள்ளவன், உயர்ந்த அழகிய சரீரமுள்ளவன், அகன்ற மார்பினையுடையவன், ஸ்திரீகளுக் கினியன், நயமான வார்த்தைகளால் சத்துருவையும் வசியஞ் செய்து கொள்பவன், சுகமுள்ளவன். பெரும் பாக்கியமிருப்பினும் ருணத் தினல் வருந்துபவன், ஆதி மத்தியாந்தங்களில் பகை முதலிய வழக்கு களால் பொருளை இழப்பவன். களத்திர தோஷமுள்ளவன், அற்ப புத்திரரைப் பெறுபவன், ஆயினும் குரு நீங்கலாக மற்ற கிரகங்கள் சேர்ந்தாலும் அல்லது பார்த்தாலும் முன் கூறிய துற்பலன்கள் சிறிது குறையும்.

முன்கூறியப்படி ரிடபத்தில் சுக்கிரன் இருக்கப் பெண் பிறக்கின் பலராலும் மதிக்கத்தக்க அழகிய சரீர காந்தி உள்ளவளாயும் அதனல் கஷ்டமனுபவிப்பவளுமாவாள். குரு சம்பந்தமிருக்கின் இன்னும் அநேக கஷ்டங்களுடன் கணவனையும் இழந்து தரித்திரத்தையும் அடைவாள். குருவில்லாது மற்ற கிரக சம்பந்தமோ பார்வையோ இருக்கின் துற் பலன்கள் நீங்கலாம்.

பின்னும் ரிடபத்தில் சனி யிருக்கின் ராஜ பூஜிதன். ரசாயனத் தொழில்களிலோ அல்லது நீசர்களின் அரசாங்கத்திலோ பலருக்கு அதிபனுயிருந்து தொழில் புரிந்து கீர்த்தி யடைபவன், அல்லது அய யந்திர வியாபாரத் தொழிற்சாலைகளில் தலைமை வைத்து ஜீவனம் நடத்துபவன், குத்தகைத் தொழில்களிலும் தக்க பலன்களைப் பெறுபவன், ஆயினும் இடை வயதில் இடர் காயங்களால் சரீர பின்னமடைபவன், பால்ய முதல் யௌவன காலம் வரை மிகுதியான தரித்திரப் பிணியால் வருந்துபவன், இடையில் அபகீர்த்திகளையும் அடைபவன், அரசர் பயம் முதலிய குறைகளையும் பெறுபவன், சன்யாசிபோல் திரிபவன், களத்திர சுகமில்லாது கவலைப்படுபவன், அந்நிய மத மணம் செய்ய எத்தனிப்பவன், இவ்வித அநேக கொடூ

பலன்களையும் அனுபவித்துப் பின் வயதில் முன்கூறிய நற்பலன்களை யெல்லாம் அனுபவிப்பவனுமாவான்.

மேற்சொல்லியபடி ரிடபத்தில் சனி யிருக்கப் பெண் பிறக்கின் தக்கபடி இல்லற சுகம் நடத்துவதற்கு இயலாது பல கஷ்டங்களையும் அனுபவிப்பவளுமாவாள்.

மேலும் ரிடபத்தில் இராகு இருக்கின் போக பாக்கியவான், அனுமத்து வகைகளில் திரளான பாக்கியத்தை யடைபவன், விசித்திர வாகன லாபமடைபவன், தூதன கட்டங்களையும் பெறுபவன், சத்துரு, ருணம் முதலிய குற்றங்களுறினும் ஜெயித்து மகிழ்பவன், படபடப்பான வார்த்தையுள்ளவன், எதற்கும் அஞ்சாதவன், வலுவுற்ற பெரிய சிரசைப் பெற்றவன், உடல் மெலிந்தவன், சிறிய நேத்திரமுள்ளவன், மத்தியாந்த வயதுகளில் விஷம் முதலிய பிணிகளால் வருந்துபவனுமாவான்.

முன் கூறியபடி ரிடபத்தில் இராகு இருக்கப் பெண் பிறக்கினும் ஆடை ஆபரண ஐஸ்வரியத்துடன் புத்திர பாக்கியங்களையும் பெற்று மகிழ்ச்சியோடு இல்லறத்தில் வாழ்வாள், ஆயினும் இடை, அந்திய வயதில் குடும்ப கலகம், உதிர சம்பந்தமான பிணி, விஷ பயம், கணவனின் முகத்திருப்பம் முதலிய கஷ்டங்களையும் அனுபவித்துப் பின் நன்மையுண்டாகும்.

மேலும் ரிடபத்தில் கேது இருக்கின் மெலிந்த கெர்ப்ப பிணியுள்ள சரீரமுள்ளவன்; எப்பொழுதும் நீங்காத சஞ்சலமுள்ளவன், யோசிக்காது காரியங்களைச் செய்து கவலைப்படுபவன், தக்க மனைவியுங் கிடைத்து இல்லறம் நடத்தச் சக்தியற்றவன், அநேக புத்திரர்களைப் பெறுபவன், தான் பெற்ற புத்திரர்களுக்குத் தக்க சீர் செய்வதற்கு வழியில்லாமல் வருத்தப்படுபவன் அல்லது துர்க்குணமுள்ள புத்திரர்களைப் பெற்று வருந்துபவன், எதிலும் தன் தரித்திரம் முன் வந்து நிற்பதைக் குறித்து வருந்துபவனுமாவான், குரு சூரியன் சந்திரன் நீங்கலாக மற்ற கிரகங்களின் சேர்க்கையோ பார்வையோ இருக்குமாயின் முன்கூறிய துற்பலன்கள் அநேகமாய்க் குறைந்து போகும்.

மேற்கூறியபடி ரிடபத்தில் கேது இருக்கப் பெண் பிறக்குமாயின் எக்குறையும் பாதிக்காது.

(தொடரும்)

மரண நிழல்

"ரஞ்சனன்"

1

'ஸ்ரீகண்டனிடம் இதைச் சொல்லவே கூடாது' என்று ராமனாதன் சேஷாத்ரியிடம் சொன்னானே ஒழிய, அவன் மனதிலும் 'இதைச் சொல்லாமல் எப்படி மறைத்து வைப்பது' என்ற எண்ணம் அறுத்துக்கொண்டிருந்தது என்பதை அவனுடைய குரலும் கண்களும் நன்றாகக் காண்பித்தன. பல்லைக் கடித்துக்கொண்டு எப்படியும் இந்த மூன்று நாட்களைத் தள்ளிவிட்டால், பிறகு அவனைச் சரிப்படுத்தி விடலாம் என்ற எண்ணம் இருவருக்கும். 'ஒரு தடங்கலுமில்லாமல் கலியாணம் நடக்கவேண்டுமே ஈசுவரா' என்று கடவுள் தலையில் பாரத்தைப் போட்டுவிட்டு இருவரும் சவுக்குத் தோப்பின் நடுவில்போய் மௌனமாய் உட்கார்ந்தார்கள்.

நடுவில் சேஷாத்ரி ஒரு யோசனை சொன்னான். 'ஏன், நீ வரவே இல்லை என்று அவனிடம் நான் சொல்லிவிடுகிறேனே? இப்படித்தான் ஒருநாள் பொழுது போகட்டுமே?' என்று.

ராமனாதனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. 'போடா, போ! மடத்தனமாக எதையாவது உளறிக்கொண்டிருக்காதே' என்று அவன் சொன்னபோது சேஷாத்ரி சொன்னதில் அவனுக்கு உண்டான கோபத்தைவிட, மனதிலிருந்த வேதனைதான் அதிகமாக அவன் நடத்தைக்குக் காரணமாக இருந்தது. அவன் எரிந்து விழுந்ததைத் தொடர்ந்து 'ஏன்' என்ற கேள்வியைப் போட்டான் சேஷாத்ரி, பொறுமையோடு.

"போனவன் திரும்பி வரவில்லை என்றால் கவலை அதிகமாகுமா, குறையுமா? நீயே சொல்லு. அதற்கப்புறம் 'நீ போய் பார்த்துக் கொண்டுவா', என்று உன்னை அனுப்புவான். பிறகு நீ,

நான் இரண்டு பேருமே ஒளிந்து கொண்டு திரிய வேண்டும்போலிருக்கிறது!' என்றான் ராமனாதன்.

2

ராமனாதனுக்கு ஸ்ரீகண்டன் விஷயம், இருவரும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் நாள் முதலே தெரியும்; அநியாயப் பிடிவாதக்காரன்! அவன் இஷ்டப்படி காரியங்கள் நடக்கிறவரையில் அவன் விடமாட்டான். ஆகையால் அவனிடம்போய் விஷயத்தைச் சொல்லலாம், மறைந்து திரிந்து கொண்டு அவனை ஏய்த்து விடலாம் என்பது முடியாத காரியம்! 'நானே போய் தங்கையைப் பார்த்துக் கூட்டிக்கொண்டு வந்து விடுகிறேன்' என்று கிளம்பினாலும் கிளம்பி விடுவான்.

ஸ்ரீகண்டன் இரண்டு பேர்கள் மேல் உயிராக இருந்தான் என்றால், அதில் முதல் ஸ்தானம் அவனுடைய தங்கை காமாட்சிக்குத்தான்; அதற்குப் பிறகுதான் ராமனாதன். சிறு குழந்தை முதற்கொண்டே அவளிடம் அவனுக்கு அவ்வளவு பிரேமை. தானே அவளுக்குப் படிக்கச் சொல்லிக் கொடுத்தான்; பிறகு பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் நடந்த பாடங்களைக் கேட்பான்......

சூர்யாஸ்தமன நேரத்தில் குதித்துக் குதித்துக் குழந்தைகள் விளையாடும்பொழுது, தூரத்தில் அண்ணனோடு உட்கார்ந்து கொண்டு அந்த விளையாட்டுகளைப் பார்ப்பதோடு திருப்தி யடைவாள் காமாட்சி. அவனைப் பிரிந்து போய் விளையாட்டில் கலந்து கொள்வதற்கு அவளுக்கும் இஷ்டமில்லாமல்!

காமாட்சியின் கல்யாணத்திற்குப் பிறகு, அவளுடைய மாமனார் வீட்டுக்காரர்கள் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து ஸ்ரீகண்டன் மனது புண்ணாகப்போய், அவர்கள் வீட்டுக்குப் போவதே இல்லை என்று தீர்மானம் செய்து கொண்டது முதல், இன்று வரையில், அவன் அந்தப் பக்கமே எட்டிப் பார்த்ததில்லை.

'அவள் அங்கே போகவே வேண்டாம், நம்மோடேயே இருந்துவிட்டுப் போகட்டும்' என்று அவன் கோபமாய்ச் சொன்னபோது, எல்லோரும் அவனை சுத்தக் கிறுக்குப் பிடித்தவன் என்று சொன்னார்கள்.

மனஸ்தாபத்தோடு மாமனார் வீட்டுக்குக் குடித்தனம் செய்யப் போய், சிரழியும் தங்கைகளின் உயிரிழந்த, சக்கை வாழ்க்கைகளைப்பற்றி மனத்தில் கற்பனை செய்து கொண்டிருந்தான் ஸ்ரீகண்டன்.

ஆனால் அவள் பெண். வாழ்க்கையின் அமைப்பை அவ்வளவு நிர்தாட்சண்யமாக மறுப்பதற்கு அவளால் முடியவில்லை. அதைக் கண்டு திடுக்கிட்டு ஸ்ரீகண்டன் அயர்ந்து போனான். அவளே தைரியமாக 'இதனால் மனஸ்தாபம் வந்து பிளவுபட்டுவிடக் கூடாது. நான் போகிறேன்' என்றபொழுது, 'நீ போகக் கூடாது' என்று அவன் எப்படிச் சொல்ல முடியும்?

3

அவள் புக்ககம் போன பிறகு, விரிசல் விழுந்த குடத்தை ஒட்டி

வைத்திருப்பதுபோல் அவன் காலங் கழித்துக்கொண்டு வந்தான். சந்தோஷமுமில்லை; துக்கமுமில்லை. ஒன்றுமே இல்லை! பிறந்துவிட்ட பிறகு சாகும் வரையில், வாழ்க்கையுடன் போராடியாக வேண்டும்......

அவனுடைய சந்தோஷத்தைத் தேடிக்கொண்டு வருவதற்கு அப்பா ஒரு வழி சொன்னார்; அம்மா ஒரு வழி சொன்னாள்! இருவரும் கடைசியில் ஒரு தீர்மானத்திற்கு வந்த பொழுது, அதைப் பின்பற்றி வந்த ஐந்தாறு பெண்களின் ஜாதகங்கள் அந்த முடிவுக்கு ஒரு வலுவையும் நிச்சயத்தையும் கொடுத்தன. கல்யாணம் செய்வதென்று நிச்சயமாயிற்று.

முகூர்த்த விஷயம் ஸ்ரீகண்டனுடைய கவனத்திற்குக்கொண்டு வரப்பட்ட சமயமும், காமாட்சியினிடமிருந்து வந்த துன்ப ஜாபிதாவின் சோகமும் ஒன்றையொன்று மறைத்துக் கரகரப்புத் தட்டச் செய்தன! உணர்ச்சியற்று, கல்யாணத்திற்கு ஒப்புக்கொண்டான். அவன் அதை ஏற்றுக்கொண்ட விதம் அவனுடைய அப்பா அம்மாவுக்குக்கூட ஒருவித பயத்தைக் கொடுத்தது!

'கல்யாணம் என்றால் காமாட்சி வருவாளோ இல்லியோ? அல்லது, இப்பவும் அனுப்பமாட்டார்களோ?' என்றான் அவன் ஏங்கிய குரலில். 'காமாட்சி இல்லாத கலியாணமா இந்த வீட்டில்' என்று அவனுடைய அப்பாவும் அம்மாவும் சேர்ந்து ஒரு குரலில் சொல்லிய போது, அவனையும் அறியாமல் ததும்பிய கண்ணீரை ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்து மறைத்துக் கொண்டான். அதை அவர்களும் கவனித்தார்கள்.

அப்படியானால் ஸ்ரீகண்டனுடைய விவாகம் அவனுடைய தங்கை, கிளிக்கூண்டிலிருந்து ஒரு தரம் வெளியே வந்து, அவனைப் பார்க்கலாம் என்ற ஒரு விதத்தில் தானா அவனுக்குத் திருப்தியளிக்கிறது? அவர்களுக்குப் பயம்!

பலவகைப்பட்ட உணர்ச்சிகளின் நடுவில் கல்யாண ஏற்பாடுகள், அதனதனுடைய தனிவேகத்தோடு நடந்து கொண்டிருந்தன. எல்லோருக்கும் பத்திரிகைகள் போகும்போது, தன் தங்கைக்குப் பேரகும் கலியாணக் கடிதத்தில், நிச்சயமாக அவள் வரவை எதிர்பார்ப்பதாகச் சேர்த்து, ஸ்ரீகண்டன் எழுதினான்.

4

வாசலில் வந்து இறங்கும் ஒவ்வொரு வண்டியிலும் தன் தங்கையைத் தேடிப்பார்த்து ஏமாந்து போனான் ஸ்ரீகண்டன். அவள் அப்படியொன்றும் வெகு தூரத்தில் இல்லை. அந்த ஊருக்கும் இவர்கள் இருக்கும் கிராமத்திற்கும் நடுவில் ஒரு ஆறு. அந்தப் பக்கம் அந்த ஊர்க்காரரின் வயல் வரப்புகள், ஊர்க்காடு, பிறகு இரண்டு மூன்று மைல்தான் அவள் இருக்குமிடம்.

'மறுநாள் முகூர்த்த தினத்தன்று காலையில் எல்லோரும் வந்து விடுவார்கள்' என்று ஸ்ரீகண்டன் எண்ணிக் கொண்டான். வீட்டுக்குப் போன நாயனக்காரன் திரும்பி வந்தான்; வர வேண்டிய மற்ற சுற்றத்தார்களில்

இரண்டொருவர் வந்தார்கள்! காமாட்சி வரவில்லை; அவளுடைய கணவனும் வரவில்லை. ஆகவே அவளைப் பொறுத்த வரையில் ஒருவரும் வரவில்லை!

இடிந்து போய், திண்ணையில் கவலையோடு உட்கார்ந்திருந்த ஸ்ரீகண்டனைப் பின்னாலிருந்து தட்டி எழுப்பினான் ராமனுதன். 'என்னடா, இப்படி?' என்றான். உள்ளே முகூர்த்தத்திற்கு வேண்டிய தடபுடல்கள் அலட்சியமாக நடந்து கொண்டிருந்தன.

எவ்வளவோ தடவைகளில் ராமனுதனும் ஸ்ரீகண்டனும் விவாதித்திருக்கிறார்கள், இந்த விஷயத்தைப்பற்றி!

'மடையன் மாதிரி உளராதே—பெண்களை, என்னதான் மனஸ் தாபம் வந்தாலும், புக்ககத்திற்கு அனுப்பாமல் வைத்திருக்க முடியுமாடா? உலகம் சிரிக்காதோ? அதற்கென்ன, ஒருவிதமாக அவர்களை சமாதானப் படுத்திவிட்டு, வாரத்திற்கொருதரம், நாம் போய்ப் பார்த்துக்கொண்டால் போகிறது—'

'ஆம்! உலகமாம், உலகம்! கேடு கெட்ட உலகம்! சார்லஸ் லாம்ப், மேரி என்று இரண்டு பேர்...உனக்குத் தெரியாது போலிருக்கிறது. அண்ணனும் தங்கையும். மேரி கடைசிவரையில் கலியாணம் செய்துகொள்ளவே இல்லை...'.

'ஆ! அவள் பைத்தியம். கலியாணம் செய்துகொள்ள ஒருவரும் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள் போலிருக்கிறது...'

'எல்லாம் வந்தார்கள், சினேகிதனே ஒருவன். மானிங் என்று பெயர்—'

முடிவடையாத விவாதங்கள்! அவைகள்தான் அவ்வளவும் இன்று திருப்பிக்கொண்டிருக்கின்றன என்று ராமனுதனுக்குத் தெரியும். மேலும் காமாட்சியினுடைய மாமனாரின் ஊரிலிருந்து வந்த சேஷாத்ரியைப் பார்த்தபோது ராமனுதன் விசாரித்தான். அதிலிருந்து, வீட்டு மாப்பிள்ளைக்குக் கடிதம் எழுதாமல், 'காமாட்சிக்கு' என்று ஸ்ரீகண்டன் கை தவறி எழுதியதில் காமாட்சியின் கணவனுக்கு வருத்தம்! அதோடுகூட அவனுக்கு உடம்பு சரியாக இல்லை; மலேரியா ஜுரம்!

'ஏதோ தப்புத்தான் செய்துவிட்டேன் போலிருக்கு. நீ ஒரு காரோடு போய், என் நமஸ்காரத்தைச் சொல்லி அவர்களை அழைத்துக்கொண்டு வந்து விடு' —என்றான் ஸ்ரீகண்டன். ஒரு காரைத் தனியாக அமர்த்திக்கொண்டு போய் காமாட்சியையும் மாப்பிள்ளையையும் ராமனுதன் பார்த்தான்.

சமயம் சரியாக இல்லை. காமாட்சியைப் பரீக்ஷை செய்துகொண்டிருந்த டாக்டர் நிமிர்ந்து, ராமனுதன், காமாட்சியின் கணவன் இருவரையும் பார்த்து உதட்டைப் பிதுக்கினர். சற்று அந்தப் பக்கம் கூட்டிக்கொண்டு போய் 'ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கணும் சார்' என்றார்.

தூக்கி வாரிப் போட்டது ராமனுதனுக்கு. 'சரி. போயிட்டு வரேன், மாப்பிள்ளை. காமாட்சி

யைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் நாளைக்கே ஓடிவந்து விடுகிறேன்—' என்று சொல்லிக்கொண்டே மோட்டாரில் ஏறுவதற்குள் டாக்டரும் வெளியே வந்துவிட்டார்.

ராமநாதன், காமாட்சியின் தமையன் என்று நினைத்துக் கொண்டார் போலிருக்கிறது டாக்டர். 'இருந்து விட்டுத்தான் போயேன் அப்பா! நாளை வரைக்கும் கூட......ம்...தாங்காது போலிருக்கே' என்றார்.

ராமநாதனுக்கு மயிர் சிலிர்த்தது.

5

'எது எப்படிப் போனாலும் சரி, நான் போய் இதை அவனிடம் சொல்லவே மாட்டேன்'— என்றான் ராமநாதன். சேஷாத்ரிக்கு அது புரியவில்லை. சிதறிக் கிடந்த சவுக்குப் பட்டை ஒன்றை எடுத்துக் கடித்துக் கொண்டே சொன்னான். 'ஸ்ரீகண்டன் காதுக்கு இது போய் எட்டும் போது, நாம் இந்த விஷயத்தையே சொல்லாமல் மறைத்து வைத்தது வேறு அவன் மனதைக் கஷ்டப்படுத்தும்!'

ராமநாதனுக்கு இது சரி என்று பட்டது. 'என்ன நேர்வதாக இருந்தாலும் இதை அவனிடம் சொல்லி விடுவது' என்று தீர்மானித்துக் கொண்டு இருவரும் சவுக்கைத் தோப்புக்கு வெளியில் வந்த போது ஸ்ரீகண்டன் குளத்தங்கரையில் நின்று கொண்டிருந்தான்.

யாரோ இருவர் வந்து அவனை அவசர அவசரமாக அழைத்தார்கள், ஹோமத்திற்கு! 'இதோ வந்து விட்டேன்' என்று திரும்பியவன் தூரத்தில் நண்பர்களைப் பார்த்ததும், 'என்னடா, என் காமாட்சி வரவில்லையாம்? வந்து விடுவாளோ இல்லையோ?' என்று அவர்கள் காதுக்கு எட்டும்படி கேட்டான்.

திடீரென்று ராமநாதன் 'மலேரியா ஜுரத்தோடு பிரயாணம் செய்யக் கூடாது என்று டாக்டர் சொல்லியதால் வரவில்லையாம். அநேகமாகக் கடைசி நாள் எல்லோரும் வந்து விடுவார்கள்' என்றான், வாய் காய்ந்து போய் மேலிதழ்களில் நாக்கு ஒட்டிக் கொண்ட மாதிரி!

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென்னிந்தியா வெங்கும் கிளை ஆபீசுகள்

அதிகார மூலதனம்	60,00,000—0—0
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	47,92,800—0—0
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள்	10,00,000—0—0
ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள்	2,79,280—0—0
ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும்	18,60,147—0—0

செக்ரடரி: N. கோபால அய்யர்

பெரிய விஷயம்!

புு. வே. சுப்ரமணியம்

'ரொம்பப் பெரிய விஷயங்களுக்கு உதாரணம் வேண்டும் என்றால், ஒருவருக்கும் புரியாமல் எழுதும் எழுத்தாளனுடைய எழுத்துக்களைச் சொல்ல வேண்டும்' என்று ஒரு போடு போட்டார் எனது நண்பர். நான் 'சரி' என்று ஒப்புக்கொள்ளும் பாவனையில் தலையை ஆட்டின உடனே அவர் சொன்னார்: "நல்ல வேளையாகப் போயிற்று. எங்கே நீங்கள் தகராறு செய்யப் போகிறீர்களோ என்று நினைத்தேன்."

புரிந்து கொள்ளும்படி எழுதினால்தான் படிப்பவன் படித்துத் தெரிந்து கொண்டு விடுவானே! தெரிந்து கொண்ட பிறகு பெரிய விஷயம், அப்படியே இருக்க முடியுமா? முடியவே முடியாது. "என்ன, சார். இதுதானே, என்ன பிரமாதம்" என்பார் வாசகர். "ஆம், அவ்வளவுதான்" என்று ஒப்புக்கொண்டுவிட்டால் பிறகு அது எப்படிப் பெரிய விஷயமாகும்?

அல்லது — "இது தானே, என்ன பிரமாதம்" என்பதற்கு, "அதுதான் நீங்கள் சொல்லுவீர்களென்று எனக்குத் தெரியும். ஒன்று சொல்லுகிறேன் சார். இவ்வளவு எளிதாக இவரைத்தெரிந்து கொண்டு விட்டோம் என்பது தப்பு. ஆழ்ந்து யோசித்துப் பார்க்கும்போது கலைஞனுடைய உள்ளத்தின் ஒரு பொறிதான் தென்படும். அவ்வளவுதான்... உதாரணமாக இதை எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்லியதோடு நின்றிருந்தால் அது ஒன்றும் பிரமாதமானதாக இருக்காது. இப்போது பாருங்கள், இதல்லவா இதன் அர்த்தம்" என்று விவரிக்கத் தொடங்குகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அவர் திறந்த வாய் திறந்தபடியே வியாக்கியானத்தைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார். சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லி முடித்து, "இதற்குள் இவ்வளவு இருக்கிறது" என்று சொல்லி முடித்தவுடன், அவருக்கும் ஒரு சந்தேகம் வந்துவிடுகிறது. "சுவாமி! இதுதான் உங்களுக்குப் புரிந்து போய்விட்டதே. இவ்வளவுதானே!" என்கிறார் ஸ்ரீ. நண்பர்.

வியாக்கியான கர்த்தாக்களால், விமர்சகர்களால், கலை, கவி எல்லாமே செய்யப்படுகின்றன என்பதும்கூட ஒரு விதத்தில் உண்மையாகி விடுகிறது. கலையை சிருஷ்டி செய்கிறவன் கலைஞனல்ல; கவி பாடுகிறவன் கவிஞன் அல்ல. அவைகளைக் கண்டு

பிடிப்பவன்தான் கலைஞன்; கவிஞன்—எல்லாம்!

ஏனெனில், சில சமயங்களில், இல்லாத பொருள்களையும் இருக்கச்செய்து, அவைகளை நிதர்சனமாய்க் காணும் கற்பனை வாய்ந்தவன் விமர்சகன் அல்லவா? கலைஞனும் கவிஞனும் காணாத—காண முடியாத—அற்புதங்களைக் கூடக் காண்கிறவன் மகா கவி, அபூர்வக் கலைஞன்!

ஆகையால், 'புரியவில்லையே' என்று சொல்லுபவன் முட்டாள். அவன் எதையும் புரிந்துகொண்டு தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் ஒரு விமர்சகனைப் பிடித்தாவது தெரிந்து கொள்ள வேண்டும். இல்லையேல், "அடே! அதுவா? அது ரொம்பப் பெரிய விஷயமல்லவா" என்று ஒப்புக்கொள்ளவாவது வேண்டும். ஏன் அப்படி நடக்கவில்லையா?

கடவுளைப்பற்றி தெரிந்து கொண்டவர்கள், பல புஸ்தகங்கள் எழுதி இருக்கிறார்கள். அது ஒருவருக்குமே புரியாது—விமரிசகரை நியமித்தாலொழிய! எனவே, கடவுள் மிகப்பெரிய விஷயம் என்பதை யாராவது மறுக்க முடியுமா? ஆனால் கொடுத்து வைத்த மகான்களுக்குத் தெரிந்து கொள்ளும் பாக்கியம் கிடைக்கிறது; மற்றவர்களுக்குக் கிடைப்பதில்லை!

எனவே, நான் சொல்லுவதும் ஒருவருக்கும் புரியவில்லை என்றால், நானும் ஒரு பெரிய விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறேன் என்று நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம். இது ஒருவருக்குமே புரியாது என்று நீங்கள் தள்ளி விடுவதையும் நான் பலமாக ஆட்சேபிக்கிறேன்.

ஏனெனில், விமர்சகர்களுக்கும் புரியாத பல விஷயங்களை எழுதுவதுதான் உண்மைக்கலை. எவரும் புரியவில்லை என்று சொல்லும் ஒரு கதையோ, கட்டுரையோ, காவியமோ எழுதும் ஒருவனைத் தான் "இவனுடைய எழுத்துக்கள் சாகா வரம் பெற்றவை" என்று உலகம் கொண்டாடும். "இது என்ன சார், எழுத்து? ஒருவருக்கும் தெரியாத எழுத்து—தலை எழுத்து" என்று சொல்லுபவன் ஆசிரியரின் வசவுக்குத்தான் உள்ளாவான்.

அந்த சமயங்களில் "நான் இவர்களுக்காக வெல்லாம் எழுதவில்லை. மூளையுள்ள ஒருவர், மேலான 'கலையுள்ளம் படைத்த' ஒருவர் படித்து இதை ரஸித்தால் போதும்" என்ற விவாதம் எழும்புகிறது!

படித்து, 'நன்றாக இல்லை' என்றும் சொல்லும் வாசகன் கிட்டத்தட்ட மூளையற்றவனாக ஆகி விடுகிறான்! அவன் படித்து ரஸிப்பவை கீழ்த்தரமான எழுத்துக்களாக ஆகிவிடுகின்றன. ஆகையால்தான் சொன்னேன், ஒருவருக்கும் புரியாதவைகளைத்தான் பெரிய விஷயங்களாகக் கருத வேண்டுமென்று!

ஏன், இந்தக் காரணம் சரியாக இல்லையோ? உங்களுக்குப் புரியவில்லைபோலிருக்கிறது. ஆம்! இது கொஞ்சம் பெரிய விஷயம்!

அதிருஷ்டக் கட்டை

"குகப்ரியை"

என் சிநேகிதன் நரஸிம்மனை நான் பார்த்துச் சரியாய்ப் பத்து வருஷமிருக்கும். கீழ் வகுப்புகளில் படிக்கும் பொழுது நானும் அவனும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியவே மாட்டோம். என் பாட்டிக்கு எப்பொழுதாவது கோபம் வந்து விட்டால் "இரண்டு பேரும் ஒரு கட்டையிலே போகிறவன்கள்" என்று ஆசீர்வாதம் செய்வாள்.

ஆனால் தலைச்சுழி என்கிறார்களே, அது மட்டும் அவனுக்கு வேறு; எனக்கு வேறுதான். சின்ன வகுப்புகளிலே நான் 'நூற்றுக்கு நூறு' வாங்குவேன். அவன் என்னைப் பார்த்தேதான் காப்பியடிப்பான். 'ஜாம்பவான்' வாத்தியார் கூட "எனக்கேன் தலைவிதி, தூக்கிப் போட்டு விடுகிறேன். மேலிருக்கிற மகராஜன் பார்த்துக் குண்டலம் போடுகிறான்" என்பார்.

எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை முடிவு வந்ததோ இல்லையோ, ஹெட்மாஸ்டர் அப்படியே மூர்ச்சை போட்டு விழுந்து விட்டார். பக்கத்தில் நான் உட்கார்ந்திருந்தேன், "எலே, நம்ம நச்சு நம்பர்தானா? அவனா பாஸ் பண்ணி விட்டான்? போடு சக்கை!" என்று என் முதுகில் ஒரு தட்டு தட்டினார். என் முதுகு பட்டபாடு முதுகுக்குத்தான் தெரியும்.

எந்த நல்ல வேளையிலே காலேஜில் நுழைந்தேனோ தெரியாது. என் சாயம் வெளுக்க ஆரம்பித்து விட்டது. எதோ ஒரு விதமாக பல்லைக் கடித்துக் கொண்டு பீ. ஏ. பாஸ் பண்ணி முடித்தேன். நச்சு, அவன் மாமாவின் தயவினால் டில்லியில் சட்டம் படித்துக் கொண்டிருந்தான்.

நானும் காலேஜை விட்டு வந்து வருஷம் நாலாயிற்று. வேலை, வேலைதான். ரூபாய் ரூபாயாய் ஸ்டாம்பும், ரீம் ரீமாகப் பேப்பரும் 'மனுஸமர்ப்பண' காண்டத்திற்கே செலவாய் விட்டது. பிள்ளையாண்டானுக்கு வேலையாகவில்லையே என்கிற ஏக்கத்தினால் அம்மாவுக்கு கைலாச வாசம் கிடைத்தது.

ஏனென்று கேட்பார் கிடையாது. அப்பாவும் அத்தையும் தான் மீதி. அத்திம்பேர் மிராசுதார். கொழுத்த பணம். தன்னிடமே கணக்குப் பிள்ளையாய் என்னை வந்து விடும்படி சொன்னார் அத்திம்பேர். அப்பாவுக்கு இது கௌரவமாகத் தோன்றவில்லை. "ஒரு மேஜை நாற்காலி கூட இல்லாமல் பத்தாயப் பெட்டியடியில் கணக்கு எழுதவா என் பிள்ளையை ஆனர்ஸ் படிக்க வைத்தேன்" என்று பிரமாதமாக சண்டைக்கு வந்து விட்டார். பிறகு பேச்சுமுற்றி, பெருங்காற்றாகி, அப்பாவுக்கும் அத்தைக்கும் பேச்சு வார்த்தையில்லாமல் போய்விட்டது.

அத்தைக்கு அந்தரங்கத்தில் வேறொரு உத்தேசம். அது எனக்கு மட்டும் தெரியும், அத்தைக்கு கவிகள் புனைவதில் நல்ல தேர்ச்சி உண்டு. வசனமும் வெகு அழகாய் எழுதுவாள். ஆனால் பாவம்! அவளுடைய

கவிகளாவது, கட்டுரைகளாவது, பாழும் பத்திரிகாசிரியர்களுக்குப் பிடித்தால் தானே? கத்தையாய் மறு தபாலில் திரும்பி வந்து மானத்தைவாங்கும். அதனுல் என்னே உதவியாக வைத்துக் கொண்டு தானே ஒரு தனிப் பத்திரிகை நடத்த வேண்டுமென்று ஒரு ஆசை வைத்திருந்தாள். இந்தச் சண்டையிலிருந்து அதுவும் போயிற்று.

இருந்தாலும் தப்பித் தவறி எந்தப் பத்திரிக்கையிலாவது தன் கவியோ கட்டுரையோ வெளியாகி இருந்தால் எனக்கு ஒரு பிரதி அனுப்பிவைப்பாள். நான் இருக்கும் பொழுது வந்தால் ஆவலுடன் வாங்கிப் படிப்பேன். இல்லாதபொழுது வந்தால், அப்பா வாங்கி எங்கேயாவது ஒரு பீரோவின் மேல் வீசி எறிந்து விடுவார்.

இதே ரீதியில் இரண்டு காலெண்டர் மாறிற்று. வேலைக்கு மனுப் போட்டுப் போட்டு கை சலித்தது. கடைசியில் பஞ்சாங்கமாவது கணித்து விற்பனை செய்யலாம், எல்லோரும் வாங்கக் கூடியதுதானே என்றெண்ணி, மேலே கொட்டை எழுத்தில் 'கணித சாஸ்திர விற்பன்னர்' என்று தடபுடலாய் எழுதி முப்பத்தி இரண்டாம் நெம்பர் திருக்கணித பஞ்சாங்கம் அச்சிட்டு முடித்தேன்.

அச்சாபீஸுக்கும் வீட்டுக்கும் நடந்த நடையில் எழு ஜோடி செருப்பு தேய்ந்திருக்கும். எதோ ஒரு கிரகம் வக்ரமாய் போட்டு விட்டேனும். மற்ற பஞ்சாங்கக்காரர்கள் தினசரிகள் மூலமாய் மட்டையடி அடிக்க ஆரம்பித்தார்கள். பஞ்சாங்கம் எழுதுவதை விட பஞ்சாங்கம் பண்ணிவைத்து விடலாமென்று தோன்றிவிட்டது. இதற்குள் ரொம்ப அருமையான ஒரு சிநேகிதன் வந்து சேர்ந்தான்.

"இதெல்லாம் என்ன வீண் வியவகாரம். நீ ஒரு நல்ல நாவலோ, நாடகமோ எழுது. பாட புஸ்தக கமிட்டியிலே எல்லோரும் நமக்குத் தெரிந்தவர்கள். நான் வாயசைத்தால் போதும், உன் புஸ்தகங்களை எல்லாம் பள்ளிக்கூடத்தில் பாட புஸ்தகங்களாக்கி விடுவார்கள். ஒரே வருஷத்தில், போட்ட முதலைப் போல் மூன்று பங்கு லாபம் எடுத்து விடலாம்'' என்று அளந்தான்.

எந்த நல்ல நாளிலே கதை எழுத ஆரம்பித்தேனே தெரியாது. அப்பாவுக்கு உடம்பு அசௌக்கியம், ஸ்வர்க்க வாஸம், எல்லாம் ஒன்றின் பின் ஒன்றுய் வந்து சேர்ந்தன. 'என்ன வந்தாலும் சரி விடுவதில்லை' என்ற ஒரே உறுதியுடன் ஒரு கதை எழுதி முடித்தேன். பெயரிடுவதற்குள் தான் பெரிய பாடாகி விட்டது. கடைசியில் 'சுந்தர மணி' அல்லது 'அந்தரபுரி ரஹஸ்யம்' என்று பெயரிட்டேன்.

மாதம் மூன்ருயிற்று. ஒரு வழியாக 'புரூப்' திருத்தி முடிந்தது. முன்னுரை யாரைக் கேட்கலாமென்று புரியவில்லை. அத்தையையே கேட்கலாமென்று சொன்னுன் என் நண்பன்.

எனக்கு வந்த எரிச்சலில் அவன் காதைப் பிடித்து ஒரு உலுக்கல் உலுக்கினேன். நீங்களே சொல்லுங்கள். என்னதான் விரோதமிருந்தாலும் "ஒரு சட்டிப் பருப்பிலே, ஒரு சட்டி நெருப்பிலே" என்று வசனமாயிற்றே. சாவு வாழ்வு கூட கேட்காதவளிடம் போய் முகவுரை கேட்கப் போகிறதா? ஏதோ கடன் கேட்க வந்துவிட்டான்போலிருக்கிறது என்று அவள் எண்ணிக் கொள்ளுவாள்'' என்று அவன்மேல் எரிந்து விழுந்தேன்.

"சே! சே! என்னடா இது. அந்தம்மாள் முகவுரை எழுதினுல் உனக்குக் கொஞ்சம் பெருமையாச்சே,

இந்த சாக்கிலே அச்சுச் செலவுக்கு ஏதாவது— —"

"ஆரம்பித்து விட்டாயா உன் கதையை? இன்னும் அவ்வளவு கேவலமாய் போய்விடவில்லை" என்று உறுமினேன்.

"தொலையட்டும். சமர்ப்பணமாவது பண்ணேன்."

"போதும். போதும் உன்னுடைய அருமையான யோசனைகளை யார் கேட்கிறார்களோ அவர்களுக்கு சொல்லு" என்று சொல்லிக் கொண்டிருக்கையில் இன்னொரு சிநேகிதன் வந்து சேர்ந்தான்.

அவன் சாமான்யமான சிநேகிதனன்று. புஸ்தகம் இரவல் வாங்குவதற்கென்றே பிறந்த தனிப்பிறவி. அவன் கண்ணில் பட்ட புஸ்தகம் யானைவாய்க் கரும்புதான். எந்த அபிப்ராயத்தையும் தானே வலிய முன் வந்து சொல்ல ஆரம்பித்து விடுவான்.

"அடே ராமு! நான் சொல்வதைக் கேள். கல்வி மந்திரியை யாவது, ஜில்லா கல்வி அதிகாரியை யாவது பிடி. எத்த விதத்திலே யாவது பள்ளிக்கூடங்களில் வந்து விடும்."

"இதெல்லாம் என்னடா பிச்சைக் காசு குருவி மூக்காலே சேர்க்கிற மாதிரி. உழுகிறவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது. போட்ட முதல் எடுக்கிறதற்குள்ளே உன்னைப்பிடி, என்னைப்பிடி என்று ஆகிவிடும். யாராவது ஒரு நல்ல டைரக்டரையோ முதலாளியையோ பிடி. கதை படமாக வந்தால் ஏதோ ஆளுக்கு அரைக்காசாவது மிஞ்சும்" என்றான் மற்றொரு நண்பன்.

என்ன செய்வது? ஒவ்வொருவருடைய யோசனையும் பொன் பெறும். எதைச் செய்வது? எதை விடுவது? டாக்கிக்கு என் கதை ஒவ்வுமோ ஒவ்வாதோ? அதில் தரை மகா ஜனங்கள் ரஸிக்கக்கூடிய டான்ஸ் கட்டங்களை நுழைக்கக்கூட இடமில்லை. எப்படியாவது புகுத்தி வைப்போமென்றாலும், கதையில் வரும் ஸ்திரீ பாத்திரங்கள் இருவரையும் ஸ்தூலமாக போட்டிருக்கிறேன், அவர்களுள் யாரையாவது கொஞ்சம் ஆடச் சொல்லுவோமா என்று கூட யோசித்தேன்.

கடைசியில் வேறு வழியில்லாமல் ஒரு ஜில்லா அதிகாரியையே பிடித்து விடுவதென்று புறப்பட்டேன். சரியான சகுனம், சுண்டு எதிரே வந்தான். அட, கிரகசாரமே! என்று எண்ணிக்கொண்டே, புஸ்தகத்தை மறைத்து வைத்துக் கொண்டேன்.

"அடே ராமு! ஏது இந்த வெய்யிலிலே கிளம்பினாய். நான் உன்னிடம் ஒரு சங்கதி சொல்லத்தான் வந்தேன். இந்த வருஷத்திலிருந்து பள்ளிக்கூடங்களில் நான் டீடெயில் புஸ்தகங்கள் வைப்பதை எடுத்து விட்டார்களாம்."

"எனக்குத் தலை சுற்றிற்று. இந்த மங்கள சமாசாரத்தைச் சொல்லத்தான் வந்தாயா?" என்றேன்.

* * *

சாயங்காலம் ஐந்து மணி. ஏதோ ஒரு "பெங்குவின்" நாவலை வைத்துக்கொண்டு ஆசிரியருக்கு ஏற்பட்டிருக்கும் ஆதாய விரயங்களைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தேன். எவ்வளவு நேரம் தான் கணக்கிட்டிருப்பேனோ எனக்கே தெரியாது. அலுத்துப் போய் சோம்பல் முறித்துக் கொண்டே புஸ்தகத்தை மேஜையின் மேல் கவிழ்த்துவிட்டு எழுந்தேன். விளக்கேற்றுவதற்குத் தீப்பெட்டி வைத்த இடம் மறந்து போய்விட்டது.

வாசலில் சைகிள் மணிச் சப்தம் கேட்டது. எட்டிப் பார்த்தேன். தந்திச் சேவகன்! வாங்கிப் பிரித்தேன். அத்தை இறந்து போய்விட்டாள்.

பத்துப் பதினைந்து நாட்கள் ஆகியிருக்கும். பீரோவிலுள்ள புஸ்த

கங்களை யெல்லாம் ஒரு ஒழுங்கு செய்து விட்டு மீதியைக் கடையில் போட்டு விடலாமென்று எல்லாவற்றையும் எடுத்து நடு அறையில் குவித்தேன். அதனடுவில் ஒரு பிரிக்காத பார்ஸல், எப்பொழுது வந்ததோ, என்னவென்றே ஞாபகமில்லை. எடுத்துப் பார்த்தேன், அத்தையின் கையெழுத்து. "அடாடா! இதேது, வந்து ஒரு வருஷமாகி யிருக்கிறது. பிரித்துப் பார்க்காமலிருந்து விட்டோமே. யார் வாங்கி எங்கே போட்டிருந்தார்கள்" என்று எண்ணியவனாய் பார்ஸலைப் பிரித்தேன்.

அத்தையின் கதை. "காதலும் கடமையும்" அடாடா! இதைப் பற்றி மதிப்புரைகள் கூட பிரமாதமாக வந்திருந்ததே. நமக்கு அனுப்பவில்லை யென்றல்லவா நினைத்தேன், என்று மிகுந்த அங்கலாய்ப்புடன் புஸ்தகத்தைப் புரட்டினேன். உள்ளிருந்து ஒரு மடித்த கடிதம் பொத்தென்று விழுந்தது. எடுத்தேன். அப்படியே திகைத்து நின்று விட்டேன்.

என் பெயருக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரே செக். அத்தையின் கையெழுத்து. உலகமே சுற்றுவது போல் தோன்றிற்று. மெதுவாய் சமாளித்துக்கொண்டு அவசரமாய் சட்டையை மாட்டிக்கொண்டு பாங்குக்கு ஓடினேன்.

பாங்கின் வாசல் பூட்டிக்கிடந்தது. நான்கு போலீஸ்காரர்கள் காவல். யாராரோ வந்து பார்த்துப் பெருமூச்சு விட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள். அடாடா! ஐந்து நிமிஷத்துக்கு ஒரு ஆனந்தமா? என்று வாய்விட்டுச் சொல்லி விட்டேன்.

ஒருநாள் சாயங்காலம். சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு சினேகிதன் வீட்டுக் கலியாணத்திற்குப் போயிருந்தேன். எனக்கு முன் வரிசைக் கோடியில் யாரோ தெரிந்த முகம் போலிருந்தது. ஒரு வேளை நச்சுதானோ என்று நினைத்தேன். அவன் தான் மதுரையில் பெரியவக்கீலாமே, இங்கே எங்கே வரப்போகிறான் என்று எண்ணிக் கொண்டே உற்றுப் பார்த்தேன். அதே காக்கா மூக்கு. அதே சாயல். தற்செயலாய் அவனும் திரும்பினான். சாக்ஷாத் நரசிம்மனே தான். "அடேடே! நச்சுவா" என்று கேட்டுவிட்டேன்.

"நீதானா? யாரோ என்றல்லவோ பார்த்தேன். என்னடா இது அடையாளமே தெரியாமல் உருமாறிப் போயிருக்கிறாயே, அப்பா சௌக்கியமா?" என்று குசலம் விசாரித்தான்.

"அதையெல்லாம் கேட்காதே. நான் மட்டும்தான் மீதி."

"நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய். இப்படி ஒரு தடவை மதுரைப் பக்கம் வாயேன். நீ ஒருவனாகத்தானிருக்கிறாயா? வா, வாசலுக்கு வா. சாவகாசமாகப் பேசுவோமென்று என்னை இழுத்த வண்ணம், தெருத் திண்ணைக்கு வந்து சேர்ந்தான்.

இதற்குள் அங்கே வந்த இன்னொருவர், அவனை "என்னடாப்பா, ரொம்ப இளைத்துப்போய் விட்டாயே" என்று விசாரித்தார். அவன் பாவம்! கொஞ்சமாய் இருநூறு பௌண்டுதானிருப்பான்.

"வேறொன்றுமில்லை. ஓயாத அலைச்சல்தான், இந்த......பாங்கு முறிஞ்சுபோச்சோ யில்லையோ. அதிலே என்னை "லிக்விடேடர்" ஆக போட்டிருக்கிறார்கள். ஊராய் அலையவேண்டியிருக்கிறது. வேளா வேளைக்கு தூக்கமில்லை" என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தான் நச்சு.

எனக்கு எப்படியிருக்கும்? 'அட அதிருஷ்டக்கட்டையே' என்றெண்ணிக் கொண்டே, நானும் அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன்.

நிஜம்மா!

(ராஜம்)

(மொட்டை மாடியில் கடற்கரையை நோக்கி கீழே பாயை விரித்து போட்டுக்கொண்டு படுத்துக்கொண்டிருக்கிருன் நாகராஜன். நிலவு வெள்ளி முலாம் பூசினதுபோல வீடுகள் மீதும் வீதிகளிலும் படிந்திருக்கிறது; கடலிலிருந்து காற்று குளிர்ந்து வருகிறது; எதிர் வீட்டிலிருந்து ரேடியோ சங்கீதம் இனிமையாக மிதந்து வருகிறது. குழந்தைகள் தூங்கிவிட்டார்கள்.

நாகராஜனுக்கு வயது முப்பத்தைந்து இருக்கும். வாழ்க்கையில் எல்லாம் அவனுக்கு இனிமைதான். மனைவி, குழந்தைகள், காலேஜ் ஆசிரியர் பதவி, பங்களா—எல்லாம்.

மீனுக்ஷிக்கும் ஒரு குறைவும் கிடையாது—அழகு, ஆபரணங்கள், அன்பு,—எதிலும். இருபத்தைந்து வயதில் இரு குழந்தைகளைப் பெற்றும் கட்டு தளராமல் கன்னிகை போல இருந்தாள்.)

நாகராஜன் :—இந்தா, சும்மா என்ன செய்து கொண்டிருக்கிறுய்? வா, இங்கே, இப்படி!

மீனுக்ஷி :—(படியேறி வந்து) இப்போ இப்படிச் சொல்லிவிட்டு காலமே அடுப்பங்கரையில் வந்து உட்கார்ந்து கொண்டு ஆச்சா, ஆச்சா என்கிறது!

நா :—அதிகப் பிரசங்கி! உனக்கு உடம்பு துளிர்த்துப் போச்சு! முதுகு—

மீ :—ஆமாம்! இன்னும் கொஞ்சநாள் போகட்டும் அடிக்கிறதற்கு!

நா :—நீ பச்சைக் குழந்தை மாதிரிதான் இருக்கே!

மீ :—என்ன செய்துவிட்டேன்?

நாக :—ஒன்றும் செய்யவில்லே. விளையாட்டும் கேலியும் குதிப்பதும் ஓடுவதுமாக—குடித்தனக் காரியா லட்சணமா!

மீ :—ஓகோ, பக்கத்தாத்து அம்மாமி மாதிரி சதா முகத்திலே கடுகு வெடித்துக்கொண்டு இருக்கணுமோ ஆனுல்?

நாக :—யார் சொன்னுர்கள் அப்படியென்று?

மீ :—பின்னே?

நாக :—உன் மாதிரிதான் எல்லாரும் இருக்கணும்னு சொல்றேன்.

மீ :—இருக்கனும்னு வருமா ?

நாக :—ஏன் வராது ?

மீ :—அதுக்குக் காலம், வயசு, சமயம், சௌகரியம்—எல்லாம்—

நாக :—சேச்சேச்சே ! இப்போ திடீரென்று கிழவி மாதிரி பேச ஆரம்பிக்கிறாயே !

மீ :—இல்லையே ! இதெல்லாம் அமையனும் என்கிறேன் !

நாக :—உனக்கு மட்டும்தான் அமைந்திருக்கோ ?

மீ :—நான் அப்படிச் சொல்லவில்லையே !

நா :—உனக்கிருப்பதுபோல எல்லோருக்கும் அழகும், யௌவனமும் இருந்தால்தான் குதித்து விளையாடலாம் என்கிறாயா ?

மீ :—இல்லை.

நா :—அன்பும் ஆதரவும் இருக்க வேண்டும் ?

மீ :—வேண்டாமா பின் ?

நா :—இல்லை யென்று தீர்மானித்து விட்டாய்போலிருக்கிறது பாக்கி எல்லோருக்கும் !

மீ :—அதான் இல்லே. நீங்களாக அர்த்தம் பண்ணிக்கொண்டால் நான் என்ன செய்கிறது ?

நா :—நீ ஒன்றும் செய்ய வேண்டாம். வாயை மூடிக்கொண்டு இப்படி உட்கார். ஞானம்பாள் பாட்டு எப்படி இருக்கிறது பார் !

மீ :—பாட்டைத்தான் போய்ப் பார்க்கிறதாக்கும். நான் கேட்கத்தான் செய்வேன் !

நா :—ஏதாவது செய். புன்னாகவராளிதான் என்ன மனோகரமான ராகம் ! அடாடா !

மீ :—ராகத்தைக் காட்டிலும் அந்தக் குரலில்தான் இருக்கிறது குழைவு பூராவும்.

நா :—உன் குரல்கூட இப்பொழுது அப்படி யிருக்கிறதே !

மீ :—போங்கள் !

நாக :—(உருகி) மீனு !

மீ :—(தூக்கிவாரிப் போட்டது போல) என்ன ?

நாக :—வாழ்க்கை இனிமைதான்—நீயும் சங்கீதமும் இருக்கும் வரையில் !

மீ :—(சமாளித்துக் கொண்டு) இவ்வளவுதானா ! என்னமோ என்று பயந்து போய் விட்டேன் !

நாக :—(கொஞ்சம் அதிருப்தியுடன்) ஏன் இவ்வளவுதானா என்கிறாய் ? ஏன் பயந்து போய் விட்டாய் ?

மீ :—ஒன்றுமில்லே—

நாக :—என்ன ஒன்றுமில்லே?

மீ :—அதான் ஒன்றுமில்லே என்கிறேன், எதற்காக இப்படிப் பதட்டம்?

நாக :—என்ன ஒன்றுமில்லே என்றுதான் கேட்கிறேன்!

மீ :—(குனிந்து அவன் முகத்தைத் தடவ முயன்று) ஏன் திடீரென்று இப்படிக் கோபம்?

நாக :—(அவள் கையை தூரத் தள்ளி எழுந்து உட்கார்ந்து கொண்டு) எதற்காக இவ்வளவு தாமதம் என்றாய்? என்னமோ பயந்து போய்விட்டேன் என்றாயே; எதற்காக? சொல்!

மீ :—ஏதாவது இருந்தால்லவா சொல்ல! நீங்கள் திடீரென்று பேரைச் சொல்லிக் கூப்பிட்டது எனக்குத் தூக்கி வாரிப்போட்டு விட்டது.

நாக :—பொய் சொல்லுகிறாய்! பொய் சொல்லாதே என்று எவ்வளவு தரம் சொல்லுகிறது உனக்கு?

மீ:—பொய் ஒன்றுமில்லை. பொய் எதற்காகச் சொல்லணும் இப்பொழுது?

நாக:—உன் தர்க்கம் எல்லாம் வேண்டாம். உண்மையைச் சொல் இப்பொழுது!

மீ:—என்ன ஏதாவது பைத்தியம் பிடித்து விட்டதா? என்ன வந்து விட்டது இப்பொழுது, இப்படிச் சீறுகிறீர்கள்?

நாக:—உன் பிடிவாதத்தை நீ விடமாட்டாயே! உண்மையைச் சொன்னால் என்ன வந்து விட்டது கேடு உனக்கு?

மீ:—(அலுத்துக் கொண்டு) நான் எப்படிச் சொன்னாலும் தான் நீங்கள் நம்புகிற வழக்கமே கிடையாதே! தெரியாத சமாசாரமா என்ன அது?

நாக:—(கோபமாக) சொல்லுகிறாயா இல்லையா?

மீ:—(தீர்மானமாக) சொல்லுவதற்கு ஏதாவது இருந்தாலல்லவா சொல்ல!

நாக:—ஓகோ, எவ்வளவு தைரியம் வந்துவிட்டது உனக்கு?

மீ:—என்னத்தைச் சொல்லிவிட்டேன் 'தைரியமாக?'

நாக:—நீ வழிக்கு வந்துவிட்டாய் என்றல்லவா நினைத்தேன்!

மீ:—என்ன செய்து கொண்டிருந்தேன், வழிக்குவர?

நாக:—இந்தா, மேல் மேல் வார்த்தையை விட்டு எனக்குக் கோபம் வரச் செய்யாதே!

மீ:—தப்பிதமாக நான் என்ன சொல்லுகிறேன், சொல்லுங்கள்.

நாக:—பொய் சொல்லுகிறாயே, போதாதா?

மீ:—திரும்பவும் நீங்கள் சொன்னதைத்தான் சொல்லுகிறீர்கள். எது பொய்?

நாக:—நீ சொன்ன சமாதானம்.

மீ:—நிஜம் எது என்கிறீர்கள்?

நாக:—எனக்கெப்படித் தெரியும் உன் மனதில் இருப்பது?

மீ:—நான்தான் ஒன்றும் இல்லை என்கிறேனே, நம்பக்கூடாதா?

நாக:—நம்பும்படியாக இருந்தாலல்லவா நம்பலாம்!

மீ:—நம்புவதற்கு எப்படி இருக்க வேண்டும்?

நாக:—(சீறி எழுந்து) உன் மூஞ்சியைப் போல் இருக்க வேண்டும்.

மீ:—இதோ பாருங்கள். நான் சொல்வதை ஒரு நிமிஷம் கேளுங்கள். நான் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்த பொழுது நீங்கள் திடீரென்று என்னை மெதுவாகக் கூப்பிட்டது எனக்குத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது. அதை சமாளித்துக் கொள்ளத்தான் வேடிக்கையாக "இவ்வளவுதானா?" என்றேன். நீங்கள் அவ்வளவு உருக்கமாகப் பேசினபொழுது நான் வேடிக்கை செய்தது உங்களுக்குத்

கோபம் வந்துவிட்டது. நான் ஏதோ மறைத்துப் பேசுகிறேன் என்று குதிக்கிறீர்கள்.

நாக :—(தலையணையில் சாய்ந்துகொண்டு) நிஜமாகவா?

மீ :—(நெருங்கி) நிஜம்மா!

நாக :—இதை முதல்லேயே சொல்லப்படாதா?

மீ :—கேட்டாத்தானே! துர்வாசத்தைக் கட்டிக்கொண்டு, மக கஷ்டமாயிருக்கு.

நாக :—இந்தா, கிடக்கு, இங்கே வா!

மீ :—எது கிடக்கு?

நாக :—(அசடுதட்டி) இதானே—

மீ :—(சந்தோஷத்துடன் அருகில் வந்து கொண்டே) எதானே?

ஓட்டல்காரர் :—(வேலைக்கு வந்தவரிடம்) இதற்கு முன்பு எங்கெங்கே வேலை செய்தீர்?

வந்தவர் :—ராமா கேப், பீமா கேப், கிஷ்கிந்தா கேப், இங்கெல்லாம் வேலை செய்திருக்கிறேன்.

ஓட்டல்காரர் :—ஓஹோ! சரிதான், பெரிய கேப்மாரி போல் இருக்கிறது!

காதலுக்காக!

சுசீலா ஸாக்ஸேனு

அழகான வெண் குதிரை மீதேறி வெளியே உலாவச் சென்றுகொண்டிருந்தாள் ரஸியா. குதிரை நடை போட்டு மெள்ளச் சென்றுகொண்டிருந்தது.

திடீரென்று ஒரு குதிரை அதன் பக்கத்தில் வரும் சப்தம் கேட்டது. ரஸியா திரும்பிப் பார்த்தாள். கோபத்தால் அவள் முகம் சிவந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டாள். பின்னல் வந்த குதிரை அருகில் வந்து நின்றது.

"இந்த சமயத்தில் இங்கு வர என்ன அவசிய மேற்பட்டது உனக்கு?" என்றுள் ரஸியா. அவள் குரல் நடுங்கியது. "என்னுடன் எப்பொழுதும் இம்மாதிரி கூடவே சுற்றுவதற்கு உனக்கு எப்படி தைரியம் வந்தது? நான் தனிமையாக இருக்கும்போது ஏன் வந்தாய்?" என்று சொல்லி குதிரையை விடலானுள்.

பிரோஜ் ஆச்சரியம் அடைந்தவனுய் ரஸியாவின் பக்கமே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் காதுகளை அவன் நம்பவில்லை. ரஸியா இம்மாதிரி சொல்வாளென்று அவனுல் கற்பனைகூட செய்ய முடியவில்லை. அவளைப் போலவே கோபமாய் பதில் சொல்ல எண்ணினுன்.

ஆனுலும் சட்டென்று தன்னை சமாளித்துக்கொண்டு, "கோபிக்காதே! ரஸியா! உன்னை அதிக நேரம் தாமதப்படுத்த மாட்டேன். நான் சொல்ல வேண்டியதை இரண்டொரு வார்த்தையில் சொல்லிவிட்டு சீக்கிரம் போய்விடுகிறேன். நான் இன்று உன்னிடம் கடைசி தடவையாக அந்த கேள்விக்குப் பதில் கேட்க வந்திருக்கிறேன்! ரஸியா, நீ எப்பொழுது என்னுடையவளாகப் போகிருய்?" என்றுன் பிரோஜ். அவன் குரல் நடுங்கியது. ஆயினும் தன்னை சாந்தமாக்கிக்கொண்டான்.

. ரஸியா பேசாமல் குதிரையை விட்டுக் கீழே இறங்கினுள். பிரோஜும் கீழே இறங்கினுன்.

"வீணுக பைத்தியமடையாதே பிரோஜ்! இது புதுக் கேள்வியல்ல. இதற்கு நான் முன்பே பல தடவைகளில் பதிலளித்துவிட்டேன். 'ஆமாம்!' என்று சொல்ல என்னுல் முடியாது. நான் உன்னை சந்தேகத்தில் ஆழ்த்த விரும்பவில்லை. தெளிவாகச் சொல்லி விடுகிறேன் பிரோஜ்! நான் உன்னை மணக்க முடியாது. இதுவரை நண்பர்களாக இருந்தோம். இனியும் அவ்வாறே இருப்போம்" என்றுள்.

அவளுடைய வார்த்தைகளை அர்த்தம் செய்துகொள்ளாதவனை போல் பிரோஜ் தலைநிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான். சிறிது மௌனமாக இருந்து பிறகு, "ரஸியா! பழைய விஷயத்தை இவ்வளவு சீக்கிரமாக மறப்பது யாராலும் முடியாத காரியம். என் ஹிருதயத்தில் அது பதிந்து விட்டது. அதை இனி அகற்ற முடியாது. அதே போல் உன்னாலும் அதை அகற்ற முடியாதென்றே எண்ணுகிறேன். உன்னையே நீ ஏமாற்றிக்கொள்ள விரும்பாதே. அன்று ஷா உயிரோடு இருக்கும்போது நாம் ஒருவருக் கொருவர்......" என்று இழுத்தான்.

ரஸியா திடுக்கிட்டு நிமிர்ந்து, பிரோஜை இடை மறித்து சொன்னாள்: "எனக்கு அதெல்லாம் நன்றாக ஞாபகம் இருக்கிறது. நீ அதை ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை. நான் உன்னை மணக்கவேண்டியவள் தான். ஆனால் இப்பொழுது 'ஷா' இல்லை. வெகு விஷயங்கள் மாறிவிட்டன.

சிம்மாசனத்தில் இன்று அவர் இல்லை. நான் இன்று சுல்தானா என்பதையும் மறந்து விடாதே! இந்த பழைய விஷயங்களைப் பேசுவதில் என்ன பயன்? குழந்தைகளைப்போல் நீ அந்தப் பேச்சைப் பேசுவது உனக்கு நன்றாக இல்லை. எனக்கு ரொம்ப வேலை இருக்கிறது. இதே மாதிரி நீ இனி பேசுவதானால் நாளையி லிருந்து தர்பாருக்குக் கூட வாராதே! நீ இல்லாமல் ஒன்றும் நடவாது என்று நினைத்துக்கொண்டிருந்தாயானல் அது குற்றமாகும். எனக்கு உன்னுடைய ஒத்தாசை துளிக்கூட அவசியமில்லை" என்று பேசி நிறுத்தினாள். அவள் உடல் கோபத்தினால் நடுங்கியது. பதில் எதிர் பாராமலே குதிரை மீதேறிச் சென்றாள்.

பிரோஜ் அங்கேயே நின்று கொண்டிருந்தான். ரஸியா கண்களுக்கு மறையும் வரை பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்குப் பழைய விஷயங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் நினைவுக்கு வந்தன.

* * *

'அப்பொழுது ரஸியாவின் தந்தை உயிரோடு இருந்தார். பிரோஜ் ரஸியாவோடு விளையாடிக்கொண்டிருந்தான். தூரத்தில் 'ஷா' உட்கார்ந்துகொண்டு இருவர் விளையாடுவதையும் சுவாரஸ்யமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். ரஸியாவை பிரோஜுக்குக் கலியாணம் செய்துகொடுக்க வேண்டுமென்று அவருக்கு ரொம்ப விருப்பம். ஆனால் அவர் இறந்ததும் எல்லாம் மாறிவிட்டது. அந்த தினங்கள் வெறும் கனவாக மாறிவிட்டன. ரஸியாவும் மாறிவிட்டாள். இனி அதைப் பற்றி நினைப்பதில் என்ன பயன்? ரஸியா எங்கேயாவது இருக்கட்டும்! எப்படியாவது இருக்கட்டும்! அவனுக்கென்ன? அவன் கனவிலிருந்து விழித்துக் கொண்டான். குதிரையிலேறி மெள்ள மெள்ளச் செல்லலானான்.

* * *

இது நடந்து சில காலம் ஆயிற்று. ரஸியா ராஜ்ய பரிபாலனத்தில் ரொம்ப மும்முரமாய் ஈடுபட்டு இருந்தாள். பழயவை

களை சீர்திருத்திப் புதிய சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதிலேயே அவளுடைய காலம் பூராவும் கழிந்து வந்தது. ஆயினும் சிம்மாதனத்தில் அவள் இருக்கும் நிலைமை ரொம்ப ஆபத்தாக இருந்தது. தர்பாரில் இருந்த சிலரே அவளுக்கு எதிராக இருந்தனர். அவர்களுடைய எண்ணம், எப்படியாவது ரஸியாவை சிம்மாசனத்திலிருந்து விரட்டவேண்டுமென்பதுதான். ரஸியா நாற்புறமும் துரோகிகளால் சூழப்பட்டிருந்தாள். ராஜ்யத்தில் மூலைக்கு மூலை கலகங்கள் நடந்து வந்தன. கலகத்தை அடக்க நம்பிக்கையாக எந்த சேனைபதியையும் அவளால் அனுப்ப முடியவில்லை.

இந்த துரோகிகளில் பிரோஜின் தந்தையும் ஒருவர். இந்த சமயத்தில் தந்தைக்கும் மகனுக்கும் பேச்சு வார்த்தை நடந்தது. "ரஸியாவைப்பற்றி உனக்கென்ன அவ்வளவு அக்கரை?" என்றார் பிரோஜின் தந்தை.

"தங்களுக்கு இந்தக் கேள்வியைக் கேட்க வெட்கமாக இல்லையா? ரஸியா எனக்கும், உங்களுக்கும், இருவருக்கும் சுல்தானு. அவளுடைய தர்பாரிலிருந்து கொண்டே தாங்கள் அவளுக்கு விரோதமாக இம்மாதிரி சூழ்ச்சி செய்வது கொஞ்சமும் சரியல்ல. அவளுடைய சோற்றைத் தின்று அவளுக்குத் துரோகம் செய்வது ரொம்ப நன்றாக இருக்கிறது! தாங்கள் முதல் முதல் ஹிந்துஸ்தானத்திற்கு வந்தது ஞாபகம் இருக்கிறதா? தங்களை இவ்வளவு உயர்ந்த பதவியில் வைத்தது யார் என்பது தெரியுமா? ரஸியா அல்லவா? ஷாவின் கோபத்தினால் தாங்கள் சிறைப்பட்டுக் கிடந்தபோது தங்களை வெளியே விட்டது யார், என்பதை மறந்துவிட்டீர்களா? அவள் செய்த உபகாரத்திற்கு வெகுமதியா இது! இம்மாதிரிச் சொல்லத் தங்களுக்கு வெட்கமாக இல்லையா?" என்றான். பிரோஜின் உடல் நடுங்கியது. அவன் முகம் சிவந்தது. அவன் என்னென்ன சொன்னானோ? அவனுக்கே தெரியாது.

அவன் தந்தை இடைமறித்து, "பிரோஜ்! உனக்கென்ன பைத்தியமா? இந்த மாதிரி சரியான தருணம் கிடைத்திருக்கும்போது யாராவது அதை நழுவ விடுவார்களா? அப்படி விட்டால் அவர்கள் முட்டாள்கள் தான்...ரஸியா அல்துனியாவின் கலகத்தை அடக்கச் சென்றிருக்கிறாள். சிம்மாசனம் காலியாக இருக்கிறது. ஏதோ ஒரு சிலரைத் தவிர மற்ற யாவரும் நமது பக்கம் தான். ரஸியாவை உயிரோடு திரும்ப விடுதல் பெரிய முட்டாள்தனமாகும். தேசம் ஒரு பெண்ணின் கையில் இருப்பதா? ஏன், இதற்கு யோக்கியமான புருஷன் வேறு யாருமில்லையா?" என்றார் பிரோஜின் தந்தை.

பிரோஜினால் அதற்குமேல் பொறுக்க முடியவில்லை. அவன் கோபத்துடன், "செய்யுங்கள்! தங்களால் என்னென்ன செய்ய முடியுமோ செய்யுங்கள்! ஆனால் நான் ஒன்று சொல்லுகிறேன்! யாராவது ரஸியாவின் மேல் கை வைத்தார்கள் என்று தெரிந்தால்...பிறகு என்ன ஆகு

மென்று தெரியாது! நான் உயிருள்ளவரை யாரும் அவளை ஒன்றும் செய்ய முடியாது" என்றான் பிரோஜ் ஆத்திரமாக.

"மகா ராஜவிச்வாஸிதான் நீ! இருக்கட்டும் இதைக் கொஞ்சம் கேள்! ரஸியா உனக்கு என்னென்ன செய்தாள்? அதைக் கொஞ்சம் சொல்லேன்! பழைய சிநேகிதத்தை எல்லாம் மறந்து உன்னை அவள் திரஸ்கரித்து விடவில்லையா? கலியாண விஷயத்தை நீ பிரஸ்தாபித்த போது அவள் சொன்ன பதிலைக் கேட்டும் இன்னும் உனக்கு ஆசை விடவில்லையே! உன் உதவி துளிக்கூட அவசியமில்லை என்று அவள் சொன்னதை மறந்து விட்டாயா? என் பேச்சைக் கேள். இதுதான் சமயம். பழி வாங்கத் தயாராக இரு" என்றார் தந்தை மீண்டும். "எனக்குத் தாங்கள் புத்திமதி ஒன்றும் சொல்லவேண்டாம். நான் பழி வாங்க வேண்டுமானால் எனக்குத் தெரியும் சமயம். எனக்குத் தங்கள் யோசனை தேவையே இல்லை" என்று உறுதியாக சொன்ன போது, அவன் உடல் ஆவேசத்தால் துடித்தது.

அவனுடைய நிலைமையைப் பார்த்த அவன் தந்தை வெளியே சென்றுகொண்டே, "நல்லது! இன்றிருந்து உனக்கும் எனக்

கும் யாதொரு சம்பந்தமு மில்லை. உன்னுடைய முட்டாள் தனத்தால் ஏதாவது ஆபத்து வந்தால் பின்னால் என்மீது வருத்தாதே!" என்றார்.

தந்தை சென்றதும் பிரோஜ் மனமொடிந்து கட்டிலில் விழுந்தான். கண்ணீரை அவனால் அடக்க முடியவில்லை; அவன் மனம் பலவிதமாக எண்ணியது. "ரஸியாவின் முன் எனக்கு யாதொரு மதிப்பும் இல்லை. அவள் என்னை லவலேசமும் சட்டை பண்ணவில்லை. ஆயினும் ரஸியா! என்னால் அம்மாதிரி செய்ய முடியாது.

நீ எது செய்தாலும் சரி! என்னைப் பொறுத்தவரை அன்று என்னுடன் விளையாடின அதே ரஸியாதான் நீ!

இன்று நீ துரோகிகளால் சூழப்பட்டிருக்கிறாய்! அவர்கள் உன்னைச் சதி செய்து கொல்ல விரும்புகின்றனர். ஆனால் என் உயிர் இருக்கும் வரை அம்மாதிரி நடக்க விடமாட்டேன். உன்னை இந்த ஆபத்திலிருந்து காப்பேன். இதில் என் உயிரே போயினும் சரி! உனக்கில்லாத உயிர் வேறு யாருக்குப் பிரயோஜனப் படப் போகிறது?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

* * *

டில்லி நகரம் சேனைகளால் நிரம்பி இருந்தது. தனவந்தரும் பெரிய மனிதர்களும் வீட்டை விட்டு வெளியே கிளம்பவில்லை. சிம்மாசனத்தில் ரஸியாவின் உத்திரவின் மேல் அவள் தம்பியை அமர்த்தி இருந்தார்கள்.

ராஜ்ய காரியங்களெல்லாம் தாறுமாறாகக் கிடந்தன. நகரத்தின் எல்லையில் சண்டை நடந்து வந்தது. ரஸியா நகரத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்தாள். யுத்தத்தில் அவளுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

தோல்வியுடன் அவள் நகரம் திரும்பியபோது பிரோஜும் அவன் தந்தையும் எங்கோ சென்று விட்டார்கள் என்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்.

இரண்டாவது தினம். நகரத்தின் வெளியில் ஒரு மனித சஞ்சாரமற்ற நிசப்தமான இடத்தில் மரத்தடியில் ரஸியா வருத்தத்துடன் உட்கார்ந்து தன்னை மறந்து யோசனையில் ஆழ்ந்திருந்தாள். ஆனால் இதென்ன? எங்கிருந்தோ பளபளவென்று ஒரு கத்தி அவள் பிடரிக்கு நேரே தோன்றியது. இன்னும் ஒரு நிமிஷம்தான். அது ரஸியாவின் உடலில் பாய்ந்து விடும்.

அதற்குள் யாரோ ஒரு வீரன் ரஸியாவுக்கும் கத்திக்கும் இடையில் திடீரெனத் தோன்றினான். கத்தி அவன் உடலில் பாய்ந்தது. ஆவென்றலறிக் கீழே விழுந்தான் பிரோஜ்.

"பிரோஜ்! இதென்ன?" என்று அலறினாள் ரஸியா!

அந்த வீரனின் தலையை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டாள் ரஸியா. கண்களில் நீர் ததும்ப கீழே குனிந்தாள்.

அவள் உள்ளம் துடித்தது. "பிரோஜ்! எனக்காக உன் உயிரைக் கொடுத்தாய்! உன்னை அவர் இந்த ஆபத்திற்குள்ளாக்கினர். என்னால் உன்னைக் காக்க முடிய

வில்லை. பிரோஜ்! என்னால் சேர்ந்து விட்டது இந்தப் பிழை! என்னை மன்னித்து விடு" என்று கதறி அழலானாள்.

பிரோஜ் பாதி திறந்த கண்களுடன் ரஸியாவின் முகத்தைப் பார்த்தான். அவன் முகம் உற்சாகக்குறி காட்டியது.

"ரஸியா! என்னைப்பார்! நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்கிறேன். என் வாழ்க்கையில் கிடைக்காத இன்பம் உயிர் போகும் தருவாயில் இன்று கிடைத்திருக்கிறது. என் அழகி ராய்! என்னைவிட பாக்கியசாலி யாருமே இருக்க முடியாது." அதற்குமேல் அவன் உதடுகள் அசைந்தனவே யொழிய சப்தம் வரவில்லை.

ரஸியா அவன் மேல் சாய்ந்தாள். பிரோஜ் கண்களைத் திறந்து சிரிக்க முயன்றான். "ரஸியா!" என்றான் மெது வாக.

அவ்வள்வுதான்! எல்லாம் ஒரே நிசப்தமாகி விட்டது. ரஸியா அழலானாள். இயற்கை மௌனம் சாதித்தது, ரஸியாவுக்காகத் தானும் துக்கப்படுவதைப் போல் இருந்தது.

Coffee
Ours for Quality

Raw, Roast or Ground
Available in several
grades to suit all.

GANESH & CO.
MADRAS.

Retail Branch:
285, CHINA BAZAR ROAD.

என்ன சொல்லுகிறார்கள்?

பாரத தேவி என்னும் தமிழ் வாரப் பத்திரிகை மிகத் திறமை வாய்ந்த ஆசிரியர் வ. ரா. என்பவரால் சென்னையில் நடத்தப்படுகிறது. இதில் எல்லாத் துறைகளிலும் ருசிகரமான கட்டுரைகள் வெளிவருகின்றன. ஸ்ரீ பி. வி. சுப்பிரமணியம், சி. சு. செல்லப்பா என்பவர்கள் இதில் தொடர்ந்து எழுதுகிறார்கள். கலை, அரசியல், விஞ்ஞானம்—இந்த விஷயங்கள் எளிய நடையில் மிக அழகாகக் கூறப்படுகின்றன. இந்த நெருக்கடியான காலத்தில் நூறு பக்கங்களுக்கு மேற்கொண்ட இத்தகைய ஒரு பத்திரிகையை நடத்துவது அசாத்தியமான காரியந்தான். ஆகையால் இதைத் திறமையுடன் நிறைவேற்றும் ஆசிரியர் நம் பாராட்டுக்கு உரியவர். உயர்தரக் கட்டுரைகள், அழகிய சித்திரங்கள் நிறைந்துள்ள இப் பத்திரிகைக்கு வருட சந்தாவாகிய ரூ. 6-0-0 அதிகமல்ல என்பது நம் அபிப்பிராயம்.

—லாகூர் ட்ரிப்யூன்.

நட்சத்திர பலா பலன்கள்

(1) அஸ்வனி-மகம்-மூலம்.

17-9-39 காலை 8-15 முதல்
18-9-39 காலை 7-44 வரை.

தொழிலில் ஆலஸ்யமாய் காரியம் முடிதல், முன் சென்ற காரியங்களைக் குறித்து சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் கவலை, சேதியால் மனச் சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகள் மனஸ்தாபம், பொதுவில் சமப் பலனுண்டு, நூதன நல்ல காரியம் தொடங்கின் பலன் தராது.

18-9-39 காலை 7-44 முதல்
19-9-39 காலை 8-0 வரை.

இந்நாள் மிக நற்பலனைத் தரும், இஷ்டர்களால் மனமகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தரத்தக்க நூதன தொழில் எதைத் தொடரினும் வெற்றி தரும். பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

19-9-39 காலை 8-0 முதல்
20-9-39 காலை 9-3 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய் தொழில் நடக்கும், இஷ்ட காரியாதிகள் தடைப்படும், லாபமில்லாத காரியங்களில் பிறர் உதவியைப் பெற எத்தனிக்கின் பலன் தரும், பொதுவில் சமப்பலன் உண்டு.

20-9-39 காலை 9-3 முதல்
21-9-39 காலை 10-46 வரை.

மனக் கிலேசம், அலைச்சல், தொழில் அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய் செய்யின் நலம்.

21-9-39 மாலை 10-46 முதல்
22-9-39 பகல் 1-2 வரை.

குடும்ப சுகம், தொழிலில் தக்க லாபம், காரிய சித்தி, லாபந்தரத்தக்க காரியம் எது செய்யினும் நஷ்டம் வராது.

22-9-39 பகல் 1-2 முதல்
23-9-39 பகல் 3-41 வரை.

இந்நாளில் ஆயாசம், அலைச்சல், குடும்ப சஞ்சலம், பீதி, தனமுடக்கம் முதலிய கஷ்டப் பலன்கள் தரக்கூடியதாதலின் முக்கிய பலன் தரக்கூடிய காரியங்களைத் தொடரின் பலன் தராது, எக்காரியத்தையும் யோசித்துச் செய்தல் நலம்.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

மன உல்லாசம், நற்சேதி கேட்டல், இத்தினத்தில் சுகந்தாத்தக்க எக் காரியம் தொடரினும் எதிர்பார்த்த அளவில் பலன் தராது, ஆயினும் உத்தமமான தினமாம்.

(2) பரணி-பூரம்-பூராடம்

17-9-39 காலை 8-15 முதல்
18-9-39 காலை 7-44 வரை.

சுகம் சர்வ காரிய ஜெயம், அனுமத்து லாபம் அடைய எத்தனிக்கின் பலன் தரும். பெரியோர்கள் பேட்டி காணின் நலந்தரும், இந்நாள் மிக உன்னதமானதென்று அறியலாம்.

18-9-39 காலை 7-44 முதல்
19-9-39 காலை 8-0 வரை.

தொழிலில் ஆலஸ்யமாய் காரியம் முடிதல், முன் சென்ற காரியங்களைக் குறித்து சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் கவலை, சேதியால் மனச் சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகள் மனஸ்தாபம், பொதுவில் சமப்பலன் உண்டு, நூதன நல்ல காரியம் தொடங்கின் பலன் தராது.

19-9-39 காலை 8-0 முதல்
20-9-39 காலை 9-3 வரை.

இந்நாள் மிக நற்பலனைத் தரும், இஷ்டர்களால் மனமகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தாத்தக்க நூதன தொழில் எதைத் தொடரினும் வெற்றி தரும், பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெற எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயந்தரும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

20-9-39 காலை 9-3 முதல்
21-9-39 காலை 10-46 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய் தொழில் நடக்கும், இஷ்டகாரியாதிகள் தடைப்படும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்க முற்றலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடமிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும், பொதுவில் சமப் பலன்.

21-9-39 காலை 10-46 முதல்
22-9-39 பகல் 1-2 வரை.

மனக்கிலேசம், அலைச்சல், தொழிலில் அறிந்து காரியங்களைச் செய்யின் நலம்.

22-9-39 பகல் 1-2 முதல்
23-9-39 பகல் 3-41 வரை.

குடும்ப சுகம், தொழிலில் தக்க லாபம், காரிய சித்தி, லாபந்தாத்தக்க காரியம் எது செய்யினும் நஷ்டம் வாராது.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

இந்நாள் ஆயாசம் அலைச்சல் குடும்ப சஞ்சலம் பீதி, தன்முடக்கம் முதலிய கஷ்டபலனைத் தரக்கூடியதாதலின் முக்கிய பலன் தரத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தராது, எக்காரியத்தையும் யோசித்துச் செய்தல் நலமாம்.

(3) கார்த்திகை-உத்திரம்-உத்திராடம்.

17-9-39 காலை 8-15 முதல்
18-9-39 காலை 7-44 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகும், பழமையான தொழிலில் க்ஷமநலம், புத்திரர்களால் மனக்கலக்கம் அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச் சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்தியங்களில் சிறிது அலைச்சலுமுண்டாகும், சமப்பலன்.

18-9-39 காலை 7-44 முதல்
19-9-39 காலை 8-0 வரை.

சுகம், சர்வ காரிய ஜெயம். அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கின் பலன் தரும், பெரியோரின் பேட்டி காணின் நலன் தரும், இந்நாள் மிக உன்னதமானதென்று அறியவும்.

19-9-39 காலை 8-0 முதல்
20-9-39 காலை 9-3 வரை.

தொழிலில் ஆலஸ்யமாய்க் காரிய முடிதல், முன்சென்ற காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் கவலை, சேதியால் மனச்சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகள் மனஸ்தாபம், பொதுவில் சமப் பலன் உண்டு, நூதன நல்ல காரியம் தொடங்கின் பலன் தராது.

20-9-39 காலை 9-3 முதல்
21-9-39 காலை 10-46 வரை.

இந்நாள் மிக நற்பலனைத் தரும், இஷ்டர்களால் மனமகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தரத்தக்க நூதன தொழில் எதைத் தொடரினும் வெற்றி தரும், பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

21-9-39 காலை 10-46 முதல்
22-9-39 பகல் 1-2 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய் தொழில் நடக்கும், இஷ்ட காரியாதிகள் தடைப்படும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்கமும் உற்றதலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பலன் தரும், பொதுவில் சமப்பலன்.

22-9-39 பகல் 1-2 முதல்
23-9-39 பகல் 3-41 வரை.

மனக்கிலேசம், அலைச்சல், தொழிலில் அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்யின் நலம்.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

குடும்ப சுகம், தொழிலில் தக்க லாபம், காரிய சித்தி, லாபம் தாத் தக்க காரியம் எது செய்யினும் நஷ்டம் வராது.

(4) ரோகிணி-அஸ்தம்-திருவோணம்.

17-9-39 காலை 8-15 முதல்
18-9-39 காலை 7-44 வரை.

மன உல்லாசம், நற்சேதி கேட்டல், இத்தினத்தில் சுகந்தாத்தக்க எக்காரியம் தொடரினும் பலிதந் தரும், நூதன லாபந்தாத்தக்க காரியம் எது தொடரினும் எதிர் பார்த்த அளவில் பலன் தராது, ஆயினும் உத்தமமான தினமாம்.

18-9-39 காலை 7-44 முதல்
19-9-39 காலை 8-0 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகும், பழமையான தொழிலில் சமநலம், புத்திரர்களால் மனக்கலக்கம் அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச் சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதி மத்தியங்களில் சிறிது அலைச்சலுமுண்டாகும், சமப்பலன்.

19-9-39 காலை 8-0 முதல்
20-9-39 காலை 9-3 வரை.

சுகம், சர்வ காரிய ஜெயம், அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கின் பலன் தரும், பெரியோர்கள் பேட்டி காணின் நலந்தரும், இந்நாள் மகா உன்னதமான தென்றறியவும்.

20-9-39 காலை 9-3 முதல்
21-9-39 காலை 10-46 வரை.

தொழிலில் ஆலஸ்யமாய் காரியம் முடிதல், முன் சென்ற காரியங்களை குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் கவலை, சேதியால் மனச்சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகள் மனஸ்தாபம், பொதுவில் சமப்பலனுண்டு, நூதன நல்ல காரியம் தொடரின் பலன் தராது.

21-9-39 காலை 10-46 முதல்
22-9-39 பகல் 1-2 வரை.

இந்நாள் மிக நற்பலனைத் தரும், இஷ்டர்களால் மனமகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தாத் தக்க நூதன தொழில் எதைத் தொடரினும் வெற்றி தரும், பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

22-9-39 பகல் 1-2 முதல்
23-9-39 காலை 3-41 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய்த் தொழில் நடக்கும், இஷ்ட காரியாதிகள் தடைப்படும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்கமும் உற்றகலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும், பொதுவில் சமப்பலன்.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

மனக்கிலேசம், அலைச்சல், தொழிலில் அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய்ச் செய்யின் நலம்.

(5) மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம்.

17-9-39 காலை 8-15 முதல்
18-9-39 காலை 7-44 வரை.

இந்நாள் ஆயாசம், அலைச்சல், குடும்ப சஞ்சலம், பீதி, தனமுடக்கம் முதலிய கஷ்டப் பலன்களைத் தரக்கூடியதாதலின் முக்கிய பலன் தரத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தராது, எக்காரியத்தையும் யோசித்துச் செய்தல் நலம்.

18-9-39 காலை 7-44 முதல்
19-9-39 காலை 8-0 வரை.

மன உல்லாசம், நற்சேதி கேட்டல், இத்தினத்தில் சுகந்தரத்தக்க எக்காரியம் செய்யினும் பலன் தரும், ஸ்ரீதன லாபந் தரத்தக்க காரியம் எது தொடரினும் எதிர்பார்த்த அளவில் பலன் தராது, ஆயினும் உத்தமமான தினமாம்.

19-9-39 காலை 8-0 முதல்
20-9-39 காலை 9-3 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகும், பழமையான தொழிலில் சமநலம், புத்திரர்களால் மனக்கலக்கம் அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச் சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்தியங்களில் சிறிது அலைச்சலுமுண்டாகும்.

20-9-39 காலை 9-3 முதல்
21-9-39 காலை 10-46 வரை.

சுகம், சர்வ காரிய ஜெயம், அனுமத்து லாபங்களடைய எத்தனிக்கின் பலன் தரும், பெரியோரின் பேட்டி காணின் நலந்தரும், இந்நாள் மிக உன்னதமான தென்றறியவும்.

21-9-39 காலை 10-46 முதல்
22-9-39 பகல் 1-2 வரை.

தொழிலில் ஆலஸ்யமாய் காரியம் முடிதல், முன் சென்ற காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் கவலை, சேதியால் மனச்சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகள் மனஸ்தாபம், பொதுவில் சமப்பலன் உண்டு, நூதன நல்ல காரியம் தொடரின் பலன் தராது.

22-9-39 பகல் 1-2 முதல்
23-9-39 பகல் 3-41 வரை.

இந்நாள் மிக நற்பலனைத் தரும், இஷ்டர்களால் மனமகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தரத்தக்க நூதன தொழில் எதைத் தொடரினும் வெற்றி தரும், பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

23-9-39 பகல் 3-41 முதல்
25-9-39 மாலை 6-35 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய் தொழில் நடக்கும், இஷ்ட காரியாதிகள் தடைபடும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்கமும் உற்றகலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும், பொதுவில் சமப்பலன்.

(6) திருவாதிரை-சுவாதி-சதயம்.

17-9-39 காலை 8-15 முதல்
18-9-39 காலை 7-44 வரை.

குடும்ப சுகம், தொழிலில் தக்க லாபம், காரிய சித்தி, லாபந்தரத்தக்க காரியம் எது செய்யினும் நஷ்டம் வராது.

18-9-39 காலை 744 முதல்
19-9-39 காலை 8-0 வரை.

இந்நாள் ஆயாசம், அலைச்சல், குடும்ப சஞ்சலம், பீதி, தனமுடக்கம் முதலிய கஷ்டப் பலன்களைத் தரக்கூடிய தாதலின் முக்கிய பலன் தரத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தராது, எக்காரியத்தையும் யோசித்துச் செய்தல் நலம்.

19-9-39 காலை 8-0 முதல்
20-9-39 காலை 9-3 வரை

மன உல்லாசம், நற்சேதி கேட்டல், இத்தினத்தில் சுகந்தரத்தக்க எக்காரியம் தொடரினும் பலிதந்தரும், நூதன லாபந்தரத்தக்க காரியம் எது தொடரினும் எதிர்பார்த்த அளவில் பலன் தராது, ஆயினும் உத்தமமான தினமாம்.

20-9-39 காலை 9-3 முதல்.
21-9-39 காலை 10-46 வரை

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகும், பழமையான தொழிலில் சமநலன். புத்திரர்களால் மனக்கலக்கம் அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச் சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்தியங்களில் சிறிது அலேச்சலு முண்டாகும், சமப்பலன்.

21-9-39 காலை 10-46 முதல்
22-9-39 பகல் 1-2 வரை.

சுகம், சர்வ காரிய ஜெயம், அனுமத்து லாபங்கள் அடைய எத்தனிக் கினும் பலன் தரும், பெரியோரின் பேட்டி காணின் நலந்தரும், இந்நாள் மிக உன்னதமானதென் றறியவும்.

22-9-39 பகல் 1-2 முதல்
23-9-39 பகல் 3-41 வரை.

தொழிலில் ஆலஸ்யமாய் காரியம் முடிதல், முன்சென்ற காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் கவலை, சேதியால் மனச்சங் டம், நேசர் அல்லது அதிகாரிகள் மனஸ்தாபம், பொதுவில் சமப்பலன் உண்டு, நூதன நல்ல காரியம் தொடரின் பலன் தராது.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

இந்நாள் மிக நற்பலன் தரும், இஷ்டர்களால் மனமகிழ்ச்சி, நல்லே ரிணக்கம், பலன் தாத்தக்க நூதன தொழில் எதைத் தொடரினும் வெற் தரும், பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உ தமமாம்.

(7) புனர்ப்பூசம்-விசாகம்-பூரட்டாதி.

17-9-39 காலை 8-15 முதல்
18-9-39 காலை 7-44 வரை.

மனக்கிலேசம், அலேச்சல், தொழிலில் அறிந்து காரியங்களைச் சா துர் மாய் செய்யின் நலம்.

18-9-39 காலை 7-44 முதல்
19-9-39 காலை 8-0 வரை.

குடும்ப சுகம், தொழிலில் தக்க லாபம், காரிய சித்தி, லாபந்தாத்த காரியம் எது செய்யினும் நஷ்டம் வராது.

19-9-39 காலை 8-0 முதல்
20-9-39 காலை 9-3 வரை.

இந்நாள் ஆயாசம், அலேச்சல், குடும்ப சஞ்சலம், பீதி, தனமுடக்க முதலிய கஷ்டப் பலன்களைத் தரக்கூடியதாதலின் முக்கிய பலன் த தக்க காரியங்களைத் தொடரின் பலன் தராது, எக்காரியத்தைய யோசித்துச் செய்தல் நலம்.

20-9-39 காலை 9-3 முதல்
21-9-39 காலை 10-46 வரை.

மன உல்லாசம், நற்சேதி கேட்டல், இத்தினத்தில் சுகந்தரத்தக்க காரியம் எது தொடரினும் பலிதந்தரும், நூதன லாபந் தரத்தக்க காரியம் தொடரின் எதிர்பார்த்த அளவில் பலன் தராது, ஆயினும் இந்நாள் உத்தமமானது.

21-9-39 காலை 10-46 முதல்
22-9-39 பகல் 1-2 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகும், பழமையான தொழிலில் நலன், புத்திரர்களால் மனக்கலக்கம் அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச் சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்தியங்களில் சிறிது அலைச்சலுமுண்டாகும்.

22-9-39 பகல் 1-2 முதல்
23-9-39 பகல் 3-41 வரை.

சுகம், சர்வகாரிய ஜெயம், அனுமத்து லாபம் அடைய எத்தனிக்கினும் பலன் தரும், பெரியோரின் பேட்டி காணின் நலந்தரும், இந்நாள் மிக உன்னதமானதென்றறியவும்.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

தொழிலில் ஆலஸ்யமாய் காரியம் முடிதல், முன் சென்ற காரியங்களைக் குறித்துச் சிந்தித்தல், கொடுக்கல் வாங்கலில் கவலை, சேதியால் மனச்சங்கடம், நேசர் அல்லது அதிகாரிகளால் மனஸ்தாபம், பொதுவில் சமப்பலன் உண்டு, நூதன நல்ல காரியங்கள் தொடரின் பலன் தராது.

(8) பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி.

17-9-39 காலை 8-15 முதல்
18-9-39 காலை 7-44 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய்த் தொழில் நடக்கும், இஷ்ட காரியாதிகள் தடைப்படும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்கமுமுற்றகலும், தனக்கு வேண்டிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும், பொதுவில் சமப் பலன்.

18-9-39 காலை 7-44 முதல்
19-9-39 காலை 8-0 வரை.

மனக்கிலேசம், அலைச்சல், தொழிலில் அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய் செய்யின் நலம்.

19-9-39 காலை 8-0 முதல்
20-9-39 காலை 9-3 வரை.

குடும்ப சுகம், தொழிலில் தக்க லாபம், காரிய சித்தி, லாபந்தரத்தக்க காரியம் எது செய்யினும் நஷ்டம் வராது.

20-9-39 காலை 9-3 முதல்
21-9-39 காலை 10-46 வரை.

இந்நாள் ஆயாசம், அலைச்சல், குடும்ப சஞ்சலம், பீதி, தனமுடக்கம் முதலிய கஷ்டப் பலன்களைத் தரக்கூடியதாதலின், முக்கிய பலன் தரத்தக்க காரியங்களைத் தொடரின் பலன் தாராது, எதையும் யோசித்துச் செய்தல் நலம்.

21-9-39 காலை 10-46 முதல்
22-9-39 பகல் 1-2 வரை.

மன உல்லாசம், நற்சேதி கேட்டல், இத்தினத்தில் சுகந்தரத்தக்க காரியம் எது தொடரினும் எதிர்பார்த்த அளவில் பலன் தாராது, ஆயினும் உத்தமமான தினமாம்.

22-9-39 பகல் 1-2 முதல்
23-9-39 பகல் 3-41 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகும், பழமையான தொழிலில் சம நலன், புத்திரர்களால் மனக்கலக்கம் அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச் சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்தியங்களில் சிறிது அலைச்சலுமுண்டாகும்.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

சுகம், சர்வ காரிய ஜெயம், அனுமத்து லாபம் அடைய எத்தனிக்கினும் பலன் தரும், பெரியோர் பேட்டி காணின் நல்ந்தரும், இந்நாள் மிக உன்னதமானதென் றறியவும்.

(9) ஆயில்யம்-கேட்டை-ரேவதி.

17-9-39 காலை 8-15 முதல்
18-9-39 காலை 7-44 வரை.

இந்நாள் மிக நற்பலனைத் தரும், இஷ்டர்களால் மனமகிழ்ச்சி, நல்லோரிணக்கம், பலன் தரத்தக்க நூதன தொழில் எதை தொடரினும் வெற்றி தரும், பிறர் கையிற் சிக்கிய தனத்தைப் பெறுவதற்கு எத்தனிக்கின் பலன் தரும், வழக்கிலும் ஜெயமுண்டாகும், பொதுவில் இத்தினம் உத்தமமாம்.

18-9-39 காலை 7-44 முதல்
19-9-39 காலை 8-0 வரை.

இத்தினத்தில் சாதாரணமாய் தொழில் நடக்கும், இஷ்ட காரியாதிகள் தடைப்படும், லாபமில்லாத காரியங்களில் சந்தோஷம், சிறு கலகங்கள், மனக்கலக்கமு முற்றகலும், தனக்கு வேண்டிய முக்கிய காரியங்களுக்காக பிறரிடத்திலிருந்து உதவியைப் பெற எத்தனிக்கின் பின் பலன் தரும், பொதுவில் சமப் பலன்.

19-9-39 காலை 8-0 முதல்
20-9-39 காலை 9-3 வரை.

மனக்கிலேசம், அலைச்சல், தொழில் அறிந்து காரியங்களைச் சாதுர்யமாய் செய்யின் நலம்.

20-9-39 காலை 9-3 முதல்
21-9-39 காலை 10-46 வரை.

குடும்ப சுதம், தொழிலில் தக்க லாபம், காரிய சித்தி, லாபந் தரத்தக்க காரியம் எது செய்யினும் நஷ்டம் வராது.

21-9-39 காலை 10-46 முதல்
22-9-39 பகல் 1-2 வரை.

இந்நாள் ஆயாசம், அலைச்சல், குடும்ப சஞ்சலம், பீதி, தனமுடக்கம் முதலிய கஷ்டப் பலன்களைத் தரக்கூடியதாதலின் முக்கிய பலன் தரத்தக்க காரியம் தொடரின் பலன் தராது, எதையும் யோசித்துச் செய்தல் நலமாம்.

22-9-39 பகல் 1-2 முதல்
23-9-39 பகல் 3-41 வரை.

சுகம், சர்வகாரிய ஜெயம், சுகந்தரத்தக்க எக் காரியம் செய்யினும் பலிதந்தரும், நூதன காரியம் தொடரின் எதிர் பார்த்த அளவில் பலன் தராது, ஆயினும் உத்தமமான தினமாம்.

23-9-39 பகல் 3-41 முதல்
24-9-39 மாலை 6-35 வரை.

முக்கிய காரியங்களில் தடங்கலுண்டாகும், பழமையான தொழிலில் சமநலன், புத்திரர்களால் மனக்கலக்கம் அல்லது குடும்ப சங்கடம், பிரயாணச் சேதி, நேசரால் மனமகிழ்ச்சி, மறதி, ஆதிமத்தியங்களில் சிறிது அலைச்சலுமுண்டாகும்.

திரை உலகம்

தமிழ்

'ஸ்வர்ண பிக்சர்ஸ்' என்ற பெயருடன் ஆரம்பித்திருக்கும் புதுக் கம்பெனியார், அலிபாபா அல்லது நாற்பது திருடர்கள் என்ற படத்தை தமிழில் எடுக்கப் போகிறார்கள். இதில், வி. வி. சடகோபன், கே. ஜே. மகாதேவன், மிஸ் செல்லம் முதலியவர்கள் நடிப்பார்கள்.

* * *

காரனேஷன் பிலிம் கம்பெனியாரின் திலோத்தமை கோவை பிரிமியர் சினிடோனில் எடுக்கப்படும்.

* * *

ஏஞ்சல் பிலிம் கம்பெனியாரின் பரசுராமாவதாரத்தில் எஸ். டி. சுப்பையா, எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, செருகளத்தூர் சாமா, டி. ஏ. மதுரம், என். எஸ். கிருஷ்ணன் முதலியவர்கள் நடிப்பார்கள்.

* * *

ஈரோடு காளிதாஸ் பிலிம் கம்பெனியார், டைரக்டர் ராஜா ஸாண்டோ ஹிந்தியில் நடித்துப் புகழ் பெற்ற மத்லபி துனியா என்ற படத்தைத் தமிழில் எடுக்கப்போகிறார்கள்.

* * *

துவாரகநாத் ப்ரொடெக்ஷனின், தானசூர கர்ண் என்ற படம் எம். பி. பி. ஸி. ஸ்டுடியோவில் எடுக்கப்படும். இதில் கே. ஆர். சாரதாம்பாள், டி. எஸ். சந்தானம் இருவரும் நடிப்பார்கள்.

* * *

சதி முரளி என்ற படம் கோவை ஸெண்ட்ரல் ஸ்டுடியோவில் ஷூட்டிங் நடந்து வருகிறது. இதில் எம். கே. ராதாவும், எம். ஆர். சந்தானலக்ஷ்மியும் நடிக்கிறார்கள்.

* * *

சாரதா பிலிம் கம்பெனியாரின் சதி சுகன்யாவில் கொத்தமங்கலம் சீனுவும், கே. வி. எல். வசந்தாவும் நடிப்பார்கள். ஸ்ரீ சுந்தரராவ் நட்கர்னி டைரக்ட் செய்வார்.

* * *

மோஹன் பிக்சர்ஸாரின் ஜெயபாரதி தயாராகிவிட்டது. சீக்கிரம் திரைக்கு வந்துவிடும். இதில் பி. எஸ். சீனிவாஸ ராவ், எம். ஏ. ராஜாமணி, கிருஷ்ணசாமி முதலியவர்கள் நடிக்கின்றனர்.

* * *

தமிழ் சித்ராங்கதாவின் படப்பிடிப்பு வேலை சீக்கிரம் ஆரம்பமாகும். ராஜா சந்திரசேகர் டைரக்ட் செய்வார்.

* * *

தெலுங்கு

மெட்ரோபாலிடன் பிக்சர்ஸாரின் மாலதி மாதவ் என்ற படத்தில் புஷ்பவல்லி, பானுமதி, சுப்பராவ் மூவரும் நடிக்கின்றனர்.

ஜெமினி மற்ஞெரு தெலுங்குப் படத்தையும் தயாரிக்கப் போகிறாராம்.

* * *

ஹிந்தி

டைரக்டர் பருவாவின், புயல் என்ற படம் ஷூட்டிங் ஆரம்பமாகி விட்டது. இதில் ஜமுனா, மோலினா, சன்யால் முதலியவர்கள் நடிக்கின்றனர்.

* * *

இந்தியன் பிலிம் கார்ப்பொரேஷன் கம்பெனியார் மிஸ். லீலா தேசாயின் தங்கையான மேனகா தேசாயையும், நியூ தியேட்டர்ஸ் புகழ்பெற்ற ஸைகாலின் தம்பியான மஹேந்திர ஸைகாலையும் கொண்டு ஒரு படத்தை எடுக்கப் போகிறார்கள்.

இந்தக் கம்பெனியாருடைய பக்த கபீர்தாஸ் என்ற படத்தில் நடிப்பதற்காக அகில இந்திய புகழ்பெற்ற சங்கீத மார்த்தாண்ட பண்டித ஓங்கார நாத்ஜீயை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

* * *

சரஸ்வதி ஸினிடோன் கம்பெனியார் தாதா ஸாஹெப் டோர்னேயின் டைரக்ஷனில் நான் நம்புகிறேன் என்ற படத்தைத் தயாரிக்கின்றனர்.

* * *

'அருண்பிக்சர்ஸ்' கம்பெனியார் ஸ்ரீபால். ஜி. பெண்டார்க்கரின் டைரக்ஷனில், கர்ணன் என்ற படத்தை மராத்தியில் தயாரிக்கிறார்கள்.

ஹன்ஸ் பிக்சர்ஸாரின் அடுத்த படமான மனைவி என்ற படத்தை எடுக்க ஸினேரியா எழுதி முடித்து விட்டார் ஸ்ரீ விநாயக். சீக்கிரம் படப் பிடிப்பு வேலை ஆரம்பமாகும். விநாயக்கும் இதில் நடிக்கிறார்.

* * *

மேற்படி கம்பெனியாருடைய உல்லாசத்தைத் தேடி என்ற படம் சென்சாருக்குக் காட்டப்பட்டது. சீக்கிரம் முக்கிய நகரங்களில் திரையிடப்படும். இதில் பாபுராவ் பெண்டார்கர், மீனாக்ஷி, உஷாதேவி முதலியவர்கள் முக்கிய நடிகர்கள்.

* * *

பம்பாய் டாக்கீஸாரின் அடுத்த படமான கங்கான் என்ற படத்தில் அசோக் குமாரும், லீலா சிட்னிஸூம் நடிக்கின்றனர். அசோக்குமார் பம்பாய் டாக்கீஸை விட்டுப் போய்விட்டார் என்ற வதந்தி மறுக்கப்படுகிறது.

* * *

சாந்தாராமின், வாழ்வதற்கே உயிர் என்ற படம் முடிந்து விட்டது. சீக்கிரம் திரைக்கு வந்து விடும். அவர்களுடைய பக்த தியானேச்வர் படத்திற்கான உடைகள், அந்தக் காலத்திய மோஸ்தர் படிக்கு எல்லாம் சீர்பார்த்து தயாரித்தாய்விட்டது. சீக்கிரம் படம் எடுக்க ஆரம்பிக்கப்படும்.

* * *

சுப்ரீம் பிலிம் கம்பெனியார், காஜி ஜலாலுதீன் என்ற சரித்திரப் படத்தை எடுக்கப்போகிறார்கள். இதில், மஸர்கான், குலாம் மகம்மது, ரத்தன் பாய் முதலியவர்கள் நடிப்பார்கள். இதை ஹபீஸ்ஜி டைரக்ட் செய்வார்.

இங்கிலீஷ்

மேல் நாட்டு சிறு கதை வாசகர்களுக்கு எட்கார் அல்லன் போவைத் தெரியாமல் இருக்க முடியாது. பெரிய மேதாவி அவர். அவருடைய வாழ்க்கையே ஒரு குடிகாரனின் வாழ்க்கை. அவருடைய வாழ்க்கையைப் படம் எடுக்கப்போகிறார்கள் வார்னர்ஸ் கம்பெனியார். அதில் பிரபல நடிகர் ஜான் கார்பீல்ட்தான் எட்கார் அல்லன் போவாக நடிப்பார்.

* * *

சர்வாதிகாரிகளைப்பற்றி சார்லி சாப்ளின் தயாரித்து வரும் படம் ரொம்ப மெதுவாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது தான் இன்னொரு 'சர்வாதிகாரி' பாகத்திற்கு நடிகரைத் தேர்ந்தெடுத்திருக்கிறாராம்.

* * *

கிரேடா கார்போ திரையிலிருந்து விலகிக் கொள்வதைப் பற்றி பல முறைகள் இதற்கு முன் செய்திகள் வந்து நேர் எதிரிடையாக நடைபெற்றிருக்கின்றன. இப்போது மறுபடியும் வதந்தி, கூடிய சீக்கிரம் விலகுவாள் என்று. அதுவும் அவளுக்கு ரொம்ப ஆப்தமானவர்களிடமிருந்து கிடைத்த தகவலாம்! ஆனால் மெட்ரோ கோல்ட்வின் கம்பெனியார் தயாரிக்கும் மாடம் கியூரி படம் முடிவுபெறும் வரை ஒன்றும் ஏற்படாதென்று உத்தி[illegible] வாதம் கொடுக்கிறார்கள். மாடம் கியூரி போலந்தில் பிறந்து ரேடி[illegible]யம் கண்டுபிடித்து உலகப் பி[illegible]சித்தி பெற்றவள்.

* * *

இன்னும் டார்ஜான் சீரீஸ் முடிந்தபாடில்லை. பழைய டார்ஜானாக நடித்த ஜானி வெய்ஸ்முல்லரே இன்னும் மூன்று டார்ஜான் படங்களில் நடிக்க மெட்ரோ கோல்ட்வின் கம்பெனியோடு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறாராம்.

* * *

அல்ஜியர்ஸ், மேரி வாலவ்ஸ்கா முதலிய படங்களில் நடித்து புகழ் பெற்ற சார்லஸ் போயரும், ஐரின் டுன்னும் 'நவீன சிண்டிரல்லா' என்ற யுனிவர்சல் படத்தில் நடித்து, படம் எடுத்து முடிந்து விட்டது.

படம் தயாராகும்போது ஸ்டுடியோவில் சுமார் இருநூறு பெண்கள் போயரின் கண்களைக் கவருவதற்காக, தங்கள் முகத்தில் கைகையாக பவுடர்களை அப்பிக் கொண்டு உதடுகளில் புட்டி புட்டியாகச் சாயங்களைப் பூசிக்கொண்டு நின்றிருந்தார்களாம். அவர்களைப் பார்த்து சார்லஸ் போயர் 'உங்களை காதலிக்கிறேன்' என்று சொன்ன போது அத்தனை மனதுகளும் அப்படியே சிலிர்த்துக் கொடுத்தனவாம்!

திருநீலகண்ட நாயனர்

(வ. ரா.)

இந்தப் படத்தைத் தயாரித்தவர்கள், திருச்சி, தியாகராஜா பிலிம்சார். படத்தின் டிரெக்ஷன் ஸ்ரீ ராஜா சாண்டோ அவர்களைச் சேர்ந்தது. கதை வசனம் எழுதித்தந்தவர் "இளங்கோவன்". பாட்டுகள், பாபநாச சிவம் ஆக்கியவை.

திருநீலகண்டரின் வரலாறு அனேகமாக தமிழச்சைவர்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். திருநீலகண்டர், "சட்டிபானை" செய்கிற குயவர்கள் இனத்தைச் சேர்ந்தவர். இவர், கதா காலக்ஷேபங்களைக் கேட்டு, ஆலகால விஷத்தை உண்ட திருநீலகண்டரிடம் அழியாபக்தி கொண்டுவிட்டார்.

இந்த சந்தர்ப்பத்தில், தாசி ஒருத்தி, திருநீலகண்ட நாயனர் பேரில் காதல் கொள்ளுகிருள். இந்த சங்கதி திருநீலகண்டரின் மனைவிக்குத் தெரிந்து போகவே, இனி எம்மையே தீண்டாதீர் என்று பிரதிக்கினை செய்யுங்கள் என்று தனது புருஷனிடம் வேண்டிக் கொள்கிருள். "கரத்தினல் மட்டுமல்ல, மனத்தினுலும் எந்தப் பெண்ணையும் தீண்டமாட்டேன்" என்று திருநீலகண்டர் விரதம் பூணுகிருர்.

இந்த திடமான வைராக்கியத்தை, உலகத்துக்கு எடுத்துக் காண்பிக்கும் பொருட்டு, பரமசிவனர், யாத்ரீகர் வேஷம் தரித்து, திருநீலகண்டரிடம் வந்து, பிச்சை எடுக்கும் கப்பரை ஓடு ஒன்றை அவரிடம் கொடுத்து, "இதை யாரிடமும் கொடுத்துவிடக் கூடாது. சிறிதுகாலம் கழித்து, நான் யாத்திரை முடிந்து, திரும்பிவந்து கேட்பேன். அப்பொழுது கொடுக்கவேண்டும்" என்கிருர். திருநீலகண்டரும் சம்மதிக்கிருர்.

பின்னர், சிலகாலம் கழித்து, பரமசிவனர், திருநீலகண்டரிடம் வந்து, திருவோட்டைக் கேட்கிருர். ஓட்டைக் காணும். திருநீலகண்டர் தவித்துப் போகிருர். "நீ உனது மனைவியின் கரத்தைப் பிடித்துக் கொண்டு, கோயில் குளத்தில் நீராடவேண்டும்" என்று பரமசிவனர் திருநீலகண்டருக்கு கட்டளையிடுகிருர். விரத பங்கம் செய்யமுடியாது என்கிருர் திருநீலகண்டர்.

திருநீலகண்டரின் திடமான வைராக்கியம் உலகத்துக்குத் தெரிகிறது. சுருக்கமாக, இந்தப் படத்தின் கதை இதுதான்.

இந்தப்படம் பார்ப்பதற்கு மிகவும் அழகான படம். மூன்று மணி நேரத்துக்கு அதிகமாக ஓடினலும், அலுக்கவில்லை.

இந்தப்படத்தை "டிரெக்ட்" செய்த ஸ்ரீ ராஜா சாண்டோ அவர்களுக்கு, எனது பரிபூரணமான வாழ்த்து. படம் முக்கால்வாசி கெட்டுப்போவது, டிரெக்டர்களின் கவனக்குறைவினல். இந்தப் படத்தில், அத்தகைய தோஷத்தை, அணுவளவும் சொல்லமுடியாது. டிரெக்டரின் யுக்திச் சிறப்புகளுக்குத் தக்கபடிதான், படம் அழகிலும் அந்தஸ்திலும் இன்பம் தருவதிலும், உயர முடியும். ராஜா சாண்டோ அவர்கள் முதல்தரமான டிரெக்டர் என்பது இந்தப்படத்திலிருந்து, சந்தேகமே இல்லாமல் தெளிவாகின்றது.

டைரக்டர் எவ்வளவு சூட்சுமமான புத்தி படைத்தவராயிருந்தாலும், படத்துக்கு அஸ்திவாரமாயிருக்கும் கதை, வசனம், 'சப்பட்டை'யாக இருந்தால், எந்த டைரக்டரின் ஜம்பமும் பலிக்காது. 'இளங்கோவன்' இந்தப் பகுதி வேலையை மிகுதியும் திறம்படச் செய்திருக்கிறர். பரமசிவனருக்கும் திருநீலகண்டநாயனருக்கு மிடையே நடக்கும் சம்பாஷணை 'சிறிது மோட்டா'வாக இருக்கிறது. பரமசிவனர், யாத்ரீகராக மாறினலும், பொய்க்-கோபம் கொண்டாலும், அவருக்கு இயற்கையாக, ஒருவகை காம்பீர்யம் இருக்கவேண்டும். இந்த கட்டத்தில், அத்தகைய காம்பீர்யம் சிறிது குறைந்து போனதை வருத்தத்துடன் குறிப்பிடவேண்டியிருக்கிறது.

கதைக்குள் புகுத்தப்பட்டிருக்கும் "காமிக்கு"கள், கதைக்குப் பொருத்தமில்லை என்று சிலர் சொல்லுவார்கள். திருநீலகண்ட நாயனர் வாழ்ந்த இடத்தில், காலத்தில், மக்கள், அதுவும் அவரது சுற்றத்தார்கள் எப்படி வாழ்ந்தார்கள், எவ்வகை சுற்றுப்புறங்களுக்கு இடையே அகப்பட்டுக்கொண்டு கிடந்த திருநீலகண்டர் எத்தகைய ஆச்சரியப்படும்படியான திட வைக்ராயத்தைக் காண்பித்திருக்கிறர் என்பதை விளக்கிக் காண்பிக்கும் எடுத்துக் காட்டாக அவைகளை கொள்ளவேண்டும் என்பது என் கருத்து. காமிக்குகள், நம்மை, குலுங்கக் குலுங்கச் சிரிக்கும்படியாகச் செய்து விடுகின்றன. ஆபாசமில்லாத நகைச் சுவை! பண்டைக் காலத்து தமிழ் நாட்டு கிராம வாழ்க்கைக்கேற்ற சிரிப்பு!

கதை வசனம் எழுதிய இளங்கோவன், மேன்மேலும் இந்தத் துறையில், முன்னேறிச் சென்று, இணையற்றவர் என்று பெயர் வாங்க வேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

பாபநாச சிவனுடைய பாடல்களை ஸ்ரீ தியாகராஜ பாகவதர் ஒருவர் பாடினல்தான் சோபிக்குமா? இதிலே. ஏதோ சூது இருக்கிறது. சிந்தாமணியிலும் சரி, திருநீலகண்டரிலும் சரி, சிவன் அவர்களின் பாடல்கள் அபூர்வ ஆகர்ஷண சக்தி கொண்டவைகளாக இருக்கின்றன. அது பாகவதர் செய்த பாக்கியமோ அல்லது சிவன் செய்த

பாக்கியம் அல்லது தமிழர்களாகிய நாம் செய்த பாக்கியமோ? எது வாயிருந்தாலும் இருக்கட்டும்.

ஸ்ரீ தியாகராஜ பாகவதர், படத்துக்காகவே, பிறந்தவரோ என்று சொல்லும்படியாக, மிகவும் வசீகரத் தன்மை கொண்ட முக விலாசத்தை, வரப்பிரசாதமாகப் பெற்று இருக்கிறார் என்று தோன்று கிறது. அவர் பாடும்பொழுது, முகத்தில் ஏதேனும் அவலட்சணம் தோன்றுகிறதா? இல்லவே இல்லை. மிகவும் அமைதியும் நகைச் சுவைப் பொலிவும் கொண்ட முகம்!

இந்த முகவிலாச பாக்கியத்தாலும் சிறிதும் சிரமமில்லாமல் அழகாகப் பாடக்கூடிய தன்மையாலும், பாகவதர் "ஆக்ட்" செய்கி றாரா, இல்லையா என்பதை கவனிப்பதற்குத் தோன்றுவதே யில்லை. "ஆக்ட்" துளிக்கூட் செய்யாமல், பார்ப்பவர்களை தன் வசமாக இழுத் துக்கொள்ளும் பேற்றை, பாகவதர் பெற்றிருக்கிறார். ஆகவே, அவ ருடைய "பார்ட்டிலே" சரியாகவே, 'ஆக்ட்' இல்லையே என்று முணு முணுப்பதில் லாபமே இல்லை. தியாகராஜ பாகவதர் தியாகராஜ பாகவதராக இருந்து, இன்பம் ஊட்ட முடியும். அவரால், ஆக்டராக இருக்க முடியாது.

செருகளத்தூர் சாமாவுக்கு பரமசிவனார் வேஷம் மிகவும் பொருத்தமானது. நல்ல, கனத்த தொண்டை, அழகாக நடித்திருக் கிறார். தொண்டையின் கனத்தைச் சிறிது குறைத்துக் கொண்டு, கம்பீரமாக, சம்பாஷணை செய்திருக்கலாம்.

கொத்தமங்கலம் சுப்பு, ஹாஸ்யரச ஊற்றில் மூழ்கிக் கிடப்பவர். அவரது ஆக்ட் வெகு பேஷ் என்று சொல்லத்தேவையில்லை. ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன்—மதுரம் இவர்கள் வந்துவிட்டால், சிரிக் காமல் இருக்கவே முடியவில்லை.

பாப்பா லட்சுமிகாந்தம் மிகவும் நேர்த்தியாக 'ஆக்ட்' செய் திருக்கிறாள். கதையில் வரும் தாசியும் பரவாயில்லை. வசீகரம் கொண்ட முகம். தாசியின் 'மேக்கப்' நவீன காலத்துப் பெண் போல இருந்தது. பொதுவாகவே, இந்தப்படத்தில், "மேக்கப் புக்கு" ஒரு உயர்ந்த ஸ்தானம் கொடுக்கவேண்டியது. சந்தர்ப்பத்துக் கேற்ற மேக்கப்புகள்! இருந்தாலும், தாசியை நவீன காலப் பெண் ணாக, மேக்கப்புக்காரர்மறந்துபோய் செய்துவிட்டதாகதோன்றுகிறது.

போட்டாகிராபியில், குறை சொல்ல முடியாது. மிகவும் நேர்த்தி. ஒலிப்பதிவும் அப்படியே. ஆண், பெண், குழந்தைகள் எல்லோரும் இன்பத்தோடு பார்க்கக்கூடிய அபூர்வமான படம் இது.

நிமிஷக் கதைகள்

ஞாபகமறதி

நீதிபதி:—ஏன், ஐயா, இருடன் உம் ஜோபியில் கையை விட்டுப் பணத்தை எடுக்கும்வரை நீர் என்ன செய்து கொண்டிருந்தீர்?

ஞாபக மறதி ஆசாமி:—செய்வதென்ன? அது என் கைதானுக்கும் என்று சும்மா இருந்து விட்டேன்.

*　*　*

தடை வேண்டாம்

"ஸார், என் பிள்ளையாண்டான் இருக்கானே, அவன் ஸைகிளில் வேகமாய்ப் போவதில் பலே கெட்டிக்காரனாயிருக்கிறான்."

"இருந்து விட்டுப் போகட்டும் ஸார்; அதற்கு நீங்கள் குறுக்கே நிற்காதீர்கள்."

*　*　*

முக்கிய காரணம்

ஒருவர் மீது ஸைகிள் மோதி அவனும் ஸைகிள்காரனும் கீழே விழுந்தனர்.

ஸைகிள் மோதிக் கீழே விழுந்தவன்:—ஏன் ஐயா, உனக்கு மணியடிக்கத் தெரியாதா?

ஸைகிள்காரன்:—மணியடிக்கத் தெரியும் ஐயா; ஸைகிள் விடத்தான் தெரியாது.

*　*　*

அடுத்ததரம் வந்தான்!

"அடே சோம்பேறி! இப்போதானேடா பத்து நிமிஷத்துக்கு முன்னால் வந்து பிச்சை கேட்டாய்?"

"ஆமாங்க; நீங்கள் தானே அடுத்த தரம் வா, அப்போது ஏதாச்சும் தரேன்னு சொன்னீங்க."

*　*　*

சரிதான்

புருஷன்:—(வேகமாக) நமக்குக் கலியாணமாவதற்கு முன்பு உன்னை எந்த மடையனோ கலியாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தினான் என்று சொன்னாயே? அந்த முட்டாளையே கலியாணம் செய்து கொண்டு தொலைவதுதானே?

மனைவி:—அப்படித்தான் செய்திருக்கிறேன்.

*　*　*

கைதி கேட்டது

நீதிபதி:—(தீர்ப்பின் முடிவில்) அடே உனக்குப் பத்து ரூபாய் போடட்டுமா? அல்லது பத்து நாள் சிறைவாசம் போடட்டுமா?

கைதி:—பத்து ரூபாய் தானுங்க கட்டாயம் வேணும்.

*　*　*

எந்தப் பக்கம் போவேது

உபாத்தியாயர்:—அடே இந்தக் கூட்டலைப் போடு; எழு, பதினென்று. பையன் விழித்தான்.

உபாத்தியாயர்:—என்டா முழிக்கிறே?

பையனை:—இல்லை ஸார், பதி னொன்றை எப்படி எழுதற தின்னு தெரியவில்லை. ஒரு ஒன்று போட்டேன். இன்னொரு ஒன்றை இந்தப் பக்கத்தில் போடு கிறதா அந்தப் பக்கத்தில் போடு கிறதா என்று தெரியவில்லை ஸார்.

*　*　*

ரொம்ப வந்தனம்

ஞாபக மறதியுள்ளவர்:—ஸார், என் தலைப்பாவை எங்கேயாவது பார்த்தீர்களா?

நண்பர்:—அது உங்கள் தலையி லேயே இருக்கிறதே.

ஞாபகமறதியுள்ளவர்:—ரொம்ப வந்தனம். நீங்கள் சொல்லாமற் போனல் நான் தலைப் பாகை யில்லாமலேயே ஆபீஸுக் குப் போகவேண்டி யிருந்திருக் கும்.

*　*　*

எப்படி பதில்?

"ஒட்டைச் சிவிங்கிகளுக்கு கழுத்து ஏன் அத்தனை நீளமா யிருக்கிறது?"

"உயரமான மரத்தில் உள்ள இலைகளைச் சிரமமின்றி தின்பதற் காக."

"மரம் ஏன் உயரமாயிருக் கிறது?"

"ஒட்டைச் சிவிங்கி குனிந்து சிரமப்படாமலிருக்க."

*　*　*

அட எழவே!

"என் மிஸ்டர் கோபால்! உங்களுக்குக் கண் பார்வை கொஞ் சம் மந்தமில்லையா?"

"எனக்குக் கண் பார்வை கொஞ்சம் மந்தம்தான்; ஆனல் நான் கோபால் இல்லை."

இருக்க முடியாதே

ஒருவர்:—ஏன் அம்மா, என் வீட்டுக்காரி இந்தக் கலியாணத் துக்குத் தானே வந்தாள். அவளைப் பார்த்தயளா?

கூட்டத்தில் ஒருவள்:—இங்கே இல்லையே. உங்கள் வீட்டுக் காரியை எனக்குத் தெரியாதே? ஒருவேளை மாடியிலே பேசாமே மௌனமா ஒரு மூலையில் உட்கார் திருக்காளே அந்த அம்மா வாயிருக்குமோ என்னவோ?

அவர்:—அது அவளாக இருக்கவே முடியாது.

*　*　*

அம்பி கெட்டிக்காரன்

அப்பா:—என்னடா அம்பி இன்று நீ எத்தனை கணக்கு தப்பு?

அம்பி:—ஒரு தப்புகூட இல்லை அப்பா.

அப்பா:—சந்தோஷத்துடன் என்ன? எல்லாக் கணக்குமா சரியாய் போட்டுட்டே?

பையன்:—இன்று கணக்கு வாத்தியாயர் வரவில்லை அப்பா!

*　*　*

ஓஹோ

ராமு:—அடே ராமு, நீ என் னடா மணிக் கணக்காய் விடாமே படிச்சுண்டிருக்கே.

பாலு:—அப்படிக் கேளு. இந்தப் புஸ்தகம் எட்டு வயசி லேருந்து பத்து வயசு வரையில் உள்ள பசங்களுக்காம். நாளைக்கு எனக்கு பதினோருவது வயசு பிறக்கிறது.